# தருமபுரி மாவட்டத்
# தொல்லியல் கையேடு

# தருமபுரி மாவட்டத் தொல்லியல் கையேடு


பதிப்பாசிரியர்

**தி.ஸ்ரீ. ஸ்ரீதர் இ.ஆ.ப.,**

சிறப்பு ஆணையர்

ஆசிரியர்கள்

**ச. கிருஷ்ணமூர்த்தி**

தொல்லியல் அலுவலர், சென்னை

**ச. செல்வராசு**

தொல்லியல் அலுவலர், தருமபுரி



வெளியீடு

தமிழ்நாடு அரசு

தொல்லியல் துறை

2005

1866

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | - | Dharmapuri Maavatta Tholliyiyal Kaiyedu<br>(Dharmapuri District Archaeological guide) |
| Authors | - | **S. Krishnamoorthy**<br>Archaeological Officer. Chennai. |
| | | **S. Selvaraj**<br>Archaeological Officer. Dharmapuri. |
| Copy right | - | Tamilnadu State Dept of Archaeology |
| Subject | - | History |
| Language | - | Tamil |
| Edition | - | First |
| Publication no and year | - | 173 - Nov 2005 |
| Type Setting | - | Thai Graphics, Chennai - 35. |
| Font Size | - | 11 |
| Number of Pages | - | 240 |
| Paper used | - | 60GSM |
| Publisher | - | Special Commissioner of Archaeology<br>State Dept Of Archaeology<br>Tamil Valarchi Valagam<br>Halls Road, Egmore, Chennai - 8 |
| Printed at | - | The Chennai Printers,<br>Industrial Co-operation Society Ltd.<br>118, Big street, Tripilicane,<br>Chennai - 600 005.<br>Phone: 28446287. |
| Price | - | Rs. 62 - |

# பதிப்புரை

நீண்ட நாள் உயிர்வாழ உதவும் கிடைத்தற்கரிய நெல்லிக் கனியைத் தான் உண்ணாமல் ஔவையாருக்கு வழங்கிய அதியமான் ஆட்சி புரிந்த தகடூர் தற்போது தருமபுரி என வழங்கப்படுகிறது. தொல் பழங்கால வரலாறு தொடங்கி ஆங்கிலேயர் காலம் வரை தொடர்ச்சியான வரலாற்றைக் கொண்ட தருமபுரி கருநாடக, ஆந்திர மாநில எல்லைப்புறப் பகுதியாக இருப்பதால் பன்மொழி பேசும் மாவட்டமாகவும் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட மாவட்டமாகவும் விளங்குகிறது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் இம்மாவட்டக் கோயில்களைப் பாடவில்லை. பல்லவ, பாண்டிய, சோழ, விஜயநகரப் பேரரசர்கள் தருமபுரிப் பகுதியைக் கைப்பற்றி ஆட்சி புரிந்திருந்தாலும் உள்ளூர் நாட்டு நாயகம் செய்யும் அதிகாரிகளே முழு அதிகாரத்தையும் செலுத்தி உள்ளார்கள் என்று குறிப்பிடலாம்.

கற்கோயில்களுக்குப் பதில் நடுகற்கள் எனப்படும் வேடியப்பன் கோயில்கள் தருமபுரியில் மிகுதியாகும். மலைகளும் காடுகளும் மிகுந்த இம்மாவட்டத்தில் மலைக் கோட்டைகளும் தரைக்கோட்டை களும் தொல் பழங்கால ஓவியங்களும் மிகுதியாக உள்ளன. பல்லவர் காலத்தில் வட்டெழுத்துக் கல்வெட்டுகள் ஏற்படுத்தப்பட்டாலும் சோழர் காலத்தில் தமிழ் எழுத்தில் எழுதப்பட்ட கல்வெட்டுகள் நூற்றுக் கணக்கில் உள்ளன. விஜயநகர அரசர் காலத்தில் கிரந்தமும் தமிழும் சாசனங்கள் எழுதப் பயன்பட்டன.

அதியமான் பெருநிலப்பரப்பை ஆண்டாலும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு முதல் சிறு சிறு பகுதிகளை நாட்டார், ஊரார், காமுண்டர், நாட்டு நாயகம் செய்வார் ஆண்டுள்ளனர். அரிமிறை மாவலி வாணராயன், நாடு என்ற பெயரில் ஏழு நாடுகளை இணைத்து ஆண்டுள்ளமை தருமபுரி, வெள்ளாம்பட்டி நடுகற்கள் மூலம் அறிகிறோம். தருமபுரிப் பகுதியைச் சங்க காலத்தில் மட்டுமின்றிப் பிற்காலச் சோழர்காலத்திலும் அதியமான் மரபினர் ஆண்டுள் ளமைக்கு இலக்கிய, சாசனச் சான்றுகள் உள்ளன.

ஆங்கிலேயர் காலத்தில் சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதியாகத் தருமபுரி விளங்கியது. விடுதலையடைந்தபின் 1965இல் சேலத்திலிருந்து தருமபுரி தனி மாவட்டமாக உருவாயிற்று. இம்மாவட்டம் நன்கு வளர்ச்சியடைய வேண்டும் என்று கருதிய தமிழக முதல்வர் மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் கிருஷ்ணகிரி என்றும் தருமபுரி என்றும் 9.2.2004இல் இம் மாவட்டத்தைப் பிரித்தபின் இரு மாவட்டங்களும் நன்கு வளர்ச்சி அடைந்து வருகின்றன.

தொல்லியல் துறை தருமபுரியில் அகழ்வைப்பகம் உருவாக்கி நமது கலைச் செல்வங்களைக் காப்பது போல் அரசு அருங்காட்சியகம் கிருஷ்ணகிரியில் அருங்காட்சியகம் ஏற்படுத்தி மக்களிடையே பழங்கலைச் செல்வங்களைப் பாதுகாப்பதின் முக்கியத்துவத்தை உணர்த்தி வருகிறது.

தருமபுரி அகழ்வைப்பகம் உருவாக மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த எஸ். சிவ சுப்பிரமணியமே காரணமாகும். தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை அவருக்கு உதவியாகத் தொல் பொருட்களைச் சேகரித்தது. பின் அகழ்வைப்பகத்தைத் தொல்லியல் துறையிடம் ஒப்படைத்தது.

தமிழகத் தொல்லியல் துறையில் பணிபுரிந்த மூத்த ஆய்வாளர்கள் பலரும் பிரிக்கப்படாத தருமபுரி மாவட்ட நடுகல் கல்வெட்டுகளையும் பிற கல்வெட்டுகளையும் படியெடுத்ததுடன் நடுகற்கள் தொடர்பாகக் கருத்தரங்கும் நடத்தினர். தொல்லியல் துறை தருமபுரி கல்வெட்டுகளை நூல்களாகவும் பதிப்பித்துள்ளது.

இக்கையேட்டின் ஆசிரியர்களுள் ஒருவரான சரித்திரச் செம்மல் ச.கிருஷ்ணமூர்த்தி முதன் முதலில் வரலாற்றின் அடிப்படையில் தருமபுரி வரலாறு எழுதியதுடன் கருத்தரங்கு ஒன்றையும் அகழ்வைப்பகத்தில் நடத்தினார். தருமபுரி மாவட்டத்தில் தொல் பழங்கால ஓவியங்கள் பலவற்றைக் கண்டறிந்தார். கையேட்டின் மற்றோர் ஆசிரியரான திரு. ச. செல்வராசு மோதூர் அகழாய்வைச் சிறப்பாக செய்து முடித்து அவ்வகழாய்வினை நூலாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறார். தருமபுரியில் பணிபுரிந்தவரும் தற்போது பணிபுரிபவருமான இவ்விரு அலுவலர்கள் இணைந்து எழுதியுள்ள இக்கையேடு பலருக்கும் பயன்படும் என்பதில்

சந்தேகமில்லை. மாவட்டந் தோறும் உள்ள கல்வெட்டுகளைப் படியெடுப்பதுடன் படித்து நூல்களாக வெளியிடுவது போன்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தொல்லியல் கையேடு என்ற திட்டத்திற்கிணங்க இது ஐந்தாவது கையேடாக வருகிறது. தருமபுரி, கிருஷ்ணகிரி எனப் பிரிக்கப்படாத தருமபுரி மாவட்டத்திற்குரிய தொல்லியல் கையேடாக இந்நூல் வெளிவருகிறது.

அகழாய்வு, கல்வெட்டுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நூலில் தொன்மை சார்ந்த கோயில்களின் வரலாறும் இடம் பெற்றுள்ளது. தொல்லியல், கல்வெட்டு சிறப்புள்ள நூற்றுக்கு மேற்பட்ட ஊர்களின் சுருங்கிய வரலாறும் சேர்க்கப்பட்டுள்ளது. நூலைச் சிறப்பாக எழுதிய நூலாசிரியர்களான திரு. ச.கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரு. ச.செல்வராசை வாழ்த்துகிறேன். பொதுமக்கள் நூலைப் படித்துப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்

தி.ஸ்ரீ.ஸ்ரீதர்

# முன்னுரை

பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேரமன்னன் அதியமானைத் தகடூரில் வெற்றி கொண்டான். அந்தத் தகடூர் சங்க காலம் முதல் ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் வரை தொடர்ச்சியான வரலாற்றைக் கொண்டுள்ளது. அதியமான்களும், கங்கர்களும், பாணர்களும், நுளம்பர்களும் பிற அரசு மரபினர்களும் இப்பகுதியை ஆண்டுள்ளனர். அவர்களுடைய கல்வெட்டுகள், நடுகற்கள் இப்பகுதியில் உள்ளன. பல்லவர்களின் கீழ்த் தகடூர் இருந்திருப்பினும் அவர்களுடைய கோயில்கள் இப்பகுதியில் இல்லை. பல்லவரின் கீழ் ஆட்சி புரிந்த குறுநில மன்னர்களே உண்மையில் செல்வாக்குடன் இருந்துள்ளனர் எனலாம்.

பிற்காலச் சோழர், போசளர், விஜயநகரப் பேரரசர், மராட்டியர், மைசூர் அரசர் (ஹைதர் மற்றும் திப்புசுல்தான்) மற்றும் அத்திமல்லர், இப்பகுதியில் செல்வாக்குடன் நாடாண்டுள்ளனர். தமிழ், கன்னடம், தெலுங்கு, வடமொழி, எனப் பன்மொழிக் கல்வெட்டுகள் இம்மாவட்டத்தில் உள்ளன. தருமபுரி நகரில் உள்ள நுளம்பர் கலைப்பாணி கொண்ட மல்லிகார்ச்சுணர் கோயில், போசளர் கட்டிய குந்தாணிக்கோயில், விடுகாதழகியப் பெருமாள் என்ற அதிகைமான் கட்டிய கம்பைநல்லூர்கோயில், விஜயநகர அரசர் கட்டிய கிருஷ்ணகிரி நரசிம்மர் கோயில், ஹோசூர் செவிடை நாயனார் கோயில் எனப் பல கோயில்கள் மாவட்டத்தில் இருப்பினும் சைவ நாயன்மார்களும் ஆழ்வார்களும் இம்மாவட்டத்திற்கு வந்ததாகவும் பாடியதாகவும் சான்றில்லை. (சுந்தரர் குறிப்பிடும் வைப்புத் தலமான தகடூர் தருமபுரி தகடூரா அன்றி வேதாரண்யம் தகட்டூரா என்று தெரியவில்லை).

மலைக்கோட்டைகளும், பெருங்கற்கால ஓவியங்களும், நடுகற்களும், அனுமன் சிற்பங்களும் மிகுந்த இம்மாவட்டத்தின் வரலாறு பல்வேறு அறிஞர்களால் வெவ்வேறு கோணங்களில் எழுதப்பட்டுள்ளன. அதியமான்கள் என்ற பெயரிலேயே சில நூல்கள் வந்துள்ளன. முனைவர். நா.மார்க்சீயகாந்தி தமிழக வரலாற்றில் அதியர் மரபு என்ற நூலை வெளியிட்டுள்ளார். தொல் பழங்கால வரலாற்றை விளக்கும் வகையில் சில நூல்கள் வந்துள்ளன.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள கல்வெட்டுகள் யாவும் எம் துறையால் படியெடுக்கப்பட்டு வாசிக்கப்பட்டுள்ளன. முதல் தொகுதி பதிப்பிக்கப் பட்டுள்ளது. இரண்டாம் தொகுதி விரைவில் பதிப்பிக்கப் பட உள்ளது.

தருமபுரி அகழ்வைப்பகத்தில் பணியாற்றிய எம் துறை அலுவலர்கள் பல கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளனர்.

| | | |
|---|---|---|
| திரு. ச.கிருஷ்ணமூர்த்தி | - | தருமபுரி வரலாறும் பிரகலாத சரித்திரமும். |
| முனைவர் சோ.சாந்தலிங்கம் | - | வரலாற்றில் தகடூர் |
| முனைவர். ர.பூங்குன்றன் | - | தொல்குடி வேளிர் |
| திரு. ச. செல்வராசு | - | தகடூர் நாட்டுக் கோயில்கள் முதல் தொகுதி |
| திரு. ச. செல்வராசு<br>திரு. தி. சுப்பிரமணி | - | தருமபுரி அகழ்வைப்பகம் |
| திரு. ச. கிருஷ்ணமூர்த்தி | - | நடுகற்கள் |

மேற்கண்ட ஆறு நூல்களும் இத்துறை படியெடுத்துப் பதிப்பித்த மற்றும் பதிப்பிக்காத தருமபுரி மாவட்டக் கல்வெட்டுகளும் கல்வெட்டுக் காலாண்டிதழ்களும் இந்தத் தருமபுரித் தொல்லியல் கையேட்டிற்குப் பெரிதும் துணையாய் இருந்தன.

தருமபுரி, கிருஷ்ணகிரி என இருமாவட்டங்களாகத் தற்போது தருமபுரி இருப்பினும் ஒரே மாவட்டமாகக் கருதி மாவட்டத் தொல்லியல் கையேடு எழுதியிருக்கிறோம்.

தருமபுரி மாவட்டக் கல்வெட்டுகளைப் படியெடுக்கவும் படித்து நூல்களாகக் கொண்டு வரவும் பெருமுயற்சி எடுத்துக்கொண்ட இத்துறை முன்னாள் இயக்குநர்கள் இரா. நாகசாமி மற்றும் நடன. காசிநாதன் ஆகியோரை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறோம்.

இத்துறை சிறப்பு ஆணையராகப் பொறுப்பேற்ற திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர் எல்லாப் பிரிவுகளிலும் ஆய்வு நூல்கள் வெளிவர ஆணையிட்டது போல் தருமபுரி மாவட்டத் தொல்லியல் கையேடும் விரைவாகவும் சிறப்பாகவும் எழுதி வழங்குமாறு எங்களைப் பணித்ததுடன் அவ்வப்போது உற்சாகப் படுத்தி வந்ததால் நாங்களும் நூலினை எழுதி முடித்தோம்.

த்ஞ்சாவூர் தொல்லியல் அலுவலர் தி. சுப்பிரமணியன், சென்னைக் கல்வெட்டாய்வாளர் முனைவர் சு.இராசகோபால், நிழற்படக்காரர் தி.ஸ்ரீதர் மற்றும் கையேடு எழுத உதவிபுரிந்த இத்துறை அலுவலர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நூல் சிறப்பாக அமைய பலவகையிலும் காரணகர்த்தாவாக விளங்கும் எங்கள் துறை சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ ஸ்ரீதர். இ.ஆ.ப. அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புடன்

**ச. கிருஷ்ணமூர்த்தி**

**ச. செல்வராசு**

# பொருளடக்கம்

பதிப்புரை

முன்னுரை

1. தொல்பழங்காலமும் தருமபுரி மாவட்டமும் 11
2. கிருஷ்ணகிரி மாவட்டமும் தொல்பழங்காலமும் 14
3. தொல்பழங்காலத் தடயங்கள் 25
4. தருமபுரி - கிருஷ்ணகிரி மாவட்ட அகழாய்வுகள் 33
5. அதியமான்கள் 43
6. தகடூரை ஆட்சி புரிந்த மன்னர்கள் 48
7. தகடூர் நாட்டுப் பிரிவுகள் 53
8. தகடூர் நாட்டுக் கோயில்களின் தோற்றமும் வளர்ச்சியும் 62
9. தருமபுரியில் உள்ள தொன்மையான கோயில்கள் 66
10. தருமபுரி மாவட்டக் கல்வெட்டுகளில் காணப்படும் வருவாய்ச் சொற்கள் 95
11. தருமபுரி மாவட்ட நீர்ப்பாசனங்கள் 100
12. தருமபுரி மாவட்ட நடுகற்கள் 105
13. தருமபுரி மாவட்ட ஊர்ப்பெயர்கள் ஓர் ஆய்வு 107
14. தருமபுரி அகழ்வைப்பகம் 118
15. கிருஷ்ணகிரி அருங்காட்சியகம் 123
16. சின்னக் கொத்தூர் நடுகற்கள் 124
17. ஆங்கிலேயர் காலத்தில் தருமபுரி மாவட்டம் 128
18. வரலாற்றுச் சிறப்புடைய ஊர்கள் 132
19. தருமபுரி மாவட்டச் செப்பேடுகள் 220
20. தகடூரை ஆட்சி புரிந்த மன்னர்களின் பட்டியல் 222
21. தருமபுரி அகழ்வைப்பக ஓலைச் சுவடிகளின் பட்டியல் 225
22. தருமபுரி மாவட்ட விடுதலைப் போராட்ட வீரர்களின் பட்டியல் 229

# I. தொல்பழங்காலமும் தருமபுரி மாவட்டமும்

தருமபுரி மாவட்டம், வரலாற்றுக்கு முற்பட்ட காலகட்டத்தில் இருந்தே சிறப்பிடம் பெற்று வந்துள்ளது. மனிதன் அறிவு வளர்ச்சி அடைந்து நாகரிக வாழ்க்கையில் காலடி எடுத்து வைக்கும் கால கட்டந்தான் புதியகற்காலம் ஆகும். கரடுமுரடான ஆயுதத்தை விட்டொழித்து, நன்கு உருவாக்கிய கைக்கோடரிகளைப் புதிய கற்கால மனிதன் பயன்படுத்தினான். மேலும் அவன் நிலையான இருப்பிடத்தை அமைத்துக் கொண்டான். நீராதாரமிக்க ஆற்றங்கரையில் வாழ்ந்ததால் முதன் முதலாக விவசாயத்தைத் தெரிந்து கொண்டான். ஆடு மாடுகளை வளர்க்கவும் முற்பட்டான். வேட்டையாடுதல் மட்டுமின்றி மாமிசத்தை வேகவைத்து உண்ணும் பழக்கத்தைக் கற்றுக் கொண்டான். தருமபுரி மாவட்டத்தில் பரவலாகப் புதிய கற்காலக் கருவிகள் காணப்படுகின்றன. புதிய கற்கால மனிதர் வாழ்ந்த தடயங்களும் கண்டறியப்பட்டுள்ளன.

தருமபுரி மாவட்டம் தருமபுரி, பாலக்கோடு, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, பென்னாகரம் என ஐந்து வட்டங்களைக் கொண்டது. ஐந்திலும் கல்லாயுதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பாலக்கோடு வட்டம் பிக்கனஹள்ளி என்ற ஊரில் இருபதுக்கு மேற்பட்ட கல் ஆயுதங்களும் இதன் துணைக்கல் ஆயுதங்களான வட்டுகள், தேய்ப்பான்கள் போன்றவைகளும் சேகரிக்கப்பட்டுள்ளன. அரூர் வட்டம் பொம்மிடியிலும் வத்தல்மலை அடிவாரத்திலும் புதிய கற்காலக் கைக்கோடரிகள் கண்டறியப்பட்டுள்ளன. சில ஊர்களில் புதிய கற்காலக் கருவிகளை மக்கள் வழிபடுகின்றனர். பென்னாகரம் வட்டம் பெரும்பாலையிலும், தருமபுரி வட்டம் இலளிகம் என்ற ஊரிலும் கல்லாயுதங்களும் புதிய கற்கால மக்கள் வாழிடங்களும் அடையாளம் காணப்பட்டன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை பாலக்கோடு வட்டம் மோதூரில் புதிய கற்கால மனிதர் வாழிடங்களைக் கண்டறிந்ததால் இங்கு அகழாய்வினை மேற்கொண்டு, புதிய கற்காலந் தொடங்கி மனிதர் இங்கே வாழ்ந்ததை உறுதிபடுத்தியது. இவ்வூரின் மேற்பரப்பு ஆய்விலேயே கருப்பு சிவப்பு, சிவப்பு, வண்ணப்பூச்சுக் கொண்ட பழுப்பு நிறப்பானை ஓடுகள் சேகரிக்கப்பட்டன.

## பெருங்கற்காலம்

பெரிய பெரிய கற்பாளங்களையும் இயற்கையான கற்களையும் பயன்படுத்தி, இறந்தவர்களை அடக்கம் செய்த மக்களைத் தமிழகம் முழுவதும் காணலாம். தருமபுரி மாவட்டத்தில் பெருங்கற்கால மனிதர்கள் விட்டுச் சென்ற தொல்லியல் சிறப்பு வாய்ந்த சவச் சின்னங்கள் மிகுதியாக உள்ளன. பெருங்கற்காலப் பண்பாட்டில் பல்வேறு விதமான புதைகுழிகள் அதாவது சவச்சின்னங்கள் உள்ளன. பெரிய கற்பலகைகளைப் பயன்படுத்தியதால் Mega Lithic என்று பெயரிட்டனர்.

கல்திட்டை, கல்பதுக்கை, (Dolmen and Dolmencist) கல்வட்டம், (Cairncircle) குத்துக்கல் (Menhir) ஆகிய புதைகுழிகள் தருமபுரி மாவட்டத்தில் மிகுதியாக உள்ளன. முதுமக்கள் தாழிகள் (Urns) ஈமப்பேழைகள் (Sarcophagas) ஆகிய சவத்தை வைக்கும் பொருட்களும் கண்டறியப்பட்டுள்ளன.

பாலக்கோடு வட்டம் பெல்ரம்பட்டியருகேயுள்ள திருமலவாடி என்ற ஊரின் கூட்டு ரோடு அருகே குத்துக்கல் என்ற ஈமச்சின்னம் உள்ளது. இதனை ஊர் மக்கள் யானை கட்டும் கல் என்று தவறாக அழைக்கின்றனர்.

பென்னாகரம் வட்டத்திலும் அரூர் வட்டத்திலும் கல்வட்டம் எனப்படும் ஈமச் சின்னங்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. கற்பதுக்கைகள், கல்திட்டைகள் இம்மாவட்டத்தில் குறைந்த அளவில் உள்ளன. தருமபுரியிலிருந்து பென்னாகரம் செல்லும் பாதையில் உள்ள இண்டூர், ஆதனூர் ஆகிய ஊர்களிலும், கோபி நாதன்பட்டியிலும் இவ்வகைச் சவச்சின்னங்கள் கண்டறியப்பட்டன.

நல்லாம்பட்டி என்ற சிற்றூர், தருமபுரியிலிருந்து 24 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. கல்திட்டைகளுடன் கல்வட்டங்களும்

இவ்வூரில் உள்ளன. மேற்பகுதியில் சரளைக்கற்களையும் கூழாங்கற்களையும் கொண்டு அடுக்கிய நிலையில் உள்ள இரண்டு கல்திட்டைகள் நன்னிலையில் உள்ளன. ஒவ்வொன்றின் விட்டம் சுமார் 15 மீட்டர் எனலாம். கல்வட்டத்தைப் பெரிய பெரிய கற்குண்டுகளால் வட்டமாக அடுக்கி அதன் மேலே ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி வைத்தது போன்று கட்டப்பட்டுள்ளது சிறப்பான ஒன்றாகும். கல்வட்டத்திற்குள் கல் திட்டையை இங்கு மட்டுமே இம்மாவட்டத்தில் காண்கிறோம்.

இவ்வூரில் பல கல்திட்டைகள் இருந்ததாகவும் மக்கள் நிலங்களைச் சீர் செய்து விளை நிலங்களாக மாற்றியபோது அழித்து விட்டதாகவும் உள்ளூர் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டத்தில் மிகுதியான அளவில் வெவ்வேறு வகையான சவச்சின்னங்களும், தொல் பொருள்களும் கண்டறியப்பட்டுள்ளன. குறிப்பாகக் கருப்பு சிவப்பு, சிவப்பு, வண்ணப் பூச்சு கொண்ட பானை ஓடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. வரலாற்றுக் காலத்தைச் சார்ந்த நடுகற்களும் இம்மாவட்டத்தில் பரவலாக உள்ளன. இவைகளும் ஒருவகையில் சவச்சின்னங்களேயாகும். பென்னாகரம் வட்டம் ஏரியூரில் தொல்பழங்கால வரைகோட்டு உருவங்கள் கண்டறியப் பட்டுள்ளன. கடத்தூர், கொளகத்தூர், மாட்லாம்பட்டி, பனையகுளம், இண்டூர் ஆகிய ஊர்களில் சுடுமண் பொம்மைகள் மற்றும் குறியீடு கொண்ட பானை ஓடுகள், கருப்பு சிவப்புப் பானை ஓடுகள் கிடைத்துள்ளன. ஆகவே தருமபுரி மாவட்டம் தொல்பழங்கால வரலாற்றையும் கொண்ட மாவட்டம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

# 2. கிருஷ்ணகிரி மாவட்டமும் தொல்பழங்காலமும்

கிருஷ்ணகிரி மாவட்டம் தமிழகத்தின் வடமேற்குப் பகுதியில் கருநாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களை ஒட்டி அமைந்துள்ளது. இம்மாவட்டத்தில் மலைகளும், காடுகளும் அதிக அளவில் காணப்படுகின்றன. இது மேடுகளும், பள்ளங்களும், நிறைந்த மாவட்டமாகும். சுமார் 9630 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட பழைய தருமபுரி மாவட்டம் கிழக்கு மேற்காக நீண்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் இரண்டு வகையான நிலப்பரப்புகளைக் கொண்டது. 1. தக்காணப் பீடபூமி பகுதி, 2. சாதாரண நிலப்பரப்பு. தக்காணப் பீடபூமியாகிய ஒசூர் பகுதியிலும், மற்ற சாதாரண பகுதியிலும் மலைகள் நிறைந்துள்ளன. மேல்மலைத் தொடர், அங்குசகிரி, மகாராஜக்கடைமலைத்தொடர் (அங்கணாமலைத் தொடர்) பெரியமலை, பெட்டமுகலாலம் மலைத்தொடர், மஞ்சவாடிக்கணவாய் மலைத்தொடர், தீர்த்தமலை போன்று பல மலைகள் இம்மாவட்டத்தில் உள்ளன. மலைகளில் கோட்டைகளும் உள்ளன.

காவேரி, தென்பெண்ணை ஆகிய இரண்டு பெரிய நதிகள் ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தில் ஓடுகின்றன. ஆனால் இவை விவசாயத்திற்கு இங்கே அதிகம் பயன்படுவதில்லை. ஏன் எனில் இவ்வாறுகள் தரைமட்டத்தில் ஓடாமல் தரைமட்டத்தை விட தாழ்வான பகுதிகளில் ஓடுகின்றன. எனவே முழுமையாகப் பயிர்த்தொழிலுக்குப் பயன்படுத்த முடிவதில்லை. துணை நதிகளான மார்க்கண்டேய நதி (சின்னாறு) பாம்பாறு போன்றவைகளே சில இடங்களில் பயிர்த் தொழிலுக்குப் பயன்படுகின்றன. தென் பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தால் தண்ணீர், பயிர்த் தொழிலுக்குப் பயன்படுகிறது. பெரிய ஏரி என்ற நீர்நிலை ஒன்று குறிப்பிடத்தக்கதாகும்.

தருமபுரி மாவட்டம் விஜயநகர மன்னர்களின் பிற்காலத்தில் பாரமகால் என்றும் பாலகாட் என்றும் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தற்போது இம்முறை நடைமுறையில் இல்லை.

மலைகள் அதிக அளவில் இம்மாவட்டத்தில் இருக்கின்ற காரணத்தால் மலைப்பாதைகள் அல்லது கணவாய்ப் பாதைகள் பல இடங்களில் உள்ளன. கருநாடகத்தையும், தமிழகத்தையும் இணைக்கும் மேல்மலைக் கணவாய், மஞ்சவாடிக் கணவாய், தொப்பூர்க்கணவாய் போன்று பல கணவாய்கள் இன்றும் நடைமுறையில் இருந்து வருகின்றன.

தோகரப்பள்ளிக்காடு, அஞ்செட்டிக் காடு, ஊத்தங்கரைக்காடு, தொப்பூர்க்காடு, துரிஞ்சிப்பட்டிக்காடு, லளிகம்காடு, பரிகம்காடு, ஆலம்பாடி - ஒகேனக்கல்காடு போன்ற காடுகள் பிரிக்கப்படாத தருமபுரி மாவட்டத்தில் உள்ளன. சில காடுகளில் வனத்துறையினரால் பராமரிக்கப்படும் பூங்காக்களும் காணப்படுகின்றன. மாமரங்கள் ஒட்டுமுறையில் தயாரிக்கப்படும் இடங்களில் கிருஷ்ணகிரி மாவட்டம் முதலிடத்தைப் பிடித்திருக்கின்றது. சந்தூர்ப் பகுதியில் பலவகையான மாமரங்கள் ஒட்டு முறையில் தயாரிக்கப்பட்டு மற்ற மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன. தமிழகத்தில் மட்டுமின்றி வட இந்தியாவிலும் இங்குப் பயிரிடப்படுகின்ற ஒட்டு மாமரக்கன்றுகள் பரவலாகப் பயிரிடப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

விலை உயர்ந்த சலவைக் கற்களின் மூலக்கற்கள் கிருஷ்ணகிரிப் பகுதியில் பல இடங்களில் கிடைக்கின்றன. மல்டி, பாராடைஸ் என்ற சிலவகைக் கற்கள் ஜப்பான், ஜெர்மனி போன்ற வெளிநாடுகளில் அதிக அளவில் விற்பனை ஆகின்றன. இத்தகைய கற்களால் இம்மாவட்டத்தின் பொருளாதார நிலை உயர்ந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

இத்தகைய இயற்கை வளம் நிறைந்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மக்கள் சுமார் 50,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து வாழ்ந்து வந்துள்ளனர் என்பது ஆய்விலிருந்து தெரிய வருகின்றது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதன் முதலில் புரூஸ்பூட் என்ற நிலவியல் ஆய்வாளர் பர்கூர் மலைப்பகுதியில் சில கற்கருவிகளைக் கண்டெடுத்தார். இவை புதியகற்கால மக்கள் பயன்படுத்திய

கருவிகள் என்பது தெரியவந்தது. புதிய கற்காலத்திற்கு முற்பட்ட கற்கருவிகளும் இப்பகுதியில் புரூஸ்பூட் என்பவர் கண்டெடுத்தார். இவருக்குப் பின் தொல்லியல் ஆய்வாளர்கள் பலர் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆய்வுகளை மேற்கொண்டனர். பி. நரசிம்மையா இவர்களில் குறிப்பிடத்தக்கவர். பர்கூர் மலைகளுக்கு அருகிலுள்ள வரட்டனபள்ளி, கப்பல்வாடி ஆகிய இடங்களில் பழைய கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது இங்கு கிடைக்கின்ற கற்கருவி களிலிருந்து தெரியவருகின்றது. கற்காலங்களில் இது மிகவும் பழைமையான கற்காலமாக இருந்த காரணத்தால் இக்காலம் பழைய கற்காலம் என்று பெயரிடப்பட்டது.

நுண்கற்கால மக்களும் தருமபுரிப் பகுதியில் வாழ்ந்துள்ளனர் என்பது முள்ளிக்காடு, தோகரப்பள்ளி ஆகிய இடங்களில் செய்யப்பட்ட அகழாய்வுகளில் இருந்து தெரிய வருகின்றது. இக்கால மக்கள் சிறிய கற்கருவிகளைப் பயன்படுத்தியதால் நுண்கற்காலம் என்று பெயரிடப்பட்டது. பொதுவாக இக்கால மக்கள் கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்துள்ளனர் என்ற கருத்து நிலவி வருகின்றது. ஆனால் தருமபுரிப் பகுதியிலும் இக்காலத்திய கருவிகள் கிடைப்பது குறிப்பிடத்தக்கது.

நுண்கற்கால மக்களின் வளர்ச்சியடைந்த நிலையே புதிய கற்காலம் ஆகும். புதியகற்கால மக்கள் பயன்படுத்திய கற்கோடாரிகள் வழவழப்பான மேல் தோற்றமுடையவை. இவை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல இடங்களில் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இக்காலத்தில் மக்கள் மட்கலங்களின் உபயோகம் தெரிந்திருந்தனர். ஆடு, மாடு, நாய் போன்ற வீட்டு விலங்குகளை வளர்க்கக் கற்றுக் கொண்டனர். வரகு, கம்பு போன்ற தானியங்களை உணவுப் பொருட்களாகப் பயன்படுத்தியுள்ளனர். இவர்கள் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்துள்ளனர். கற்கால மக்களின் வளர்ச்சி நிலையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியதாலும், புதிய கற்கருவிகளைப் பிடிப்பதற்கு ஏதுவாகக் கருவிகளைச் செய்து பயன்படுத்தியதாலும் இக்காலம் புதிய கற்காலம் என்று பெயரிடப்பட்டது. இக்கால மக்கள் மலைப்பாங்கான பகுதிகளிலும், மலையடிவாரங்களிலும், நீர்நிலைகள் மற்றும் இயற்கையான நீர்ஊற்றுகள் உள்ள இடங்களிலும் வாழ்ந்துள்ளனர்.

புதிய கற்காலத்தின் வளர்ச்சியடைந்த காலமே பெருங்கற்காலம் ஆகும். கற்காலத்தின் வளர்ச்சி நிலையாக இருந்தபோது இக்காலம் நாகரிகக் காலமாகக் கருதப்படுகின்றது. கூட்டம் கூட்டமாக வாழ்ந்த மக்கள் இக்காலத்தில் நிலையான இருப்பிடத்திலும் முறையான வாழ்க்கையையும் மேற்கொண்டனர். நேர்த்தியான மட்பாண்டங் களைச் செய்யவும் தெரிந்திருந்தனர். சக்கரத்தின் உதவியுடன் மட்பாண்டங்களைச் செய்துள்ளனர்.

இறந்தவர்களைப் புதைத்துக் கற்சின்னங்கள் எடுத்ததோடு தம் மூதாதையர்களை இவர்கள் வழிபட்டுள்ளனர். இறந்தவர்களின் ஆன்மா அக்கூட்டத்திற்கு நல்லது செய்யும் என்று எண்ணியும், ஈமச் சின்னங்களில் துவாரங்கள் வைத்தும் சின்னங்களை அமைத்துள்ளனர். இக்காலத்தில் இரும்பின் பயன் தெரிந்திருந்தது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல ஈமச் சின்னங்களில் இருந்து இரும்பு, கத்தி, வாள் போன்ற ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்காலத்திற்கு இரும்புக் காலம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இதற்கு முன் இரும்பின் பயன் மக்களுக்குத் தெரியவில்லை. இறந்தவர்களைப் புதைத்த இடத்திலோ அவர்களின் எலும்புகளைப் புதைத்த இடத்திலோ பெரிய கற்களைக் கொண்டு எடுக்கப்பட்ட ஈமச்சின்னங்கள் (பெருங்கல் சின்னங்கள்) இந்தியாவில் மட்டுமின்றி ஐரோப்பிய நாடுகளிலும் காணப்படுகின்றன. அங்கும் இதைப் போன்று பெரிய கற்களைக் கொண்டே ஈமச்சின்னங்களை அமைத்துள்ளனர். வெளிநாட்டு ஈமச்சின்னங்களுக்கும், இந்தியா விலுள்ள ஈமச்சின்னங்களுக்கும் தொடர்பு உள்ளதா என்பதில் ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன.

கிருஷ்ணகிரிப் பகுதியில் பலவகையான ஈமச்சின்னங்கள் காணப்படுகின்றன. அவைகளாவன : 1. கல்திட்டை, 2. கல்பதுக்கை, 3. கல்வட்டம், 4. குத்துக்கல், 5. தாழி போன்றவை. இவைகளின் அமைப்பு முறைகளைப் பார்ப்போம்.

## கல்திட்டை

கல்திட்டை என்பது நிலத்திற்கு மேல் அதாவது தரை மட்டத்திற்கு மேல் அமைக்கப்பட்டிருக்கும். இயற்கையாகக் கிடைத்த

பெரிய, பெரிய கற்களைக் கொண்டு வந்து நான்குபுறமும் நிறுத்திச் சதுரமாக அல்லது நீண்ட சதுரமாக ஓர் அறை உருவாக்கப் பட்டிருக்கும். பக்கத்திற்கு ஒரு கல்லோ அல்லது இரண்டு கல்லோ பயன்படுத்தப்படும். இவ்வறையின் கீழ்ப் பெரிய பாறை போன்ற பலகைக் கல்லைக் கொண்டு பாவப்பட்டிருக்கும். இதன் மேல்பகுதியில் ஒன்று அல்லது இரண்டு பெரிய பட்டையான கற்களைக் கொண்டு அறை மூடப்பட்டிருக்கும். இதை மூடிக்கல் என்று அழைப்பர். கற்பலகைகள் கீழே விழாமல் இருக்க, பக்கசுவர்கள் ஒன்றோ அதற்கு மேலோ வைக்கப்பட்டுள்ளன. மூடிக்கல்லைக் கொண்டு மூடப்பட்ட பின்னர் இதன்மேல் மண் அல்லது சிறிய, கூழாங்கற்கள் கொண்டு பரப்பி மேடு போன்ற அமைப்புடைய தாக்கப்பட்டுள்ளது. இதனால் ஒரு பெரிய மேடான பகுதியாகக் கல்திட்டை ஈமச்சின்னம் காணப்படுகின்றது. எல்லா கல்திட்டை களும் தரைமட்டத்திலிருந்து உயர்ந்திருக்கும் என்பது குறிப்பிடத் தக்கது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இதைப் போன்ற ஈமச் சின்னங்கள் பல உள்ளன.

## கல்பதுக்கை

கல்பதுக்கைக்கும், கல்திட்டைக்கும் வேறுபாடுகள் உள்ளன. கல்திட்டை தரைமட்டத்திற்கு மேலே எழுப்பப்பட்டிருக்கும். ஆனால் கல்பதுக்கை தரையைத் தோண்டி, தரையின் உட்பகுதியிலோ அல்லது சிறிது வெளியில் தெரிகின்ற வகையிலோ அமைக்கப் பட்டிருக்கும். கல்திட்டையில் இயற்கையாகக் கிடைத்த, பாறாங்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டது. ஆனால் கல்பதுக்கையில் பயன்படுத்தப்பட்ட பாறைகள் பட்டையாக செதுக்கப்பட்டுப் பலகைக் கற்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு உதவியாக லேட்ரைட்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய கற்பதுக்கைகள் தரைப்பகுதியில் மட்டுமின்றி மலையின் மேல்பகுதியிலும் காணப்படுகின்றன. இந்தப் பட்டையான கற்கள் கீழே விழுந்து விடாமல் இருக்க ஒரு கல்லை மற்றொரு கல் பிடித்திருக்கும் வகையில் செதுக்கப்பட்டிருக்கும் இது பார்ப்பதற்கு ''ஸ்வஸ்திகா'' வடிவத்தில் அமைந்திருக்கும். இத்தகைய கல் பதுக்கைகள் மழைத் தண்ணீரில் கரையாமல் இருக்க இதைச்

சுற்றிலும் வட்ட வடிவில் உருண்டைக் கற்கள் வைக்கப்பட்டிருக்கும். ஒன்று அல்லது இரண்டு கல்வட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இம்மாவட்டத்தில் இத்தகைய கல் பதுக்கைகள் அதிக அளவில் காணப்படுகின்றன. இதுவரை சுமார் 150 இடங்களில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## குத்துக்கல் :

குத்துக்கல் என்பது கிருஷ்ணகிரியில் குறைந்து காணப் படுகின்றது. நீண்ட குத்துக்கல் ஒன்று ஈமச்சின்னத்தின் உட்பகுதியில் நடப்பட்டிருக்கும். இதைத் தொடர்ந்து மற்ற ஈமச்சின்னங்களைப் போன்று கல் அறையும், கூழாங்கற்களும் இருக்கும். கூழாங்கற்களும் வெளியில் வராமல் இருக்க கல்வட்டங்கள் ஒன்று முதல் இரண்டு வரிசைகள் வரை வைக்கப்பட்டிருக்கும். கிருஷ்ணகிரி வட்டம் கூந்தப்பள்ளி என்ற ஊரிலும் தேன்கனிக்கோட்டை வட்டம் கங்கதேவனஹள்ளியிலும் குத்துக்கல் வகை ஈமச்சின்னங்கள் உள்ளன.

## தாழி :

மண்ணால் செய்து சுடப்பட்டுப் பெரிய பெரிய தாழிகளின் உட்பகுதியில் எலும்பை வைத்துப் புதைக்கும் வகையே தாழி ஈமச்சின்னம் என்பதாகும். இத்தகைய தாழிவகை ஈமச்சின்னங்கள் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் அதிக அளவில் காணப்படுகின்றன. தரையின் கீழே குழியைத் தோண்டி, தாழியை வைத்து புதைப்பர். தாழியின் அருகில் ஈமப்பொருட்களை வைத்து மூடுவார்கள். இவ்வாறு மூடப்பட்ட தாழிவகை ஈமச்சின்னங்கள் தரைமட்டத்திற்கு மேலே தெரிவதில்லை. மற்ற ஈமச்சின்னங்களைப் போன்று இதை எளிதில் தெரிந்து கொள்ள முடியாது. அகழாய்வு செய்யும் போது மட்டுமே கண்டுபிடிக்க முடியும். ஆற்றின் கரையில் ஈமத்தாழிகள் அதிக அளவில் உள்ளன.

## ஈமப்பேழை

ஈமப் பேழைகளும் இம்மாவட்டத்தில் கிடைக்கின்றன. ஈமப்பேழை என்பது நீண்ட வட்டவடிவில் காணப்படுகின்றது. இதன் அடிப்பகுதியில் கால்கள் உள்ளன. 18, 32 என்ற எண்ணிக்கையிலும்,

இரண்டு அல்லது மூன்று வரிசைகளில், கால்களும் காணப் படுகின்றன. இதன் மேல், மண்ணினால் ஆன மூடியும் காணப் படுகின்றது. குதிரை, ஆடு போன்ற வடிவங்களில் இதன் மூடிகள் அமைந்திருக்கின்றன. இத்தகைய ஈமப்பேழை ஒன்று தற்போது தருமபுரி அகழ்வைப்பகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி வட்டத்தில் வரட்டனபள்ளிப் பகுதியில் இதைப்போன்ற பேழைகள் கிடைக்கின்றன.

பெருங்கற்கால மக்கள் கருப்பு சிவப்பு மட்கலங்களைச் செய்ய தெரிந்திருந்தனர். விலை உயர்ந்த கல்மணிகள், அம்புமுனைகள் போன்றவை கிடைத்துள்ளன. கால்நடை வளர்ப்பு இக்காலத்தில் முக்கியமான தொழிலாக இருந்துள்ளது. கூட்டம், கூட்டமாக வாழ்ந்த பெருங்கற்கால மக்கள் ஆறுகள், ஏரிகள் போன்றவற்றின் கரைகளில் வாழ்ந்துள்ளனர். ஆதிச்சநல்லூர், நீலகிரிமலை ஆகிய இடங்களிலும் தருமபுரி பகுதியிலும் சில வெண்கலப் பொருட்கள் கிடைத்துள்ளன. மண்டை, சாடி, குவளை போன்ற பாத்திரங்களும் விலை உயர்ந்த கல் மணிகளைக் கொண்டு தொடுக்கப்பட்ட கழுத்தணிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் ஈட்டிகள், வேல்கள், பட்டாக் கத்திகள், குறுவாள்கள் ஆகியனவும் கிடைத்துள்ளன. கிருஷ்ணகிரி வட்டம் பீமாண்டஹள்ளி, கொங்கன்பாளையம் போன்ற ஊர்களில் இருந்து வாள்கள், ஈட்டிகள், குறுவாள்கள், இரும்புக் கோடரிகள், பெருங்கற்காலக் குடுவைகள், கிண்ணங்கள், குவளைகள், கோப்பைகள், தட்டுகள், பானை தாங்கிகள், கெண்டிகள் மற்றும் குறியீடுள்ள கருப்பு சிவப்புப் பானைகள் கண்டறியப்பட்டுள்ளன.

## மல்லச்சந்திரம் :

மல்லச்சந்திரம் என்ற ஊர் கிருஷ்ணகிரி - பெங்களூர் நெடுஞ்சாலையில் 15 கி.மீ. தூரத்தில் உள்ளது. கிருஷ்ண கிரியிலிருந்து பீர்பள்ளி செல்லும் பேருந்தில் சாம்பல் பள்ளத்திலிருந்து இந்த ஊருக்குச் செல்லலாம்.

பாண்டவர் கோயில் என்று அழைக்கப்படுகின்ற பெருங் கற்காலக் கல்திட்டைகள் தாழ்வாக அமைந்துள்ள மலையின் மேல்பகுதியில் உள்ளன. பாறையின் மேல் சுமார் 200 கல்திட்டைகள்

காணப்படுகின்றன. ஒவ்வொரு கல்திட்டையும் 1 மீட்டர் உயரத்திலிருந்து 2.50 மீட்டர் உயரம் வரை உள்ளது.

நான்கு கற்பலகைக் கற்களை நேராக நிறுத்தி ஒன்றை ஒன்று பிடித்துக் கொள்வதற்கு ஏற்றார்போல அதாவது, ''ஸ்வஸ்திகா'' அமைப்பில் பொருத்தப்பட்டுள்ளது. இதன்மேலே மூடி ஒன்றும் காணப்படுகின்றது. கிழக்கு நோக்கி இருக்கும் கல்லில் வட்டவடிவில் துவாரம் ஒன்றுள்ளது. இந்தத் துவாரத்தின் முன்னர் வழிபோன்ற அமைப்பில் (Passage) கற்களால் கட்டப்பட்டுள்ளது. கல் திட்டைகளைச் சுற்றிலும் செவ்வக வடிவத்தில் உள்ள கற்பலகைகளைக் கொண்டு சுவர்போன்ற அமைப்பில் கற்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. வட்ட வடிவில் அமைந்துள்ள இந்த வெளிப்புறச் சுவர்கள் சில கல்திட்டைகளில் இரண்டு வரிசைகளும் காணப்படுகின்றன. கற்சுவர்களின் அமைப்பைப் பார்க்கும் போது இது மதில்சுவரைப் போன்று அமைந்துள்ளது. கற்பலகைகளின் கீழே விழாமல் இருக்கச் செங்கற்களை ஒத்த கருங்கற்களை அடுக்கிச் சுவர் போன்று வைத்துள்ளனர். இத்தகைய அமைப்புடைய கல் திட்டைகள் மகாராஜாக்கடையிலும் உள்ளன.

இரண்டாவது வகை கல்திட்டையில் வெளிப்புறச் சுவர் போன்ற அமைப்புடைய சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. இங்கு ஒன்று அல்லது இரண்டு வெளிப்புறச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சுவரின் ஒரு கல் செவ்வக வடிவிலும் மற்றொரு கல்லின் மேல் பகுதி அரைவட்ட வடிவிலும் கர்ணப்படுகின்றன. இந்த இரண்டு வகையான கற்கள் ஒன்றை அடுத்து ஒன்று வைக்கப்பட்டுள்ளன. இது பார்ப்பதற்குக் கோட்டையின் அமைப்பு போன்று காணப் படுகின்றது. இதைப்போன்ற கல்திட்டைகள் ஆந்திர மாநிலத்தில் இருளபண்டா என்ற இடத்தில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள ஒரு பெரிய கல்திட்டையைச் சுற்றி சுமார் 10க்கு மேற்பட்ட சிறிய கல்திட்டைகள் உள்ளன. மத்தியிலுள்ள கல்திட்டை ஒரு குழுவினுடைய தலைவனாக இருக்கலாம். சுற்றியுள்ள கல்திட்டைகள் காவலர்களுடையதாக இருக்க வாய்ப்பு உள்ளன.

சில கல்திட்டைகளின் உட்பகுதிகளில் மேற்குப் பக்கமுள்ள கல்பலகைகளில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. மற்ற இரு பக்கங்களில் (கிழக்கு இல்லாமல்) உள்ள கற்பலகைகளிலும்

ஓவியங்கள் குறைந்த அளவில் உள்ளன. மல்லசந்திரத்திலும் கல்திட்டையின் மேற்குப் பக்கமுள்ள சில கல்பலகைகளின் உட்பகுதியில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. மற்ற இரண்டு பக்கங்களில் உள்ள கற்பலகைகளிலும் ஓவியங்கள் காணப் படுகின்றன. இரண்டு மனிதர்களின் உருவங்கள், 16 நேர்க்கோடுகள், வில், அம்பு கைகளில் ஏந்திய வீரர்கள் மற்றும், மிருகங்களின் உருவங்கள், மிருகத்தின் மேல் அமர்ந்த மனிதன் போன்றவைகள் குறிப்பிடத் தக்கன. ஓவியங்கள் யாவும் வெள்ளை வண்ணத்தில் காணப் படுகின்றன. சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு வாழ்ந்த பெருங்கற்கால மக்கள் இத்தகையக் கட்டட நுணுக்கத்தைத் தெரிந்திருந்தனர் என்பது நமக்கு வியப்பாக உள்ளது.

## கங்கலேரி :

கங்கலேரி என்ற ஊர் இராயுக்கோட்டை சாலையில் கிருஷ்ணகிரியிலிருந்து 1 கி.மீ. தூரத்தில் உள்ளது. கிருஷ்ண கிரியிலிருந்து நகரப் பேருந்தின் மூலம் இந்த ஊரை அடையலாம். இந்த ஊரில் ஏழு கல் பதுக்கைகள் உள்ளன. ஒவ்வொன்றின் நீள அகலம் சுமார் 3,30 X 40 மீட்டர் அளவுடையனவாகும். கிழக்குப் பக்கத்திலுள்ள கற்பலகையின் வட்ட வடிவில் துவாரம் உள்ளது. பெரிய கற்கள் நான்கைப் பூமியில் நட்டு அதன்மேல் பலகைக் கல் ஒன்றை வைத்து மூடியுள்ளனர். கற்பலகைகளில் உள்ள பாறைகள் தடித்த அளவில் உள்ளன. இதை இப்பகுதி மக்கள் பாண்டவர் வீடு என்று அழைக்கின்றனர். அக்காலத்தில் பாண்டவர்கள் இதில் குடி இருந்தனர் என்றும் இச்சின்னத்தை வழிபட்டால் நல்லது நடக்கும் என்றும் இப்பகுதி மக்கள் நம்புகின்றனர். இதில் உள்ள கற்கள் நான்கும் கரடுமுரடான தடித்த கற்களாகும். இத்தகைய அமைப்புடைய கல்பதுக்கைகள் தமிழகத்தின் பிற பகுதிகளில் மிகுதியாக இல்லை என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

## வரட்டனப்பள்ளி :

வரட்டனப்பள்ளி என்ற கிராமம் கிருஷ்ணகிரி - குப்பம் சாலையில் 11கி.மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. கிருஷ்ணகிரி யிலிருந்து நகரப் பேருந்து மூலமாக இந்த ஊரை அடையலாம். இந்த

ஊருக்குக் கிழக்கில் எரகெட்டு என்ற மலையின் ஒரு பகுதி சுமார் 3கி.மீ. தூரத்தில் உள்ளது. இந்த மலையில் கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் காணப்படுகின்றன. வட்டச் சில்லுகள், சுரண்டிகள், கைக்கோடாரிகள் போன்றவை இங்கு கண்டெடுக்கப் பட்டுள்ளன. கரடு முரடான அமைப்புடைய மேற்படி கருவிகள் பழைய கற்கால மக்கள் பயன்படுத்தியவையாகும். இக்காலக் கருவிகள் இந்த மலையின் பெரும்பாலான பகுதிகளில் கிடைக்கின்றன. முழுமையான கருவிகள் கிடைப்பதுடன் முற்றுப் பெறாத பல கருவிகளும் காணப்படுகின்றன. மேலும் கருவிகள் செய்வதால் ஏற்பட்ட சில்லுகளும், உடைந்த நிலையிலுள்ள கருவிகளும் பல கிடைப்பதால் இங்குக் கற்கருவிகளைச் செய்யும் தொழில் பட்டறை இருந்திருக்க வாய்ப்பு உள்ளது. இந்த மலையின் அருகில் தாமிரபாளையம் சுனை என்ற நீர்நிலை ஒன்றும் காணப்படுகின்றது. இந்த நீர்நிலையை நம்பி தான் இப்பகுதியில் மக்கள் வாழ்ந்துள்ளனர்.

## கப்பல்வாடி

வரட்டனப்பள்ளி போன்று கப்பல்வாடி என்ற இடத்திலும் கற்கால மக்கள் பயன்படுத்திய கற்கோடாரிகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. கப்பல்வாடி என்ற ஊர் கிருஷ்ணகிரியிலிருந்து 12கி.மீட்டர் தூரத்தில் உள்ளது. இந்த இடத்தை ஆய்வு செய்த பி. நரசிம்மையா சில கற்கோடரிகளைக் கண்டெடுத்தார். இக்கற் கோடாரிகள் நுண் கற்காலத்திற்கு முற்பட்ட கருவிகள் என்று அவர் கருதுகிறார். ஆனால், அண்மையில் செய்யப்பட்ட மேற்பரப்பு ஆய்வின் மூலம் இது இடைக்கற்காலத்தைச் சார்ந்தது என்பது தெரிய வருகிறது. இங்குக் கற்கோடாரிகள் பேரிக்காய் வடிவிலுள்ள கருவிகள், சுரண்டிகள், கிழிப்பான்கள், போன்றவை கிடைத்துள்ளன. கப்பல்வாடியில் கிடைத்த கற்கருவிகளும், வரட்டனபள்ளியில் கிடைத்த கற்கருவிகளும், ஒரே வகையான தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டவை என்பது தெரியவருகிறது. தமிழகத்தில் முதன் முதலில் பூண்டிக்கு அருகில் பழைய கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டன. அதன் பின்னர் கிருஷ்ணகிரி பகுதியில் கப்பல்வாடி, வரட்டனபள்ளி ஆகிய மலைப்பகுதிகளில்

கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இங்குக் காணப்படும் டைக் (Dyke) எனப்படும் கற்கள் மிகவும் திடமானதாக உள்ளதை நம் முன்னோர் 50,000 ஆண்டுகட்கு முன்பே அறிந்திருந்தனர் எனலாம். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேன்கனிக்கோட்டை (டெங்கினி கோட்டை என்பது பேச்சு வழக்கு) ஒசூர், கிருஷ்ணகிரி, போச்சம்பள்ளி, ஊத்தங்கரை என ஐந்து வட்டங்கள் உள்ளன. எனினும் கிருஷ்ணகிரி வட்டத்தில்தான் தொல்பழங்கால ஓவியங்கள் குகைகளிலும், கல்பதுக்கைகளிலும் கல்திட்டைகளிலும் காணப்படுகின்றன. கிருஷ்ணகிரி சையத்பாட்சாமலை, தாளப்பள்ளம், குருவி நாயனப்பள்ளி, மகாராஜக்கடை, மல்லப்பாடி, மல்லசமுத்திரம் எனப்பல இடங்களில் தொல்பழங்கால ஓவியங்கள் உள்ளன. பெரும்பாலும் வெள்ளை நிறத்தில் உள்ளன. வேட்டைக் காட்சிகள், பாலுணர்வைத் தூண்டும் ஓவியங்கள், குறியீடுகள் பொதுவாக ஓவியங்களில் உள்ளன. சங்ககால நடுகற்கள் ஓவியங்களாக இருந்திருக்க வேண்டும் எனலாம்.

# 3. தொல்பழங்காலத் தடயங்கள்

பிரிக்கப்படாத தருமபுரி மாவட்டத்தில் பல ஊர்களில் புதிய கற்காலம், பெருங்கற்காலத் தடயங்கள் உள்ளன. ஆய்வாளர்கள் அவைகளைப் பட்டியல் இட்டுள்ளனர். வரலாற்று மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்பதால் அவைகளின் பட்டியல் ஒன்றைக் கீழே இணைக்கிறோம்.

## அரூர் வட்டம்

| | |
|---|---|
| அதிகாரப்பட்டி | கல்வட்டம் |
| தைல மலை | புதிய கற்காலக் கருவிகள், மண் மேடுகள், வாழ்விடங்கள் போன்றவை |
| எல்லபுளியம்பட்டி | கல்வட்டம் |
| கோபிநாதம்பட்டி | கல்வட்டம், முதுமக்கள் தாழி |
| இந்திராநகர் | கல்வட்டம், முதுமக்கள் தாழி |
| ஜம்மனஹள்ளி | கல்வட்டம் |
| தள்ளன்கொட்டாய் | கல்வட்டங்கள் |
| மணியம்பாடி | கல்வட்டங்கள் |
| மூக்கனூர் | கல்வட்டங்கள் |
| மூலக்கொட்டாய் | கல்வட்டம், முதுமக்கள் தாழி வகைகள் |
| மொரப்பூர் | கல்வட்டங்கள், முதுமக்கள் தாழிகள் |
| முள்ளிகாடு | புதிய கற்கால வாழ்விடங்கள் |
| நத்தனூர் | கல்வட்டங்கள் |
| நவலை | கல்வட்டங்கள், முதுமக்கள் தாழி, அச்சு குத்தியகாசுகள், ரோமானியர் காசுகள் |

| | |
|---|---|
| பண்ணிமடுவு | புதிய கற்கால வாழிடம் |
| புதூர் | கல்வட்டங்கள் |

## பாப்பிரெட்டிப்பட்டி வட்டம்

| | |
|---|---|
| ராமாயினஹள்ளி | கல்வட்டங்கள் |
| சாமந்தஹள்ளி | கல்வட்டங்கள் |
| செங்குட்டை | கல்வட்டங்கள் |
| தென்கரைக்கோட்டை | கல்வட்டங்கள், முதுமக்கள் தாழி, |
| தாளநத்தம் | கல்வட்டங்கள் |
| தாதம்பட்டி பி. | கல்வட்டங்கள் |
| திப்பம்பட்டி | கல்வட்டங்கள் |

## பென்னாகரம் வட்டம்

| | |
|---|---|
| ஆதனூர் | கல்வட்டங்கள், வாழ்விடங்கள் |
| அட்டஒனி | கல்வட்டங்கள் |
| அரக்காசனஹள்ளி | கல்வட்டங்கள் |
| சின்னகடமடை | கல்வட்டங்கள் |
| ஏரியூர் | கல்வட்டங்கள், தொல்பழங்காலக் கோட்டுருவங்கள் |
| ஏறுபள்ளி | கல்வட்டங்கள் |
| கரூர்மாரியம்மன்கோயில் | கல்வட்டங்கள் |
| கூடல்பட்டி | கல்வட்டங்கள் |
| கூத்தப்பாடி | கல்வட்டங்கள், வாழ்விடங்கள் |
| மஞ்சநாயக்கன்பட்டி | கல்வட்டங்கள் |
| நடுச்சேரி | கல்வட்டங்கள் |
| நல்லாம்பட்டி | கல்திட்டைகள், கல்பதுக்கை |
| பன்னப்பட்டி | கல்வட்டங்கள், பழமையான கற்கருவிகள், தொழிற்கூடம் |
| பெரும்பாலை | கல்வெட்டுப்பலகை, வாழ்விடங்கள் |

| | |
|---|---|
| புதுப்பட்டி | கல்வட்டங்கள் |
| ரங்கசாமிமலை | கல்வட்டங்கள் |

## தருமபுரி மாவட்டம்

| | |
|---|---|
| அட்டகுட்டை | கல்வட்டங்கள் |
| அதியமான்கோட்டை | மண்மேடுகள் |
| பாலஜங்கமனஹள்ளி | கல்வட்டங்கள் |
| செக்காரப்பட்டி | கல்வட்டங்கள், சன்னியாசிக்கல், கோவுக்கல் |
| கருபையனஹள்ளி | கல்வட்டங்கள், கல்பதுக்கை, தொப்பிக்கல்லில் குழி அமைப்பு (Cup Marks) |
| கொளகத்தூர் | கல்வட்டங்கள், மண்மேடுகள் |
| லளிகம் | கல்வட்டங்கள், - புதிய கற்காலக் கருவிகள் வழிபடல் |
| மேக்கனாம்பட்டி | கல்வட்டங்கள், |
| மோதூர் | புதியகற்காலம், கல்வட்டங்கள், முதுமக்கள் தாழி |
| கோயிலூர் | சமணப்படுக்கை? |
| மூக்கனூர் | கல்வட்டங்கள், |
| நாகர்கூடல் | கல்வட்டங்கள், |
| நார்த்தாம்பட்டி | கல்வட்டங்கள், |
| நத்தப்பட்டி | மண்மேடுகள், கல்வட்டங்கள் |
| நெற்குந்தி | வாழ்விடங்கள், கல்வட்டங்கள் |
| பழனிகுட்டை | கல்வட்டங்கள், |
| பாலவாடி | மண்மேடுகள் |
| பங்குநத்தம் | கல்வட்டங்கள், |
| புதூர் | கல்வட்டங்கள், |
| ராஜாகொல்லஹள்ளி | கல்வட்டங்கள், வாழ்விடங்கள் |

| | |
|---|---|
| ராஜாதோப்பு | கல்வட்டங்கள், |
| சிவசுப்ரமணிய நகர் | கல்வட்டங்கள், |
| தம்மட்டக்கல் | கல்வட்டங்கள், |

## பாலக்கோடு வட்டம்

| | |
|---|---|
| பிக்கனஹள்ளி | புதிய கற்காலம், கோவுக்கல், |
| பாலமாரண்டஹள்ளி | சன்னியாசிக்கல் |
| செட்டிஹள்ளி - பி | கல்வட்டங்கள், |
| எலுமிச்சினஹள்ளி | கல்வட்டங்கள், |
| பாலக்கோடு | கல்வட்டங்கள், ஈமத்தாழி வகைகள் |
| நலப்பறம்பட்டி | கல்வட்டங்கள், முதுமக்கள் தாழி வகைகள் |
| திருமலவாடி | கல்வட்டம், குத்துக்கல், சன்னியாசிக்கல். |

## போச்சம்பள்ளி வட்டம்

| | |
|---|---|
| இருமத்தூர் | கல்வட்டங்கள், |
| மயிலாடும்பாறை | புதிய கற்காலக் கருவிகள், கல்வட்டங்கள், பாறை ஓவியங்கள் |
| தொகரப்பள்ளி | புதிய கற்காலக் கருவிகள், வாழ்விடங்கள், கல்வட்டங்கள். |

## கிருஷ்ணகிரி வட்டம்

| | |
|---|---|
| ஆண்டிமலை | கல்வட்டங்கள், பாறை ஓவியங்கள் |
| அட்டகுட்டை | பாறை ஓவியங்கள் |
| அத்தனூர் | கல்வட்டங்கள், முதுமக்கள் தாழி |
| பாலநாயனபள்ளி | கல்வட்டங்கள் |
| பேலுகுளி | கல்பதுக்கைகள் |
| சந்திரபூர்த்தபாறை | கல்பதுக்கைகள் |
| சென்னசந்திரம் | கல்பதுக்கை, மண்மேடுகள். |
| தேவர்முக்குளம் | கல்வட்டங்கள் |
| ஏக்கல் நத்தம் | கல்பதுக்கை |
| கங்காவரம் | கல்வட்டங்கள் |

| | |
|---|---|
| கங்கலேரி | கல்வட்டங்கள், கல்பதுக்கை |
| கிட்லூர் | கல்வட்டங்கள், |
| கொல்லப்பள்ளி | புதிய கற்காலம், மண்மேடு, பெருங்கற்காலத் தடயங்கள் |
| இட்டிக்கல் அகரம் | கல்வட்டங்கள் |
| கப்பலவாடி | பழைய கற்காலம் |
| காரியகவுண்டனூர் | கல்வட்டங்கள் |
| கொடுகூர் | கல்வட்டங்கள் |
| கொளகொத்தூர் | கல்வட்டங்கள், வாழ்விடங்கள் |
| குச்சிக்கல்பத்தூர் | பெருங்கற்காலப் பண்பாடு |
| குந்தப்பள்ளி | குத்துக்கல் |
| குந்தாரப்பள்ளி | கல்வட்டங்கள் |
| குரும்பட்டி | கல்வட்டங்கள் |
| பீமாண்டஹள்ளி | முதுமக்கள் தாழி, கல்பதுக்கைக் குழி அமைப்பு (தொப்பிக்கல்லில்) |
| குருவிநாயனபள்ளி | கல்பதுக்கை, கல்திட்டையில் பெருங்கற்கால ஓவியங்கள் |
| கூத்தலப்பட்டி | கல்வட்டங்கள், பாறை ஓவியங்கள் |
| மகாராஜாகடை | கல்பதுக்கை, பாறை ஓவியங்கள் |
| மலத்தம்பட்டி | கல்வட்டங்கள் |
| மரிரெட்டிப்பள்ளி | புதிய கற்காலக் கருவிகள், கல்வட்டங்கள், மண்மேடுகள் |
| மிடுதேபள்ளி | பெருங்கற்காலப் பண்பாட்டு எச்சங்கள் |
| மிட்டப்பள்ளி | பெருங்கற்காலப் பண்பாட்டு வகைகள் |
| மூங்கில் புதூர் | கல்பதுக்கை, கல்வட்டங்கள், பாறை ஓவியங்கள் |
| மோட்டூர் | கல்வட்டங்கள் |
| நக்கலபள்ளி | கல்பதுக்கை, முதுமக்கள் தாழி |
| ஒப்பத்தவாடி | பாறை ஓவியங்கள் |
| ஒரமணக் குண்டா | கல்வட்டங்கள், கல்பதுக்கை, பாறை ஓவியங்கள் |
| ஒத்திக்குப்பம் | கல்பதுக்கை, பாறை ஓவியங்கள் |

| | |
|---|---|
| பச்சிகானபள்ளி | கல்பதுக்கை, கல்வட்டங்கள், மண்மேடுகள் |
| பாலகுறி | கல்வட்டங்கள் |
| பட்டகப்பட்டி | கல்வட்டங்கள் |
| சாம்பமுட்லு | கல்வட்டங்கள் |
| செம்படமுத்தூர் | கல்வட்டங்கள் |
| சோக்காடு | பெருங்கற்காலம் |
| சூலமலை | கல்பதுக்கை |
| சுண்டேகுப்பம் | வாழ்விடங்கள், பாறை ஓவியம். |
| தாவளம் | கல்வட்டங்கள் |
| வரட்டனப்பட்டி | கல்பதுக்கை |
| வரட்டனபள்ளி | பழைய கற்காலம் |
| வேடர்தட்டக்கல் | வாழ்விடங்கள், கல்வட்டங்கள், |
| வீரமலை | பெருங்கற்காலப் பண்பாட்டு வகைகள் |
| மோரமடுவு | புதிய கற்காலக் கருவிகள் |
| கிருஷ்ணகிரி | பெருங்கற்கால பாறை ஓவியங்கள் |

### ஊத்தங்கரை வட்டம்

| | |
|---|---|
| சூளகரை | முதுமக்கள் தாழி |
| கருவானூர் | கல்வட்டங்கள் |
| குன்னத்தூர் | கல்வட்டங்கள் |
| வேலம்பட்டி | கல்வட்டங்கள், முதுமக்கள் தாழி |

### ஓசூர் வட்டம்

| | |
|---|---|
| ஆனசந்திரம் | கல்வட்டங்கள், கல்பதுக்கை, குழிஅமைப்பு தலைக்கல்லில் காணப்படுதல் (Cup mark on Capstone) |
| பாலனபள்ளி | கல்வட்டங்கள் |

| | |
|---|---|
| பஸ்தாபள்ளி | கல்பதுக்கை - பெருங்கற்காலம் |
| செட்டிபள்ளி - A | கல்வட்டங்கள் - பெருங்கற்காலம் |
| ஏழசுனை | கல்வட்டங்கள் |
| குண்டுவலம் | கல்வட்டங்கள் |
| கொரகுர்கி | கல்வட்டங்கள் |
| குருபரஹள்ளி | கல்வட்டங்கள், முதுமக்கள் தாழி |
| குருப்பன்தொட்டி | கல்வட்டங்கள் - பெருங்கற்காலப் பண்பாடு |
| மெய்தனபள்ளி | கல்வட்டங்கள் |
| மல்லசந்திரம் | கல்பதுக்கைகள், கல்திட்டைகளில் பெருங்கற்கால ஓவியங்கள் |
| மேலுமலை | தனிச்சிறப்பான அமைப்புகள். அதிக அளவில் பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் உள்ள இடம் |
| முடிப்பிநாயனஹள்ளி | கல்பதுக்கை - ஓவியங்கள் |
| புறம் | கல்வட்டங்கள் |
| சிகரலபள்ளி | கல்வட்டங்கள் |
| சூளகிரி | கல்வட்டங்கள் |
| தொரப்பள்ளி | கல்பதுக்கை |
| அத்தனபள்ளி | கல்வட்டங்கள் |
| உள்ளட்டி | பெருங்கற்காலத் தடயங்கள் |

## தேன்கனிக்கோட்டை வட்டம்

| | |
|---|---|
| அய்யூர் | கல்வட்டங்கள் |
| பேளூர் | கல்வட்டங்கள் |
| பெட்டமுகளாலம் | கல்வட்டங்கள் |
| பிளாலம் | புதிய கற்காலக் கருவிகள், கல்வட்டங்கள் |

| | |
|---|---|
| போதம்பட்டி | கல்வட்டங்கள் |
| தொட்டமஞ்சி | கல்பதுக்கை, கல்வட்டங்கள் |
| தொட்டதிம்மனஹள்ளி | கல்வட்டங்கள் |
| எச்சனஹள்ளி | கல்வட்டங்கள் - பெருங்கற்காலப் பண்பாடு |
| கங்கதேவனஹள்ளி | கல்வட்டம், குத்துக்கல் |
| கனவானபள்ளி | கல்வட்டங்கள் |
| கண்டேகவுண்டனஹள்ளி | கல்வட்டங்கள் |
| கோட்டூர் | கல்வட்டங்கள் - பெருங்கற்காலம் |
| குந்துக்கோட்டை | கல்வட்டங்கள் |
| லக்ஷிசந்திரம் | கல்வட்டங்கள் |
| மல்லிகார்ஜுனதுர்கம் | கல்வட்டங்கள் |
| கும்மளாபுரம் | பெருங்கற்காலம் |
| மஞ்சுகொண்டப்பள்ளி | கல்வட்டங்கள் |
| மரியாளம் | கல்வட்டங்கள் |
| நாட்ராம்பாளையம் | கல்வட்டங்கள் |
| பாளயம்கோட்டை | கல்வட்டங்கள் |
| ரத்னகிரி | கல்வட்டங்கள் |
| ராயக்கோட்டை | கல்வட்டங்கள், கோட்டை சுவர்கள் |
| சாந்தனபள்ளி | கல்வட்டங்கள் |
| செங்கோடசென்னஹள்ளி | கல்வட்டங்கள் |
| ஆலிகுண்டா | கல்வட்டங்கள் |
| தண்டரை | கல்வட்டங்கள் |
| தாடிக்கல்லு | கல்வட்டங்கள் |
| திம்மிஜேபள்ளி | கல்வட்டங்கள் |
| தொட்டிகுப்பம் | புதிய கற்காலம், கல்வட்டங்கள் |
| ஊடேதுருகம் | கல்வட்டங்கள் - பெருங்கற்காலம் |

# 4. தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட அகழாய்வுகள்

வரலாற்று நூல்கள் எழுத உதவுகின்ற ஆதாரக் கூறுகளில் அகழாய்வும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அகழாய்வுகளில் கிடைக்கின்ற தொல்பொருட்களைக் கொண்டு அங்கு வாழ்ந்த மக்களின் பண்பாடு, தொழில், கலை போன்றவைகளைப் பற்றி தெரிந்துக் கொள்ள முடிகின்றது. அகழ் ஆய்வின் அடிப்படையில் அப்பகுதி மக்களின் வாழ்க்கை நிலையையும், அவர்களுடைய சமயநிலைகளைப் பற்றியும் அறிந்துக் கொள்ள முடிகின்றது.

சமுதாயத்தில் இருந்த பலதரப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலைகளைப் பற்றிக் கூறுகின்ற சான்றுகள் அகழாய்வில் கிடைக்கின்றன. உதாரணமாகப் பையம்பள்ளி என்ற இடத்தில் நடைபெற்ற அகழாய்விலிருந்து பல செய்திகள் வெளிவந்துள்ளன. இங்குப் புதியகற்கால மக்களும், பெருங்கற்கால மக்களும் தொடர்ந்து வாழ்ந்துள்ளனர் என்ற உண்மை நிலை தெளிவாகியுள்ளது. இம்மக்களின் வளர்ச்சி நிலைகளுக்கு ஏற்ப எத்தகைய பொருட்களைப் பயன்படுத்தினர் என்பதும் இதிலிருந்து தெரிய வந்துள்ளது. எனவே, அப்பகுதி மக்களின் வாழ்க்கையைப் பற்றி கூறுகின்ற மிக முக்கியமான அடிப்படைச் சான்றுகளில் அகழாய்வு ஒன்று என்பது மறுக்க முடியாத உண்மை. இதே போல் மோதூர் அகழாய்விலிருந்து புதிய கற்கால மக்களின் எச்சங்களையும் பெருங்கற்கால மக்களின் வாழ்க்கை முறைகளையும் அறிகிறோம். பிரிக்கப்படாத தருமபுரி மாவட்டத்தில் சில ஊர்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தொகரப்பள்ளி :

கிருஷ்ணகிரி வட்டத்தில் தொகரப்பள்ளி என்ற ஊர் அமைந்துள்ளது. கிருஷ்ணகிரியிலிருந்து 20 கி.மீ. தூரத்தில்

ஊத்தங்கரை செல்லும் சாலையில் இவ்வூர் அமைந்துள்ளது. கிருஷ்ணகிரியிலிருந்தும், பர்கூரிலிருந்தும் நகரப் பேருந்துகள் உள்ளன. தொகரப்பள்ளியைச் சுற்றிலும் மலைகள் சூழ்ந்துள்ளன. இங்குப் புதியகற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கிடைக்கின்றன. அவர்கள் பயன்படுத்திய புதிய கற்கால கற்கருவிகள் இன்றும் கண்டெடுக்கப்படுகின்றன. தொகரப்பள்ளியின் வடக்கில் 2 கி.மீ. தொலைவில் சாணாரப்பன் மலையடிவாரத்தில் இந்திய தொல்லியல் ஆய்வுத்துறையைச் சார்ந்த பி. நரசிம்மையா மாதிரி அகழ் ஆய்வுக்குழி ஒன்றை அகழ்ந்தார். அதில் அரிய இரண்டு காலக் கட்டத்தைச் சார்ந்த கருவிகள் கிடைத்துள்ளன. புதிய கற்காலம். நுண்கற்காலத்தைச் சார்ந்த கைக்கோடரிகள், சீவு கருவிகள் போன்றனவும் கிடைத்துள்ளன. இங்குக் காணப்பட்ட மண் அடுக்குகளில் ஒன்று மட்டும் 15 செ.மீ. X 20 செ.மீ. தடிப்பில் இருந்துள்ளது. இவற்றுடன் சிவப்பு மட்கலங்களும், சாம்பல்நிற மட்கலங்களும் பழுப்புநிற மட்கலங்களும், கருப்புநிற மட்கலங்களும் கிடைத்துள்ளன. இவை புதிய கற்கால மக்கள் பயன்படுத்தியவை ஆகும்.

அகழாய்வு செய்யப்பட்ட இடத்தின் அருகில் பெருங்கற்கால ஈமச்சின்னங்களான கல்வட்டங்கள் காணப்படுகின்றன. இக்கல் வட்டங்கள் மலையடிவாரம் வரை பரந்துள்ளன.

சாணாரப்பன் கோயில் என்று அழைக்கப்படுகின்ற நடுகல் சிற்பங்கள் 7 இங்கு உள்ளன. இவை இன்றும் வழிபாட்டில் உள்ளன. இவற்றில் ஐந்து நடுகற்கள் கல்வட்டம் அமைப்பில் காணப் படுகின்றன. மற்றவை தனியாக நிற்கின்றன. நடுகல் சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. இரண்டு நடுகற்களில் எழுத்துகள் உள்ளன. இரண்டு கன்னடக் கல்வெட்டுகளும் வெட்டப் பட்டுள்ளன. தொகரப்பள்ளியில் புதிய கற்காலம் தொடங்கி இன்று வரை மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆண்டுதோறும் திருவிழாக்கள் மேற்படி நடுகற்களுக்கு நடத்தப் படுகின்றன.

## தைலமலை :

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் தைலமலை என்னும் ஊர் அமைந்துள்ளது. பாப்பிரெட்டிபட்டி என்ற ஊரிலிருந்து 6 கி.மீ.

தூரத்தில் அமைந்துள்ள இந்த ஊருக்கு அரூர், பாப்பிரெட்டிபட்டி ஆகிய ஊர்களில் இருந்து பேருந்து வசதிகள் உள்ளன.

இங்குப் புதியகற்காலம், பெருங்கற்காலம், வரலாற்றுக்காலம் ஆகிய காலங்களைச் சார்ந்த தொல்பொருட்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இந்த ஊரையும் மலைகள் சூழ்ந்துள்ளன. மலையடி வாரத்தில் புதிய கற்காலக் கைக்கோடரிகள் கிடைத்துள்ளன. இதன் அடிப்படையில் மத்திய தொல்லியல் துறையைச் சார்ந்த நரசிம்மையா இங்கு அகழாய்வுப்பணியை மேற்கொண்டார். சிறிய அளவில் செய்யப்பட்ட இந்த அகழாய்வில் புதியகற்காலத்தைச் சார்ந்த மட்கலங்களும், கைக்கோடரிகளும் வெளிப்பட்டன. இக்காலத்துடன் நுண்ணிய கற்கருவிகளும் கிடைத்துள்ளன.

தைலமலை அடிவாரத்தில் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் காணப்படுகின்றன. இவை கல்வட்ட வகையைச் சார்ந்தவை. கருப்பு, சிவப்பு மட்கலங்களின் ஓடுகள் இங்குக் கிடைத்துள்ளன. மேலும், வரலாற்றுக் காலத்தின் தொடக்கக் காலத்தைச் சார்ந்த மட்கலங்களும், காணப்படுகின்றன. இப்பகுதியிலும் புதிய கற்காலம் முதல் மக்கள் இன்று வரை வாழ்ந்து வருகின்றனர் என்பது தெளிவாகின்றது. இங்குக் கண்டெடுக்கப்பட்ட புதியகற்காலக் கோடரிகள், தருமபுரி அகழ்வைப்பகத்தில் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளன.

## முள்ளிக்காடு :

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் முள்ளிக்காடு என்ற ஊர் உள்ளது. இவ்வூர் வெங்கடசமுத்திரம் என்ற ஊரில் இருந்து 6 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இந்த ஊருக்கு அரூரிலிருந்து பேருந்துகள் உள்ளன. வன்னியாற்றின கரையில் இந்த முள்ளிக்காடு அமைந்துள்ளது. இந்த ஊரை இரண்டு பகுதிகளிலும் மலைகள் சூழ்ந்துள்ளன.

இவ்வூரின் அருகில் அமைந்துள்ள வத்தல் மலையடிவாரத்திலும் மலையின் மேல்பகுதியிலும், புதிய கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் புதியகற்கால மக்கள் வாழ்ந்துள்ளனரா? என்பதைத் தெரிந்து கொள்ள இந்திய தொல்லியல் துறையைச் சார்ந்த பி. நரசிம்மையா மாதிரிக் குழி ஒன்றை அகழ்ந்தார். இந்த அகழாய்வில் 5 மண் அடுக்குகள்

காணப்பட்டன. இந்த மண் அடுக்குகளில் புதிய கற்கால மட்கலங்களும், கற்கருவிகளும் கிடைத்துள்ளன.

நுண்கற்காலக் கருவிகளும் இங்கு மக்களால் பயன்படுத்தப் பட்டுள்ளன. மலையடிவாரத்தில் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் காணப் படுகின்றன. கருப்பு சிவப்பு மட்கலங்களும் இப்பகுதியில் கிடைக்கின்றன.

## மல்லப்பாடி :

கிருஷ்ணகிரி வட்டத்தில், கிருஷ்ணகிரி திருப்பத்தூர் சாலையில் பர்கூரிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் மல்லப்பாடி அமைந்துள்ளது. கிருஷ்ணகிரியிலிருந்தும் பர்கூரிலிருந்தும் செல்கின்ற நகரப் பேருந்து வண்டிகள் மூலம் மல்லப்பாடியை அடையலாம்.

சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த 'பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறையினரால்' அகழாய்வுப் பணி மல்லப்பாடியில் செய்யப்பட்டது. இத்துறையின் பேராசிரியரான கே.வி. இராமன் தலைமையில் மேற்பரப்பு ஆய்வு செய்யப்பட்டு, உயர்ந்த மண்மேட்டில் 7 அகழாய்வுக் குழிகள் அகழ்ந்தெடுக்கப் பட்டன. இவைகளுக்கு மல்லப்பாடி 1 முதல் 7 வரை இலக்கங்கள் இடப்பட்டுள்ளன.

மலை அடிவாரத்தில் போடப்பட்ட அகழாய்வுக் குழிகளில் கிடைத்த தொல்பொருட்களைக் கொண்டு மல்லப்பாடியில் 3 பண்பாட்டுக் காலங்கள் இருந்தன என்பது தெரியவருகின்றது. அவையாவன : பண்பாட்டுக் காலம் 1.பண்பாட்டுக் காலம் 2, பண்பாட்டுக் காலம் 3, என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

முதல் பண்பாட்டில் இரண்டு துணைப்பிரிவுகள் உள்ளன. அதாவது 1-'அ'வில் புதிய கற்காலத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்துள்ளனர். இக்காலத்தைச் சார்ந்த சாம்பல் நிற மட்கலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதே காலத்தைச் சார்ந்த புதிய கற்காலக் கோடாரிகளும் கிடைத்துள்ளன. புதிய கற்காலத்தின் பிற்பகுதியைச் சார்ந்த மக்கள் இங்கு வாழ்ந்துள்ளனர் என்று கூறுகின்றனர். இதனை அடுத்து உள்ள பண்பாடு ஆய்வின் பெருங்கற்கால மக்கள் தொடர்ச்சியாக வாழ்ந்துள்ளனர். இதன் காலம் கி.மு. 200 முதல் கி.மு.

100 வரையிலாகும். இவர்கள் பயன்படுத்திய கருப்பு சிவப்பு மட்கலங்கள், மண் அடுக்கில் கிடைத்துள்ளன.

இரண்டாவது பண்பாட்டு, வரலாற்றுக் காலத்தைச் சார்ந்த தொடக்கக் கால மக்கள் இக்காலக் கட்டத்தில் வாழ்ந்துள்ளனர். இதற்கு முன் இப்பகுதியில் இருந்த பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய கருப்பு சிவப்பு மட்கலங்கள் இக்காலக் கட்டத்திலும் காணப்படுகின்றன. இவற்றுடன் கருப்பு மட்கலங்கள், சிவப்பு மட்கலங்கள் ஆகியனவும் கிடைத்துள்ளன. இதன் காலம் கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2-ம் நூற்றாண்டு வரையிலாகும்.

மூன்றாவது பண்பாட்டுக் காலம் வரலாற்றுக் காலத்தின் இடைக்காலத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெரியவருகின்றது. இக்காலத்தில் மக்கள் சொரசொரப்பான மட்கலங்களைப் பயன்படுத்தியுள்ளனர். சிவப்பு மற்றும் கருப்பு நிற மட்கலங்கள் கிடைத்துள்ளன. இப்பண்பாடு கி.பி.4ஆம் நூற்றாண்டிற்கும், கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைச் சார்ந்ததாகும்.

இந்த அகழாய்வில் புதிய கற்காலத்தைச் சார்ந்த கைக்கோடாரி களும், இரும்புப் பொருட்களும், கண்ணாடி வளையங்களும், சுடுமண் பொம்மைகளும், சுடுமண் மணிகளும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. மல்லப்பாடி 2-வது குழியில் செப்பினால் செய்யப்பட்ட மோதிரம் ஒன்றும் கண்ணாடி மோதிரம் ஒன்றும் கிடைத்துள்ளன. பெரும்பாலான குழிகளில் சங்கு வளையல்கள் கிடைத்துள்ளன. சாம்பல் நிற (Gray ware) மட்கலன்கள் இங்குக் கிடைத்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

மல்லப்பாடி மலையில் பெருங்கற்காலத்தைச் சார்ந்த ஓவியம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஓவியத்தில் இரண்டு வீரர்கள் குதிரையின் மீது அமர்ந்து சண்டை செய்வது போன்று காணப்படுகின்றது. குகையை ஒத்த பாறையின் விதானத்தில் இந்த ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. சுமார் 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த ஓவியம் வெள்ளை நிறத்தில் தீட்டப்பட்டுள்ளது.

## அதியமான்கோட்டை :

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டத்தில், தருமபுரி - சேலம் நெடுஞ்சாலையில் தருமபுரியிலிருந்து 6கி.மீ. தூரத்தில்

அதியமான்கோட்டை என்ற ஊர் அமைந்துள்ளது. இந்த ஊரும் மலைகளால் சூழப்பட்டுள்ளது.

சங்க இலக்கியங்கள் புகழ்ந்து கூறுகின்ற கடை ஏழு வள்ளல்களில் ஒருவரான அதியமான் நெடுமான் அஞ்சியின் தலைநகரமாக விளங்கிய தகடூர் பகுதியின் ஒரு பகுதியாக இந்த அதியமான் கோட்டை இருந்திருக்க வேண்டும். எனவே தான் அதியமானின் பெயரால் இந்த ஊர் அதியமான் கோட்டை என்று இருந்து, தற்போது 'அதமன் கோட்டை' என்று அழைக்கப்படுகின்றது. இங்கு மண்ணால் ஆன கோட்டை ஒன்றும் இருந்தது. தற்போது இது முழுவதும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

இந்த அதியமான்கோட்டையில், 1981, 1982 ஆகிய இரண்டு ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறையின் பேராசிரியர் கே.வி. இராமன் தலைமையில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. மக்களின் வாழ்க்கையைப் பற்றித் தெரிந்துக் கொள்ள ஊர் இருக்கையிலும், கோட்டையின் வரலாற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள கோட்டையின் பகுதியிலும் மொத்த 5 குழிகள் போட்டு அகழ்ந்தனர். இக்குழிகள் ஒவ்வொன்றிலும் பலவகையான மண் அடுக்குகள் கிடைத்துள்ளன. இந்த மண் அடுக்குகளின் அமைப்பையும், கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களின் துணையுடனும் இரண்டு பண்பாட்டுக் காலங்களில் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்று தீர்மானித்துள்ளனர்.

முதல் பண்பாட்டுக் காலத்தில் பெருங்கற்காலத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்துள்ளனர். இவர்கள் பயன்படுத்திய கருப்பு சிவப்பு மட்கலங்கள் இந்த மண் அடுக்கில் கிடைத்துள்ளன. இதனைத் தொடர்ந்து வரலாற்றுக் காலத்தின் தொடக்க நிலையில் இருந்த மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெரியவருகிறது. இவர்கள் பயன்படுத்திய சற்றுத் தடித்த - சொரசொரப்பான பானை ஓடுகள் இந்தப் பண்பாட்டின் மேல்பகுதியில் காணப்படுகின்றன. இதன் காலம் கி.மு. முதலாம் நூற்றாண்டு முதல் இரண்டாம் நூற்றாண்டு வரை இருந்துள்ளது.

இரண்டாம் பண்பாட்டுக் காலத்தின் காலம் கி.பி. 3ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலம் ஆகும். இந்தப் பண்பாட்டின் அங்கமாக ஒரு கட்டடப் பகுதியும் கிடைத்துள்ளது. வடக்கிலிருந்து தெற்காகக் கட்டப்பட்ட

செங்கற்சுவர் இங்கு வெளிப்பட்டது. இந்தச் சுவர் எதற்காகக் கட்டப்பட்டது என்பதைத் தெரிந்துக் கொள்ள இயலவில்லை. எனினும் இச்சுவர் தஞ்சைப் பகுதியில் சோழர்களின் கட்டடங்களை ஒத்துக் காணப்பட்டதால் இது சோழர் காலத்திய கட்டடமாக இருக்க வாய்ப்பு உள்ளது என்று உய்த்துணர முடிகின்றது. மேலும் வீட்டின் தரைப்பகுதியும் கிடைத்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

மூன்றாவது பண்பாடு, இரண்டாவது பண்பாட்டின் தொடர்ச்சி என்பது தெரிகின்றது. இதன் காலம் கி.பி. 11ஆம் நூற்றாண்டிற்கும், கி.பி. 16ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட பகுதியாகும். இக்காலத்திலும் சொரசொரப்பான மட்கலங்களைப் பயன்படுத்தி யுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதியமான்கோட்டை அகழாய்வில் பல வகையான சுடுமண் பொம்மைகள் கிடைத்துள்ளன. குறிப்பிடத்தக்க அளவில் தாய்த் தெய்வத்தின் உருவங்கள் காணப்படுகின்றன. இரண்டு பெண் தெய்வங்களின் தலைப்பாகங்கள், பெண்ணின் கால்பகுதிகள் போன்றவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும் பாலகிருஷ்ணன், அனுமான், விலங்குகளின் உருவங்களும் கிடைத்துள்ளன. சுடுமண்ணால் ஆன அகல் விளக்குகள், மாவுக்கல் போன்றனவும் கிடைத்துள்ளன. கிடைத்துள்ள பலவகையான எலும்புகளில் குதிரையின் தாடை எலும்பு குறிப்பிடத்தக்கது.

இவற்றுடன் அரிய கல்மணிகள், சங்கு வளையல் துண்டுகள், கண்ணாடிப் பொருட்கள், சுடுமண் காதணிகள் போன்றனவும் வெளிப்பட்டன. அதியமான்கோட்டைப் பகுதியின் மக்கள் கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்து வாழ்விடமாக பயன்படுத்தி வந்துள்ளனர் என்பது தெரிய வருகின்றது. இங்குக் கட்டப்பட்டுள்ள கோட்டை கி.பி. 12-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதும் அகழாய்விலிருந்து தெரிய வருகின்றது. அதியமான் கோட்டைப் பகுதியில் உள்ள இக்கோயிலில் உள்ள விஜயநகர காலத்திய ஓவியங்கள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது ஆகும்.

## குட்டூர் :

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், திருப்பத்தூர் கிருஷ்ணகிரி சாலையில் கந்திலி என்ற ஊருக்குத் தெற்கில் 5 கி.மீ.

தூரத்தில் குட்டூர் என்ற ஊர் அமைந்துள்ளது. இது தென்பெண்ணை ஆற்றின் துணை ஆறான பாம்பாற்றின் கரையில் உள்ளது. இந்த ஊரைச் சுற்றிலும் மலைகள் காணப்படுகின்றன. இந்த ஊரில் புதிய கற்காலம் மற்றும் பெருங்கற்காலத்தைச் சார்ந்த தொல்பொருட்கள் அதிக அளவில் கிடைக்கின்ற காரணத்தினால் இதன் தொன்மையைப் பற்றி அறிய சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த, பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறை 1983-84ஆம் ஆண்டில் அகழாய்வு செய்தது.

குட்டூர் மலையின் அடிவாரத்தில் உள்ள உயர்ந்த மண்மேட்டில் நான்கு குழிகளை அகழ்ந்தனர். இந்த அகழாய்வில் பெருங்கற் காலத்தைச் சார்ந்த கருப்பு சிவப்பு மட்கலன்கள், வழவழப்பான சிவப்பு மற்றும் காவிக்கலவை பூசப்பட்ட மட்கலங்கள் போன்றவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. பானை வகைகளில், சேமிப்பின் பொருட்டு பயன்படுத்தப்பட்ட சேமிப்பு மட்கலங்கள் அதிக அளவில் கிடைத்துள்ளன. கீறல் குறியீடுகள் உள்ள இரண்டு மட்கலங்களும் கிடைத்துள்ளன. எலும்பினால் செய்யப்பட்ட அம்பு முனைகள், கூர்முனைகள் மற்றும் இரும்பினால் செய்யப்பட்ட குறுவாள், ஆணி, செம்பு வளையல் போன்றனவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஜாஸ்பர், கார்லீனியன் போன்றவற்றால் செய்யப்பட்ட அகல் மணிகளும், சங்கு, கண்ணாடி, எலும்பு ஆகியவற்றால் செய்யப்பட்ட வளையல்களும் காணப்படுகின்றன. இந்த அகழாய்வில் கட்டடங்களின் பகுதிகள், சுடுமண் பொம்மைகள் ஆகியனவும் வெளிப்பட்டுள்ளன. கட்டடத்தின் கடைக்கால் பகுதியும் சுவர்ப்பகுதியில் கெட்டிப்படுத்தப்பட்ட தரையின் பகுதியும் கண்டறியப்பட்டன.

ஆங்கில எல் (L) வடிவத்தில் செதுக்கப்பட்ட கருங்கற்களைக் கொண்டு இந்தச் சுவரின் அடிப்பகுதி (கடைக்கால்) போடப் பட்டுள்ளது. இச்சுவற்றின் நீளமும், அகலமும் முறையே 1.68 மீ, 0.53 மீட்டர் ஆகும்.

முட்டை வடிவத்தில் அமைந்த ஊதுஉலை ஒன்று இருப்பதும் தெரிய வந்துள்ளது. களிமண்ணால் செய்யப்பட்ட இந்த ஊதுஉலை 2.00. மீ. நீளமும் 0.63. மீ. அகலமும் கொண்டது. இதன் அருகில் மண்ணால் செய்து சுடப்பட்ட ஊதுகுழாய்கள் (Pipens) இருப்பதும்

தெரியவந்துள்ளது. மேலும் இரும்புக் கழிவுகள் இக்குழியிலும் உலையின் அருகிலும் கிடைத்துள்ளன. எனவே, இந்த உலை இரும்பை உருக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கூற முடிகின்றது. இங்கு நடத்தப்பட்ட அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களையும், மண் அடுக்குகளையும் கொண்டு இப்பகுதியில் மூன்று பண்பாட்டுக் காலத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்துள்ளனர் என்று கூறுகின்றனர். முதல் பண்பாட்டுப் பிரிவு பெருங்கற்காலத்தைச் சார்ந்தது. இதன் காலம் கி.மு. 300க்கும் கி.பி. 100க்கும் இடைப்பட்டதாகும். இரண்டாவது பண்பாட்டுக் காலம் வரலாற்றுக்காலத்தின் தொடக்கப் பிரிவைச் சார்ந்ததாகும். இது கி.பி. 100க்கும் கி.பி. 900க்கும் இடைப்பட்டதாகும். மூன்றாவது பண்பாட்டுக் காலம் கி.பி. 10ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 18ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதாகும்.

சுடுமண் பொம்மைகள், தாயக்கட்டை, புகைப்பான்கள், பெண்களின் உருவங்கள், அகல்விளக்குகள், தக்கிளி போன்றவை கிடைத்துள்ளன. இங்கு இரும்பை உருக்கும் தொழில் செய்யப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இங்கு ஆற்றின் அருகில் இரும்பை எடுக்கப் பயன்படும் மூலக்கூறுகள் அதிக அளவில் கிடைக்கின்றன. எனவே, இதன் துணையுடன் இரும்பை உருக்கும் தொழில் நுட்பம் தெரிந்து வைத்திருந்தனர் என்பது விளங்குகின்றது. மேலும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பையம்பள்ளி, மல்லப்பாடி அகழாய்வுகளின் வளர்ச்சி நிலைகளில் குட்டூரும் ஒன்று என்று கூறினால் அது மிகையாகாது.

## மயிலாடும்பாறை :

கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரியிலிருந்து சுமார் 20கி.மீ. தொலைவில் போச்சம்பள்ளி செல்லும் சாலையில் அமைந்துள்ளது. இங்குத் தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகம் அகழாய்வு மேற்கொண்டது.

இங்குப் பாறை ஓவியங்கள் பல இருப்பதை கண்டறியப்பட்டு முன்னரே வெளிக்கொணரப்பட்டது. அதனடிப்படையில் அகழாய்வும் மேற்கொள்ளப்பட்டது. இப்பகுதி புதிய கற்கால மக்கள் வாழ்விடமாக இருக்க வேண்டும் என்பதற்கு ஏற்பத் தடயங்கள்

கிடைத்துள்ளன. சிவப்பு நிறப்பானை ஓடுகள், சாம்பல் நிறப் பானை ஓடுகள் மற்றும் புதிய கற்காலக் கருவிகள் போன்றவைகளும் கிடைத்துள்ளன.

எனவே இப்பகுதி புதிய கற்கால மனிதன் வாழ்விடமாக பயன்படுத்தி இருத்தல் வேண்டும் என்பதையும் தெளிவுப் படுத்தியது. இங்கு நடைபெற்ற அகழாய்வு மூலம் இதன் காலம் சுமார் 5000 ஆண்டுகட்கு முற்பட்டது என்று முடிவு செய்யப்பட்டது.

## பனைகுளம் :

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்தில் பனை குளம் என்ற கிராமம் அமைந்துள்ளது. இங்குப் பல சுடுமண் பொருட்கள் கிடைத்ததையும் சமணப்பள்ளி இருந்ததாகக் காணப்பட்ட கல்வெட்டின் அடிப்படையிலும் இங்கு மாதிரி அகழ்வுக்குழி ஒன்றினைத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மேற்கொண்டது. இங்குப் பல சுடுமண் பொருட்களும், பொம்மைகளும், மட்பாண்ட ஓடுகளும் கிடைத்தன. இவற்றை கி.பி. 6-7ஆம் நூற்றாண்டு எனக்காலம் கணிக்கப்பட்டது. இத்துறையின் பதிவு அலுவலர் கி.ஸ்ரீதரன் மாதிரி அகழ்வுக்குழியினை அகழ்ந்தெடுத்தார்.

தொல்லியல் துறை 2005ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மேற்கொண்ட மோதூர் அகழாய்வை இந்நூலின் இறுதியில் காண்போம்.

# 5. அதியமான்கள்

தகடூர் நாட்டைச் சங்க காலத்தில் அதியமான்கள் ஆண்டுள்ளனர். மழவர் என இவர்கள் அழைக்கப்பட்டனர். பனம்பூ மாலையைச் சூடிய இவர்களைச் சேரர்களின் தாயாதி என்பர். அசோகன் கல்வெட்டில் இடம் பெறும் அதியமான் மரபினர் பேரரசர் எனலாம். அதியமான் நெடுமிடல், அதியமான் நெடுமான் அஞ்சி, அதியமான் பொகுட்டெழுனி, அதியமான் அஞ்சி, எழினி என ஐவரைக் காண்கிறோம். அஞ்சி, எழுனி என்பன பட்டப் பெயர்கள் போலும். அதியமான் நெடுமிடல் பசும்பூண் பாண்டியனுக்காகச் சேரன் நார்முடிச் சேரலுடன் போரிட்டு இறந்துள்ளார். பதிற்றுப்பத்து என்ற சங்க நூல் இவரைக் குறிப்பிடுகிறது. புறப்பாடலும் குறிப்பிடுகிறது.

அதியமான் நெடுமான் அஞ்சி கடையேழு வள்ளல்களில் ஒருவன். கிடைத்தற்கரிய நெல்லிக் கனியை அவ்வையாருக்கு வழங்கியவன். நீலமணிமிடற்றன் (சிவன்) போல மன்னுகபெரும என்று அவ்வையாரால் பாடப்பட்டவன். இவன் திருக்கோவலூர் வரை படையெடுத்து வந்து மலையமான் காரியை வென்றவன். பெருஞ்சேரல் இரும்பொறை என்ற மன்னன் தகடூரை வென்றதுடன் கோட்டையையும் அழித்துள்ளான்.

அதியமான் நெடுமான் அஞ்சியின் மகன் பொகுட்டெழுனி ஆவான். இவனும் போரில் ஈடுபாடு கொண்டவன். அவ்வையார் இவனையும் பாடி உள்ளார்.

திருக்கோயிலூர் வட்டம் ஜம்பையில் உள்ள குன்றில் அமைந்த குடைவரைப் பாறையில் காணப்படும் கல்வெட்டே அதியமானின் முதல் சான்றாகவும், முதன்மைச் சான்றாகவும் விளங்குகின்றது. இக்கல்வெட்டு சமணர்ப் படுக்கைக்கு மேலே பாறையின் மீது

வெட்டப்பட்டுள்ளது. அதன் வாசகமாவது : ''சதிய புதொ அதியந் நெடுமான் அஞ்சி ஈத்தபாளி''

இக்கல்வெட்டு அதியமான் நெடுமான் அஞ்சி என்பவன் சமணர்களுக்கு அளித்த படுக்கை பற்றிக் குறிப்பதாக அமைந்துள்ளது. இதன் எழுத்தமைதி, சொல்லாக்கம் கொண்டு சங்க இலக்கியங்களில் குறிக்கப்பட்ட அதியமான் இவனே என்பது தெளிவாகிறது. இவனது ஆட்சி திருக்கோயிலூர் வரை பரவி இருந்தது என்பதும் தெளிவாகிறது. இவன் சேர, சோழ, பாண்டியர்களுக்கு இணையாகக் கருதப்பட்டுள்ளான். அதியமான் சமகாலத்தில் சேரன் பெருஞ்சேரல் இரும்பொறை, தொண்டைமான், மலையமான் திருமுடிக்காரி, வல்வில் ஓரி ஆகியோர் இருந்துள்ளனர்.

## அசோகனது பாறைக் கல்வெட்டுகள்

மௌரியப் பேரரசன் அசோகனது கல்வெட்டின் காலம் கி.மு. 3ஆம் நூற்றாண்டு என்பர். அவனது கிர்னார், கால்சி, ஜௌகதா ஆகிய மூன்று இடங்களில் சதியபுதோ என்றும் சபாஸ்கார்கி கல்வெட்டில் சதியபுத்ர என்றும் உள்ளது. பொதுவாகக் கீழ்க்கண்டவாறு வாசகம் உள்ளது. ''சோட, பாண்டிய சத்தியபுதொ, கேரளபுதொ, தாம்ப பண்ணி, அந்தியேக நாம யோனலாஜா.'' அவனது நாட்டின் எல்லையைப் பற்றி குறிக்கும்பொழுது பல பேரரசர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. தமிழ் மன்னர் சோழன், பாண்டியன் கேரளபுத்திரன் என்ற சேரமான் மற்றும் சதியபுத்ரர் கூறப்பட்டுள்ளனர். அதியன் என்பதன் வடமொழி வடிவம் சதியன் என்று தமிழறிஞர்கள் கூறுகின்றனர்.

## சோமன் - குணசீலன் (அதியர்) :

சங்க காலத்தில் பேரரசர்களாகத் திகழ்ந்த அதியர்கள் பல்லவர் காலத்தில் நாமக்கல் பகுதியைச் சிறிது காலம் தலைநகராகக் கொண்டு அரசாண்டதைக் குடவரைக் கோயில்களில் உள்ள கல்வெட்டுகளால் அறிய முடிகிறது. இங்கு அதியர் கல்வெட்டுகள் இரண்டு காணப்படுகின்றன.

இங்குக் குறிப்பிடும் அதியர், சோமன் என்ற குணசீலன் ஆவான். இவன் எழுப்பிய குடவரைக் கோயில்கள் பல்லவர் காலத்துக் குடவரைக் கோயில்களுக்கு இணையாகத் திகழ்கின்றன. கரூர்

அருகே தான்தோன்றி மலையில் உள்ள முற்றுப் பெறாத குடைவரைக் கோயில் அதியமான் பணியாக இருக்கலாம் என்று ஆய்வாளர் கருதுவர். கி.பி. எட்டாம் நூற்றாண்டில் இப்பகுதியைப் பாண்டியர் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தனர். இதனால் அதியமான்களின் ஆதிக்கம் குறையத் தொடங்கியது.

## சோழர்கள் காலத்தில் அதியமான்கள் :

முதலாம் இராஜராஜன் காலத்தில் தகடூர் நாடு சோழர் ஆட்சியின் கீழ் வந்தது. சேலம் மாவட்டம் பட்டுகானாம்பட்டி என்ற ஊரில் காணப்படும் இராசராசன் கல்வெட்டில் தகடூர் நாடு பஞ்சவன் பிரம்மாதிராயன் என்பவனிடம் பராமரிப்புக் காரணமாக வழங்கப்பட்ட விவரம் உள்ளது. அதில் அதியமான்கள் பற்றிய குறிப்பு காண முடியவில்லை.

முதலாம் குலோத்துங்கன் காலத்தில் அதியமான்களைப் பற்றிய குறிப்பைக் காணமுடிகிறது. திருவரங்கம் கல்வெட்டில் "அரையன் சேவனான இராசேந்திர சோழ அதியமான்" என்று ஒருவன் குறிப்பிடப் படுகின்றான். போசள விஷ்ணுவர்த்தனன் கங்கபாடியைப் பிடிக்க எண்ணி அவனது படைத்தலைவன் கங்கராசனை அனுப்பிய போது தாழைக்காட்டுப் பகுதியின் கங்கபாடிக் கணவாயில் சாமந்த அதியமான் என்பவன் மிக உறுதியாக எதிர்த்து நின்றான் என்று அறிகிறோம்.

## இராசராச அதியமான் :

இவனைப் பற்றிய குறிப்புகள் மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. இவன் குலோத்துங்கனது பத்தாவது ஆட்சியாண்டில் திருவண்ணாமலைக் கோயில் இறைவர்க்குத் தகடநாட்டில், பெண்ணையாற்றின் வடகரையில் ஆனந்தூரின் கீழ்ப்பிடாகையில் உள்ள மலையனூர் என்ற ஊரைத் தானமாக அளித்தான் என்று அறிகிறோம். மேலும் தர்மபுரியில் உள்ள கோட்டை கோயில் பூசையின்றிக் கிடந்ததை அறிந்து சிவப் பிராமணர்களை நியமித்து பூசை நன்கு தொடர இவன் ஏற்பாடு செய்தான் என்று ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. அதியமானின் நன்மைக்காக இவனது அரசியல் அதிகாரி அதியமான் அடியான் பம்பாரக் கூத்தன் கிழவன் தம்பிரான் சோழன் என்பவன்

இக்கோயிலைப் புதுப்பித்துக் குடமுழுக்கு செய்தான் என்றும் இக்கோயிலில் உள்ள மற்றோர் கல்வெட்டு கூறுகின்றது.

## பெருவழி :

தருமபுரிப் பகுதியில் வரலாற்றுச் சிறப்புள்ள பெருவழியைக் குறிக்கும் இரண்டு மைல் கற்கள் கண்டறியப்பட்டன. ''அதியமான் பெருவழி நாவற் தாவளத்திற்கு காதம் 27'' என்று ஒன்று கூறுகிறது. மற்றொன்று 29 காதம் என்று குறிப்பிடுகிறது. கல்லாத பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் பெரியதாகவும், சிறியதாகவும் கல்லில் கல்வெட்டின் கீழே துளைகளை இட்டுள்ளனர். பெரிய துளைகள் பத்து என்றும் சிறிய துளைகள் ஒன்று என்றும் குறித்துள்ளனர். இதில் காணப்படும் எழுத்தமைதி இராசராச அதியமான் காலத்தைச் சார்ந்தவை என்று கருத இடமளிக்கின்றது. எனவே இவை கி.பி. 13-14 ஆம் நூற்றாண்டு எனக் கருத்தில் கொள்ளலாம்.

## விடுகாதழகிய பெருமாள் :

இவன் மேலே குறிப்பிட்ட அதியமான் இராசராச தேவனுடைய புதல்வன். இவனைப் பற்றிய பல விவரங்கள் அரூர் வட்டம் கம்பை நல்லூரில் அமைந்த கோயில் கல்வெட்டுகளால் அறிய முடிகின்றது. இவனது கல்வெட்டுகள் தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களிலும் ஆந்திராவில் லட்டிகத்திலும் உள்ளன. இவனுடைய ஆட்சிக் காலம் பல சிறப்புக்களைப் பெற்றுள்ளது. சைவம் மற்றும் சமண சமயத்தை இவன் ஆதரித்துள்ளான் என்பதைக் கல்வெட்டுகளின் மூலம் அறிகிறோம்.

சேலம் மாவட்ட திருச்செங்கோடு வரையிலும் இவனுடைய ஆட்சிப்பரப்பு இருந்துள்ளது என்பதைப் பழம் பாடல் ஒன்று தெரிவிக்கின்றது. இவன் கம்பைநல்லூரில் சிறுகோட்டை என்னுமிடத்தில் சிவன் கோயில் ஒன்றைக் கற்கோயிலாக எடுப்பித்தான். அவ்வூரின் பழைய பெயரான நாகையன்பள்ளி என்பதைக் கொண்டு இறைவர்க்கும் நாகையநாயனார் என்றே அழைத்துள்ளான்.

இவை மட்டுமின்றி இவனது பெயராலேயே விடுகாதழகிய நல்லூர் என்னும் ஊர்ப்பெயரை அமைத்தான். எனவே தகடூரில்

அதியமான்களில் புகழை மேலும் நிலைக்கச் செய்தவன் இவனேயாவான்.

அதியமான்கள், அதியமான்கோட்டை அமைத்து அங்கேயே அரசு புரிந்தமைக்கு இன்று எச்சமாக அமைவது அங்கு காணப்படும் மண் மேடுகளே ஆகும். போசளர்கள் மகேந்திர மங்கலம் என்று அதியமான்கோட்டையை அழைத்தனர். பின்னர் விஜயநகர மன்னர்கள் மீண்டும் அதியமான் பெயரிலேயே அழைத்துக் கோயில்களைக் கட்டி அதில் இராமாயண, பாரத, பாகவதக் காட்சிகளை வண்ண ஓவியங்களாகத் தீட்டி அதற்குரிய வாசகங்களையும் எழுதியுள்ளனர்.

தருமபுரி வனச்சரக அலுவலகத்தில் உள்ள நடுகல் கல்வெட்டின்றி உள்ளது. இதனை அதியமான் நடுகல் என்கின்றனர். பிற்காலச் சோழர்கால அதியமான் எனலாம். சங்க காலம் முதல் பிற்காலச் சோழர் காலம் வரை சிற்சில இடைவெளி நீங்கலாகத் தகடூர் நாட்டில் ஆதிக்கம் செலுத்திய அதியமான் மரபினராகிய மழவர் வரலாற்றில் தனியிடம் பெறுகின்றனர். தருமபுரியைச் சேர்ந்த செந்தமிழ்ப் பேச்சாளர் பெரும்பாக்கன் என்பவர் தம்முடைய தகடூர் வரலாறு என்ற நூலில் வன்னிய மரபினராக அதியமானைக் குறிப்பிட்டுள்ளார். தகடூர்ப் பகுதி நடுகற்களில் போர் மரபைச் சார்ந்த தொல்குடிகள் பலர் இடம் பெறுகின்றனர். முதுப்பள்ளி அல்லது புதுப்பள்ளி என்ற வீரன் வன்னிய மரபைச் சேர்ந்தவனாகக் குறிப்பிடலாம். காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டாகும். பங்களர், இலாடர், வேசாலியர், பறையர், களவர், வடுகர், பாணர், பெரும்பாணர் எயினர், இளையர், மிறையர், சதியார், வடுகர், காட்டிறைகள், வேளிர், வாணகோவரையர், அதியரைசர், மிண்டர், முத்தரையர், பாரதாயர், திறையர், ஏனாதி, காவிதி, காமிண்டர் என்ற சொற்களை ஆராய்ந்த ர. பூங்குன்றன் போர்களுடன் இவர்களைத் தொடர்பு படுத்துவார். காமின்டர் என்ற சொல்லுக்கும் கவுண்டருக்கும் நெருங்கிய ஒற்றுமையுண்டு. ஈழக்காமிண்டன், வன்னியக் காமிண்டர், வெள்ளாளக் காமிண்டர் என்ற சொற்கள் மிகுதியாகத் தருமபுரி கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன. வடுகர், கோவனார், செட்டி, சான்றான், ஊராளி போன்ற பெயர்களும் நடுகற்களில் இடம் பெற்றுள்ளன. இன்றைய சூழ்நிலையில் அதியமான் மரபினராக எச்சாதியைக் குறிப்பிட முடியும்? எதிர்காலக் கண்டுபிடிப்பு, இக்கேள்விக்கு விடையளிக்கக் கூடும்.

# 6. தகடூரை ஆட்சிபுரிந்த மன்னர்கள்

சங்க காலம் தொடங்கி உரையாசிரியர் காலம் வரை உள்ள நூல்களும் பல்லவர் தொடங்கி 17-ஆம் நூற்றாண்டு வரையிலான கல்வெட்டுக்களும், தர்மபுரியைத் தகடூர் என்றே குறிப்பிடுகின்றன. தகடூர் என்ற பெயர் நாட்டின் பெயராகவும் ஊரின் பெயராகவும் இருந்தது என்பதற்குக் கல்வெட்டுக்களில் காணப்படும் ''தகடூர் நாட்டுத் தகடூர்'' என்ற வரியே சான்றாகும். கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் போது விசயநகரப் பேரரசின் சார்பாகத் தகடூரின் சிற்றரசனாக ஆட்சிபுரிந்த ஜெகதேவராயன் காலத்தில்தான் தகடூர் நாடு ''தருமபுரி'' என்று பெயர் மாற்றம் பெற்றது.

சங்ககால அதியமான் மரபின் தலைசிறந்த மன்னனாக நெடுமான் அஞ்சி விளங்கினான். இவனது வீரத்தையும், வெற்றிகளையும் கொடைத் திறத்தையும் அவ்வையார் பல பாடல்களில் புகழ்ந்துள்ளார்.

பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர மன்னன் தகடூர் மீது படையெடுத்து வந்து அஞ்சியை வென்றான். அத்துடன் அஞ்சியின் மகன் எழினியையும் கொன்றான். இச்சேர மன்னன் மற்றொரு சமயம் தகடூரை அழித்துத் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் எனப்புகழ் பெற்றான். தகடூர், சேரர் ஆட்சியின் கீழ் சென்றது. இப்போரைப் பற்றி எழுதப்பட்ட நூல் தகடூர் யாத்திரை என்றே அழைக்கப்பட்டது.

சங்க காலத்திற்குப் பின் கட்டனை பருமன், கங்கர், பாணர், போன்றோர் தகடூரை வென்று குறுநில அரசுகளை நிறுவினர் கட்டனைப்பருமன் என்பவன் சிவமாறன் ஆவான். கங்கரில் ஸ்ரீபுருஷவர்மன், என்பவனும் நாடாண்டான். பாணர்களில் மாவலிவாணாதிராயன் என்பவரும் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இச்சிற்றரசர்கள் காலத்தில் இப்பகுதியில் நடைபெற்ற போர்களில் வீரம் காட்டித் தம்மின்னுயிரைத் துறந்த வீரர்களுக்கு நடுகற்கள்

எடுக்கப்பட்டன. சங்க காலத்திற்குப் பிறகு தகடூர்ப் பகுதியின் அரசியல் வரலாற்றை அரிய நடுகற்கள்தாம் உதவுகின்றன.

அகநானூறு என்ற சங்க இலக்கியத்தில் அதியன் விண்ணத்தன் என்ற ஒரு புலவர் குறிக்கப்படுகிறார். இருளப்பட்டி நடுகல்லில் வரும் விண்ணபருமருக்கும் விண்ணத்தனுக்கும் என்ன தொடர்பு என்று தெரியவில்லை. மகேந்திரவர்மனுடைய மொண்டுகுழி நடுகல்லில் இடம்பெறும் கடிகாவின் அஞ்சினாரு என்பவன் அதியமான் வழியில் வந்தவனாக இருக்க வேண்டும்.

களப்பிரரை வீழ்த்தித் தொண்டை நாட்டில் ஆட்சியை அமைத்த பல்லவர் தமது ஆதிக்கத்தைப் பின்பு தகடூர் நாட்டிலும் ஏற்படுத்திக் கொண்டனர். பல்லவ அரசர்களில் சிறந்த சிம்மவர்மன், சிம்ம விஷ்ணு, முதலாம் மகேந்திர வர்மன், முதலாம் நரசிம்மவர்மன், ஆகியோர் காலங்களில் பல்லவர்களுக்கும் இப்பகுதியை ஏற்கனவே ஆண்ட கங்கர்களுக்கும் இடையே போர்கள் நடந்துள்ளன. சில போர்களில் கங்கரும், சில போர்களில் பல்லவரும் வென்றனர். இதனால் தகடூர் நாடு அடிக்கடி ஆட்சி மாற்றத்தை பெற்றது என்று குறிப்பிடலாம்.

கி.பி. 873ஆம் ஆண்டு மகேந்திர நுளம்பன் என்பவன் தகடூரைக் கைப்பற்றி நுளம்பர் ஆட்சியை ஏற்படுத்தினான். இந்நுளம்பனது ஆட்சி கி.பி. 968 வரை தகடூரில் நீடித்தது. இக்காலக்கட்டத்தில் தகடூர் நாடு நுளம்பபாடி 32,000 என அழைக்கப்பட்டது. இந்த நுளம்பபாடி என்ற பெயரை முதலாம் இராசராசன் கல்வெட்டுகளிலும் காண்கிறோம்.

மகேந்திர நுளம்பன் ஆட்சிக் காலத்தில் அதியமான்கோட்டை, மகேந்திரமங்கலம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. கலை ஆர்வம் மிக்க நுளம்ப மன்னன் தகடூரில் அரிய கலைப்படைப்பான சிவன் கோயிலை எழுப்பினான். நுளம்பர்கள், பாண அரசர்களிடம் தோற்றனர்.

சோழப் பேரரசின் எல்லைகளை விரிவுபடுத்த முற்பட்ட பேரரசன் முதலாம் இராசராசன், (985-1014) தகடூர் உள்ளிட்ட நுளம்பபாடியை வென்று அதனைத் தனது பேரரசின் ஒரு தனி மண்டலமாக்கி அதற்கு நிகரிலிச் சோழ மண்டலம் என்று பெயரிட்டான். கி.பி. 13ஆம் நூற்றாண்டின்போது இது விஜய ராஜேந்திர மண்டலம் என்ற பெயரைப் பெற்றது. ஒசூர் உள்ளடக்கிய

பகுதியை முடிகொண்ட சோழ மண்டலம் என்றும் அழைத்துள்ளனர். நாட்டின் பிரிவுகள் பற்றிய பகுதியில் இதனைத் தெளிவாகக் காணலாம்.

மூன்றாம் குலோத்துங்க சோழனது பத்தாம் ஆட்சி ஆண்டு முதல், மூன்றாம் இராசராசனது 8ஆம் ஆட்சியாண்டு வரை தகடூரை ஆண்ட விடுகாதழகிய பெருமாள் என்பவன் தன்னைச் சங்க கால அதியமான் மரபினன் என்று கல்வெட்டுகளில் கூறிக் கொண்டான். இவன் மலையமான் ஆகிய கரிகால சோழ ஆடையூர் நாடாழ்வான் என்பவனுடனும், செங்கேணிக் குடியினனான. அத்திமல்லன் என்பவனுடனும் ஓர் அரசியல் உடன்படிக்கை செய்து கொண்டான். அதில் பேரரசுடன் விசுவாசமாக இருக்க வற்புறுத்தப்பட்டுள்ளது. இதனால் இம்மூவரும் குலோத்துங்கனிடம் உள்ளன்பு உடையவர் களாகவும் அவனது தலைமையின் கீழ் இயங்கியவர்களாகவும் இருந்தனர் என்பது அறிய முடிகின்றது.

இவ்விடுகாதழகிய பெருமாள் தகடூர் மட்டுமின்றிக் கிழக்கே திருவண்ணாமலை மாவட்டம் திருமலை, போளூர் வரையிலும் வடக்கே ஆந்திராவின் லட்டிகம் வரையிலும் ஆட்சி புரிந்துள்ளான். அக்காலக் கட்டத்தில் பெரும் நிலப்பரப்பை ஆட்சி புரிந்த ஒரே குறுநில மன்னன் இவனேயாவான் என்பதில் ஐயமில்லை.

சோழரது வீழ்ச்சிக்குப் பின் (கி.பி. 1279) தகடூர் அரசியலில் இருந்து அதியமான்களும் மறையலாயினர். இச்சமயத்தில் போசளர்களது ஆதிக்கம் தகடூரில் தலைதூக்கியது.

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் சோழரது ஆட்சியில் சில குழப்பங்கள் ஏற்பட்ட போது அவர்களுக்கு உதவ வந்த போசளர்கள் தமிழகத்தில் திருச்சி அருகே சமயபுரம் என்ற கண்ணனூரில் தமக்கெனத் தலைநகரை அமைத்துக் கொண்டனர்.

முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனுடன் (கி.பி. 1251-68) போரிட்ட போசள மன்னன் வீர சோமேஸ்வரன் கி.பி. 1262இல் இறந்த போது அவனது இரு புதல்வர்களான மூன்றாம் நரசிம்மனும் வீர ராமநாதனும், போசளர் நாட்டை இரு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டனர். வீரராமநாதன் தமிழகப் பகுதியையும், கோலார்ப் பகுதியையும் பெற்றான்.

திருச்சி கண்ணனூர் தொடர்ந்து அவனது தலைநகராக இருந்தாலும், நிர்வாக வசதிக்காகவும் கோலார்ப் பகுதியை

எதிரிகளிடமிருந்து காக்கவும் வேண்டி வீரராமநாதன் இன்றைய கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டத்தில் அமைந்துள்ள குந்தாணியைத் தனது இரண்டாவது தலைநகராகத் தேர்ந்தெடுத்தான். கி.பி. 1279இல் கண்ணனூரைப் பாண்டியனிடம் இழந்த பின்னர் குந்தாணியே வீரராமனாதனின் பிரதான தலைநகரானது. இக்காலக் கட்டத்தில் தகடூரானது கடைக்கோட்டூரான நானா தேசிப்பட்டினம் என வழங்கப்பட்டது.

போசளர் வீழ்ச்சியுற்ற பின் தகடூர் நாடு விஜய நகரப் பேரரசின் ஒரு பகுதியானது. விஜய நகர மன்னர்கள், ஸ்ரீ புக்கணன், கம்பணன், தேவராயர், மல்லிகார்ஜுனர் ஆகியோர் இப்பகுதியை ஆட்சி புரிந்தனர். இங்குள்ள கோயில்களுக்கு இவர்கள் மானியங்கள் வழங்கியமை கல்வெட்டுக்கள் மூலம் தெளிவாகின்றன.

விஜய நகரப் பேரரசு வீழ்ச்சியடையும் காலத்தில், பேரரசின் குறுநில மன்னர்களில் ஒருவனாக விளங்கிய ஜெகதேவராயன் என்பவன் பெனுகொண்டாவைப் போர் தொடுத்த பிஜப்பூர் சுல்தானைத் தோற்கடித்து விரட்டினான். இவனது போர்த் திறமையை பாராட்டிய பேரரசர் ஸ்ரீரங்கராயர் இவருக்குத் தனது மகளை மணமுடித்துத் தந்து ஜெகதேவராயரை மருமகனாக்கிக் கொண்டார்.

ஜெகதேவி, தகடூர் நாட்டிற்குச் சிற்றரசனாகவும் நியமிக்கப் பட்டான். ஜெகதேவராயன் ஜெகதேவியில் குடிபெயர்ந்து அங்கிருந்து ஆட்சிபுரிந்தான். இவனது ஆட்சியின்போதுதான் இப்பகுதியில் பாரமகால் என்ற பெயரில் பெரிய வருவாய் கோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. பாரமகால் என்பது பன்னிரண்டு கோட்டைகளை உள்ளடக்கியது என்பர். இவை சேலம், கிருஷ்ணகிரி வரை அமைந்த பன்னிரண்டு கோட்டைகளைக் குறிக்கும். இவற்றிற்குத் தலைமையிடமாகத் திகழ்ந்தது ஜெகதேவிகோட்டை என்பர். ஜெகதேவராயன் இறந்த பின்பு தர்மபுரி எனும் தகடூர் நாடு பல்வேறு பாளையக்காரர்களால் கைப்பற்றப்பட்டது.

மைசூர் மன்னர் சிக்க தேவராயர் என்பவர் கி.பி. 1688ஆம் ஆண்டு தகடூரைக் கைப்பற்றினார். அது முதல் 1768ஆம் ஆண்டு வரை தகடூர் நாடானது மைசூர் உடையார் வசம் இருந்துள்ளது. உடையார் காசுகள் பல மாவட்டங்களில் கிடைத்துள்ளன. மைசூர் மன்னரது வலிமையின்மையைப் பயன்படுத்தி ஐதர் அலி (1761 - 82) ஆட்சி நிர்வாகத்தை ஏற்றபோது தர்மபுரி, சேலம் முதலிய பகுதிகள் அவனது மேலாதிக்கத்தின் கீழ் வந்தது. பின்னர் அவனது மகன் திப்பு

சுல்தான் (கி.பி. 1782 - 99) ஆட்சி புரிந்தான். இவன் காலத்தில் ஆங்கிலேயருக்கும் திப்புவிற்கும் அடிக்கடி போர்கள் நடைபெற்றன. கி.பி. 1792ஆம் ஆண்டு முதல் திப்பு சுல்தான் வசம் இருந்த தமிழகத்தின் பாரமகால் எனும் தர்மபுரி, சேலம் மாவட்டங்கள் ஆங்கிலக் கிழக்கிந்திய கும்பினி ஆட்சியின் கீழ் வந்தது. பாரமகால் உள்ளடக்கிய சேலம் மாவட்டத்தின் நிர்வாகப் பொறுப்பைக் கர்னல் அலெக்சாண்டர் ரீடு ஏற்றார். அவருக்கு உதவியாக கிரஹாம் மாக்லியாடு, தாமஸ் மன்றோ என்னும் மூன்று அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். தர்மபுரியின் அதிகாரியாகத் தாமஸ் மன்றோ (கி.பி. 1792 - 99) பணியாற்றியபோது நிலவரித் தீர்வையில் சீர்திருத்தம் செய்தார். இதுவே ரயத்துவாரி திட்டம் என்று பின்னர் அழைக்கப்பட்டது. தாமஸ்மன்றோவை விரிவாகப் பின்னர் காண்போம்.

திரு. ரிச்சர்ட்ஸ் (Richards) 2 பாரமகால்களைக் குறிப்பிடுகிறார்.

1. கிருஷ்ணகிரி, 2. ஜெகதேவிதுர்க்கம், 3. வீரபத்ரதுர்க்கம், 4. கவல்கரா (Kavalgarh) 5 மகாராஜக்கடை 6 பஜங்ககரா, 7. கடோர்கர், 8. திருப்பத்தூர், 9. வாணியம்பாடி, 10. கனகநகரா, 11. சுதர்சநகரா, 12. தட்டக்கல்.

ஆங்கிலேயரது ஆட்சிக்கு எதிராகச் சுதந்திரப் போராட்ட இயக்கம் நடைபெற்ற போது தர்மபுரியும் அதில் பங்கேற்றது. இந்திய விடுதலைக்காக மூதறிஞர் இராஜாஜியும், தீர்த்தகிரி முதலியாரும், சுப்பிரமணிய சிவாவும், பிறரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் காந்தியடிகளின் தலைமையை ஏற்றுத் தருமபுரி மக்களுக்கு இவர்கள் தலைமை தாங்கினர்.

சுதந்திரத்திற்குப் பின்னர் நிர்வாக அடிப்படை வசதியின் காரணமாக 2.10.1965 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் இருந்து தருமபுரி மாவட்டமாகத் தர்மபுரியைத் தலைநகராக கொண்டு தருமபுரி உருவாக்கம் பெற்றது.

இவ்வாறு பல்லாற்றானும் தொன்மை வரலாற்றுப் பெருமைகளால் உயர்ந்து நிற்கும் தருமபுரி மாவட்டம் மீண்டும் தனது பகுதியில் உள்ள கிருஷ்ணகிரி உள்ளடக்கிய பகுதியை கொண்டு கிருஷ்ணகிரி மாவட்டமாக 9.2.2004 அன்று உதயமானது. இவ்வாறு பல வரலாற்றுச் சிறப்புக்களையும், கொண்ட மாவட்டமாகப் பிரிக்கப்படாத தருமபுரி மாவட்டம் விளங்குகிறது.

# 7. தகடூர் நாட்டுப் பிரிவுகள்

சங்க காலம் தொடங்கி ஜெகதேவிராயன் காலம் வரை தகடூர் என்ற பெயரிலேயே தருமபுரி வழங்கப்பட்டு வந்துள்ளது. தகடூர் நாடாகவும் ஊராகவும் இருந்துள்ளது. தகடு என்பதற்குப் பூவிதழ் என்று பொருளாகும். தகடூர் என்பது தகடை எனவும் சில கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளன. நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் அருகே தகட்டூர் என்ற பெயரில் ஓர் ஊர் உள்ளது. இரண்டிற்கும் பெயர் ஒற்றுமை உள்ளது. சங்ககால அதியமான் மரபினர் ஆண்ட தகடூர் நாடு பெருநிலப் பரப்பைக் கொண்டது எனலாம். பல்லவர் ஆட்சியின் போது தகடூர் சிறு சிறு பகுதிகளாக ஆளப்பட்டாலும் நாடுகள் என்றே அழைக்கப்பட்டுள்ளன. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு முதல் ஏழாம் நூற்றாண்டு வரை தகடூர்ப் பகுதி ஐந்து நாடுகளாக இருந்துள்ளன. அவை வருமாறு; புறமலைநாடு, கோவூர் நாடு, தகடூர் நாடு, மீகொன்றை நாடு, மீவேணாடு என்பன. மீ கொன்றை, மீவேணாடு முறையே அரூர் ஊத்தங்கரை வட்டங்களையும் தகடூர், தருமபுரியொட்டிய பகுதியையும் புறமலை, கோவூர் நாடுகள், தருமபுரி, கிருஷ்ணகிரி, அரூர், பாலக்கோடு வட்டங்களில் பெரும் பகுதிகளையும் உள்ளடக்கியவை எனலாம்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதல் மேலும் சில நாடுகள் உருவாயின எனலாம். கங்கநாடு, விரிவூர் நாடு, வேள்கலி நாடு, வேளால நாடு, மண்ணநாடு, தாயனூர் நாடு போன்ற நாடுகளை நடுகல் கல்வெட்டுகளில் காண்கிறோம். தகடூர் நாடே கங்க நாடு எனலாம்.

நுளம்பர் காலத்தில் தகடூர் நாடு, நுளம்பபாடி என அழைக்கப் பட்டது. ஒட்டம்பட்டி நடுகல்லும் தருமபுரி நடுகல்லும் ஏழுநாடுகளை ஒரு சேரக் குறிப்பிட்டு அவ்வேழையும் ஆண்ட வாணரைச்

சுட்டுகின்றன. சோழர் காலத்தில் தகடூர் நாடு, நுளம்ப பாடி என்ற பெயருடன் நகரிலிசோழ மண்டலம் என்ற பெயரையும் பெற்றுள்ளது. 11ஆம் நூற்றாண்டில் எயில்நாடு, அலைமலை நாடு ஏற்பட்டன. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் புலிகரை நாடு ஏற்பட்டது. அலைமலை நாடும், புலிகரை நாடும் இன்றைய அரூர் வட்டத்தின் சில பகுதிகளைக் குறிக்கும். எயில்நாடு கிருஷ்ணகிரி வட்டத்தின் ஒரு பகுதியையும் உள்ளடக்கியது. பின்னர் ஆட்சி புரிந்த மன்னர்கள் காலங்களில் வடகரை நாடு, விருவி நாடு, இராசராச இருமடி நாடு, விக்கிரம சோழ நாடு, கடத்தூர் நாடு, மாசந்தி நாடு, முரசு நாடு எனச் சிறு சிறு நாடுகள் இருந்துள்ளன. கி.பி. 16ஆம் நூற்றாண்டில் புதுப்பற்று நாடு, அங்கண நாடு மற்றும் எதிரிலிச் சோழ நாடு என்பனவும் தோன்றின.

சோழராட்சியில் தகடூர் நாட்டிலும் வளநாடுகள் தோன்றின. அவைகளில் இராசேந்திர சோழ வளநாடு, எதிரிலிச் சோழ வளநாடு குறிப்பிடத் தக்கவை. மேலும் முடிகொண்ட சோழ மண்டலம், நிகரிலி சோழமண்டலம், விஜயராஜேந்திர மண்டலம் போன்றவையும் காணப்படுகின்றன. நாடு என்ற பிரிவு ஒருவட்ட அளவே எனலாம். அதனை நாட்டுக்காமுண்டர்கள் ஆண்டு உள்ளார்கள்.

கி.பி.12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் 'பற்று' எனும் ஒருவகை உட்பிரிவு தோன்றியுள்ளது. இப்பிரிவு போசளர் வருகையால் ஏற்பட்டது என்பர். நாடுகள் பிளவுபட்டுச் சிறுசிறு உட்பிரிவுகள் ஏற்பட்டன. இப்பிரிவுகளே பற்றுகள் எனக் கருதலாம். தகடூர் பகுதியில் ஆனந்தூர்ப்பற்று, ஆரப்பூர்ப்பற்று, தாமலூர்ப்பற்று என்பவைகளும் பின்னர் விஜயநகர ஆட்சிக்காலத்தின் தொடக்கத்தில் பையூர்ப்பற்று, குடில்பற்று, அங்கணப்பற்று என்பனவும் ஏற்பட்டன. மேலும் மூக்கனூர்ப்பற்று, பாரூர்ப்பற்று, புதுப்பற்று போன்ற பற்றுகளும் ஏற்பட்டன.

விஜயநகரர் காலத்தில்தான் சீர்மை என்ற ஒரு பிரிவும் தோன்றியது. இதற்கு எடுத்துக்காட்டாக குந்தாணிச் சீர்மையைக் குறிப்பிடலாம்.

பல்லவர் காலந்தொடங்கி, பல நடுகற்களில் சேவகர்கள் என்ற போர் வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். மக்கள் என்ற சொல் தருமபுரி நடுகற்களில் உறவுப் பெயராக மட்டுமின்றிப் பதவியின் பெயராகவும் இருந்துள்ளது. பாலாசிரியர் என்ற சொல்லும் ஆசிரியர் என்பதற்கு மேலாகப் போர்ப்பயிற்சி வழங்கியவராகக் கருதப்படுகிறது. அரையர், மைந்தைகள், மருமக்கள் போன்ற சொற்களும் நிர்வாகத்துடன் தொடர்புடையவை எனலாம்.

கி.பி. 13ஆம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுக்களில் எயில் நாடாழ்வான், நாட்டுக்காமுண்டன், நாட்டு நாயகஞ் செய்வான் ஆகிய சொற்கள் குறிப்பிட்ட ஒருவரைக் குறித்து நிற்பதாகக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இவை நாட்டுப் பிரிவுகளைத் தனியொரு தலைவன் ஆட்சி செய்துள்ளான் என்பதைத் தெளிய வைக்கிறது. ஈழச்சான்றான், வன்னியக்காமுண்டன், வேளாளக் காமுண்டன் எனக்குறிப்பிட்ட சாதித் தலைவர்கள் ஆண்டுள்ளார்கள். இவ்வாறு நாடாழ்வான், நாட்டு நாயகஞ் செய்வான் என்று கல்வெட்டுகளில் காண்கிறோம். வணிக அமைப்பைச் சேர்ந்த மக்கள் அமைப்பும் அதனை நிருவகித்தவர்களையும் தகடூர் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. கணப்பனூர் நடுகல்லில் வாணிகச் சடையனார் உள்ளார்.

உழவையும், கைத் தொழிலையும் மையமாக வைத்து வாழ்ந்த மக்கள் ஊர்ப்பிரிவிற்குத் தத்தம் சாதிப் பெயர்களை இட்டனர். உழவையே மையமாகக் கொண்டவர்கள் சித்திரமேழி பெரிய நாட்டார் என்றும், சித்திரமேழி விண்ணகரத்து நாட்டார் என்றும் அழைத்துக் கொண்டனர். சித்திரமேழி பற்றிய ஏர்கலப்பை ஒன்று ஆம்பள்ளியில் கிடைத்ததுடன் கல்வெட்டு அமைந்த பாறைக்கு அருகில் ஓர் சமணர் சிற்பமும், ஏர்கலப்பை ஒன்றையும் காண முடிந்தது. எனவே சித்திரமேழி நாட்டார், மத்தூர், ஆம்பள்ளி ஆகிய பகுதிகளிலும் வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவு. இவர்களே பொன்னேர் கட்டும் பழக்கத்தைக் கொண்டவர்கள் என்பர். இவர்களுக்கென்று சபை இருந்துள்ளது. காவிதி, ஏனாதி என்ற பட்டப் பெயருடையவர்கள் நாடுகளை ஆண்டுள்ளனர்.

# நாட்டுப்பிரிவுகள்

| வ.எ. | மண்டலம் | நாடு | ஊர் | பள்ளி/பாடி பற்று | காலம் | ஊர்/வட்டம் | க.எண் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | | விடுகாதழகிய நல்லூர் | - | - | 13 C.A.D. | அரூர் | 2 |
| 2. | | கடத்தூர் நாடு | - | - | 13 C.A.D. | கடத்தூர் | 6 |
| 3. | | கோவூர் நாடு | காரி மங்கலம் | - | 6 C.A.D. | காரிமங்கலம் / பாலக்கோடு | 8 x 9 |
| 4. | | கங்கநாடு தகடை நாடு | கம்பைய நல்லூர் | மூக்கனூர் பற்று ஈசம்பாடி | 15 C.A.D. | ஈசம்பாடி கம்பைய் நல்லூர் | 10 - 17 |
| 5. | | தகடை நாடு | நாகையன் பள்ளி | காலிங்கராய சதுப்பேதி மங்கலம் நாகையன்பள்ளி தாமலூர்பற்று | 13 C.A.D. | - | 10-17 |
| 6. | | தகடை நாடு புறமலை நாடு | காலிங் கராய சதுப்பேதி மங்கலம் | கடம்பர்பள்ளி நாயைகன் பள்ளி | 13 C.A.D. | - | 10-17 |
| 7. | | புறமலை நாடு | - | - | 9 C.A.D. | - | 20 |
| 8. | நிகரிலி சோழ மண்டலம் | புறமலை நாடு | கெரகோட ஹள்ளி | பாகலபள்ளி/ நுளம்பபாடி | 11 C.A.D. | அரூர் (பாலக்கோடு) | 24 |
| 9. | | புறமலை நாடு | - | - | 8 C.A.D. | - | 26 |
| 10. | | புறமலை நாடு | மழவராய புத்தேரி | கானபள்ளி | 14 C.A.D. | அரூர் சிந்தல்பாடி | 32 |
| 11. | நிகரிலி சோழ மண்டலம் | கங்கநாடு புறமலைநாடு தகடூர் நாடு | - | பாடி | 13 C.A.D. | அரூர் | 35 |
| 12. | நிகரிலி சோழ மண்டலம் | கங்க நாடு தகடை நாடு | - | - | 12 C.A.D. | சிந்தகபாடி | 36 |
| 13. | | | சோகத்தூர் | சிந்தகப்பாடி | 13 C.A.D. | | 38 X 39 |
| 14. | | | காரி மங்கலம் | திருமடைப் பள்ளி | 13 C.A.D. | | 43 |
| 15. | | புறமலைநாடு | - | சித்தகப்பாடி | 10 C.A.D. | - | 44 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 16. | - | கங்கநாடு கோயினூர் நாடு புறமலை (நவலை) நாடு வேளாளநாடு தாயனூர்நாடு | சின்ன கவுண்டன் பட்டி | - | 9 C.A.D. | அரூர் | 45 |
| 17. | | புறமலைநாடு | - | - | 9 C.A.D. | அரூர் | 47 |
| 18. | | கோவூர் நாடு | தகடூர் | ஆரப்பூர் பற்று | 9 C.A.D. | அரூர் | 49 |
| 19. | | கோவூர் நாடு | - | தின்னஹள்ளி | 6 C.A.D. | அரூர் | 52 |
| 20. | நிகரிழி சோழ மண்டலம் | விரியூர் நாடு புறமலை நாடு | தீர்த்த மலை விரியூர் | | 11 C.A.D. | அரூர் | 55 |
| 21. | நிகரிலி சோழ மண்டலம் | தகடூர்நாடு புறமலை நாடு | | | 11 C.A.D. | | 55 |
| 22. | | தகடூர் நாடு | தகடூர் தாழை நத்தம் | குந்தாணிச் சீர்மை | 16 C.A.D. | | 58 |
| 23. | | மீகொன்றை நாடு | - | - | 7 C.A.D. | | 59 |
| 24. | | புறமலை நாடு | - | - | 9-10 C.A.D. | | 60 |
| 25. | நிகரிலி சோழ மண்டலம் | கங்கநாடு தகடநாடு புலிகரை நாடு | மாசெவண நல்லூர் | சாத்தப்பாடி | 12 C.A.D. | மணியம்பாடி/ அரூர் | 61 |
| 26. | | புறமலைநாடு வேளாளநாடு | - | - | 8 C.A.D. | முத்தனூர்/ அரூர் | 62 |
| 27. | | புறமலை நாடு | கொற்ற மங்கலம் | நரிப்பள்ளி புத்தூர் | 11 C.A.D. பாப்பன்பாடி | அரூர் | 66 X 67 |
| 28. | | புறமலை நாடு | பொன் பரப்பின சதுர்வேதி மங்கலம் நத்தமல்லை | குடில்பற்று | 16 C.A.D. | | 70 |
| 29. | - | - | ஆனந்தூர் | ஆனந்தூர் பற்று | 15 C.A.D. | ஊத்தங்கரை ஆனந்தூர் | 72 |
| 30. | - | - | ஆனந்தூர் | - | 12 C.A.D. | ஊத்தங்கரை | 73 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 31. | | ஆடையூர்நாடு எயில்நாடு | திருவண்ணாமலை ஊர்கரை | தென் பற்று | 14 C.A.D. | திருவண்ணாமலை | 74 |
| 32. | - | கங்கநாடு தகடூர் | கண்ணனூர் குன்றத்தூர் | தள்ளப் பாடி | 9 C.A.D. | காணம்பட்டி/ ஊத்தங்கரை | 76 |
| 33. | - | தகடூர் நாடு | மலையடி குன்றம் | | 11 C.A.D. | சாவடியூர்/ ஊ.கரை | 80 |
| 34. | - | மீவே னாடு | குப்பையூர் | | 6, 7 C.A.D. | நடுப்பட்டி/ ஊ.கரை | 81, 82 |
| 35. | - | புறமலை நாடு | | | 6, 8, 9 C.A.D. | ஊத்தங்கரை | 83, 84 ஸ்ரீசிவமாற பருமன் |
| 36. | - | மேல்வேனாடு | - | கருங்காடிப் பாடி | 6 C.A.D. | ஊத்தங்கரை | 87 சிங்கவின்ன பருமர், |
| | | மீவேனாடு | கட் டையூர் | - | தருமபுரி, புலியானூர் | | 88 மகேந்திர வர்மன் |
| 37. | - | மீவேனாடு | | | 6 C.A.D. | ஊத்தங்கரை புலியானூர் | 89 சிம்ம வர்மன் |
| 38. | - | - | சேவத்தூர் சோகத்தூர் | - | 9 C.A.D. | பெரிய பொம்மட்டி | 91, 92 வீர நுளம்பன் |
| 39. | | கோவூர் நாடு | கீழ்வழிப் பள்ளசூர் | - | 7 C.A.D. | போத்தன் கோட்டை | 93 மகேந்திர வர்மன் |
| 40. | - | வேனாடு | | | 10 C.A.D. | ரெட்டியூர் | 97 அய்யப்ப தேவன் |
| 41. | | கங்கநாடு புறமலை நாடு கோவூர்நாடு கோயிலூர்நாடு வேள்கலிநாடு மன்னநாடு | அருங் குன்றம் முத்தூர் | | 14 C.A.D. | ஒசூர் அச்சேந்திரம் | 104 |
| 42. | | | அத்தி சமுத்திரம் | - | 14-15 C.A.D. | ஒசூர் அச்சேந்திரம் | 104, 105 |
| 43. | | | கண்ண மங்கலம் | - | 15-15 C.A.D. | ஒசூர் அச்சேந்திரம் | 109, 110 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 44. | முடிகொண்ட சோழ மண்டலம் | | | செவிடபாடி | 13 C.A.D. | ஓசூர்/ஓசூர் | 115 |
| 45. | - | அங்கண நாடு | பால சமுத்திரம் | - | 15 C.A.D. | கிருஷ்ணகிரி | 1973/103 |
| 46. | - | எயில் நாடு | மேலையூர் | - | 11 C.A.D. | கிருஷ்ணகிரி | 1973/132 |
| 47. | நிகரிலி சோழ மண்டலம் | அங்கணப் பற்றுநாடு | | அங்கணப் பற்று | 15 C.A.D. | கிருஷ்ணகிரி | 1973/107 |
| 48. | | கங்க நாடு தகடூர் நாடு | அடலியமான தேசிப் பட்டணம் | - | 13 C.A.D. | கிருஷ்ணகிரி | 1973/111 |
| 49. | | புதுப் பற்றுநாடு | கலக்கி முட்டல் காக்கு நாயக நல்லூர் | புதுப்பற்று | 13 C.A.D. | கிருஷ்ணகிரி | 1973/137 |
| 50. | நிகரிலி சோழ மண்டலம் | விருவி நாடு | - | - | 15 C.A.D. | கிருஷ்ணகிரி | 1973/ 138 A |
| | | விருவி நாடு | குந்தாணி | | 14 C.A.D. | | 1973/139 |
| 51. | | மழைநாடு மாசந்தி நாடு | மருதூர் தேவ சமுத்திரம் | - | 15 C.A.D. | கிருஷ்ணகிரி | 1973/141 |
| 52. | | விக்கிரம சோழநாடு | துவரப் பள்ளி | துவரபள்ளி | 13 C.A.D. | ஊ.கரை | 1973/49 |
| 53. | முள்விரி இராஜ்ஜியம் | புதுப்பற்று நாடு | - | - | 16 C.A.D. | கிருஷ்ணகிரி | 1973/121 |
| 54. | நிகரிலி சோழ மண்டலம் | விருவி நாடு | அத்த கடிசவூர் தீர்த்தம் | - | 15 C.A.D. | கிருஷ்ணகிரி | 1973/ 115 B |
| 55. | - | விருவி நாடு | புலிமேட்டு கரை | ஆனந்தவாடி | 14 C.A.D. | கிருஷ்ணகிரி | 1973/83 |
| 56. | - | புதுக்குன்றி நாடு | - | - | 14 C.A.D. | கிருஷ்ணகிரி | 1973/ 96B |
| 57. | - | முரசுநாடு தென்கூற்று நாடு | - | - | 14 C.A.D. | ஓசூர் | 118 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 58. | - | - | சிறுநத்த மங்கலம் கழனியூர் | - | 15 C.A.D. | ஓசூர் | 129 |
| 59. | முடிகொண்ட சோழ மண்டலம் | - | - | - | 12 C.A.D. | ஓசூர் | 134 |
| 60. | - | மாசந்திநாடு பெரிய நாடு | கக்கனூர் | - | 15 C.A.D. | ஓசூர்/ கக்கனூர் | 138 |
| 61. | - | மாசந்திநாடு பெரிய நாடு எதிரிலி சோழநாடு | அந்தியூர் | - | 16 C.A.D. | ஓசூர்/ கொத்தூர் | 140 |
| 62. | முடிகொண்ட சோழ மண்டலம் | ராஜேந்திர சோழ வளநாடு | வாராந்தூர் மேலையூர் | - | 13 C.A.D. | பாராந்தூர் | 146 |
| 63. | ஜெயங் கொண்ட சோழமண்டலம் | (அரூர் கோட்டம்) | - | - | 13 C.A.D. | மேல் சூடாபுரம் | 148 |
| 64. | நிகரிலி சோழ மண்டலம் | மாசந்தி நாடு | - | - | 11 C.A.D. | கிருஷ்ணகிரி | 1973/84 |
| 65. | நிகரிலி சோழ மண்டலம் | தகடூர் நாடு எயில்நாடு பங்களநாடு | - | மீரொவப் பள்ளி | 11 C.A.D. | கிருஷ்ணகிரி | 1973/85 |
| 66. | நிகரிலி சோழ மண்டலம் | தகடூர் நாடு எயில்நாடு ஐங்குன்றத்து நாடு | - | - | 13 C.A.D. | கிருஷ்ணகிரி | 1973/86 |
| 67. | ஜெயங் கொண்ட சோழ மண்டலம் | மோந்தூர் நாடு | மாநவ சிகாமணி நல்லூர் | | 13 C.A.D. | கிருஷ்ணகிரி | 1973/ 96 C |
| 68. | | வடகரை நாடு ராசராச சேமடிநாடு | சூளகரை சூளகரை | - | 13 C.A.D. | பாரூர் | 1923/ 114 C X D |
| 69. | | தகடை நாடு | பையூர் | | 13 C.A.D. | பெண்ணேஸ் வரம் | 1973/54 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 70. | | பெரியநாடு | - | சோம்பள்ளி | 13 C.A.D. | பெண்ணேஸ் வரம்மடம் | 1973/ 54 A |
| 71. | - | - | நாகண்ட கம்புத்தூர் | - | 13 C.A.D. | பெண்ணேஸ் வரமடம் | 1973/ 76 B |
| 72 | - | - | | போச்சயன் பள்ளி | 13 C.A.D. | போச்சம் பள்ளி | 1973/86 |
| 73. | ஜெயங் கொண்ட சோழ மண்டலம் | எயில் நாடு | அங்கணம் அரசு நிலை | - | 13 C.A.D. | மகாராஜா கடை | 1973/124 |
| 74. | - | - | - | அங்கனப் பற்று வேப்பம் பள்ளி செடில சமுத்திரம் | 14 C.A.D.. | மேகல சின்னம்பள்ளி | 1973/129 |
| 75. | - | - | கங்கராய சதுர் வேதி மங்கலம் | அங்கணப் பற்று வரட்டன பள்ளி | 14 C.A.D. | வரட்டன பள்ளி | 1973/ 108 |
| 76. | | | அதியமான் கோட்டை மகேந்திர மங்கலம் நந்திமங்கலம் | - | 13 C.A.D. | அதியமான் கோட்டை | 1975/18 |
| 77. | | தகடைநாடு புறமலை நாடு வடகரை நாடு | குளகத்தூர் | - | 13 C.A.D. | தருமபுரி | 1974/87 |
| 78. | நிகரிலி சோழ மண்டலம் | தகடூர் நாடு | தகடூர் | - | 13-15 C.A.D. | தருமபுரி | 1974/69 |
| | | கங்க நாடு | கடைக் கோட்டூர் | - | | | 1974/106 |
| 79. | | பற்ற நாடு | வாணபுரத் தூராளி பரிகம் | - | 12 C.A.D. | தருமபுரி | 1974/182 |

# 8. தகடூர் நாட்டில் கோயில்களின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழகத்தில் தொல் பழங்காலத்தில் இருந்து வழிபாட்டு முறைகளைக் காண முடிகின்றது. பெரும்பாலும் கிராம தேவதைகளே பண்டைய தமிழ் மக்களின் தெய்வங்களாக இருந்து வந்துள்ளன. பின்னர் சமணம், மற்றும் பௌத்த மதமும் இந்து சமயங்களான சைவ, வைணவமும் தோன்றி வளர்ந்து வந்துள்ளன.

## பல்லவர் காலத்தில் தகடூர் :

பல்லவர்கள் தகடூர்ப் பகுதியில் நடுகற்கள் மூலமே அறிமுகமாகின்றனர். இவர்கள் தகடூரில் கோயில்கள் அமைக்காமல் இருந்தமைக்குத் தகடூர் நாட்டில் பல்வேறு குழுக்கூட்டங்கள் ஆங்காங்கே ஆதிக்கம் செலுத்தியமையே எனலாம். இதனால் ஆட்சியும், நிலப்பரப்பும் மாறிமாறி கையகப்படுத்தப்பட்டுள்ளன. நிலையான, நெடுங்கால ஆட்சி இப்பகுதியில் அப்பொழுது ஏற்படுத்த முடியாத காரணமாக இருக்கலாம். நாயன்மார், ஆழ்வார் பாடல்களும் தகடூர்ப் பகுதியைக் குறிப்பிடவில்லை.

## கங்கர், பாணர் :

தகடூர் நாட்டைக் கங்கர், மற்றும் பாணர் அரசர்களும் தம்வசம் கொண்டு ஆட்சி புரிந்துள்ளனர். அக்காலக் கட்டத்தைச் சேர்ந்த கோயில்கள் ஏதும் காணப்படவில்லை. இவர்களது அரசியல் சான்றுகளும் நமக்கு நடுகற்களாகவே காணக்கிடைக்கின்றன. ஸ்ரீபுருசன், சிவமாறன், போன்ற மன்னர்களும் வீரர்களின் தலைவர்களாக இருந்திருத்தல் கூடும். கங்கர்களின் கலைப் பணிகளும், பாண அரசர்களின் கட்டிடங்களும் இங்கு இல்லை.

## நுளம்பர்கள் :

கி.பி. 9ஆம் நூற்றாண்டு முதல் 11ஆம் நூற்றாண்டு வரை நுளம்பர்கள் தகடூர்ப் பகுதியை ஆண்டனர். நுளம்ப மகேந்திரன் என்பவர் தனது ஆளுகைக்கீழ் கொண்டு வந்து தகடூரை நுளம்ப பாடியாக முதலில் மாற்றுகின்றார். அப்பொழுது இங்குச் சைவ, வைணவக் கோயில்களை ஏற்படுத்துகின்றார். இவரது காலத்தில் தர்மபுரியில் கோட்டைக் கோயில் என்று அழைக்கப்படும் சிவன் கோயில் எழுப்பப்படுகின்றது. காமாட்சி அம்மன் கோயிலும் சமகாலத்தைச் சேர்ந்தவையேயாகும்.

மேலும் இவர்கள் காலத்தில் கட்டப்பட்ட மல்லிகார்ச்சுனர் கோயிலில் காணப்பட்ட தூண் கல்வெட்டு சிறப்பு மிக்கது. இங்கு ஓர் சமணக் கோயில் இருந்தது என்பதற்கு ஆதாரமாக இது நிற்கின்றது. இக்கல்வெட்டில் லோகய்யா என்பவர் மகேந்திரன் மகன் அய்யப்பனிடம் புதுகூரு எனும் ஊரை மானியமாகப் பெற்று முன்பு இங்கு நிதியண்ணன், சண்டியண்ணன் என்பவரால் எடுக்கப்பட்ட சமணக் கோயிலுக்குத் தானமாக அளித்தான் என்ற செய்தி உள்ளது. கோயில் எடுப்பித்த நிதியண்ணன் என்பவர் அக்கோயிலுக்கு நந்தவனம் ஒன்றை அளித்த செய்தியையும் காண முடிகின்றது. எனவே, சமணக் கோயில் கி.பி. 9ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இருந்துள்ளதை உணர முடிகின்றது. அதற்கு அவர்கள் பெற்ற தானத்தையும் கல்வெட்டுகள் நமக்கு உணர்த்துகின்றன.

## சோழர்கள் வளர்த்த கோயில்கள் :

தகடூரின் பல பகுதிகளிலும் சோழர்கள் காலத்தில் சிவன் கோயில்கள் எடுக்கப்பட்டுப் பலவித தானங்கள் வழங்கப்பட்டன. பெண்ணேஸ்வரமடம் பெண்ணைநாயனார் கோயில், சிந்தல்பாடி சிவனீஸ்வர முடையார் கோயில், தீர்த்தகிரீஸ்வரர், அதியமான் கோட்டை சிவன் கோயில், தர்மபுரி அரியரநாதர் கோயில்; கம்பை நல்லூர்க் கோட்டைக் கோயில் ஆகியவை சோழர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட கோயில்கள் ஆகும்.

சோழர்கள் சமணப்பள்ளிகளையும் சைவ, வைணவக் கோயில்களையும் நன்கு பேணிக்காத்து வளர்த்துள்ளனர். சைவக்

கோயில்களுக்கு ஊர்களைத் தானமாக அளித்தும் ஏரிகளை வெட்டியும், நந்தவனம் அமைத்தும் இறை வழிபாட்டைச் செம்மையுறச் செய்தும் கோயில்களைக் கட்டியும் சமயங்களை வளர்த்துள்ளனர்.

முதலாம் இராசராசன் காலத்தில் இத்தகடூர் நாடு சோழர்கள் வசமாகி நுளம்பபாடி நகரிலிசோழ மண்டலமாக மாறுகின்றது. முதலாம் இராசேந்திரன் காலத்தில் சேத்திரபாலர் சுவாமிக்கு இங்குக் கோயில் எடுத்ததைத் தீர்த்தமலை கல்வெட்டு நமக்கு உணர்த்து கின்றது. சோழர்கள் காலச் செப்புத் திருமேனிகளும் தருமபுரி மாவட்டத்தில் சில உள. அவை நெடுசாலை, தீர்த்தமலை, பெண்ணேஸ்வரமடம், போன்ற ஊர்களில் உள்ள கோயில்களில் உள்ளன. முதலாம் குலோத்துங்கனும் மூன்றாம் குலோத்துங்கனும் இங்குச் சிவாலயங்கள் எடுப்பித்து வழிபாடுகளும், தேர்த் திருவிழாக்களும் நடைபெற ஆணைகள் வழங்கியுள்ளனர். மேலும் இராசராச அதியமான் அவன் மகன் விடுகாதழகிய பெருமான் காலங்களில் தருமபுரி, ஆம்பள்ளி, கம்பை நல்லூர் போன்ற ஊர்களிலும் கோயில்கள் அமைத்தும், தானமளித்தும் வந்துள்ளனர். தகடூர் நாட்டில் சோழர்கள் சைவ, வைணவச் சமயங்களை வளர்த்ததோடு மட்டுமின்றிப் பிற சமயங்களையும் ஆதரித்தமை நமக்குத் தெளிவாகிறது.

## விஜயநகரப் பேரரசு :

சோழர்கள் காலத்திற்குப் பின்னர் போசள மன்னன் வீரராமனாதன் சில சிவாலயங்களுக்குத் தானங்கள் அளித்து வழிபாட்டை நடத்தியுள்ளார். இருப்பினும் விஜய நகரப் பேரரசு, தகடூர் பகுதியைக் கைக்கொண்ட பிறகே அதியமான்கோட்டை, தீர்த்தமலை, பெண்ணேஸ்வர மடம், தென்கரைக் கோட்டை, தீர்த்தம் போன்ற பல பகுதிகளிலும் சைவ வைணவக் கோயில்களையும் கோயில் கோபுரங்களையும் உயர்த்திக் கட்டி உயர்ந்தோங்கி நிற்கச் செய்தனர். சைவ, வைணவ வழிபாட்டின் இன்றியமையாத சிறப்பை மக்களுக்கு உணர்த்தினர்.

இவர்கள் பெரும்பான்மையினர் வைணவத்தையே தழுவி இருந்தமையால் அதியமான் கோட்டை, தேன்கனிக்கோட்டை

முதலிய பல ஊர்களில் சென்றாய பெருமாள் என்னும் பெயரில் பல கோயில்கள் எடுத்துள்ளனர். மல்லப்பாடியில் இராமசாமி கோயில், கிருஷ்ணசாமி கோயில் இரண்டும் வைணவக் கோயில்களே ஆகும்.

தென்கரைக்கோட்டை கோயில் மண்டபத்தில் அனுமன் சிற்பங்களைத் தூண்களில் காணலாம். வைணவ வளர்ச்சிக்கு அனுமன் சிற்பமும் விஜய நகரர் காலத்தில் குறிப்பாகத் தகடூரில் முதன்மை பெற்றுத் திகழ்ந்துள்ளது. எனவே அடியார்களுக்கும் முதன்மை இடத்தை அளித்து அதன் பக்தி நெறியை ஊருக்கு எடுத்துரைக்க விஜயநகரப் பேரரசு பெரும் முக்கியத்துவத்தை வழங்கியுள்ளது. இவ்வாறு தகடூர் நாட்டில் சைவ, வைணவ வளர்ச்சியைக் காட்டவும், அதன் வளர்ச்சியை அறியவும் தடயங்களாக அமைபவை இவர்கள் அந்நாளில் எடுத்த கோயில்களே ஆகும்.

# 9. தருமபுரியில் உள்ள தொன்மையான கோயில்கள்

நொளம்பாதிராசர்கள் கட்டிய பல கோயில்களில் தருமபுரி கோட்டைக் கோயில்கள் குறிப்பிடத் தக்கவையாகும். இன்றுவரை நொளம்பர் கட்டிடச் சிற்பக்கலை நுட்பத்திற்குத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இக்கோயில்களையே குறிப்பிட்டாக வேண்டும். காலத்தை வென்று நிலைபெற்ற இக்கோயில்கள் கோட்டைக்குள் இருப்பதால் 'கோட்டைக் கோயில்கள்' என மக்கள் வழங்குகின்றனர். தருமபுரிக் கோயிலில் இருந்த தூண் ஒன்று தற்போது சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது. 110 வரிகளைக் கொண்ட இக்கல்வெட்டுத் தூண் சமணப்பள்ளியைக் குறிப்பிடுகிறது.

மல்லிகார்ச்சுனர்க் கோயில் என்றும் காமாட்சி அம்மன் கோயில் என்றும் இருகோயில்கள் உள்ளன. நொளம்பர் காலக் கல்வெட்டுகள் கோட்டைக் கோயில் தூண்களிலும், மாரியம்மன் கோவில் எனப்படும் விருந்தாடி அம்மன் கோயில் அருகிலும் இருந்ததாக அறிக்கைகள் கூறுகின்றன. தற்போது கோட்டைக் கோயிலில் நொளம்பர் கல்வெட்டு இல்லை. ஆயின், விருந்தாடி அம்மன் கோயில் அருகில் தூண்களில் உள்ளன. அவை கன்னடமாகும். மதிகோன்பாளையம் முத்துசாமி ஆச்சாரி தெரிவில் இருந்த தூணில் கன்னடக் கல்வெட்டு இருந்தது. நுளம்ப மன்னர் காலத்தில் ஒரு வணிகரின் மக்கள் நிதியண்ணன், சண்டியண்ணன் இருவர் சமணக் கோயில் கட்டுகின்றனர். மூலப்பள்ளியில் இக்கோயிலுக்குத் தானம் வழங்கப்படுகிறது. விஜயசேன சித்தாந்த படாரர் என்பவரின் சீடர், கனக சேன சித்தாந்த படாரர் என்பவரிடம் நிலம் ஒப்படைக்கப் படுகிறது. ஈண்டிருந்த கோயில் பின்னர் மல்லிகார்ச்சுனர் கோயிலாக மாறிற்று எனச்சிலர் குறிப்பிடுவர். மாரியம்மன் கோயில் அருகில் இருந்த கல்வெட்டின் மூலம் பொன்னெற கொரவர் என்ற சமண முனிவனைப் பார்க்கிறோம்.

நொளம்பர் தூண் கல்வெட்டு சமணக் கோயிலுக்குத் தந்த தானத்தைக் குறிப்பிடுவதாலேயே கோட்டைக் கோயிலாகிய மல்லிகார்ச்சுனர் கோயில் மல்லிநாதர் கோயிலாக இருந்து பின்னர் இந்து கோயிலாக மாறியது என்பது ஏற்புடையதாகாது. நொளம்பர் சைவக் கோயிலுக்கும் சமணக்கோயிலுக்கும் ஒரே காலகட்டத்தில் தானம் செய்துள்ளதால் இரண்டும் சமகாலத்தில் தோன்றி இந்துக்களாலும் சமணர்களாலும் தத்தம் கோயில்கள் போற்றப்பட்டன என்பதே ஏற்புடையதாகும். நொளம்பர் காலத்திற்குப் பின் பல்லாண்டுகள் கழிந்து மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கோட்டைக் கோயில் என நாம் அழைக்கும் சிவன் கோயில்கள் பாழ்பட்டுப் போற்றுவாரின்றி இருப்பதைக் கண்டு சைவத் துறவி ஒருவர் புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். அதே போல் சமணத்துறவி அல்லது யாரோவொருவர் பாழ்பட்டுக்கிடந்த சமணக் கோயிலைப் புதுப்பித்திருந்தால் கோட்டைக் கோயில் போல் சமணக் கோயிலும் இன்று இருந்திருக்கும். துரதிருஷ்டவசமாக யாரும் பேணுவாரின்றிக் கோச்செங்கண்ணீஸ்வரமுடைய நாயனார் கோயில் போல் சமணக் கோயிலும் அழிந்துபட்டிருக்கவேண்டும். கோட்டைக் கோயில்கள் உள்ள இடத்தில் உறுதியாகச் சமணக் கோயில் இருந்திருக்க வழியில்லை. இங்குள்ள இராமாயண சிற்பங்களும் தூண் சிற்பங்களும் இந்து சமயத்தோடு மட்டுமே தொடர்புடைய நொளம்பர்காலச் சிற்பங்களாகும். எனினும் விருந்தாடி அம்மன் கோயில் உள்ள இடத்தில் முன்பு சமணக் கோயில் இருந்திருக்கலாம். விருந்தாடி அம்மன் சிலை மிகவும் பிற்பட்ட காலத்தவையாகும்.

## கோட்டைக் கோயிலும் கலையழகும்

மல்லிகார்ச்சுனர்க் கோயிலும், காமாட்சிக் கோயிலும் தருமபுரி நகரில் மதிகோன் பாளையத்தில் உள்ளன. மேலைக்கங்கர் கீழைச்சாளுக்கியர் ஆகியோரின் கலையழகு சேர்ந்த தன்மையை இவற்றில் பார்க்கிறோம்.

சிவன்கோயில் திருவுண்ணாழி (கர்ப்பகிரகம்) அர்த்த மண்டபம். நவரங்கம் ஆகிய பகுதிகள் மட்டுமே நொளம்பர்காலம் எனலாம். முன்மண்டபம், மகாமண்டபம், விமானம், போன்றவை பிற்காலச் சோழர் காலத்தவை ஆகும்.

கருவறை நுழைவாயில் மேல் உள்ள கஜலட்சுமி உருவமும், நீர்த்தெளிக்கும் யானைகள் உருவமும், பூரண கலசமும், முழவும், சிங்க உருவங்களும், பதுமநிதி, சங்க நிதி உருவங்களும், குறிப்பிடத்தக்கவை எனலாம். பொதுவாக யானைகள் ஒரே நேரத்தில் நீர்த்தெளிப்பது போலவே கஜலட்சுமி சிற்பங்களைச் சிற்பங்களில் நாம் பார்க்கிறோம். ஆனால் இங்கு ஒன்று நீர் கொட்டவும், மற்றொன்று தம்முறைக்குக் காத்திருப்பதாகவும் கலைஞன் அற்புதமாகச் செதுக்கியுள்ளான். பூரணகலசமும் மத்தளமும் நேர்த்தியாக உள்ளன. அமர்ந்த சிங்கங்கள், பதுமநிதி, சங்கநிதி குறிப்பிடத்தக்கன. மேலும் இங்குள்ள தூண்கள் சிற்பத் தூண்கள் ஆகும். பல்லவர் காலத் தூண்கள் எவ்வாறு வரலாற்றாசிரியர்களால் போற்றப்படுகிறதோ அவ்வாறே இவைகளும் போற்றப்படும் தன்மையில் உள்ளன. தூண்களில் நாட்டியக் காட்சிகளும், மலர்களும் கண்ணுக்கு விருந்தாக அமைகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக விதானத்தில் உள்ள திக்குப்பாலகர்கள் அல்லது திசைக்காவலர்கள் உருவங்கள் சிறப்பாக அமைந்துள்ளன. முதலில் இங்குள்ள தூண்களைக் கவனிப்போம்.

கலையழகு நிரம்பிய ஆறு தூண்கள் மண்டபத்தை அலங்கரிக்கின்றன. தூண்கள் கீழே சதுரமாகவும் மேலே எண் பட்டை கொண்ட நீண்ட உருளையாகவும் பின் போதிகையுமாக உள்ளன. மேலும் விதானத்தைத் தொடுவது போலும் தூண்கள் உள்ளன. சுவாமிக்கு முன்னால் வடக்கிலும் தெற்கிலுமுள்ள இரு தூண்கள் கீழே சதுரமாகவும் பின் உருளையாகவும் பின் போதிகையுமாக உள்ளன. உருளை வடிவில் வழவழப்பைக் காட்டி உள்ளனர். இவற்றின் வடக்குப் புறமுள்ள தூண் குறிப்பிடத்தக்கதாகும். தூணின் அடிப்பாகம் வடக்குத் திசையில் (சுவர் பார்த்த திசையில்) சிவலிங்கத்தை (தற்போதுள்ள மல்லிகார்ச்சுனர் போன்ற லிங்க அமைப்பு) இடையில் உடைவாள் செருகிய ஓர் ஆடவன் பூசிக்கிறான். தோற்றத்தைப் பார்க்கிறபோது இவன் அரசனாக இருக்க வேண்டும் போல் தோன்றுகிறது. கோயிலை எழுப்பிய நொளம்ப மகேந்திரன் பூசிக்கிறான் போலும். பின் சுவற்றில் பல்வேறு நிலைகளில் நாட்டிய மகளிர் காட்சிகள் தத்ரூபமாக உள்ளன.

மேற்கண்ட தூணிற்கு எதிரில் தென்திசையில் உள்ள தூணும் சிறப்பானது எனலாம். நரசிம்மர் உருவத்தை பல்வேறு நிலைகளில்

பார்க்கிறோம். வடதிசையின் நடுவில் உள்ள தூண் மிகச் சிறந்த சிற்பங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சுகாசன மூர்த்தியின் கால்களை மாற்றி மாற்றி இரண்டிடத்தில் காட்டியுள்ளனர். கஜசம் ஹார மூர்த்தி, யானையின் தோலை உரிக்கின்றார். அருகில் உமை; வளர்ந்த நிலையில் நிற்கும் முருகன் கையைப் பிடித்துக் கொண்டு வேகமாக ஓடுகிறாள். இச்சிற்பம் வேறெங்குமில்லை எனலாம். மற்றொரு பக்கம் நடராசர் மற்றும் சுகாசன மூர்த்தி கால்களை மாற்றி மாற்றிக் காட்டியுள்ளனர். இடது கால் அல்லது வலது கால் தொங்கவிட்டபடி அல்லது மடித்தபடி இருக்கிறது. தூணின் ஒரு பக்கத்தில் (வடக்குத் திசை) சிவலிங்கம். அருகில் சூலம். கையெடுத்துக் கும்பிடும் அரசன் (?) இடையில் வாள் செருகி உள்ளான். இவன் எதிரில் மற்றோர் ஆடவன் வணங்கியபடி நிற்கிறான். இவன் அரசனின் மகனாக இருக்கலாம். அல்லது மகேந்திர வர்ம நொளம்பராஜனிடம் தானம் பெற்ற சைவ அடியாராக இருக்கலாம். தோற்றத்தைப் பார்க்கும்போது துறவியைப் போல் இல்லாததால் அரசனின் மகனாகவோ அன்றிக் கோயில் எடுப்பிப்பதில் துணையாயிருந்த ஒருவனாகவோ இருக்க வேண்டும். மண்டபத்தின் வடக்குத் திசையில் முதல் தூண் கீழ்க்கண்ட சிற்பங்களைக் கொண்டுள்ளது.

ஓர் அம்மனை அடியார் அல்லது பூசை செய்பவர் வழிபடுகிறார். அம்மன் வலக்காலை மடக்கி இடக்காலைத் தொங்க விட்டுள்ளார். அம்மன் அருகில் நிற்பவர் தம் ஒரு கையை இடுப்பில் வைத்துள்ளார். சிவலிங்கம் கமலப் பீடத்துடன் உள்ளது. ஓர் அடியார் அல்லது பூசை செய்பவர் வழிபடுகிறார். இவரின் ஒரு கை இடுப்பிலும் மற்றொரு கை சுவாமிக்கு நீர் ஊற்றுவது போலும் உள்ளன. ஓர் அம்மனை (இக்கோயில் அம்மன் போலும்) அடியார் ஒருவர் பூசை செய்கிறார். அம்மன் வலக்காலை மடக்கி இடக்காலைத் தொங்கவிட்ட நிலையில் உள்ளார். அம்மனுக்குக் கரண்ட மகுடம். இங்கும் அடியார் ஒருகை ஊரு ஹஸ்தத்தில் உள்ளது. சிறிய பையன் போன்ற தோற்றமுள்ள ஆடவன் பூசை செய்ய ஓர் அம்மன் வீற்றிருக்கிறார். இடக்காலை மடக்கி வலக்காலைத் தொங்க விட்டபடி அவர் உள்ளார். தலையில் கிரீடமகுடம் உள்ளது. அம்மன் தம்மிருகைகளைத் தொடை மீது வைத்துள்ளார். மேற்கண்ட இரண்டு சிற்பங்களும் சிறிய வடிவில் அழகாய் உள்ளன.

## போர்க்களக்காட்சி :

வாளுடன் கூடிய ஓர் ஆடவன் (மன்னன்) கழுத்தில் ஒரேயொரு கழுத்தணி; உதரபந்தம் இடையாடையுடன் உள்ளார். இவர் ஒருவனை வாளால் வீழ்த்த அவன் குப்புற விழுகிறான். இதை மூன்று நிலைகளில் கலைஞன் சித்தரித்திருக்கிறான். மேற்கண்ட தூணின் மற்றொரு பக்கம் காமச் சிற்பங்கள், இரதி மன்மதச் சிற்பங்கள் பார்க்கிறோம். தவிர பூதங்கள் குழலூத, ஆண், பெண் சிற்பங்களுமுள்ளன. மூன்றாம் பக்கம் குதிரை மீது வரும் ஆடவன்; மத்தளம் அடிக்கும் பெண். யானை மீது அரசன், அரசி; இவர்கள் எதிரில் ஓர் ஆடவன். யானை காலைத் தூக்கிய நிலையில் பிளிறுதல்; யானையருகே ஓர் ஆடவன் ஆகிய சிற்பங்கள் உள்ளன. தவிர வீரரிருவர் போரிடுகின்றனர். நான்காம் பக்கத்தில் ஓர் ஆடவனும் ஒரு பெண்ணும் காட்டப்பட்டுள்ளனர். ஒருவர் நிற்க மற்றொருவர் அமர்ந்த நிலை. பின் இருவரும் நின்ற நிலை. பிறகு முனிவர் உள்ளார். ஆடவர் இருவர் போரிடுகின்றனர். முனிவர், ஒரு பெண்; மத்தியில் குழந்தை. முனிவன் குழந்தையை வாங்குகிறான், அரசி அமர்ந்திருக்கிறார். சேடியர் கவரி வீசுகின்றனர்.

## தென்புறமுள்ள முதல் தூண் :

யானை மீது பாகன் உள்ளான். யானை மரத்தை முறிக்கிறது. மரத்தின் மீது குரங்குகள் அமர்ந்துள்ளன. தலைவன் அல்லது ஓர் ஆடவன் கத்தியுடன் நிற்கின்றான், ஒரு பெண் வணங்குகிறாள், அவள் மார்பில் கச்சில்லை.

திண்டு போன்ற கட்டிலின் மீது அமர்ந்த ஒருருவம். எதிரில் தரையில் அமர்ந்த மற்றோர் உருவம். ஓர் ஆடவன் நிற்கும் கோலம். கருடன் மீது விஷ்ணு அமர்ந்துள்ள காட்சி; வீரர்கள் போரிடும் காட்சி ஆகியவை கண்ணுக்கு விருந்தளிக்கின்றன. அரசி அல்லது தலைவி படுத்திருக்கிறாள். சேடிப் பெண்கள் மூவர் இருவரை உதைப்பது போன்று சிற்பம் காணப்படுகிறது.

ஆடவனும் பெண்ணும் தோள் மீது கைக் கோத்த நிலை; அமர்ந்த நிலையில் பெண்; நின்ற நிலையில் வீரன்; சாத்தன் உருவம், விஷ்ணு துர்க்கை, சிங்கத்தின் மீது உள்ளாள். குடை காட்டப்பட்டுள்ளது. சங்கு, சக்கரம், அபயம், வரத முத்திரையுடன் விஷ்ணு உள்ளார். அரியும்

பிரம்மாவும் இருபுறமும் நிற்க நடுவில் சிவன் தாமரைப் பீடத்தில் அமர்ந்துள்ளார். இவருடைய ஒரு பாதம் முயலகன் தலை மீது படுகிறது. மற்றொரு கால் மடக்கியபடி உள்ளது. மான், மழு, அபய வரதம் என்ற நிலையில் சிவன் உள்ளார். பிரம்மாவும் விஷ்ணுவும் கூட நான்கு கைகளுடன் உள்ளனர். ஆடவர் பல்வேறு கோணங்களில் காட்டப்பட்டுள்ளனர். அருகே ஒரு பெண் காட்டப் பட்டுள்ளாள். ஊடல் காட்சி? அமர்ந்த வீரன் அருகே மற்றொரு ஆடவர். குரு ஆசிரியர். நாட்டியக் காட்சி ஆகியவை தூணின் மற்றொரு பக்கம் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளது.

குருக்கள் சிவலிங்கத்தைப் பூசிக்க வருகிறார் சிறிது தூரத்தில் ஒரு மரம் உள்ளது.

கட்டிலில் ஒரு காலை மடக்கி ஒரு கால் குத்திட்டபடி ஒரு பெண் (தலைவி) அமர்ந்திருக்க எதிரில் ஆடவன் வருகிறான். தலைவனைத் தோழி அழைத்து வருகிறாள். சுற்றித் தோழிமார். இக்காட்சி தலைவியின் ஊடலைத் தீர்த்து வைக்கும் காட்சி போலும். கட்டிலில் ஓர் ஆடவனும் பெண்ணும் (தலைவி) அமர்ந்திருக்கின்றனர். ஒரு பெண் தலைவிக்குப் பொட்டு வைக்கிறாள். திருமணம் போன்ற சடங்கை இது குறிக்கலாம். கட்டிலின் மீது அரசன், அரசி அல்லது தலைவன் தலைவி கொஞ்சும் காட்சி. பெண் விரக தாபத்தால் வேதனைப்படுகிற காட்சித் தத்ரூபமாக உள்ளது. அரசன் வேட்டைக்குப் புறப்படுகிறான். நாய் உடன் செல்கிறது. அரசனின் ஒரு கை நாய் மீதும், மற்றொரு கை இடுப்பில் உள்ள கத்தி மீதும் உள்ளன. மேலே காந்தருவன் உருவம் உள்ளது. காதல் என்று இலக்கியங்கள் கூறும் வேட்டை மற்றும் காதலை இச்சிற்பங்கள் குறிப்பிடுகின்றன. மற்றோர் இடத்தில் ஆண், பெண்ணைத் தோள் மீது சுமத்தல், கோட்டை அல்லது கோயிலுக்கு வருதல்; வணங்கும் ஒரு பெண்ணும் ஓர் ஆடவனும் அமர்ந்த நிலையில் எனச் சிற்பங்கள் உள்ளன. மண்டபத்தின் தென்புறம் நடுவில் உள்ள தூணில் சிவனுடைய பல உருவங்கள் உள்ளன. தேவியுடன் சுகாசன மூர்த்தி, இலிங்கத்தை வழிபடும் பூசாரி, பிள்ளையார் - (வலம்புரி விநாயகர்) அமர்ந்த நிலையில் சிவன் (சண்டேஸ்வர அனுக்கிரகம்) சாத்தன் போன்ற சிற்பங்கள் இங்குப் பார்க்கிறோம். அரசன் (கத்தியுடன்?) சூரிய பகவானை வழிபடுகிறான். எதிரில் அரசியும் வழிபடுகிறாள்.

குதிரை மீது அமர்ந்த வீரன் உள்ளான். (சேரமான் பெருமாள்?) சங்கு, சக்கரம், அபயம், ஊரு எனும் நிலையில் விஷ்ணுவையும் இதே தோற்றத்தில் விஷ்ணுதுர்க்கையையும் பார்க்கிறோம். பிரம்மா, அமர்ந்த நிலையில் காட்சி தருகிறார். ஒன்றில் சூலம் உள்ளது. இலிங்கத்தைத் தழுவும் மார்க்கண்டன் காலாந்தகமூர்த்தி, சுகாசனமூர்த்தி ஆகிய சிற்பங்கள் உள்ளன. பிட்சாடனார்; அவர் அருகில் குள்ள பூதம்; அருகே தேவி குடையுடன் காட்டப்பட்டுள்ளார். சேடிப் பெண்களும் அருகில் உள்ளனர்.

## இலிங்கோத்பவர் :

அடிமுடிகாணா அண்ணலான சிவன் இலிங்கத்தில் காட்சி தர, பிரம்மா மேலேயும் விஷ்ணு கீழேயும் முறையே முடியையும் அடியையும் காணச் செல்கின்றனர். பூவராக மூர்த்தியுடன் திருமால் காட்டப்பட்டுள்ளார். திருமாலும் பூதேவியும் உள்ளனர். மேலே பிரம்மா வணங்குகிறார். ஆக இங்கு ஆறு தூண்களும், கலையழகில் ஒன்றையொன்று மிஞ்சும்படி உள்ளன. தூண்களில் ஒன்று அந்தரத்தில் தொங்குவது போல் (குறிப்பிட்ட இடத்தில் நூலை ஒரு பக்கம் நுழைத்து மறுபக்கம் கொண்டு வர முடியும்) நேர்த்தியாக உள்ளது.

## திசைக் காவலர்கள் :

மண்டப விதானத்தில் திசைக்காவலர்கள் காட்டப்பட்டுள்ளனர். இங்கு ஒன்பது சிறுபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நடுவில் எட்டுக் கைகளுடன் நாட்டியக் கோலத்தில் நடராசர் காட்டப்பட்டுள்ளார். முயலகன் மீது கால் வைத்தபடி கைகளில் உடுக்கை ஏந்திய நிலையில் கணங்கள் நாட்டியமாட நிற்கிறார். சுற்றி எண் திசைக்காவலர்கள் தங்கள் தங்கள் வாகனங்களுடன் உள்ளனர். இந்திரன் மட்டும் இந்திராணியுடன் காட்டப்பட்டுள்ளார். வருணன் நீங்கலாக எல்லா திசைக் காவலர்களும் இந்திராணியும் இடது கையை விஸ்மய முத்திரையில் காட்டுகின்றனர்.

சிவனுடைய தோற்றங்களில், நடராசரே எக்காலத்திலும் யாவராலும் பெரிதும் போற்றப்படும் மூர்த்தமாகும். இங்கு எட்டுக் கைகளில் சூலம், உடுக்கை, அபயம், ஆகூயம், பாசம், நெருப்பு

போன்றவற்றிற்குப் பலதத்துவங்களை அறிஞர்கள் கூறுவார்கள். எட்டு திசைக் காவலரைக் காட்டிச் சிவனுக்கு எட்டுக் கைகள் காட்டிய சிற்பியை நாம் வியக்கவே வேண்டும். ஆடவல்லப் பெருமானின் நாட்டியத்தை எண்திசைக் காவலர்களும் காண்கிறார்கள் என்றால் பிரபஞ்சமே காணுவதாகப் பொருள் கொள்ள வேண்டும்.

காமாட்சியம்மன் சன்னதியிலும் திசைக்காவலர் சிற்பங்கள் விதானத்தில் உள்ளன. அவை அபூர்வமான சிற்பங்களாகும். ஆந்திராவில் துங்கபத்திரை ஆற்றங்கரையில் உள்ள ஆலம்பூரில் திசைக்காவலர்கள் காட்டப்பட்டிருப்பினும், இங்குள்ள அழகு குறிப்பிடத்தக்கதாகும். இந்திரன் மட்டும் தேவியுடன் காட்டப்படுவது திசைக் காவலர்களில் அவனுடைய முக்கியத் தன்மையக் காட்டுகிறது. திசைப்பாலர்கள் அனைவரும் கிரீடத்துடன் இரண்டு கைகள் மட்டுமே கொண்டுள்ளமையும் குறிப்பிட வேண்டும். விதானத்தில் உள்ள இச்சிற்பம் கோட்டைக் கோயில் அழகுக்கு அழகு எனலாம்.

காமாட்சியம்மன் கோயிலும் மல்லிகார்ச்சுனர் கோயில் கட்டிய சமகாலமே ஆகும். அதிஷ்டானம் சிறிது உயரமாக உள்ளதால் சிவன் கோயிலை விட இது சிறிது உயரத்தில் உள்ளது. கருவறை, அர்த்த மண்டபம், நவரங்கம் என்ற முறையிலேயேதான் இதுவும் உள்ளது. அதிஷ்டானத்தில் பத்மம், குமுதம், கண்டம், கபோதம், பட்டிகை, உபானம் முதலியவை வேலைப்பாடுகளுடன் உள்ளன. கோயிலை யானைகள் தாங்குவது போல் அமைப்புள்ளது. சுற்றி இராமாயணக் காட்சிகள் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. வால்மீகியின் இராமாயணக் காட்சிகள் இங்குப் பார்க்கிறோம். தஞ்சை மாவட்டம் புள்ளமங்கை போன்ற ஊர்களில் அதிஷ்டானத்தைச் சுற்றிலும் வரிசையாகச் சிற்பங்கள் உள்ளன. அவை, ஆதித்த சோழன் காலத்தவையாகும். தருமபுரிச் சிற்பங்களும் அதன் சமகாலமெனலாம்.

காமாட்சியம்மன் சிலை, நொளம்பர் காலத்துக் கலையம்சமோ பிற்காலச் சோழர் காலக் கலை அம்சமோயின்றி விஜயநகர அரசர் காலத்துக் கலை அம்சத்தைக் கொண்டுள்ளது. இவ்வம்மனுக்கு மாறாகத் துர்க்கை அல்லது நிசும்ப சூதனி நொளம்பர் காலக் கலை அழகைக் கொண்டுள்ளது. துர்க்கை சதுர்புஜங்கத்துடன் மகிஷனைக்

கொல்லும் தோற்றத்தில் உள்ளார். மேல்கைகள் சங்கு, சக்கரம்(?) வைத்துள்ளாள். (மழுபோன்றும் உள்ளது) கீழ்க்கைகளில் ஒன்றில் சூலம் ஏந்தி மகிஷனைக் குத்துகிறாள். கேடயம், கத்தி ஏந்திய நிலையில் மகிஷன் சாய்ந்த நிலையில் உள்ளான். கொம்பை (எருமைக் கொம்பை) பிடித்தபடி அம்மையின் ஒரு கை உள்ளது. ஒரு கால் மகிஷன் மீதும் மற்றொரு கால் நீட்டியும் ஆக்ரோஷமாக உள்ளன. மேற்கண்ட மகிஷாசுரமர்த்தினி பல ஆண்டுகளுக்கு முன் பூமியிலிருந்து தோண்டி எடுத்துள்ளனர். இங்குள்ள மண்டபத்தில் தனியாக மேடைகட்டி அதை வைத்துள்ளனர். காமாட்சி அம்மன் மண்டபத்தில் தூண்கள் ஈஸ்வரன் கோயில் தூண்களைப் போலவே இருப்பினும் சிற்பங்கள் சற்றே பெரியவையாக உள்ளன.

## வடக்கில் முதல் தூண் :

சோமாஸ்கந்த மூர்த்தத்தில் அம்மனிடமிருந்து குமரன் சுவாமியை நோக்கித் தாவும் காட்சி அழகாக உள்ளது. நாட்டியப் பெண், குள்ள பூதங்கள் போன்றவையும் உள்ளன. இத்தூணின் மற்றொரு புறம், சிவன் நான்கு கைகளுடன் அம்மையின் காலைப் பிடிக்கும் அற்புதச் சிற்பம் உள்ளது. மற்றொரு பக்கம் கஜசம்ஹார மூர்த்தி. அம்மன் நாணத்துடன் பார்க்கிறார். தஞ்சைக் கலைக்கூடத்தில் உள்ள கஜசம்ஹாரமூர்த்தி உதிரிச் சிற்பம் போல் இது உள்ளது. தென்புறத்தில் நாட்டிய மகளிர், மத்தளம் அடிப்பவர் ஆகியோர் காட்டப்பட்டுள்ளனர்.

இரண்டாவது தூணில் நர்த்தன கிருஷ்ணரும் ரிஷபவாகனரும் காட்சி தருகின்றனர். மூன்றாவதாக உள்ள தூணில் வாலி சுக்ரீவன் வதம் உள்ளது. நிசும்பசூதனி நான்கு கைகளுடன் உள்ளார். படுத்துக் கிடக்கும் நிலையில் அசுரன் உள்ளான். நாட்டிய மாடுவது போல் துர்க்கை காட்டப்பட்டுள்ளாள். மார்பில் கச்சு உள்ளது. மற்றொரு தூணில் கஜசம்ஹாரமூர்த்தி சிற்பம் உள்ளது. இங்குக் குழந்தையை (முருகனை) இடுப்பில் ஏந்தியபடி அம்மன் நாணத்துடன் பார்க்கிறார். சிவன், மன்மதன், ரதி, எனக் காமதகனத்தைக் காட்டும் சிற்பம் அடுத்து உள்ளது.

தட்சிணாமூர்த்தி சிற்பத்தில் நான்கு முனிவருக்குப் பதில் இரண்டு முனிவர்களுடன் ஒரு தூணில் பார்க்கிறோம். காலசம் ஹாரமூர்த்தி ஒரு தூணில் பார்க்கிறோம். மார்க்கண்டேயன்

இலிங்கத்தை ஆலிங்கனம் செய்கிறார். கீழே சிவன் உதைக்கக் காலன் விழுந்த நிலையில் உள்ளான். சூலத்தை இறைவன் வைத்துள்ளார். பிட்சாடனார் சிற்பம் ஒன்றில் பார்க்கிறோம். ஒரு தூணில் சூலத்தவர் உள்ளார். குடமுழா போன்ற இசைக் கருவியை ஒருவர் வாசிக்கும் நிலையில் உள்ளார். அம்மன் பயத்தில் ஓட, அமர்ந்துள்ள சிவனை அருச்சுனன் வணங்கி நிற்கும் காட்சியைப் பின்பு பார்க்கிறோம். மற்றொரு தூணில் சிவன் பன்றி வேட்டையாட நாயுடன் வருகிறார். தவத்தில் இருந்த அர்ச்சுனன் இறைவன் மீது மூன்று அம்புகள் எய்திருக்கிறான். இராமரும் அனுமனும் ஈஸ்வரனைப் பூசிக்கின்றனர். ஓரிடத்தில் பலாப்பழம் இருபுறமும் வைத்துக் கொண்டுள்ள பிள்ளையார் சிற்பம் உள்ளது. உமாசகிதமூர்த்தி சேடிப் பெண்களுடன் உள்ளார். பிட்சாடனார் சிற்பம், அடுத்து உள்ளது. எதிரில் குடையில்லாமல் அம்மன் சிவனிடம் ஏதோ தருவது போல் காட்சி உள்ளது. கீழே குள்ளப்பூதத்துடன் தட்சிணாமூர்த்தி ஆசனத்தில் அமர்ந்திருக்க இரு முனிவர் மட்டும் அருகில் உள்ளனர். கஜசம்ஹாரமூர்த்தத்தில் அம்மன் நாணத்துடன் நிற்கிறார். கஜேந்திர மோட்சம் மற்றும் மயில்ராவணன் சிற்பங்கள் ஒரு தூணில் பார்க்கிறோம். இங்கும் ஒரு தூண் அந்தரத்தில் தொங்குவது போல் உள்ளது.

காமாட்சி அம்மன் கோயில் மகாமண்டபத்தின் விதானத்திலும் மல்லிகார்ச்சுனர் கோயிலில் இருப்பது போல் திசைக்காவலர்கள் உள்ளனர். இவர்களுக்கு நடுவில் நடராசருக்குப் பதில் உமாசகித மூர்த்தியாக இறைவன் வீற்றிருக்கிறார். திசைக்காவலர்கள் எண்மரும் மல்லிகார்ச்சுனர் கோயில் விதானத்தில் இருப்பது போலவே உள்ளனர். மல்லிகார்ச்சுனர் கோயில் தூண்களில் உள்ள சிற்பங்கள் மிகுதியாகவும் சிறியவையாகவும் உள்ளன. ஆயின், இங்குள்ள சிற்பங்கள் பெரிதாகக் குறைவாக உள்ளன. இம்மண்டபத்தின் தென்கிழக்கில் நிலவறை இருக்க வாய்ப்புண்டு. இங்கிருந்து அதியமான் கோட்டைக்குச் சுருங்கை வழி இருப்பதாகச் சிலர் குறிப்பிடுவது ஏற்புடையதாக இல்லை. கோட்டைக் கோயிலுடன் தொடர்புடைய நொளம்பர் காலத் தூண்கள் வெளியில் பல இடங்களில் உள்ளன. தருமபுரி அரசு அருங்காட்சியகம் மற்றும் மசூதி ஒன்றின் உட்புறம் தரையில் மேற்படி தூண்கள் உள்ளன. கட்டிட

அமைப்பிலேயே சிவன் கோயிலும், காமாட்சி அம்மன் கோயிலும் வேறுபடுகின்றன. குறிப்பாக அம்மன் கோயில் உபானம் அதிஷ்டானத்தில் ஒரே தன்மை இன்றி பல அமைப்புகளுடன் உள்ளன. பொதுவாகப் பாதம், குமுதம், பட்டிகை, கபோதம் சிறப்பாக உள்ளன. அதிஷ்டானத்தைச் சுற்றி 18 யானைகள் கோயிலைத் தாங்குவது போல் அமைத்துள்ளனர். சிங்கமும் காட்டப்பட்டுள்ளது. கருவறையின் தென்புற அதிஷ்டானத்திலும் கிழக்கிலும் சோழர் காலக் கல்வெட்டுகள், உள்ளன. அதே போல் சிவன் கோயில் முன்புறம் நந்தி மண்டபத்தைச் சுற்றிக் கீழே கல்வெட்டு உள்ளது. பிற்காலத்தவர் நந்தி மண்டபம் புதிதாகக் கட்டும்போது கல்வெட்டுள்ள கற்களையும் சேர்த்துப் பயன்படுத்தி உள்ளனர்.

மாரி அம்மன்கோவிலுள்ள துவார பாலகர் சிலை, கல்வெட்டுள்ள கல், மல்லிகார்ச்சுனர் கோயிலுக்குரியவையாகும். இங்கிருந்த கல்வெட்டின் மூலம் (கன்னடம்) சைவ ஆசாரியாருக்கு மருதன் ஏரியில் நிலம் விட்டமை ஏற்கனவே பார்த்தோம். மாரியம்மன் கோயிலில் உள்ள பைரவர் சிலையும் மல்லிகார்ச்சுனர் கோயிலுக்குச் சொந்தமானவையேயாகும். இனி, இராமாயணச் சிற்பங்களைக் காண்போம்.

காமாட்சியம்மன் கோவில் அதிஷ்டானத்தைச் சுற்றி வால்மீகி இராமயணக் காட்சிகள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. தென்மேற்கில் சிற்பம் ஆரம்பமாகிறது. ஒவ்வொரு காட்சியும் தத்ரூபமாக உள்ளது. முதலில் காவலன் அல்லது கட்டியக்காரன். அவனையடுத்து மூன்று தேவியர் வருகின்றனர், புத்திர காமேஷ்டி, ரிஷ்யச்சிருங்கர்; யாகம்; குண்டத்தில் யக்ஷன். அவியில் வருவது மூவருக்கும் (கோசலை, கைகேயி, சுமித்திரை) தருதல். தேவியருக் கருகில் நான்கு சேடிமார்கள், சாமரம் வீசும் பணிப்பெண்கள், தசரதன் ஆகியோரை இங்குப் பார்க்கிறோம். மூன்று தேவியர் கருப்ப நிலையில் உள்ளனர். மேற்கண்ட காட்சிகள் தென்மேற்கு மூலையில் பார்க்கிறோம். பின் தென்திசை அதிஷ்டானத்தில் சிற்பங்கள் தொடர்கின்றன. கோசலை குழந்தை இராமனுடன் உள்ளார்.

கைகேயி குழந்தை பரதனுடன் உள்ளார். கைகேயின் திரைக்குப் பின்புறம் இரண்டு சேடியர் நிற்கின்றனர். சுமத்திரை அவளுடைய

சுந்தரமூர்த்தி நாயனார் கி.பி. 9ஆம் நூற்றாண்டில், பல சைவத் தலங்களையும் பாடிப் போற்றியுள்ளார். சில ஊர்களைப் பொதுவாக வைத்தும் பாடுவார். அத்தகு பாடல்களில் ஒன்று வருமாறு :-

*"வீழக் காலனைக் கால்கொடு பாய்ந்த விலங்கலான்*
*கூழை ஏறுகந்தான் இடங்கொண்டதும் கோவலூர்*
*தாழையூர் தகடூர் தக்களூர் தருமபுரம்*
*வாழைக்காய்க்கும் வளர் மருகல் நாட்டு மருகலே"* [83]

தகடூரில் இருந்த கோச்செங்கண்ணீஸ்வரர் கோயிலே சுந்தரரால் பாடப்பட்ட கோயிலாக இருக்க வேண்டும் என்று சிலர் கருதுவர். இன்றுள்ள கோட்டைக் கோயில் சுந்தரர் காலத்திற்குப் பின் தோன்றியது எனலாம்.

கோச்செங்கணான் சங்ககாலச் சோழமன்னன் ஆவான். சேரன் கணைக்கால் இரும்பொறையை வென்று அவனைக் குடவாயில் கோட்டத்தில் சிறை வைத்தான். சைவ நாயன்மார்களும் ஆழ்வார்களும் செங்கணானைப் போற்றியுள்ளனர். 63 நாயன்மார்களுள் ஒருவனான இவன் எழுப்பிய பலவிதமான கோயில்களை அப்பர் பெருமான் கூறியுள்ளார். பெண்ணாகடத்தில் கோச்செங்கணான் பெயரில் கோயில் உள்ளது.

சிவபக்தியில் மிக்க கந்தமுழான் மீண்டும் சிவன் கோயிலுக்கே, அதுவும் சோழர்களில் முற்காலச் சோழன் கட்டிய கோயிலுக்கு வழங்கிவிடுகிறான். இக்கோயில் தற்போது இல்லை. இங்கிருந்த இரண்டு கல்வெட்டுள்ள கற்களே அரிஹரநாதர் கோயிலில் ஒன்றும், சிவாடியில் ஒன்றுமாக உள்ளன.

கோச்செங்கண்ணீஸ்வரமுடையார் கோயில், பழைய தருமபுரி என இன்றும் வழங்கப்படும் பகுதியில் இருந்திருக்கலாம். வேள்காரன் அணையும் இங்கேயே இருந்திருக்கலாம். மேலும் வேள்காரன் என்பது நிலத்தின் பெயராகவும் இருந்திருக்கலாம். ஒவ்வொரு நிலத்திற்கும் அடையாளத்திற்காகப் பெயரிடும் போக்கு கிராமங்களில் முன்னாளில் இருந்துள்ளது. இன்றும் கூட குடுமிகழனி, தச்சன்கழனி, பட்டி நிலம் எனப் பெயர்கள் இருப்பதைக் கிராமங்களில் பார்க்கலாம்.

அணை என்பதற்கு நீர்க்கரையொட்டிய பகுதி என்றே ஈண்டு பொருள் கொள்ள வேண்டும். 30 கண்டக விதை விதைக்கக் கூடிய நிலம் தற்போதைய கணக்கின்படி 120 ஏக்கர் ஆகும்.

கடைச் சங்க காலத்தில் கட்டப்பட்டுப் பிற்காலச் சோழர் காலத்தில் இக்கோயில் போற்றப்பட்டது. பிற்காலச் சோழர்களால் பலதானங்கள் வழங்கப் பட்ட இக்கோயில் சோழருக்குப் பின் பாழ்பட்டுப் போனதாகத் தெரிகிறது. அங்கிருந்த கற்களே அரிஹரநாதர் கோயிலிலும் சிவாடி கோயிலிலும் இன்றுள்ளன.

கோச்செங்கண்ணீஸ்வரமுடையார் கோயில், கோச்செங் கண்ணன் தாமோ அன்றி அவன் பெயரில் வேறு யாரோ கட்டியிருக்கலாம். கோச்செங்கண்ணான் கட்டிய கோயில்கள் பலவும் காலவெள்ளத்தில் மறைந்தன போல இக்கோயிலும் அழிந்துபட்டது போலும்.

கோச்செங்கண்ணானுடன் தொடர்புடைய திருவானைக்கா போன்ற கோயில்கள் பிற்காலத்தில் கற்றளியாக மாற்றப்பட்டு தொடர்ந்து போற்றப்பட்டு வந்தது. ஆயின் தகடூரில் இருந்த கோயில் துரதிருஷ்டவசமாகக் காப்பாற்றப்படவில்லை. பெயர் மட்டுமே எஞ்சியுள்ளது.

குமாரசாமிப் பேட்டை சுப்பிரமணியர் ஆகிய கோயில்கள், விழா எடுப்பதிலும் மக்கள் மிகுதியாகக் கூடுவதிலும் சிறப்பிடம் வகிக்கின்றன.

## கோச்செங்கண்ணீஸ்வரர் கோயில் :

முதலாம் இராஜாதிராஜனுடைய கல்வெட்டும் மூன்றாம் இராஜராஜனுடைய கல்வெட்டும் கோச்செங்கண்ணீஸ்வரமுடைய கோயிலைக் குறிப்பிடுகின்றன.

இக்கோயில் தகடூரில் இருந்துள்ளது. அரிஹர நாதர் கோயிலின் அம்மன் சன்னதி படிக்கட்டில் காணப்படும் முதலாம் இராஜாதிராஜனுடைய கல்வெட்டில் 'கோச்செங்கண்ணீஸ் வரமுடைய நாயனார் பெயர் உள்ளது. தவிர தருமபுரி அருகே சிவாடி என்ற ஊரில் சிவன் கோயில் அருகில் உள்ள தனித்தூணில் மூன்றாம் இராஜராஜன் கல்வெட்டு காணப்படுகிறது.

'இராஜராஜ தேவற்கு யாண்டு 11-ஆவது நிகரிலிச் சோழ மண்டலத்து கங்க நாட்டுத் தகடூர் நாட்டுத் தகடூர் தளமுடைய வியாபாரி கந்தமுழான் ஜெயங்கொண்டான் திருவண்ணாமலை யுடையான் பரமண்டலேஸ்வர ஜெயபாலனேன் திருச்செங் கண்ணீஸ்வரமுடைய தேவற்கு.

இராஜராஜ அதிகைமானார் தகடூரில் வேள்நங்கைக்காறன் அணையிலே எனக்குத் தந்த முப்பதின் கண்டக விதையும் தேவதானமாக திருப்படி மாற்றுக்கு விட்டேன் கந்தமுழான் பரமண்டலேஸ்வர ஜெயபாலனேன் இது அழிவு செய்வான் கெங்கைக் கரையில் ஆயிரம் குரால் பசுவைக் குத்தினான் பரமத்திபடுவான்' என்பது வாசகமாகும்.

தஞ்சை மாவட்டம் போல் வளமான பகுதியாக இல்லாமல் ஏரி, குளம், கிணறு, மழை நீரையே நம்பியிருக்கும் தருமபுரி மாவட்டத்தில் சில கிராமங்களில் இன்று கூட ஏக்கர் செண்டு அளவுடன் கண்டக விதை விளையக்கூடிய நிலப்பரப்பு மக்கள் பேச்சு வழக்கில் இருந்து வருகின்றது. தானம் வழங்கியவன் வியாபாரியாவான். திருவண்ணா மலையிலிருந்து வந்தவன் போலும். சிவபக்தி நிறைந்தவனாகையால் இராஜராஜ அதிகைமான் இவனுக்கு நிலம் வழங்குகிறான்.

*கட்டூர்ருடத்த கோபநிகளங்கமல்ல பண்டாபாவ*
*பாநாரி சகோதரர் ஸ்ரீம*
*ன் பொம்மயநாய்க்கார் மகனார் திம்மயநாயக்கர்*
*வாளுக்கும் தோளுக்கும் நன்றா*
*க இந்நாட்டு நாட்டவரும் நாட்டு நாயகம்செய்*
*இராசாஇராம*
*நாயினார் பொன்னக்கூத்தர் ஸ்வஸ்திஸ்ரீ ராஜராஜீஸ்*
*வரமுடைய நாயினா*
*ற்குப் பூசைக்கும் திருப்பணிக்கும் உடலாக விட்டது*
*கடைக்கோட்டூரா*
*ந மேலேரி நஞ்செய் புஞ்செய் நாற்பாற்கெல்லையும்*
*ஏரியும் ஊரும்*
*மேல்னோக்கிய மரமும் கீழ்னோக்கிய கிணறும்*
*இவ்வாண்டு முதலாக விட்டது*
*இதுக்கு நாட்டு வரி...ங் காணிக்கை சில்....யங்கள்*
*அனைத்தா*
*யங்களுமற்றும் எப்பேற்பட்ட... முட்பட உதகபூர்வ*
*மாக(வி)*
*ட்டேன் இந்த னாயினாற்கு ஆரோதர் இராமி*
*நாயினார் பொன்னக் கூத்தர் த*
*ன்மம் இத்தன்மம் சந்திராதித்தவரை செல்லக்கடவது*
*இந்த தம்மத்துக்*
*கு இலங்கணம் பண்ணினாருண்டாகிற் கங்கையிடை*
*குமரியிடை*
*கோப்பிராமணனை வதித்த பிரமத்தே கொள்வான்*
*இதுக்கு ஸ்ரீமா*
*ஹேஸ்வரரும் நாடும் நகரமும் ரக்ஷை.*

பொன்னக்கூத்தர் என்ற இராமநாயனார், மன்னன் நலம் வேண்டி கோயிலுக்குத் தானம் புரிந்ததை இக்கல்லெழுத்தில் பார்க்கிறோம். இராஜராஜீஸ்வர முடையார் என்ற பெயர் அரிஹரநாதர் என இன்று வழங்கப்படுகிறது.

கல்வெட்டு இல்லாமலும் பழமையான சிற்ப - கலை வேலைப்பாடுகள் இல்லாமலும் பல கோயில்கள் தருமபுரியில் உள்ளன. சாலை விநாயகர், அன்னசாகரம் சுப்பிரமணியர்,

*இத்தன்மத்துக்கு இலங்கணம் பண்ணினாருண்*
*டாகிற் கங்கையி*
*டை குமரியிடை கோப்பிராமணனை வதித்த பிரம*
*தோஷம் கொள்வார் இ*
*துக்கு ஸ்ரீமாகேஸ்வரரும் நாடும் நகரமும் ரக்ஷை.*

கல்வெட்டில் வரும் மேலேரி, இராமக்கா ஏரியாக இருந்திருக்கலாம். கோயில் பூசைக்கு உடலாக (முதல்) நிலம் வைக்கப்படுகிறது. தானத்தைச் சிங்கயதண்ணாக்கர் வழங்குகிறார். மாஹேஸ்வரரும், நகரத்தாரும், நாட்டாரும் தருமத்தைத் தொடர்ந்து செய்து வர உறுதி செய்கின்றனர்.

மற்றொரு கல்வெட்டு வீரதேவராயர் காலத்தில் வெட்டியதாகும். இதுவும் பொம்மையநாய்க்கர் மகனார் திம்மையநாய்க்கர் வாளுக்கும் தோளுக்கும் நன்றாக நாட்டவரும் இராமநாயினார் பொன்னக் கூத்தரும், இராஜராஜீஸ்வரமுடையார்க்கு தானம் செய்ததைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டிலும் மேலேரி வருகிறது. முதல் என்ற பொருளில் உடல் வருகிறது.

*ஸ்வஸ்திஸ்ரீ மன்மகா மண்டலேஸ்வரன் ஹரிஹர*
*ராயவிபா*
*டன் பாஷைக்குத் தப்புவராய கண்டன் மூவராய க*
*ண்டன் கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு*
*குடாதான் பூர்வ*
*தஷிண பச்சிமோத்தர சதுசமுத்திராதிபதி இராஜாதி*
*ராஜன் இராஜபரமே*
*ஸ்வரன் ஸ்ரீ வீரதேவராயர் மகாராயர் பிருதிவி*
*ராஜ்ஜியம் பண்ணி அருளாநின்ற சகா*
*ப்தம் 1343 இவர் பிரதாணி முள்வாய் அன்னதான*
*உடையார்க்குச் செல்ல*
*ா நின்ற காலத்து இதன் மேற்செல்லாநின்ற பிலவ*
*ஸம்வத்ஸரத்து கற்கடக*
*நாயிற்று அபர பக்ஷத்து ப்ரம்மதேயம் வியாழக்*
*கிழமையும் பெற்ற பூசத்து ந*
*ாள் நிகரிலி சோழமண்டலத்துக் கங்கை நாட்டுத்*
*தகடை நாட்டுக் கடைக்*

கோயிலின் முன்புறமுள்ள மண்டபமே இங்குக் குறிக்கப்படும் மண்டப மெனலாம். புறக்கரையில் ஏரி நிலம் விடப்படுகிறது. இருபது கண்டகம் விதை விதைக்கக் கூடிய நிலம் இன்றைய கணக்கில் 80 ஏக்கர் எனலாம். மூன்றாம் இராஜராஜன் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

கி.பி.1253இல் சோமேஸ்வர மன்னனாகிய போசள மன்னன் நலனுக்காகக் குமார கண்டர் சோமய தண்ணாக்கர் மகன் சிங்கய தண்ணாக்கர், இராஜராஜீஸ்வரமுடைய நாயனார் பூசைக்கும் திருப்பணிக்குமாக மேலேரியைச் சேர்ந்த நஞ்சை, புஞ்சை நிலங்களும் ஊரும் வரிவகைகளும் தானமாகத் தருகிறார். அக்கல்வெட்டு வருமாறு :

*ஸ்வஸ்திஸ்ரீ சோமீஸ்வர தேவற்கு யாண்டு இரு*
*பதாவது ஸ்வஸ்திஸ்ரீ ம*
*னுமகா பிரதாணி குமார கண்டர் கோச் சோமய*
*தண்ணாக்கர் மக*
*னார் சிங்கய தண்ணாக்கர் ஸ்வஸ்திஸ்ரீ கடைக்*
*கோட்டூரான னானாதேசிப்பட்ட*
*னத்து உடையார் ராஜராஜீஸ்வரமுடைய நாய*
*னாற்கு மேலேரி நஞ்செய்*
*புஞ்செய் நாற்பால் எல்லையும் ஏரியும் ஊரும்*
*இவ்வாண்டு முதல் சோ*
*மீசுர தேவர் வாளுக்கும் தோளுக்கும் நன்றாக*
*பூசைக்குந் திருப்பணிக்*
*குமாக உடலாக விட்டது. இதுக்கு நாட்டு வரவு*
*கற்பூரம் காணிக்*
*கை சில்லந்தராயங்கள் அனைத்தாயங்களுமகப்*
*பட்ட நாயனாற்கு*
*முன்பு தேவதானம் திருவிடையாட்டம் பட்ட*
*விருத்திகளும் ராஜஸா*
*தனமுள்ள நீக்கி அல்லாதடங்கலும், மற்றுமெப்*
*பேர்பட்டதுவும்*
*உதக பூர்வமாக இன்னாயனாற்கு விட்டேன்*
*சிங்கய தண்ணாக்கரேன்*

........................

*ரமுடையார்க்கு தொண்டை நாட்டு...*

*திருவாபரணம் பட்டம் இருகழஞ்சு உத்தரியம் எ...*

இதுவும் எக்கோயில் கல்வெட்டு என்று தெரியவில்லை.

## அரிஹரநாதர் கோயில் :

தருமபுரி நகரில் தொன்மையான கோயில்களுள் ஒன்று அரிஹரநாதர் கோயிலாகும். கோயில் கட்டிடக் கலை, சிற்பக் கலை இவற்றில் விசேஷமில்லை. ஆயின் பல பழைய தமிழ்க் கல்வெட்டுகளையும் சில தெலுங்குக் கல்வெட்டுகளையும் இக்கோயிலில் பார்க்கிறோம். இக்கோயில் அம்மன் சன்னதியின் உண்ணாழி வாயிற்படியில் உள்ள கல்வெட்டு வேறொரு கோயிலுக்குரியதாகும். கல்வெட்டு வருமாறு :

*ஸ்வஸ்திஸ்ரீ ராஜாதி ராஜ தேவற்கு யாண்டு 32*
*ஆவது ஜயங் கொண்ட*
*தகடூர் கோச்செங்கணீஸ்வரமுடைய*
*மகாதேவற்கு வைய்த்த திரு நொந்தா விளக்கு.*

அரிஹரநாதர் கோயில், முற்காலத்தில் இராஜராஜீஸ்வர முடையார் என வழங்கப்பட்டுள்ளதைக் கல்வெட்டுகள் குறிப்பிடு கின்றன. இங்குள்ள கல்வெட்டுகளை இனி ஆய்வு செய்வோம்.

*ஸ்வஸ்திஸ்ரீ ராஜராஜதேவற்கு யாண்டு எட்டாவது*
*விடுகாதழ*
*கிய நல்லூர் ராஜராஜீஸ்வரமுடைய னாயனார்*
*திருமண்டபம் விடு*
*காதழகிய பெருமாள் தந்மம் இத்தன்மத்துக்கு புறக்*
*கரை ஏரி கீழ் நீர்நிலம்*
*இருபதின் கண்டகமும் சந்திராதித்ய வரை செல்லக்*
*கடவது இத்தன்மத்தை மாற்றினா ருண்டாகிற்*
*கெங்கை*
*க் கரையிற் குராற் பசுவைக் கொன்றாந் பாவங்*
*கொள்வார் வல்லவரையன் சத்தியம்.*

தருமபுரியில் கோட்டைக் கோயில்களுடன் நரசிம்ம பெருமாள் கோயிலும் அரிஹரநாதர் கோயிலும் முற்காலத்தில் வளமாக இருந்துள்ளன. தற்போது நரசிம்ம பெருமாள் என்ற பெயரில் கோயில் இல்லை. எனினும் அக்கோயில் குறித்துக் கல்வெட்டு உள்ளது. கல்வெட்டின் வாசகமாவது-

'... தநார் திம்மைய நாய்க்கர் வாளுக்கும் தோளுக்கும் நன்றாக தகடை னாட்டு நாயகம் செய்வார் ஆரோதைர், இராமநாயினார் பொன்னக்கூத்தரும் மற்றுமுள்ள நாட்டவரும் பண்ணிக் குடுத்து ஆரோத ரெழுத்து மிட்டுக் குடுத்தோம். உதையப் பெருமாளுக்கு இத்திருக்கோபுரம் இறந்து போனதும் புதுக்கி என்னுடையார்' என்பது கல்வெட்டாகும்.

தகடூரில் உள்ள உதைய பெருமாள் கோபுரம் சிதைவுற்றதால் தகடூர் நாட்டை ஆளும் இராம நாயனார் பொன்னக் கூத்தரும் நாட்டவரும் (சபை) புதுப்பிக்க கி.பி.15ஆம் நூற்றாண்டில் ஏற்பாடு செய்வதை கான்சாகிப் குளக்கரைக் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது. உதையபெருமாள் கோபுரம் பழைய தருமபுரியில் உள்ள நரசிம்மப் பெருமாள் கோயிலாக இருக்கலாம். கோட்டைக் கோயில் அருகில் பரவாசுதேவர் என்ற கோயில் இருப்பதால் கல்வெட்டு இக்கோயிலையும் குறிப்பிடலாம்.

குளத்தின் கரையில் உள்ள மற்றொரு கல்வெட்டு கி.பி. 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஒன்று உள்ளது. முழுமையில்லை. இரண்டு வரி மட்டும் உள்ளது.

*... விட்ட நிலம் முக்கண்ட...*

*... யையும் மே னோக்கி ம...*

மற்றொரு சிதைந்த கல்வெட்டு குளக்கரையில் உள்ளது. ஒருவரி மட்டுமே இன்றுள்ளது. காலம் கி.பி.14-ஆம் நூற்றாண்டு ஆகும்.

*"ம் பூசைய நடத்து கையில் யிவற்கு"*

மேற்கண்ட கல்வெட்டுகள் எக்கோயிலைச் சுட்டுகின்றன எனத் தெரியவில்லை. தருமபுரி இராமக்கா ஏரிக்கரையிலுள்ள பிள்ளையார் கோயில் மேடையில் வைத்துக் கட்டப்பட்டுள்ள துண்டுக் கல்வெட்டு கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியைக் கொண்டுள்ளது. இறைவனுக்குக் கொடுக்கப்பட்ட திருவாபரணம் முதலியவற்றைக் குறிக்கிறது. இது எந்தக் கோயில் கல்வெட்டு என்று தெரியவில்லை. கோட்டைக் கோயில்களில் ஒன்றாக இருக்கலாம்.

*''ஸ்வஸ்திஸ்ரீ*
*திரிபுவனச் சக்கரவர்த்தி*
*கள் ஸ்ரீ குலோத்துங்க*
*சோழதேவற்கு யாண்*
*டு பத்தாவது நிகரிலி சோழமண்டலத்துக் க*
*ங்க நாட்டுத் தகடூர் நாட்டுத் தகடூரில் சாணாயிர*
*முழமாயிர முட்பட்ட கோயில் உடையார் திரு*
*வேளாலீஸ்வர முடையாரும் உடையாரோ*
*ராயிரமீஸ்வர முடையார் கோயிலும் இக்கோயி*
*ல்கள் இன்ன தனைகாலம் பாழ்பட்டுக்*
*கிடந்ததென்று அறிவாரில்லை திருக்காளத்*
*தியினின்றும் ஆண்டார் வண்ணானை*
*க் கும்பிட்டாரெழுந்தருளி இக்கோயில்கள் கிட*
*க்கிற அனுக்கிரகத்தை*
*க்கண்டு அதியமா*
*னார் மாடலேன் வ*
*தேவரே சாணாயிரமு*
*ழமாயிர முட்பட்ட*
*கோயில்கள் மூன்று*
*ம் சிவப்பிராமணர்*
*பூஜிக்க வேணுமென்*
*று ஆண்டார் அதிய*
*மானார்க்கு சொல்ல அவருமான்டீ*
*ருமக்கு ஆவானொரு சிவப்பிராம*
*ணனைக் கொடுவாருமென்ன ஆண்டாரும்*
*அட....த்தில் காண உடை*
*ய சிவப்பிராமன் .........*
*யன் தேவருகைத்தே கொ*
*டுவந்து காட்ட சாணாயிர முழமாயிர முட்பட்ட*
*கோயில்கள் உன*
*க்கே காணியாக தந்தோம் என்று அதிரோக தியாகி*
*வாசலுக்கு*
*ள்ளே இருந்து திருக்கையாலே நீர்வார்த்து அப்போதே*
*காணி பிரம்மா*
*னமாக எழுதி தி....றுக்கோகுடுத்தோமென்று திருவெ*
*ழுத்துமிட்டு இதுக்கு அரசுருடையானெழுத்துமிட்டு*
*தகடூர்த''*

அதாவது காமாட்சியம்மன் கோயிலில் வைத்து விட்டனர் போலும். இன்று காமாட்சியம்மன் கோயிலே சிறப்பிடம் பெறுகிறது.

மூன்றாம் குலோத்துங்கன் பத்தாம் ஆட்சியாண்டில் திருக்காளத்தியினின்று வந்த ஆண்டார் ஒருவர் வண்ணானைக் கும்பிட்டார் என்ற பெயரையுடைய சிவநேயச் செல்வர் கோயில்கள் பாழ்பட்டுக் கிடப்பதைக் கண்டு வேதனைப்படுகிறார். மூன்றாம் குலோத்துங்கனின் கீழ், தகடூர் நாட்டையாண்ட அதிகைமானிடம் முறையிடுகிறார். சாணாயிரமுடையார், முழமாயிரமுடையார், ஓராயிரமீஸ்வரமுடையார் ஆகிய மூன்று கோயில்களுக்கும் சிவப்பிரா மணரை நியமிக்க ஆண்டார் வேண்டுகிறார். அதிகைமானார் சிவப்பிராமணரை அழைத்து வருமாறு அவரிடமே ஆணையிடுகிறார். ஆண்டாரும் சிவப்பிராமணரை அழைத்து வர, அதியமான், அதிரோக தியாகி வாசலுக்குள்ளிருந்து சிவப்பிராமணற்கு நீர்வார்த்து மேற்படி கோயில் பூசாரிகளாக நியமிக்கிறான். அரசூருடையான் என்பவன் உத்தரவில் கையெழுத்திடுகிறான். அரசூர் தருமபுரி மாவட்டத்தில் இன்றும் அதே பெயரில் உள்ளது.

குலோத்துங்கனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டு கல்வெட்டு மேற்குறிப்பிட்ட மூன்று கோயில்களையும் திருப்பிரதிஷ்டையையும் திருப்புதுக்குச் சாந்து செய்ததையும் குறிப்பிடுகிறது. அதிகைமான் நல்வாழ்வுக்காக வேண்டி அதியமான் அடியான் பம்மாரக் கூத்தன் புலியூர்க்கிழவன் தம்பிரானான சோழன் மேற்கண்ட கோயில்கள் புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுகிறான். மேற்கண்ட இரு கல்வெட்டுகள் வருமாறு :

*"ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ கு*
*லோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ப*
*ன்னிரண்டாவது நிகரிலி சோழ மண்ட*
*லத்துக் கங்க நாட்டுத் தகடூர் நாட்டுத்*
*தகடூரில் முழமாயிரமென்று பேர் கூவ*
*ப்பட்ட இக்கோயில் திருவேளா லீச்*
*சுரம் உடையார் கோயிலில் திருப்பிருதிட்டையும் திருப்புது*
*க்குச்சாந்தும் சேவித்தேன் அதியமானுக்கு நன்றா*
*கவென்று அதியமான் அடியேன் பம்மார கூ*
*த்தனேன் புலியூர் கிழவன் தம்பிரானான்சோ*
*ழனேன்"*

நொளம்பர் கோயில் கட்டிய சமகாலத்தில் முற்காலச் சோழர்கள் கட்டிய நூற்றுக்கணக்கான சிவன் கோயில்களில், அம்மன் கோயில் சிவனுக்குச் சமமாக ஒரே இடத்தில் கட்டப்படவில்லை. மாறாக ஒரே இடத்தில் இரண்டு சிவன் கோயில்கள் ஏராளமாகக் கட்டப் பட்டுள்ளன. இரண்டு மட்டுமின்றி மூன்று கோயில்கள் கூட கட்டப்பட்டுள்ளன. பொதுவாகக் குலோத்துங்க சோழனுக்கு முன்புவரை சிவன் கோயிலிலேயே ஒரு பகுதி (ஓரிடம்) அம்மனுக்கு வழங்கப்படும்.

அம்மனுக்குத் தனியாகச் சன்னதி எழுப்பும் போது சிவன் கிழக்கு முகமாகப் பார்த்தபடி இருக்கும் போது அம்மன் கோயில் வடக்கில் கட்டப்பட்டு, தெற்கு பார்த்தபடிதான் அமைக்கப்படும். விதி விலக்காக, சிவன் மேற்குத் திசை பார்த்தபடி இருப்பதுண்டு. அம்மன் தெற்குத் திசைப்பாராமல் வேறு திசை பார்ப்பது போல் இருப்பினும் பிரதான சிவன் கோயிலில் அம்மன் கோயில் சிவன் கோயிலை விட சிறப்பாக அமைப்பதில்லை. இங்குச் சிவன் கோயிலை விடக் காமாட்சி அம்மன் கோயிலே கட்டிட அமைப்பில் சிற்ப அமைப்பில் சிறந்து விளங்குகிறது. இங்குள்ள தூண்களில் காணப்படும் சிற்பங்கள், அதிஷ்டானத்தில் காணப்படும் இராமாயணச் சிற்பக் காட்சிகள் ஆகியவற்றைக் காணும்போது இது அம்மன் கோயிலாக இருந்திருக்க முடியாது என்றே தோன்றுகிறது.

மூன்று சிவன் கோவில்களின் பெயர்களைக் குறிப்பிடும் இரண்டு சோழர் கல்வெட்டுகளும் கூட அம்மன் சன்னதி உள்நாழி அதிஷ்டானத்தில் தான் உள்ளது. வெவ்வேறு கலை அம்சம் கொண்ட சாணாயிரமுடையார் மற்றும் முழமாயிரமுடையார் இரண்டு சிவன் கோயில்களே இன்றுள்ள மல்லிகார்ச்சுனர் கோயிலும் காமாட்சி அம்மன் கோயிலாகும். கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டளவில் ஆட்சிபுரிந்த விஜயநகரப் பேரரசன் மல்லிகார்ச்சுனர் பெயரில் சாணாயிரமுடையார் கோயிலானது மல்லிகார்ச்சுனர் கோயிலாக மாறியபோது முழமாயிரமுடையார் கோயில் காமாட்சி அம்மனாக மாற்றப்பட்டது போலும். அம்மனுக்கும் முக்கியத்துவம் தர வேண்டி சிவன் கோயில்களில் ஒன்று (முழமாயிரமுடையார்) அம்மன் கோயிலாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். இரண்டு சிவன் கோயில்களில் இருந்த அம்மன் கற்சிலைகள் ஒரே கோயிலில்

கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் கோட்டைக் கோயிலிலும் நடைபெறுகின்றன.

மேற்கண்ட இரண்டு கோயில்களும் நொளம்பர் காலத்தில் மல்லிகார்ச்சுனர் கோயில், காமாட்சி அம்மன் கோயில் என வழங்கப்பட்டிருக்க முடியாது. பிற்காலச் சோழர் கல்வெட்டுகள் வாயிலாக ஒரே திருச்சுற்றில் மூன்று கோயில்கள் இருந்ததைப் பார்க்கிறோம். சாணாயிர முடையார்; முழமாயிர முடையார், (இவருக்குத் திருவேளாலீச்சுர முடையார் என்ற பெயரும் உண்டு) ஓராயிரமீஸ்வர முடையார் கோயில் ஆகும். இம்மூன்றில் முழமாயிர முடையார் என வழங்கப்பட்ட திரு வேளாலீச்சுர முடையார் பிரதான ஆலயம் எனலாம். இக்கோயிலின் தல விருக்ஷம் வேல மரமாகும்.

மேற்குறிப்பிட்ட மூன்று கோயில்களில் சாணாயிரமுடையார் கோயில், காமாட்சியம்மன் கோயிலுக்கருகில் உள்ள சிவன் கோயிலாக இருக்க வேண்டும். நொளம்பர் காலத்திற்குப் பின் யாரோ ஒருவர் கட்டிய கோயிலே ஓராயிர ஈஸ்வரமுடையாராக இருக்க வேண்டும். இக்கோயில் முழமாயிரமுடையார் அல்லது திரு வேளாலீச்சுரமுடையார் என வழங்கப்பட்ட கோயிலுக்கு அருகில் இருந்திருக்க வேண்டும். தற்போது காமாட்சி அம்மன் கோயில் அருகில் ஒரு சிவன் கோயில் உள்ளது. அதுவே ஓராயிரமீஸ்வர முடையார் கோயில் போலும். முழமாயிரமுடையார் அல்லது திரு வேளாலீச்சுர முடையார் கோயில் இன்றுள்ள காமாட்சியம்மன் கோயிலேயாகும். இதில் வியப்பதற்கேதுமில்லை. கல்வெட்டு, சிற்பம், கட்டிட அமைப்பு, ஆகம முறை ஆகிய தன்மைகளின் அடிப்படையில் இக்கருத்தை நாம் உறுதி செய்யலாம். முதலாவதாக நொளம்பர் கல்வெட்டுச் சான்றின்படி சிவன் கோயில் சமணக் கோயில் மட்டுமே பார்க்கிறோம். இரண்டாவதாகப் பிற்காலச் சோழர் கல்வெட்டுகள் பாழ்பட்ட கோயில்களைக் குறிப்பிடும்போது யாண்டும் அம்மன் கோயில்களைக் குறிப்பிடவில்லை. மூன்றாவதாகப் பொதுவாகச் சோழர் காலத்திற்கு முன்பு அம்மனுக்கும் சுவாமிக்கும் சம அந்தஸ்தில் ஒரே இடத்தில் அடுத்தடுத்து கோயில் கட்டியதாகக் குறிப்பாகக் கட்டிடக் கோயில் கட்டியதாகச் சான்றில்லை. காஞ்சி காமாட்சியம்மன் போன்ற கோயில்கள் அம்மனுக்கு மட்டுமே முக்கியத்துவம் தந்து கட்டப்பட்டு அங்கே சிவன் இரண்டாம் இடத்தைப் பெறுகிறார்.

தெற்கிலும் இருபுறமும் கோயில் வாசல் வழிகள் உள்ளன. சந்திர, சூரிய சிற்பங்கள் உடைந்த நிலையில் கிழக்கில் நட்டு வைத்துள்ளனர். தீபஸ்தம்பம், துவஜஸ்தம்பம், நந்தி, பலிபீடம் ஆகியவை வழக்கம்போல் உள்ளன. நந்தி பலி பீடத்தில் வடக்கில் கல்வெட்டு உள்ளது. 16 கால் மண்டபத்தில் நவக்கிரகக் கோயில் உள்ளது. வீரபத்திர சுவாமியும் உள்ளார். சுற்றுப்பிரகார கோஷ்டத்தில் நர்த்தன வினாயகர், தட்சணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர். சண்டிகேஸ்வரர் தனிக் கோயிலும் உள்ளது. பைரவர் கோயில், விநாயகர் கோயில் சுப்பிரமணியர் கோயில் ஆகியவை சுற்றுப் பிரகாரத்தில் உள்ளன.

## செப்புத் திருமேனிகள் :

மல்லிகார்ச்சுனர் கோயில் மகாமண்டபத்தின் வடக்கில் மேடை கட்டி உற்சவ மூர்த்திகளை வைத்துள்ளனர். கீழ்க்கண்ட செப்புச் சிலைகள் இக்கோயிலில் உள்ளன.

## சோமாஸ்கந்தர் :

இறைவனும், அம்மையும் அமர்ந்துள்ளனர். இறைவனுக்கு மான், மழு, அபயம், வரதம் என்ற நிலையில் நான்கு கைகள் உள்ளன. கழுத்தில் மாலை; சுகாசனத்தில் அமர்ந்துள்ளார். முருகர் தனியாக இங்கு உள்ளார். தனி அம்மன் இங்கு உள்ளார். நடராசர் அருகில் சிவகாமி மலர் ஏந்தியபடி உள்ளார். வள்ளி, தெய்வயானையுடன் முருகர். அஸ்தர தேவர் ஆகியோர் உள்ளனர்.

## கோட்டைக் கோயிலும் ஆராய்ச்சியும் :

கோட்டைக் கோயிலுக்குச் சொந்தமாக இரண்டு குளங்கள் உள்ளன. ஒன்று, கோட்டைக் கோயில் அருகில் மீராசாகிப் குளம் என இன்று வழங்கப்படுகிறது. இங்குள்ள படிக்கட்டுகளில் சோழர் காலச் சிதைந்த கல்வெட்டுகள் உள்ளன. கோட்டைக் கோயில் சிவலிங்கம் தவிர 5 இலிங்கங்கள் தருமபுரியைச் சுற்றிப் பார்க்கிறோம். அவைகளுள் பழைய தருமபுரியில் உள்ள இலிங்கமும் தருமபுரி கடைத்தெருவிலிருந்து இராஜாப்பேட்டை செல்லும் பழைய பாதையில் உள்ள இலிங்கமும் குறிப்பிடத் தக்கவையாகும். சிவன்

காட்சிகள் தொடர்கின்றன. பெரிய உடம்புடன் கும்பகருணன் போர்க்களத்திற்கு வந்து யுத்தம் புரிகிறார். இலக்குமணன், அனுமன், விபீடணன் ஓரிடத்தில் நிற்கின்றனர். இராவணன் கோரப்பல்லுடன் கதாயுதம் ஏந்த இராமரும் இலக்குமணரும் கதாயுதம் வைத்திருக் கின்றனர். அனுமனும் விபீடணனும் அருகில் நிற்கின்றனர். இராவணாதிகள் சரணடைகின்றனர். சீதையை இராமர் சிறை மீட்கிறார். இராமர் சீதையிடம், விபீடணன் ஆசி கோருகிறார். விபீடணன் பட்டாபிஷேகம் நடைபெறுகிறது. அனுமன் இலக்குமணன், சுக்ரீவன், அருகில் நிற்கின்றனர். இராமர், சீதாராமனாகக் காட்சி தருகிறார். சீதையை மீட்ட பின் யாவரும் மகிழ்ச்சியடைகின்றனர். நாட்டியப் பெண், புல்லாங்குழல் வாசிப்பவர், மத்தளம் அடிப்பவர் ஆகியோரைப் பார்க்கிறோம். நடனக் காட்சி சிறப்பாக உள்ளது. பின் சிற்பம் மேற்குத் திசையில் தொடர்கிறது. இராமர், சீதை இணையாக இருக்கின்றனர். அருகில் சேடிப் பெண் இருக்கின்றாள். ஆணும் பெண்ணும் நாட்டிய மாடும் காட்சியும் உள்ளது.

## இராமர் சந்தேகம் :

ஒரு பெண் குடத்துடன் நிற்கிறாள். மற்றொருத்தி அருகில் இருக்கிறாள். இராமர் வண்ணானையும் வண்ணாத்தியையும் அழைத்துப் பேசுகிறார். விசாரணை செய்கிறார். இறுதியாக இராமர், சீதை சேர்ந்து அணைத்தபடி நிற்க அருகில் இலக்குமணன் நிற்கிறான். இராமர், சீதை உள்ளனர். பின் நாட்டியப் பெண் இருவர் நிற்கின்றனர். சீதா பிராட்டியைத் தங்கப் பிரதிமையில் சிலர் பூஜிக்கின்றனர். லவகுசா இருவரும் வருகின்றனர். இத்துடன் இராமாயணக் காட்சியும் முடிவடைகின்றது. இராமாயணச் சிற்பங்களுக்குக் கீழும், வேறு சிற்ப வேலைப்பாடுகள் அதிஷ்டானத்தில் இருக்கும் போல் தெரிகிறது. கோயிலைச் சுற்றி மர்மத்தானத்தில் திறந்த வெளியில் பரப்பப்பட்டுள்ள கருங்கல் பலகைகளை அப்புறப்படுத்திப் பார்த்தால் இராமாயணச் சிற்பங்களுக்குக் கீழ் எப்படி உள்ளது என்பதைப் பார்க்கலாம்.

அம்மன் கோயில் எதிரில் நீராழி மண்டபம் இருக்கிறது. முற்காலத்தில் இங்குக் குளம் இருந்திருக்கலாம். தற்போது கிழக்கிலும்

கொள்ளுதல் ஆகியவற்றை ஈண்டுப் பார்க்கிறோம். கிழக்குப் புற அதிஷ்டானத்தில் சிற்பக் காட்சிகள் குறைவாகும்.

## அனுமனின் செயல்கள் :

வானரக் கூட்டத்திடையே அனுமானிடம் இராமர் கணையாழியைத் தருகிறார். கடல் நோக்கி அனுமான் செல்லுதல்; கடல் தாவும் அனுமான் மூன்று அரக்கியருடன் போரிடுதல்; இறுதியாக இலங்காவதனியை வதம் செய்தல்; இலங்கையின் கோட்டையடைதல்; கோட்டை மாடத்தில் அமர்ந்து ஓய்வு எடுத்தல்; இராவணன் சேனையுடன் (ஆறுபேர் காட்டப்பட்டுள்ளனர்) அனுமார் யுத்தம் செய்தல் ஆகிய சிற்பங்கள் அடுத்து உள்ளன.

## இலங்கைப் போர் :

இராமர், இலக்குமணர், சுக்ரீவன் ஆகியோர் இலங்கை நோக்கிப் பயணம் செய்கின்றனர். வானரச்சேனை கடலில் பாலம் அமைக்கின்றன. தேவ தச்சனாகிய மயனும் உள்ளான். அலை வீசும் தன்மையுடன் மீன்களைத் தன்னகத்தே கொண்டதாகச் சமுத்திரம் காட்டப்பட்டுள்ளது. இலக்குமணன், விபீடணன், அனுமான், இராமர் ஆகியோர் கலந்துரையாடுகின்றனர். விபீடணனும் அனுமானும் பேசுதல்; இராமர் இலங்கைப் படைப் பிரிவை எதிர்த்தல்; ஒருவன் வீழ்ந்துபட சிலர் ஓட்டம் பிடித்தல் எனச் சிற்பங்கள் தொடர்கின்றன.

## அங்கதன் தூது :

அன்னபட்சி வாகனத்தில் இராவணன் அமர்ந்திருக்க எதிரில் அங்கதன் உள்ளான். கோட்டையின் வடிவம் காட்டப்பட்டுள்ளது.

## இந்திரசித்துவின் போர் :

மேகமண்டலத்தில் மாயப் போர்; அனுமார் தோள் மீது இலக்குமணன்; போர்க்களக் காட்சி; நாகாஸ்வர பிரயோகம்; இலக்குமணன் மயங்கி விழுதல்; அனுமார் தாங்கும் நிலை; அனுமாரிடம் இராமர் பேசுதல்; சஞ்சீவி கொண்டு வருமாறு இராமர் பணித்தல்; அனுமார் சஞ்சீவிக்காக அந்தப் பருவதத்தையே தலைமீது தூக்கி வருதல்; விழித்த இலக்குமணனும் இராமரும் பேசுதல் ஆகிய

## சூர்ப்பனகை மானபங்கம்

சூர்ப்பனகை வருகிறாள். இலக்குமணன் சர்வபங்கம் செய்கிறான். அவள் மூக்கை அரியச் சூர்ப்பனகைக் கத்துகிறாள். மூக்கின்றிச் சூர்ப்பனகை காட்சி தருகிறாள். இவள் கோலத்தைக் கண்டு இராமர், இலக்குமணர் சந்தோஷப்படுகின்றனர்.

## கரதூஷன் வதம்செய்தல் :

கரன். துஷன் என்ற அசுரர்கள் இராமரால் கொல்லப்பட, மேற்கண்ட இருவரும் தலைகீழாக விழுகின்றனர்.

## சூர்ப்பனகையும் இராவணனும் :

மானபங்கத்திற்கு ஆளான அரக்கி சூர்ப்பனகை மூக்கின்றி இலங்கை அரண்மனைக்குச் செல்லுகிறாள். இராவணன், தங்கைக்கு அபயம் அளிக்கிறான். பத்துத் தலையின்றி, இராவணன் ஒரு தலையுடன் காட்டப்பட்டுள்ளான். பின் படை வீரனைப் பார்க்கிறோம்.

இராவணன், மண்டோதரி, தாடியுடன் விபீடணன், கும்பகருணன் ஆகிய சிற்பங்கள் அடுத்து உள்ளன. அன்னப்பறவை பூட்டிய இரதத்தில் மூடு பல்லக்கு உள்ளது. இது இராவணன் வாகனமாகும்.

## மாயமான் :

இலங்கை மன்னன் இராவணன் ஆலோசனைப்படி மாயமானாக மாரீசன் சீதையருகே ஓடுதல்; மான் ஓட சீதையின் விருப்பத்திற் கிணங்கி இராமன் பின் தொடர்தல்; அம்பெய்தல்; மான் வடிவில் இருந்த மாரீசன் சுய உருப்பெற்று தலை கீழாகக் கீழே விழுதல்; ஆகிய காட்சிகள் கண்ணையும் கருத்தையும் கவரும் விதத்தில் செதுக்கப்பட்டுள்ளன. இலக்குமணன் இராமனைச் சந்திக்கிறான். இருவரும் சீதையைத் தேடி ஓடுகின்றனர்.

## இராமனும் சுக்ரீவனும் :

மனைவியைப் பிரிந்த இராமன் தம்பியுடன் கிட்கிந்தாகானம் வருதல்; சுக்ரீவனைச் சந்தித்தல்; ஏழுமராமரங்களை ஓரம்பினால் துளைத்தல்; அக்கினி சாட்சியாகச் சுக்ரீவன், இராமன் இருவரும் நட்பு

## மிதலைக் காட்சி :

மிதலை செல்லல்; வில்முரித்தல்; விசுவாமித்திரர் ஜனகர் - வசிஷ்டர் ஆகியோர் நிற்றல்; நான்கு பெண்கள் இராமரை வரவேற்றல்; அரண்மனை உப்பரிகையில் சீதை ஊர்மிளை சேடியருடன், வீற்றிருத்தல் ஆகிய சிற்பங்கள் அடுத்து உள்ளன.

## திருமண நிகழ்ச்சி :

இராமரும் இலக்குமணரும் ஜோடியாகவும் பரதனும் சத்ருக்கனும் இணையாகவும் நிற்கின்றனர். ஜனகர், மனைவி இருவரும் தம் மகள்களைத் தாரை வார்த்துத் தருகின்றனர். பரசுராமர், இராமரை ஆசீர்வதித்து அனுப்புகிறார்.

## கைகேயி வரம் பெறுதல் :

கம்பராமாயணம் போன்ற இராம காதைகளில் மந்தரை சொற்கேட்டுத் தலைவிரி கோலமாய்த் தசரதனிடம் கைகேயி வரம் வாங்குவதாகப் பார்க்கிறோம். ஆனால் இங்குக் கைகேயி பயபக்தியுடன் சுமங்கலி கோலத்தில் வரத்தினைப் பெறுவதாகச் சிற்பத்தில் பார்க்கிறோம். முதலாவதாக இராம இலக்குமணர் கைகேயிடம் ஆசிபெற வருகின்றனர். கூனி கோள் மூட்ட, கைகேயி அமர்ந்தபடி கேட்டுக் கொண்டிருக்கிறாள். பின் கைகேயி அரசனிடம் பவ்யமாகக் கைக்கட்டி, வாய்ப்பொத்தி, வரம் கேட்கிறாள். தசரதன் கால்மீது கால்போட்டு அமர்ந்து அபய அஸ்தத்துடன் வரம் தருகிறார். இராமரை அழைத்து வர காவலன் செல்லுதல்; இராம இலக்குமணரை அழைத்துக் காட்டிற்குச் செல்லுமாறு கைகேயி சொல்லுதல்; தசரதன் துன்பத்தில் தலைமீது கைவைத்து நிற்றல்; அருகில் இராமன் நிற்றல். ஆகிய காட்சிகள் தத்ரூபமாக செதுக்கப்பட்டுள்ளன.

## குகன் இராமனை வரவேற்றல்

இராமன், இலக்குமணன், சீதை மூவரும் காட்டிற்குச் செல்லுதல்; - குகன் என்ற வேடன் கூப்பிய நிலையில் வரவேற்றல்; இராமர், இலக்குமணர், சீதை மூவரும் பஞ்சவடி நோக்கிப் போதல்; பஞ்சவடியில் இராமர் சீதை இருத்தல் அடுத்த காட்சியாகக் காண்கிறோம்.

இரட்டைக் குழந்தைகளான இலக்குமணன், சத்ருக்கனுடன் உள்ளார். சுமத்திரை திரைக்குப்பின் இரண்டு ஏவல் பெண்டிர் உள்ளனர். மேற்கண்ட மூன்று தேவியரும் படுத்தபடி குழந்தைகளுக்குப் பால் ஊட்டுகின்றனர்.

## குருகுலவாசம் :

இரு குழந்தைகளைச் (பரதன், சத்ருக்கன்) சேடியர் அழைத்து வர ஏற்கனவே இராமர், இலக்குமணர் குருகுலத்தில் வசிஷ்டரிடம் பாடம் படித்துக் கொண்டிருக்கிறார்கள். திரைக்குப் பின்புறம் சேடியர் காட்டப்படுகின்றனர்.

## போர்ப்பயிற்சி :

ஆசிரியர் இராமனைத் தழுவியபடி வில்வித்தை கற்பித்தல், இலக்குமணன் வில்வித்தை கற்றல், வில்லுடன் ஓர் ஆள் ஆகிய சிற்பங்கள் அடுத்து உள்ளன.

## விசுவாமித்திரர் யாகத்திற்கு இராமனை அழைத்தல் :

மூன்று பிள்ளைகள்; தசரதன் அமர்ந்த நிலை; விசுவாமித்திர முனிவர் சடாமுடியுடன் குடையுடன் காட்சி தருகிறார். இராமனை அழைத்துப்போக முனிவர் விரும்புகிறார். தசரதன் துயரப்படுகிறார். வசிஷ்டர் இராமரை முனிவருடன் அனுப்பும்படிக் கூறுகிறார். சேடிப்பெண்கள் கவரி வீசுகின்றனர். இலக்குமணன் தசரதனை அணைத்துத் தானும் இராமனுடன் போவேன் என்கிறான். இராமன், பக்கத்தில் நிற்கிறான். பிரியும் முன் இராம இலக்குமணர் இருவரையும் மன்னர் ஆலிங்கணம் செய்கிறான். விசுவாமித்திரர், இராம இலக்குமணரை அழைத்துப் போதல், சேடிப் பெண் ஒருத்தியும் உடன் செல்லல் ஆகிய சிற்பங்கள் பின்பு பார்க்கிறோம்.

## தாடகை வதை

தாடகை, சூலம் ஏந்திவருதல், இராமர் அம்பு எய்யத் தாடகை விழுதல்; பழைய உருவினைத் தாடகை பெறுதல், விசுவாமித்திரர், நீர்வார்த்தெடுத்தல்; மந்திர உபதேசம் செய்தல் - இலக்குமணன் கைக்கட்டி நிற்றல்; மூவரும் ஆஸ்ரமம் நோக்கிப் போதல்; இராமர் யாகம் காத்தல்; ஆகிய காட்சிகளை அடுத்துப் பார்க்கிறோம்.

# 10. தருமபுரி மாவட்டக் கல்வெட்டுகளில் காணப்படும் வருவாய்ச்சொற்கள்

தருமபுரி மாவட்ட சாசனங்களில் காணப்படும் வருவாய்ச் சொற்கள் ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. கல்வெட்டுக் களின் எண்ணிக்கை 123. சில நடுகற்கள் நமக்கு இப்பகுதியில் அமைந்த நாட்டுப் பிரிவுகள், ஊரின் அமைப்பு, ஊரின் பெயர், செய்யும் தொழில் எனப் பல செய்திகளை நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. கங்கர், நுளம்பர், கல்வெட்டுகளில் எவ்வித வருவாய்ச் சொற்களையும் காணமுடியவில்லை. இருப்பினும் போசளர், விசயநகரர் காலத்துக் கல்வெட்டுக்களிலேயே அதிக அளவு வருவாய்ச் சொற்கள் உள்ளன. சில சொற்களுக்குப் பொருள் கொள்ளுதல் கடினமாகவும் உள்ளது. இருப்பினும் காணப்படும் வருவாய்ச் சொற்கள் அனைத்தும் பட்டியலிடப்பட்டு நூலில் காணப்படும் கல்வெட்டு எண்ணும் அதன் நேரிலேயே குறிக்கப்படுகிறது. பொதுவாகப் பயன்படுத்தப்படும் வரிச் சொற்களை விடுத்து இப்பகுதியில் பயன்பாட்டில் இருந்த சில வரிச் சொற்களை இங்குச் சுருக்கமாக விளக்குவோம். இவை, பிற வருவாய்ச் சொற்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யப் பயன்படும்.

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தருமபுரி மாவட்டக் கல்வெட்டுக்களில் பிற்காலச் சோழர் கல்வெட்டுகளில் வரும் வருவாய்ச் சொற்களைப் பல ஆய்வாளர்கள் ஆய்ந்துள்ளதால் அவைகளை விட்டுவிட்டுப் பிற அரச மரபினர் கல்வெட்டுகளே இங்கே கூறப்படுகின்றன.

| வ. எண். | அரச மரபு | கல்வெட்டுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சோழர் | 48 |
| 2 | விஜயநகரர் | 30 |

| | | |
|---|---|---|
| 3 | போசளர் | 27 |
| 4 | நுளம்பர் | 12 |
| 5 | கங்கர் | 6 |

## போசளர் காலத்தில் வழங்கப்பட்ட வருவாய்ச் சொற்கள்

| வ.எண். | வருவாய்ச் சொல் | கல்வெட்டு எண் |
|---|---|---|
| 1 | அதிகாரி சீவிதம் | த.மா.க. தொ - I - 140 |
| 2 | ஆளுமாளும் சீவிதம் | த.மா.க. தொ - I - 140 |
| 3 | காணிக்கை | த.மா.க. தொ - I - 121 |
| 4 | கணியாயம் | த.மா.க. தொ - I - 140 |
| 5 | கட்டுக்குத்தகை | த.மா.க. தொ - I - 140 |
| 6 | கற்பூரக் காணிக்கை | த.மா.க. தொ - I - 140 |
| 7 | கீழ்தண்டு | த.மா.க. தொ - I - 140 |
| 8 | குதிரை உசகை | த.மா.க. தொ - I - 140 |
| 9 | சித்தாயம் | த.மா.க. தொ - I - 140 |
| 10 | சில்லந்தராயங்கள் | 1974 / 168 |
| 11 | மல்லு தினம் | த.மா.க. தொ - I - 140 |
| 12 | புத்திறை | த.மா.க. தொ - I - 140 |
| 13 | புதுக்காணிக்கை | த.மா.க. தொ - I - 140 |
| 14 | தறியிறை | த.மா.க. தொ - I - 140 |
| 15 | திக்கை பொன்வழி | த.மா.க. தொ - I - 140 |
| 16 | மேல்தண்டு | த.மா.க. தொ - I - 140 |
| 17 | அடைமானியம் | த.மா.க. தொ - I - 140 |
| 18 | குடங்கை மானியம் | த.மா.க. தொ - I - 140 |
| 19 | கலியாணதாயம் | 209 / 1910 - மோதூர் |

## விசய நகர மன்னர்கள் காலத்தில் தருமபுரி மாவட்டத்தில் வழங்கப்பட்ட வருவாய்ச் சொற்கள்

| வ.எண். | வருவாய்ச் சொல் | கல்வெட்டு எண் |
|---|---|---|
| 1 | அனைத்தாயங்கள் | பேரிகை கல்வெட்டு |
| 2 | அடிமைச் சாரிகை | அத்திமல்லன் - பூர்வாதிராஜன் |

| | | |
|---|---|---|
| 3 | அம்சைச் சாரிகை | 1973 / 137 |
| 4 | அடிக்காசு | 200 / 1910 |
| 5 | ஆளுக்காசு | அதியமான் கோட்டை |
| 6 | அசுவம் | 1973 / 115-D, 115-B, |
| 7 | ஆயம் | 139, 117-B. |
| 8 | உள்ளாயம் | |
| 9 | காணம் | 1973 / 94 |
| 10 | கண்ணாலதாயம் | |
| 11 | கலியாணத்தாயம் | 1973 / 137 |
| 12 | கடமை | 1973 / 76 - B |
| 13 | குடிமை | 1973 / 76 - B |
| 14 | குதிரைச் சாரிகை | 1973 / 77 - B |
| 15 | குதிரைபாந்தாகம் | |
| 16 | குதிரைக் குழிசுங்கம் | 1973 / 115 - B |
| 17 | கூட்டு வாடகை | 138 - A த.மா.க.தொ. I-17 |
| 18 | சாரிகை | |
| 19 | சுங்கம் | 1973 / 95 |
| 20 | மகழ்மை | |
| 21 | மகமை | 1973 / 97 |
| 22 | பட்டடை | 1973 / 96 - B |
| 23 | வெள்ளாயம் | 1973 / 117 - B |
| 24 | வெள்ளாயற் சுங்கம் | 1973 / 139 |
| 25 | தட்டார்பாட்டம் | 1973 /137 |
| 26 | பயிறுகாணம் | 1973 / 94, 137 |
| 27 | விச்சுப்பாட்டம் | |
| 28 | சித்தாயம் | 138 - A |
| 29 | சரிவாரம் | கடகத்தூர் கல்வெட்டு - 197 / 1910 |

| | | |
|---|---|---|
| 30 | செட்டியார் மகமை | |
| 31 | அல்லாய மானியம் | கடகத்தூர் கல்வெட்டு - 1213 Page No.196/1910 |
| 32 | குடங்கை மானியம் | 1973 / 88 |
| 33 | கவுண்டு மானியம் | |
| 34 | பெருசுங்கம் | 1973 / 76 - B |
| 35 | வெட்டி, வெள்ளப்படி | 1973 / 137, 1973 / 115-C |
| 36 | நாடுதளவரிக்கை | 1910 / 196 கடகத்தூர் கல்வெட்டு |

## குடங்கை மானியம் :

குடங்கை என்பதை உள்ளங்கை எனப் பொருள் கொள்வர். ஏரியின் அமைப்பு உள்ளங்கை போன்று குவிந்து, காணப்படுவதால் ஏரிக்கு குடங்கை என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். ஏரிக்கு அருகே உள்ள நிலங்களை இறைவனுக்குத் தானமாக வழங்குதலைக் "குடங்கை மானியம்" என்று குறித்தனர். இதனைக் கிருஷ்ணகிரி வட்டத்தில் உள்ள சந்தூர் கல்வெட்டு ஒன்று கூறும்பொழுது.

*"குடங்கை மானியத்துக்குச் சாதனம்*
*பண்ணிக் குடுத்தபடி இவர் இந்த*
*ஏரி புதுசாக மண ஒழுக்கக் க*
*ட்டுகையில் குடங்கை முதல் மை*
*ட்யில் இருபத்துனாலடிக் கோலிலே இ*
*வற்கு கட்டுக் குடங்கை செல்லுங்"*

என்று கூறுகிறது. இதில் குடங்கை என்பது ஏரியைக் குறிப்பதைத் தெளிவாக உணர முடிகின்றது.

## அடிமைச் சாரிகை, குதிரைச் சாரிகை :

இதில் சாரிகை என்பது சாரியை என்பது ஆகும். சாரியை என்றால் சார்ந்தது என்ற பொருளில் வருவது. அடிமைச் சாரிகை, குதிரைச் சாரிகை என்பது அடிமையைச் சார்ந்து வந்த வருவாய், குதிரையைச் சார்ந்து வந்த வருவாய் எனப்பொருள் கொள்ளலாம். இச்சொற்கள்

வரியை மட்டும் உணர்த்தாமல் இம்மாவட்டத்தில் அடிமை வியாபாரம் இருந்தது என்பதையும் குதிரை வியாபாரம் செழித்து இருந்தது என்பதையும் புலப்படுத்துகின்றன. குதிரைச் சுங்கம், குதிரைச் சாரிகை, குதிரைக்குழி சுங்கம் போன்ற சொற்களும் காண முடிகின்றன. இவை கடல் கடந்த வாணிபத்தைக் குறிப்பதாகக் கருதலாம்.

## சித்தாயம் :

சிறிய வரியை குறிப்பது. நிலவரியை ஒப்பிடுகையில் பிறவரிகள் சிறியனவே. எனவே இவற்றை சித்தாயம், சில்வரி, சித்தராயங்கள் எனக் குறித்தனர். அள்ளாயம் என்பது ஊர்ச்சந்தைகளின் போது வியாபாரிகளிடமிருந்து பெறும் ஒருவரி எனலாம்.

## சுங்கம் :

சுங்கம் என்பது வாணிபத்தின் பொருட்டு வெளிநாடுகளிலிருந்து கடல்வழியாக மரக்கலங்களிலும் உள்நாடுகளிலிருந்து பெருவழிகளின் மூலமாக வண்டிகளிலும் வரும் பொருட்களுக்கு வாங்கிய வரியைக் குறிப்பதாகக் கருதலாம்.

(எ.கா.) குதிரைச் சுங்கம், வண்டிச் சுங்கம்.

## மகமை, மகண்மை :

மகமை என்பது மகண்மை என்ற சொல்லில் இருந்து வந்ததாகக் கருதலாம். மகண்மை என்பது கோயில், மற்றும் சத்திரங்களின் பொருட்டு மேற்கொள்ளப்படும் செலவினத்திற்காக ஏற்படுத்தப்பட்ட வரி என்று பொருள் கொள்ளப்படுகிறது. அதனால் மகண்மை, மகழ்மை, மகமை என்பன ஒரே பொருளின் அடிப்படையில் அமைந்ததாகக் கருதலாம்.

## சரிவாரம் :

உற்பத்தி செய்யும் பொருட்களில் சமபங்கு அளித்தல் சரிவாரம் என்பதன் பொருள். இந்தப் பங்கு ஏரி, குளம் இவற்றின் கரைகளைப் பலப்படுத்தவே பயன்படுத்தப்பட்டது என்று குறிப்பர். மேலும் பல வருவாய்ச் சொற்களை ஆய்வாளர்கள் ஆய்வு செய்யலாம்.

# 11. தருமபுரி மாவட்ட நீர்ப்பாசனங்கள்

தருமபுரி மாவட்டத்தில் நீர்ப்பாசன வசதியைக் குறிப்பிடும் பொழுது மிகவும் குறைவே எனலாம். தென்மேற்குப் பருவமழையும், வடகிழக்குப் பருவமழையும் இங்கே சரிவரப் பெய்வதில்லை. பெரும்பாலும் வானம் பார்த்த பூமியாகவே இப்பகுதி திகழ்கின்றது. மாவட்டத்தின் முக்கிய ஆறாக இருப்பவை பொன்னியாறு (பெண்ணையாறு) மற்றும் காவிரியாறு ஆகும். இவற்றுடன் கிளை ஆறுகளாக ஓடும் பாலாறு, சின்னாறு, சனத்குமாரநதி, பாம்பாறு நாகாவதியாறும் உள்ளன.

## பெண்ணையாறு :

சென்னக்கேசவ மலையின் தென்கிழக்குப் பகுதியில் அதாவது மைசூர் நந்தி துருகம் வடமேற்கே இருந்து உற்பத்தியாகி வரும் ஆறு பெண்ணையாறு. பெரும்பங்கு மைசூரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு இந்நதி பாய்கின்றது. பின்னர் தேவனாஞ்சலி மற்றும் ஹோஸ்கோட் வட்டங்களைக் கடந்து தமிழகத்திற்குக் கூத்கோடா ரயில்வே நிலையம் அருகே பெங்களூரின் கிழக்கேயிருந்து ஒசூர் வட்டத்தை வந்தடைகின்றது. பாகலூரில் இருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் காணப்படும் பாகலூர் அருகே இந்த ஆறு தெற்கே திரும்பி, ஒரு கிளை நதியாகிச் சின்னாறு என்ற பெயரில் செல்கின்றது. பிறகு ஐரவபள்ளி வழியாகக் கிருஷ்ணகிரி வட்டத்தை வந்தடைகின்றது.

மேலும் கிருஷ்ணகிரியில் இருந்து பிக்கனஹள்ளி வழியாக வந்து மார்க்கண்டேய நதியில் இது கலக்கின்றது. ஓமலகுட்டேயின் இடப்பகுதியில் தான் மார்க்கண்டேய நதி செல்கின்றது. ஓமலகுட்டே கிருஷ்ணகிரியில் இருந்து வடக்கிழக்கே சுமார் 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மேலும் பல்வேறு வளைவுகளாக வளைந்து

கிருஷ்ணகிரி, தருமபுரி, காவேரிபட்டிணம் வழியாக வந்தடைந்து ஒரே சீராகச் செல்கின்றது. இந்நதியின் அணைக்கட்டில் இருந்துதான் பாரூர் ஏரிக்கு நீர் வரத்து அதிகரிக்கின்றது. பின்னர் இந்த ஆறு இருமத்தூர் வழியாக வந்து திருப்பத்தூர் சாலையருகே செல்கின்றது. இது கிருஷ்ணகிரி அரூர் வட்டங்களில் தொடர்ந்து செல்வதைக் காணலாம். இந்த ஆறு தொட்டம்பட்டி வழியாக அனுமந்த நத்தம் (அனுமன் தீர்த்தம்) தீர்த்தமலைப் பகுதிகளில் சென்று பாம்பாறில் கலக்கின்றது. இந்தப் பாம்பாறு வாணியாறுடன் இணைத்துக் கொள்கின்றது.

தீர்த்தமலைப் பகுதியில் ஓடும் இந்த ஆறு பின்னர் அரூர் வழியாகச் சென்று திருக்கோயிலூரை அடைகின்றது. பின்னர் இப்பெண்ணையாறு திருக்கோயிலூர் வழியாகக் கடலூர் அடைந்து தேவபட்டணம் அருகே கடலில் கலக்கின்றது.

இம்மாவட்டத்தில் கிளை நதிகளாகச் சனத்குமாரநதி, நாகாவதி ஆறு, சின்னாறு போன்றவை உள்ளன. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தான் முத்தூர் நீர்த்தேக்கம், பாம்பாறு நீர்த்தேக்கம் மற்றும் நெடுங்கல் நீர்த்தேக்கம் உள்ளன. நாகாவதி நீர்த்தேக்கம் - பென்னாகரம், பெரும்பாலை பகுதியில் அமைந்துள்ளது.

## இம்மாவட்டத்தில் காணப்படும் ஏரிகள் :

ஏரிகளில் மிகவும் பெரிய ஏரியாகத் திகழ்வது பாரூர் ஏரியே ஆகும். பாரூர் ஏரி ஆனந்தூர், திருவானப்பட்டி, அக்கிரகாரம் ஆகிய பிற பெரிய ஏரிகளுக்கு நீரை வழங்குகிறது. இவற்றோடு கால்வாய்கள் மூலம் கிராமத்தின் சுற்றுப்புறத்தில் அமைந்த பத்திற்கும் மேற்பட்ட சிறிய ஏரிகளுக்கும் பாரூர்ஏரி தண்ணீர் சென்றடைவது குறிப்பிடத்தக்கது ஆகும். கிருஷ்ணகிரிக்கு வடகிழக்கே அமைந்த பாலதேவ் ஏரி, வரட்டனப்பள்ளியில் உள்ள முகமது கௌஸ் சாகிப் ஏரியில் இருந்து வழிந்து வரும் அதிகபட்ச நீர் இந்த ஏரியை வந்தடையும். திம்மாபுரம் ஏரி, காவேரிப்பட்டிணம் அருகே உள்ளது, பெண்ணை ஆற்றின் கரையில் அமைந்த ஒன்று இதுவாகும்.

| ஏரிகள் விபரம் | நிலப்பரப்பு |
|---|---|
| பாலதேவ் ஏரி | 821 ஏக்கர் |
| பாரூர் ஏரி | 821 ஏக்கர் |

| | |
|---|---|
| பெணுகொண்டாபுரம் ஏரி | 430 ஏக்கர் |
| அலாபுரம் ஏரி - அரூர் | 486 ஏக்கர் |
| அன்னசாகரம் - தருமபுரி | 486 ஏக்கர் |
| கொளகத்தூர் சீனராயன் ஏரி - தருமபுரி | 538 ஏக்கர் |

எலுப்பிக் குட்டை ஏரி, ஹனுமந்தராயன் பள்ளம், புங்கம்பட்டி நாகல் ஏரி, அம்பலவாடி ஜமுக்கி, சக்கிலிங்கூடுபள்ளம் போன்ற ஏரிகளும் உள்ளன.

தர்மபுரியைச் சுற்றிக் குறிப்பிடும்படியான சில பழைய ஏரிகள் உள்ளன.

| | |
|---|---|
| அதியமான் கோட்டை ஏரி | 270 ஏக்கர் |
| மாதேமங்கலம் ஏரி | 405 ஏக்கர் |
| சோகத்தூர் ஏரி | 348 ஏக்கர் |
| ராமக்கான் ஏரி | 276 ஏக்கர் |

## மத்திகானப்பள்ளி (பிக்கலி மலை)

இவற்றுடன், வீரராகவன் ஏரி, ராமநாயக்கன் ஏரி, தொப்பையாறு, நாகாவதி ஆறு, பெரும்பட்டி, குண்டனஹள்ளி, அரக்காசனஹள்ளி, சின்னம்பள்ளி, சக்குலகுடுபள்ளி போன்ற நீர்நிலைகளும் உள்ளன.

அதியமான் கோட்டை, கொளகத்தூர் மற்றும் மாதேமங்கலம் ஏரிகளைச் சோழராயன் ஏரி எனக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. மேலும் அரூர் வட்டத்தில் சிறிய ஏரிகளும் குளம், குட்டைகளும் நிறைந்து காணப்படுகின்றன.

## பாம்பாறு :

பாம்பாறு அணைகட்டு ஊத்தங்கரையில் இருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்தப் பாம்பாற்றின் கிளைகள் பர்கூர், மத்தூர், சந்தூர் அருகே செல்லும் ஆறுகள் ஆகும். அரூர் வட்டத்திலும் இவைகள் செல்கின்றன

## வாணியாறு :

சேர்வராயன் மலைப்பகுதி வழியாக வரும் வாணியாறு வடகிழக்கே மஞ்சவாடிக் கனவாய்க்கு இணையாக இம்மாவட்டத்தில்

செல்கின்றது. இவ்வாணியாறு அரூர் வட்டத்தில் வெங்கட்டாபுரத்தில் நுழைகின்றது. இதன் தொடர்ச்சியே பொன்னியாற்றில் சென்று கலக்கின்றது. வெங்கட்டாபுரத்தில் ஓர் அணைக்கட்டு உள்ளது. பறையப்பட்டு புதூர் ஏரி, ஜம்மனஹள்ளி ஆகியவை எலுமிச்சப் பெருமாள் கோயில் அணைக்கட்டுடன் தொடர்புடவையாகும்.

## காவிரியாறு :

காவிரி ஆற்றின் மூலம் ஒசூரின் தெற்கு பகுதியும், தர்மபுரி வட்டமும் பயனடைகின்றன. சனத்குமார நதி, தொப்பூர் (வேப்படியாறு) வழியாகச் சென்று நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுகின்றது.

## ஓகேனக்கல் :

ஒசூர், கொல்லேஹால் வட்டத்தின் வழியாக பாய்ந்துவரும் காவிரி. தர்மபுரி எல்லையிலும் கொல்லேஹால் எல்லை வழியாக வருகிறது. இந்த ஆறு சற்று திரும்பி தென்கிழக்காகச் சனத்குமார நதியாக வந்து ஓகேனக்கல் நீர் வீழ்ச்சியில் வந்து விழுகின்றது.

ஓகேனக்கல் நீர்வீழ்ச்சி பென்னாகரத்தில் இருந்து 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சுமார் 780 அடி கடல் மட்டத்தை விட உயரமாக உள்ள இந்த ஒகேனக்கல் தொப்பூர் மலையினை அறுத்துக் கொண்டு வந்து இங்கே கலக்கின்றது.

சின்னாறு அல்லது சனத்குமாரநதி என்று அழைக்கப்படும் ஆறு கருநாடகாவில் இருந்து ஆனைக்கல் வழியாக ஒசூரை வந்தடைகின்றது. இந்நதியால் தேன்கனிக்கோட்டை, தளி, மாரண்டஹள்ளி பகுதிகளும் பயன்பெறுகின்றன. மேலும் தளி மற்றும் சரண்டிப் பள்ளி ஏரி வழியாக இவ்வாறு கெலமங்கலம் வந்தடைகின்றது. கெலமங்கலத்தில் இருந்து மேற்கே 6 கி.மீ. தொலைவில் தொட்டபேளூர் அணைக்கட்டு உள்ளது. இவ்வணைக்கட்டு 1673 இல் சிக்க தேவராஜா என்ற மைசூரை ஆண்ட மன்னனால் கட்டப்பட்டது. அங்கிருந்து அழகிய மலை இடுக்குகளைக் கொண்ட பகுதியானப் பஞ்சப்பள்ளியை வந்தடைகின்றது. இவை மேலகிரி மலை அடிவாரத்தில் அமைந்த இயற்கையான, செழிப்பான பள்ளத்தாக்கு ஆகும்.

பின்னர் ஒசூர் வட்டத்தில் இருந்து தருமபுரி வட்டத்திற்கு மாரண்டஹள்ளி வழியாகப் பாலக்கோடு வட்டத்தை வந்தடைகின்றது. மல்லாபுரம் அருகே பிக்கனஹள்ளி மலையை ஒட்டி அமைந்த பகுதியை அடைந்து பெண்ணையாற்றில் இந்நதி கலக்கின்றது.

## மாரண்டஹள்ளி அணைக்கட்டு :

சனத்குமாரநதியின் நடுவில் கட்டப்பட்ட அணைக்கட்டு இதுவாகும். இது மல்லாபுரம் வரை செழிப்புறச் செய்கின்றது. போதி குட்டப்பள்ளியில் ஓர் தடுப்பணை அமைக்கப்பட்டது. சங்கம்பசவன், மாவேரி மற்றும் ஜெர்தலவாய் ஏரிகள் நீர்வரத்தைப் பெறுகின்றன. அடுத்துத் தொப்பூர் ஆறு தொப்பையாறு அல்லது வேப்படியாறு மல்லாபுரத்தில் இருந்து வடகிழக்கே ஓடுகின்றது. ஆறு ஓடும் கரையில் அமைந்த வேப்படி என்ற கிராமத்தின் பெயரால் இது அமைந்தது. வேப்படியாறு, தொப்பூர் ஆறு மேற்காகத் திரும்பி செல்கின்றது. இது தர்மபுரி - ஓமலூர் வட்டத்தை இணைக்கின்றது. இது ரெட்டினஹள்ளி மற்றும் மண்கொண்ட மலை இரண்டிற்கும் இடையே அமைந்த இயற்கையான பள்ளத்தாக்கில் அதாவது தொப்பூர் காடுகளில் நுழைந்து செல்கின்றது. அதாவது பெரும்பாலை வலது பக்கம் வந்து சேருகின்றது. சோழப்பாடி அருகே காவிரியில் கலக்கின்றது. தொப்பூர் - காவிரி இரண்டிற்கும் இடையே அமைந்த பள்ளத்தாக்கில் பெரும்பாலையில் ஓடும் பாலாறு அல்லது பாம்பாறு தென்மேற்காக வளைந்து வளைந்து செல்கின்றது.

இம்மாவட்டத்திலே 87 ஏரிகள் உள்ளன. இவ்வாறு பல்லாற்றானும் சிறியதும் பெரியதுமான ஏரிகளும், குளங்களும் நீர்த்தேக்கங்களும் தருமபுரி மாவட்ட விவசாயத்திற்குப் பெரிதும் உதவிக் கொண்டிருக்கும் நீராதாரங்கள் எனலாம். கிருஷ்ணகிரி அணை சுற்றுலாத் தலமாக விளங்குகிறது.

# 12. தருமபுரி மாவட்ட நடுகற்கள்

தமிழ்நாட்டில் பிரிக்கப்படாத தருமபுரி மாவட்டத்தில்தான் அதிக அளவு நடுகற்கள் கண்டறியப்பட்டன. அவை யாவும் படியெடுக்கப்பட்டுள்ளன; நூல்களாவும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. நடுகற்களுக்கென்றே அகழ்வைப்பகம் உள்ள இம்மாவட்டத்தில் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு தொடங்கி 18ஆம் நூற்றாண்டு வரை நடுகற்கள் உள்ளன. நடுகல் வழிபாடும் இம்மாவட்டத்தில் பெருமளவில் உள்ளது. கல்வெட்டுள்ள நடுகற்களைக் காட்டிலும் எழுத்தில்லா நடுகற்கள் இம்மாவட்டத்தில் மிகுதியாக உள்ளன.

காடும் மலையும் மிகுந்துள்ள இம்மாவட்டத்தில் மாடுபிடி சண்டைக்காகவும், விலங்குகளைக் கொல்லவும் நடந்த பூசல்களில் பலரும் இறந்துபட்டுள்ளதை இங்குள்ள நடுகற்கள் குறிப்பிடு கின்றன. மண்டு என வழங்கப்படும் மன்றுகளில் நடுகற்கள் காணப்படுகின்றன. மழவர், அருவாளர், பங்களர், வடுகர், வணிகர் சான்றோர் எனப்பல இனத்தவருடைய நடுகற்கள் இம்மாவட்டத்தில் உள்ளன.

இங்குள்ள நடுகற்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. தொறுப்பூசல
2. சதிக்கல்
3. ஊர்க்காத்தான் கல்
4. பெண்மீட்டான் கல்
5. புலிக்குத்திப்பட்டான் கல்
6. பன்றிக்குத்திப்பட்டான் கல்
7. குதிரைக்குத்திப்பட்டான் கல்
8. நவகண்டம்

9. யானை குத்திப்பட்டான் கல்

10. சன்னியாசிக் கல்

11. கலைஞர்களுக்கு எடுத்த நடுகற்கள்

தொல்லியல் துறை ஏற்கனவே பதிப்பித்த தருமபுரி மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி ஒன்றும் விரைவில் வெளியிடவுள்ள தொகுதி இரண்டும் காரணமாக நடுகற்களை விரிவாக எழுதவில்லை. எனினும் வரலாற்றுச் சிறப்புடைய ஊர்கள் பகுதியில் ஓரளவு குறிப்பிட்டுள்ளோம். தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பா மாலை குறிப்பிடும் புறத்திணைகளை நன்கு விளங்கிக் கொள்ள இங்குள்ள நடுகற்கள் பெரிதும் பயன்படுகின்றன.

தமிழ், கன்னடம், தெலுங்கு என மூன்று மொழிகளிலும் நடுகற்கள் இம்மாவட்டத்தில் உள்ளன. வட்டெழுத்தில் அமைந்த நடுகற்கள் பெருமளவில் இம்மாவட்டத்தில் காணலாம். ஆந்திரப்பிரதேசம் மற்றும் கருநாடக மாநிலம் இம்மாவட்ட எல்லைப்புறங்களில் இருப்பதால் தெலுங்கு, கன்னட நடுகற்களும் கல்வெட்டுகளும் இம்மாவட்டத்தில் உள்ளன.

தருமபுரி நகரில் கண்டறியப்பட்ட வாணாதிராயருடைய நடுகல் தகடூரில் நடைபெற்ற போரில் நாகந்தை என்ற சேவகன் மாண்டதைக் குறிப்பிடுகிறது. கடமை பற்றுள்ள படைத்தலை வராகச் சங்கரக்குட்டி என்பவர் இருந்துள்ளார். நுளம்பன் வஞ்சகமாக வாணாதிராயரிட மிருந்து நாட்டைக் கைப்பற்றிய விவரம் மேற்படி நடுகல்லில் உள்ளது.

# 13. தருமபுரி மாவட்ட ஊர்ப்பெயர்கள் - ஓர் ஆய்வு

தருமபுரி மாவட்டம் தமிழ் நாட்டின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது. இதனை ஒட்டியே கருநாடகமும், ஆந்திரமும் உள்ளன. மூன்று தென் மாநிலங்கள் சந்திக்கும் பகுதியாக இது திகழ்கின்றது. தமிழ், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகள் இங்குப் பேசப்படுவதை காணலாம். இம்மாவட்டம் குன்றுகளும். காடுகளும் நிறைந்த பகுதி. இப்பகுதிகளில் சிறப்பான கோயில்களும், சிற்பங்களும் குறைவாகத் தென்படினும் அதனை ஈடுசெய்யும் வகையில் ஏராளமான நடுகற்களும், இரண்டு மைல் கற்களும் அமைந்துள்ளன. சில மரபு வழிப் பெயர்களையும், செவிவழிச் செய்திகளையும் கொண்டு இம்மாவட்ட ஊர்ப்பெயர்களையும் அவை கூறும் வரலாற்றுச் செய்திகளையும் காண்போம்.

## நத்தம் :

பொதுவாக ஊர்ப்பெயர்கள் இயற்கைச் சூழல் கொண்டும், காரண காரியங்களின் அடிப்படையிலேயேயும் அமைவது வழக்கம். அவை காலப்போக்கில் திரிந்தும், மருவியும் வழங்கி வருவதை நாம் காண முடிகின்றது. இருப்பினும் ஊர்ப்பெயர்கள் என்று பகுக்கும் பொழுது ஓர் ஊரின் தொன்மையை உணர்த்தும் வகையில் சில பெயர்கள் அமைந்துள்ளன எனலாம்., பழமையான குடியிருப்புக் களைக் கொண்ட பகுதியை நத்தம் என்று குறித்தனர். இதன் அடிப்படையில் அமைந்த ஊர்களாவன தாளநத்தம், நத்தமேடு, பூதிநத்தம், நத்தம் திடல் என்பன. இவை அனைத்தும் காலத்தால் மிகவும் முந்தையனவாகக் கருதப்படுகின்றன. மேற்கண்ட ஊர்களில் பண்டைய மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்களும் ஆய்வில் கிடைத்துள்ளன. எனவே இவை பழமையான ஊர்கள் என்பதைக் கருத்தில் கொள்ளலாம்.

## மங்கலம் :

தர்மபுரி மாவட்டத்தில் மங்கலம் என்ற சொல் ஆறாம் நூற்றாண்டில் இருந்து சோழர்கள் காலம் வரையிலும் தொடர்ந்து வழக்கில் இருந்து வந்துள்ளது. சுப நிகழ்ச்சியை குறிக்கும் பொருளில் இச்சொல் அமைந்துள்ளது. காரிமங்கலம் என்ற ஊர் "கோவிசைய மயீந்திர பருமற்கு ஏழாவது கோவூர் நாட்டுக்காரிமங்கலங் கங்கதி அரைசரோடு" என்ற 6ம் நூற்றாண்டு கல்வெட்டு மூலம் அறிய வருகிறது. இந்தக் கல்வெட்டு குறிக்கும் காரிமங்கலம் அன்றிலிருந்து இன்றைய தினம் வரையிலும் அதே பெயரில் இயங்கி வருவது ஓர் சிறப்பிற்குரியது ஆகும். மேலும் செவிவழி செய்தியாகக் கூறும் பொழுது கடையெழு வள்ளல்களில் ஒருவரான காரியின் பெயரால் அமைந்தது என்றும் கூறுவர். காரியுண்டி என்ற சிவனின் பெயரில் அமைந்ததாகவும் குறிப்பிடலாம்.

பல்லவர் காலத்தில் இடம் பெற்ற மங்கலம் சோழர் காலத்தில் அதிக அளவில் கல்வெட்டுக்களில் காண்கின்றோம். சதுர்வேதி மங்கலம் என்பது அரசன் பிராமணர்களுக்கு அளித்த பகுதியை அவ்வாறு பெயரிட்டு அழைத்ததைக் கல்வெட்டு தெளிவாக்குகிறது. தர்மபுரி பகுதியிலும் சதுர்வேதி மங்கலங்கள் இருந்துள்ளதைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. மேலும் நல்லூர்களும், சோழர்கள் காலத்தில் ஏற்பட்டன. கம்பை நல்லூர், நல்லூர் எடுத்துக்காட்டாகும்.

சில ஊர்களுக்குத் தாவளம், பேட்டை, கோட்டை போன்ற சொற்களும் இக்காலத்தில் இருந்துள்ளன. தொடர்ந்து விஜயநகர அரசர் காலத்திலும் மராட்டியர் காலத்திலும் சில ஊர்களின் பெயர்கள் மாற்றம் பெற்றுள்ளன.

## புலியூர் :

காடும், குன்றுமாகத் திகழும் இந்தப்பகுதியில் அதிக அளவு காட்டு விலங்குகளின் நடமாட்டம் இருந்துள்ளது. இதனை உறுதிபடுத்தும் வகையில் இங்குக் காணப்படும் ஊர்களின் பெயர்களும் விலங்குகளின் பெயர்களுடன் தொடர்புடையனவாக உள்ளன. காட்டு விலங்குகளில் மிகவும் கொடுமையான புலியின் நடமாட்டத்தை இன்றும் இம்மாவட்டத்தில் காணமுடிகின்றது. இதனை உறுதி செய்யும் வகையில் தொல்பொருள் ஆய்வுத்

துறையின் கள ஆய்வின் போது "புலிக்குத்திப் பட்டான் கல்" "பன்றி குத்திப்பட்டான் கல்" பல கண்டுபிடிக்கப்பட்டன. இவை நடுகற் சிற்பத்தில் ஒருவகை. புலியுடனும், காட்டுப் பன்றியுடனும் போரிட்டு இறந்த வீரர்களுக்காக எடுக்கப்பட்ட நடுகற் சிற்பங்கள் இவைகள் ஆகும். இம்மாவட்டத்தில் காணப்படும் பண்டைய நாட்டுப் பிரிவு ஒன்று புலியூர் நாடு என்றே இருந்ததையும், ஊர்களின் பெயர்களாகப் புலியூர், புலிக்கரை, புலிக்கல் போன்றவை இருந்தமையும் சாசனங்கள் கூறுகின்றன. இவற்றுடன் கரடிக்குன்று, கரடித்திட்டை, நரிப்பள்ளி, யானைக்காரன் கொட்டாய் போன்ற விலங்குகளுடன் தொடர்புடைய சிற்றூர்களும் இம்மாவட்டத்தில் உள்ளன. நரி என்பதற்குப் புலி என்ற பொருளும் உண்டு. சுவடி ஒன்றில் புலியின் படம் வரைந்து நரி என்று எழுதியுள்ளனர்.

## தருமபுரி :

கங்கநாட்டுத் தகடூர் நாட்டுத் தகடூர் என்று அழைக்கப்படும் தகடூர் இன்று தருமபுரி ஆகும். சங்க இலக்கியங்களிலும் தொடர்ந்து 17-ஆம் நூற்றாண்டு வரை இவ்வூர் சில மாற்றங்களைப் பெற்றுள்ளன. இந்தத் தகடூர் மூன்றாம் இராசராசன் காலத்தில் விடுகாதழகிய நல்லூர் என்றும், போசளர், விஜயநகர மன்னர் காலத்தில் கடைக்கோட்டூரான நானாதேசிகபட்டணம் என்றும் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. 17-18ஆம் நூற்றாண்டில் தருமநல்லூர் என்றும் பின்னர் தருமபுரி என்றும் மாறி அதுவே நிலைத்துவிட்டது. தருமபுரி போல் தருமபுரம் என்ற பாடல் பெற்ற ஊர் மயிலாடுதுறை அருகே உள்ளது. தரும நல்லூர் ஒன்று விருத்தாச்சலம் அருகேயும் உள்ளது.

## அரூர் :

ஹரி என்ற ரிஷி இங்கே தவம் புரிந்ததால் இவ்வூரின் பெயர் ஹரியூர் என்று வழங்கப்பட்டு அதுவே பின்னர் அரியூர் என்று மாறியதாகச் சிலர் கூறுவர்.

*"புறமலை நாட்டு அரியூருடைய எருமையனாடி"*

என்று கல்வெட்டுக் கூறுகின்றது.

குலோத்துங்க சோழன் காலத்தில் விடுகாதழகிய நல்லூர் என வழங்கப்பட்டது. அதனைக் குறிக்கும் கல்வெட்டு "சிவபாத சேகர கற்கடக மாராயன் கண்ணன் படலன் விடுகாதழகிய நல்லூரான

அரியூர் காராயம் பள்ளி'' என்று தெளிவு படுத்துகின்றது. செய்யாறு வட்டத்தில் அரியாவூர் என்ற பெயரில் ஓர் ஊரும் அரியூர் என்ற பெயரில் ஓர் ஊரும் உண்டு. அருகனுடன் அரூரைத் தொடர்பு படுத்தலாம்.

## கம்பைநல்லூர் :

கி.பி. 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் இவ்வூரை குறிக்கும் பொழுது ''பெண்ணைக் கரை மருவுஞ் சிறுகோட்டை குளன் நாகை என்றும் நாகையன்பள்ளி என்றும் கூறப்படுகின்றது. வீரவிஸ்வநாத தேவர்கு 2ஆவது நாகையன் பள்ளியான காலிங்கராய சதுப்பேதி மங்கலத்து உடையார்'' என்று சாசனத்தில் காணலாம். பின்னர் 15ஆம் நூற்றாண்டில் ''அலைமலை தற்றிய கங்க நாட்டுத் தகடநாட்டு மூக்கனூர் பற்றுக் கம்பய நல்லூர் நாயனார்'' என்று குறிக்கப் படுகின்றது. கம்பி, நல்லி என்ற இரண்டு நாட்டிய மகளிர் இங்குச் சிறப்புடன் இருந்ததால் அவர்கள் இருவரின் பெயரையும் இணைத்துக் கம்பி நல்லி ஊர் என்று உருவானது என்பர். நாகையன் பள்ளி என்ற பெயர் சமண சமயத்துடன் தொடர்புடைய பெயராகும்.

## சிங்காரப்பேட்டை :

சிங்கிரிபட்டி என்பதே இதன் இயற்பெயர். சிங்கிரி நாயக்கன் என்பவன் இப்பகுதியை ஆட்சி புரிந்தபொழுது அவனது பெயரால் இவ்வூர் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிங்காரப் பேட்டை என்பது அழகிய நகரம் ஆகும். இங்கு மலைகளும் அருவிகளும் உள்ளன. வண்டுகள் சிருங்கார இசை எழுப்பிக் கொண்டே இருக்கும் ஊர். எனவே இதனை சிருங்காரப்பேட்டை என்றனர். பின்னர் சிங்காரபேட்டை ஆனது. பேட்டை என்பது வாணிபதளம் ஆகும். சிங்காரம், அழகு என்ற பொருள் கொண்டது.

## இருமத்தூர் :

இருமத்தூரின் பழைய பெயர் மத்தூர். இதே பகுதியில் இரண்டு மத்தூர்கள் உள்ளதால் இதனை இரண்டாவது மத்தூர் என்று குறித்தனர். அது பின்னர் இருமத்தூர் என்றானது. இவ்வூரில் உள்ள மண் சிவப்பு நிறத்தில் இருப்பதால் இந்த மத்தூரை எர்ரமத்தூர்,

எரமத்தூர் என்று அழைத்தனர். இரு என்பது பெரிய அல்லது கருமை என்று பொருள். எனவே பெரிய மத்தூர் என்ற பொருளில் இருமத்தூர் ஏற்பட்டிருக்கலாம்.

### சூளகிரி :

மலைகளின் அமைப்பு சூலம் போன்ற அமைப்பில் அமைந்துள்ளதால் சூலகிரி ஆயிற்று. கிரி என்பது மலையைக் குறிப்பது. அதன் அடிப்படையில் சூளகிரி ஏற்பட்டது என்பர். கிரி என்ற பெயரில் ககனகிரி, கிருஷ்ணகிரி, அங்குசகிரி, போன்றவை குறிப்பிடத்தக்கவை. சூலம் உச்சரிப்பில் சூளமானது எனலாம்.

### மகாராஜாகடை :

இதனை அங்கண நாச்சிமலை, அங்கண நாச்சியம்மன், அங்கடிப்பாறை என்பர். இம்மலை மீதுள்ள அம்மன் பெயராலே ஊர் அமைந்துள்ளது. பின்னர் மராட்டிய மன்னன் சிவாஜி இம்மலையில் வந்து தங்கியதால் "அரசு நின்ற நிலை" என்றும், பின்னர் அதுவே மகாராஜ கடை என்று மாறிற்று என்றும் கூறுவர். அரைசு நிலை என்பதின் வடமொழி வடிவம் மகாராஜக்கடையாகும்.

### ஒசூர் :

கி.பி. 10ஆம் நூற்றாண்டிலிருந்து இவ்வூரைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் செவிடபாடி என்றே குறிப்பிடுகின்றன.

"வீரவிஸ்வநாத தேவராயர் செவிட பாடியில் உடையார் செவிட நாயனார் கோயிலில்". என்ற விஸ்வநாதன் கல்வெட்டும், பிற கல்வெட்டுக்களும் செவிட பாடி என்றே குறிக்கின்றன. ஒசூர் என்பது கன்னடப் பெயரில் இருந்து வந்தது. ஓசவூர் என்பது புதிய ஊர். அதுவே ஒசூர் என்றும் கூறுவர்.

## தெலுங்கு, கன்னட மொழிப்பெயர்கள் :

ஒகேனக்கல் - ஒகே என்பது கன்னடத்தில் புகையைக் குறிக்கும் சொல். பாறையில் விழும் தண்ணீர்ப் புகையைக் கக்குவதால் இதனை புகைப்பாறை என்று அழைப்பர். அதனையே கன்னடத்தில் ஒகேனக்கல் என்று குறித்துள்ளனர். மேலும் இப்பகுதியில் காணப்படும் ஹள்ளி என்று முடியும் ஊர்ப் பெயர்கள் கன்னடச் சொல்

ஆகும். அத்திகுட்டஹள்ளி, கெம்பேஹள்ளி, இன்னும் பல உள்ளன. கிலே என்பது கலே என்பதும் ஒன்றே, இது கோட்டையைக் குறிக்கும் சொல் ஆகும். பூதிமுட்லு, போலுதிம்மராய துர்கம், எர்ரப்ப போயர், எர்ரமத்தூர் இவை போன்ற தெலுங்குப் பெயர்களும் அதிகமாகக் இம்மாவட்டத்தில் காணப்படுகின்றன.

## செடிகள் மற்றும் மலர்களின் பெயர்கள் :

கடுக்காய்ப்பட்டி, எலுமிச்சனஹள்ளி, எட்டிமரத்துப்பட்டி, எருக்கம்பட்டி, ஆலமரத்துப்பட்டி, நெல்லிமரத்துப்பட்டி, கருவேலம் பட்டி, புல்லுக்குறிச்சி மூலிகைச் செடிகளின் பெயர்களிலேயே அமைந்துள்ளன. அல்லியூர், தாமரை கோயிலம்பட்டி, பூமாண்ட ஹள்ளி என்பன மலர்களை அடிப்படையாகக் கொண்டமைந்த ஊர்கள் ஆகும்.

## இலக்கியப் பெயர் :

இலக்கியங்களில் வரும் பாத்திரங்கள் மற்றும் புலவர்களின் பெயர்களில் சில ஊர்ப் பெயர்கள் காணப்படுகின்றன. பாஞ்சாலியூர், ஔவைவழி, அதியமான்கோட்டை, அதகப்பாடி, பீமாண்டஹள்ளி, காவேரிப்பட்டிணம், பொன்முடி, போன்ற ஊர்களை எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம்.

## விநோதப் பெயர்கள் :

உலகம், உலகம் காத்தான் போன்ற விநோதமான பெயர்களும் இங்கு உள்ளன.

## சாதிகளின் அடிப்படையில் பெயர்கள் :

கம்மாளப்பட்டி, குறும்பர் மேடு, சக்கிலிப்பட்டி, எர்ரப்ப போயர், தொம்பரகாம்பட்டி, கன்னடஹள்ளி, நல்லம்பள்ளி, நாய்க்கனூர், வெள்ளாம்பட்டி, முத்தம்பட்டி, பாப்பாரப்பட்டி போன்ற ஊர்களைச் சான்றுகளாகக் குறிப்பிடலாம்.

## பட்டினம், புரம் :

பட்டினம் என்பது வணிக நகரத்தினைக் குறிக்க ஏற்பட்டதாகும். பட்டினங்கள் பெரும்பாலும் பிற்காலச் சோழர்கள், போசளர்கள் காலத்தில் பெரும் வளர்ச்சியை அடைந்தன. மேலும் கடற்கரை

ஓரங்களில் அமைந்த பெருநகரங்களையும் பட்டினம் என்றே அழைத்தனர். அயல் நாட்டார் வந்து வாணிகம் செய்த தலங்களாகவும் இவை புகழ்பெற்று விளங்கின. தருமபுரி மாவட்டத்தில் காவேரிப் பட்டிணம் என்ற ஊர் உள்ளது. இது தென்பெண்ணை ஆற்றங்கரையில் அமைந்த ஓர் வணிகத்தலமாகும். புரம் என்பது புரி எனவும் வழங்கும். தருமபுரியும் இதில் கொண்டு வரலாம். புரம் என்று முடியும் சில வணிக ஊர்கள் வருமாறு : புருஷபுரம், ஹளேபுரம், கங்கபுரம், கும்மளாபுரம்.

## சமுத்திரம் :

சில ஊர்ப் பெயர்களில் சமுத்திரம் என்ற வடசொல் இடம் பெற்றுள்ளது. பெரிய ஏரிகள் கடல் என்றும், சமுத்திரம் என்றும் வாரிதி என்றும் புனைந்துரைக்கப்பெற்றன. தருமபுரி மாவட்டத்திலும் ஐக்க சமுத்திரம், மல்லசமுத்திரம் போன்றவை உள்ளன. நீர் நிலையுடன் தொடர்புடைய ஊராகச் சமுத்திரம் விளங்குகிறது.

## பேட்டை :

தொழில்களால் சிறப்புப் பெறும் ஊர்கள் பேட்டை எனப்படும். பல்வேறு தொழில்கள் ஒன்று சேரும் இடத்தை குறிக்கவே இப்பெயர் எழுந்தது. எனவே தான் தமிழகத்தில் பெரு நகரங்களிலும் சந்தை கூடுதல் வழக்கமாக இருந்து வருகின்றது. அவ்வாறு கூடும் இடத்தை சந்தைப்பேட்டை என்பர். தருமபுரி மாவட்டத்தில் சிங்காரப்பேட்டை, பழம்பேட்டை போன்ற ஊர்கள் உள்ளன.

## கோட்டை, துருகம் :

கோட்டை என்பதும் துருகம் என்பதும் ஒரே பொருளைக் குறிக்கும் சொல். சற்று வேறுபடுத்திப் பார்த்தால் ஊரைச் சுற்றிலும் அரண் அமைக்கக் கோட்டை என்ற சொல்லைப் பயன்படுத்தினர் எனலாம். மலையைச் சுற்றி அரண் அமைப்பதைத் துருகம் என்று கொள்ளலாம். இருப்பினும் இரண்டும் அரண் அமைப்பதே முக்கியம் ஆகும். மண் கோட்டைகளும், கல் கோட்டைகளும் தருமபுரி மாவட்டத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன. தரைக்கோட்டைகள் பெரும்பாலும் மண்ணால் கட்டப்பட்டவை. அவை காலத்தின் கோலத்தாலும், சில எதிரிகளாலும் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

தருமபுரியில் தரைக்கோட்டைகளாக அதியமான்கோட்டை, தேன்கனிக்கோட்டை, தென்கரைக்கோட்டை எனப்பல ஊர்கள் கோட்டை என்ற பெயரைத் தாங்கி நிற்கின்றன.

மலைகளில் அமைந்த கோட்டை துர்க்கம் என்ற பெயரைப் பெறுகிறது. அவற்றில் பாலகொண்றாயர் துருகம், அஞ்செட்டி துருகம் எனப் பல ஊர்கள் காணப்படுகின்றன. இவ்வாறு ஊர்ப்பெயர்கள் ஏதேனும் ஓர் அடிப்படை காரணத்தை ஒட்டியே அமைகின்றன.

## பாளையம் :

படைவீரர்களுக்குரிய ஊர் பாளையம் எனப்படும். தமிழகம் முழுவதும் பல பாளையங்கள் காணப்படினும் தருமபுரிப் பகுதியில் காணப்படும் பாளையம், பாளையம் புதூர், போன்றவை போர்வீரர்கள் குழுவாகத் தங்கி இருந்தமையை எடுத்துரைக்கின்றன. இந்தப் பாளையம் புதூரில் பீரங்கி ஒன்று இருப்பது இந்தக் கருத்தை வலியுறுத்த அமைந்த சான்றாகத் திகழ்கின்றது. போர் வீரர்களைத் தனித்தனி குழுக்களாகப் பிரித்து நாட்டின் பாதுகாப்பிற்காக ஆங்காங்கே தங்க வைத்துள்ளனர். ஒரு பாளையத்தின் தலைவனைப் பாளையக்காரன் என்றழைப்பதும் உண்டு. பாளை வேடியப்பன் என்ற பெயரில் சில நடுகற்கள் அழைக்கப்படுகின்றன.

## கிரி :

மலையைக் குறிக்கும் கிரி என்ற வடசொல் சில ஊர்ப் பெயர் களில் காணப்படுகின்றன. இப்பெயர்கள் தருமபுரி மாவட்டத்தில் மிகவும் சிறப்பு வாய்ந்தவை ஆகும். இங்குப் புறத்தே மலைகளால் சூழப்பட்ட நாடு புறமலை நாடு என்றே பெயர் பெற்றது. இந்நாட்டில் கிருஷ்ணகிரி, அங்குசகிரி, சூளகிரி, போன்ற ஊர்கள் உள்ளன.

## கல் :

கல் எனும் சொல்லும் சில ஊர்ப் பெயர்களில் உண்டு. கல் என்பது பல பொருள்களில் வழங்கப்படும் சொல். வீரனுக்கு எடுக்கப்படும் நினைவுக் கல்லிற்கு "நடுகல்" என்று பெயர். கல் என்ற பின்னொட்டுடன் நெடுங்கல், கங்கல், தட்டக்கல் போன்றவை வழங்கப்படுகின்றன.

## போச்சம்பள்ளி :

இவ்வூர் தருமபுரியில் இருந்து 30கி.மீ. தொலைவில் திருப்பத்தூர் சாலையில் அமைந்துள்ளது. இவ்வூரில் கிடைத்த கி.பி. 13ஆம் நூற்றாண்டு சோமீஸ்வரதேவனது கல்வெட்டில் இவ்வூரைப் பற்றி குறிப்பிடும் பொழுது ''பந்தலன் பள்ளி திருவனந்தீஸ் வரமுடைய நாயனார்க்கு போச்சையன் பள்ளி தேவதானமாக விட்டேன்'' என்று போச்சையன்பள்ளி பெயர் வருகிறது. இதுவே போச்சம்பள்ளியானது. சிலர் செவிவழிச் செய்தியாக குறிப்பிடும் பொழுது போர்ச்செயன் பள்ளி என்பதே ஊரின் பெயர் என்றும் போரில் வெற்றி கொண்டவன் இருப்பிடம் என்றும் கூறி அதுவே இவ்வாறு அழைக்கப்படுகிறது என்பர்.

## நடசாலை :

கிருஷ்ணகிரி வட்டத்தில் நடசாலை என்ற ஊர் உள்ளது. நெடுசால், என்பது நடசாலை என்று மருவி வந்துள்ளது.

''ஸ்ரீமகா மண்டலீஸ்வரன் திரிபுவன மல்ல பூர்வாதிராயனே நெடுந்தேவர் கோயில் தானத்தார்'' என்று இறைவன் பெயர் உள்ளது.

காலப்போக்கில் ஊர் நடசாலை என்று திரிந்துள்ளது.

## அங்குசகிரி :

அங்குசகிரியில் அமைந்த மலையின் அமைப்பு யானைப் பாகனின் அங்குசத்தைப் போன்று காணப்படுகின்ற காரணத்தால் அங்குசகிரி என்று பெயர் பெற்று இருக்க கூடும் என்பர். இப்பகுதியை அங்குசராயலு என்ற மன்னன் ஆட்சி புரிந்ததால் அவன் பெயராலே அங்குசகிரி என்று ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கொள்வதே சாலச்சிறந்தது.

## பஞ்சப்பள்ளி :

மேலகிரி மலை அடிவாரத்தில் பஞ்சப்பள்ளி அமைந்துள்ளது. இதன் அருகில் சனத்குமாரநதி ஓடுகிறது. இங்குக் காணப்படும் குளம் விஜய நகர வைசிராய் ஒருவரால் கட்டப்பட்டு அதனைக் கிருஷ்ணராய சமுத்திரம் என்று பெயரிட்டு அழைத்தனர். தற்பொழுது அழைக்கப்படும் பஞ்சப்பள்ளி எனும் பெயர் ஹைதர் அல்லது திப்புவின் காலத்தில் ஏற்பட்டிருக்கக் கூடும். பள்ளி, ஹள்ளி, பட்டி என்ற பின்னொட்டுகளுடன் பல ஊர்கள் மாவட்டத்தில் உள்ளன.

## சிந்தல்பாடி :

சிந்தகம் என்பது புளியமரத்தை குறிப்பது. பாடி என்பது முல்லை நிலத்தில் அமைந்த ஊர் என்று சங்க இலக்கியங்களில் பொருள் கொள்வர். அதன் அடிப்படையில் புளிய மரங்கள் அதிகமாக இருந்த இடம் என்பதால் இதனைச் சிந்தகப்பாடி என்றே அழைத்து வந்துள்ளனர். பின்னர் அது சுருங்கி சிந்தல்பாடி என்றானது. சிந்தகம்பள்ளி என்ற ஊரும் இதன் அடிப்படையில் தோன்றியது என்றே கொள்ளலாம். சிந்தகப்பாடி என்ற பெயர் சில கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன.

## ஊத்தங்கரை :

கி.பி. 13-14ஆம் நூற்றாண்டில் உள்ள கல்வெட்டு இவ்வூரைப் பற்றி குறிக்கும் பொழுது "ஆடையூர் நாட்டு எயில் நாட்டு தென்பற்று ஊர் கரை மேனோக்கின மரமும்" என்று ஊரின் பெயரைக் குறிக்கும் இடத்தில் ஊர் கரை என்றே காணப்படுகிறது. தென்பற்றின் கரையில் அமையப்பட்ட ஊர் எனவே ஊர்கரை என்று அழைத்து வந்த பெயர் ஊத்தங்கரை என மருவி நின்றது.

## வரட்டனப்பள்ளி :

வரட்டனப்பள்ளி பிற்காலத்தில் மாற்றம் பெற்றது என்பதற்கு வரட்டனபள்ளி நரசிம்மசாமி கோயில் அருகே உள்ள குன்றில் கிடைத்த கல்வெட்டு தெளிவான சான்றாக நிற்கின்றது. அக்கல்வெட்டில் பிராமணருக்குச் சர்வ மான்யமாகக் குடுத்த நில தானத்தைக் குறிக்கும் பொழுது வரட்டன பள்ளியின் பழைய பெயர் கங்கராயச்சதுர்வேதி மங்கலம் என்றுள்ளது.

## கல்வெட்டு வாசகம் வருமாறு :

*"அங்கணப் பற்று வரட்டனப்பள்ளியான*
*கங்கராயச் சதுர்வேதி மங்கலம் நஞ்செய்*
*புஞ்செய் நாற்பாற் கெல்லையும் மேனோக்கின*
*மரமும் கீனோக்கின கிணறும் தேவதானம்*
*திருவிடையாட்டா முட்பட இருபத்தெட்டு பிராமணர்க்கு*
*சர்வ மான்யமாக குடுத்தேன்."*

என்று குறிக்கின்றது. இதில் வரட்டனப்பள்ளியின் பெயர் கங்கராயச் சதுர்வேதி மங்கலம் என்றும் கல்வெட்டு வெட்டப்பட்ட காலத்தில் வரட்டனப்பள்ளி என்பதும் இருந்ததற்கான சான்றாக அமைகின்றது.

## கும்மளாபுரம் :

கும்பளாம்பூ என்பது தாமரை அல்லது குமிழம்பூ. இவ்வூர் தாமரை நகர் என்று அழைக்கப்பட்டுள்ளது. இங்கு 101 கோயில்கள், 101 குளங்கள் இருந்ததாக மாவட்ட விவர நூல் குறிப்பிடுகின்றது. காரணப் பெயராக அமைந்தது போலத் தோன்றுகிறது.

## பரிகம் :

கி.பி. 12ஆம் நூற்றாண்டு நடுகல் ஒன்று ஊருக்குத் தெற்கு எல்லையில் காணப்படுகின்றது. அந்தக் கல்வெட்டில் பரிகம் என்ற ஊரின் பெயர் பற்றி குறிக்கும் பொழுது பரிகம் என்று உள்ளது.

*வீர சோழ வாணராயந்நாந மாசந் பவகத்துக்காலி*
*பாஞ்சு போக நிற்கக் காலி மீட்டுப் பட்டான்"*

என்று காணப்படுகின்றது.

இங்கே குறிப்பிடும் பவகம் என்பதே பரிகம் ஆகும். இங்கே ஆநிரை மீட்கும் பொருட்டு வீரன் சென்றபோது இறந்துபட்டுள்ளான். பவகம் என்பது பாம்புகள் நிறைந்த இடம் என்பது பொருள். பரி என்றால் குதிரையாகும். எனவே பரிகமும் பொருத்தமேயாகும். வேறோர் கல்வெட்டு பரிகம் என்று கூறுகிறது.

## இரத்தினகிரி :

சனத்குமார நதியின் தெற்குப் பகுதியில் பேவு நத்தம் கிராமத்தின் அருகில் இரத்தினகிரி அமைந்துள்ளது. இது ஒரு தன்னாட்சி பெற்ற அரசாக இயங்கி வந்துள்ளது. பின்னர் ஜெகதேவிராயர் தன்வசம் வைத்திருந்தார். கி.பி. 1652 இல் தேன்கனிக் கோட்டையை ஆண்ட இட்டிபால் ராவ் என்பவரிடம் இருந்து மைசூரை ஆண்ட கந்திரவ நரசராஜா பெற்றார். இட்டிபால்ராவ் பெயரால் இட்டிகல் துருகம் என்றும் அதுவே வீரபத்திர துருகம் எனவும் இரத்தினகிரி என்றும் வழங்கி வருகிறது என்பர்.

# 14. தருமபுரி அகழ்வைப்பகம்

தருமபுரிப் பேருந்து நிலையத்திற்கு அருகில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் பராமரிப்பில் இருந்து வரும் அகழ்வைப்பகம், நடுகற்களுக்கான அகழ்வைப்பகம் எனலாம். சிவசுப்பிரமணியம் என்ற மாவட்ட ஆட்சித்தலைவரின் பெருமுயற்சி யால் இந்த அகழ்வைப்பகம் உருவாக்கப்பட்டது. அகழ்வைப்பகம் ஏற்படுத்துவதில் மாவட்ட ஆட்சியருக்குத் தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை துணையாக இருந்தது. ஆகஸ்டு 1983 முதல் 1988 மே வரை இவ்வகழ்வைப்பகத்தின் காப்பாட்சியராகவும் மாவட்டத் தொல்லியல் அலுவலராகவும் பணியாற்றிய காலத்தில் இந்நூலாசியருள் ஒருவரான ச.கிருஷ்ணமூர்த்தி அரிய நடுகற்கள் கண்டறிந்ததுடன் அவைகளை அகழ்வைப்பகத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பித்துள்ளார். நடுகற்கள் தொடர்பாகக் கருத்தரங்கு நடத்தியதுடன் ‘தருமபுரி வரலாறும் பிரகலாத சரித்திரமும்’ என்ற பெயரில் நூல் எழுதி அகழ்வைப்பகத்தில் வெளியிடவும் செய்துள்ளார். மற்றோர் நூலாசிரியர் ச.செல்வராசு திரு சுப்பிரமண்யத்துடன் சேர்ந்து அகழ்வைப்பகம் குறித்துச் சிறிய கையேடு எழுதியுள்ளார். அகழ்வைப்பகத்தில் புதிய கற்காலக் கருவிகள் பெருங்கற்காலப் பானை ஓடுகள், தாழி, பேழை, ஆகியவை வைக்கப்பட்டுள்ளன.

## பனைகுளம் நடுகல் :

தருமபுரிக்கு அருகில் பாப்பாரப்பட்டி உள்ளது. இவ்வூருக்கு அருகேயுள்ள பனைகுளம் என்ற ஊரில் இருந்த இரண்டு நடுகற்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இரண்டும் பல்லவர் கால நடுகற்கள் ஆகும். காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டு எனலாம். வீரன் உருவம்

புடைப்புச் சிற்பமாக இன்றி வெறும் கோடுகளால் (கோட்டுருவம்) வரையப்பட்டு வீரன் உருவத்திற்கு வலப்புறமும் கீழேயும் வரிவரியாக எழுத்துகள் வெட்டப்பட்டுள்ளன. வீரன் நின்ற நிலையில் இடது கையில் வில் ஒன்றை ஏந்தியபடி வலது கையில் அம்பை வைத்துள்ளான். தலைமுடி, தலைப்பகுதியின் நடுவில் இரண்டாக வகிடு எடுக்கப்பட்ட நிலையில் உள்ளது. தொடை வரை ஆடை காட்டப்பட்டுள்ளது. மகேந்திரவர்மனுடைய 12 ஆவது ஆட்சி யாண்டில் வெட்டப்பட்ட நடுகல் இதுவாகும். 'ஊர் பொருளெறிந்து' என்ற தொடர் இதில் உள்ளது. இதே ஊரில் இருந்து கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ள வேறோர் நடுகல்லில் மயீந்திர பருமர் பெயர் உள்ளது. வாளும் வில்லும் ஏந்தியுள்ள இந்நடுகல் வீரன் உருவமும் கோட்டுருவமாகவே உள்ளது. எழுத்துகள் மிகவும் பொறிந்துள்ளன.

தட்சிணாமூர்த்தி, காளி, துர்க்கை, சமண தீர்த்தங்கரர், புத்தர் எனப் பலக் கற்சிற்பங்கள் இங்கே உள்ளன. பழங்கால மக்கள் பயன்படுத்திய அணிகலன்கள், மண்ணால் ஆன காதணிகள், சங்கு வளையல்கள், புகைப்பானைகள், ஓலைச்சுவடிகள், மரச்சிற்பங்கள், பழைய துப்பாக்கிகள், பீரங்கிக் கல்குண்டுகள், பத்துத்தலை இராவணன் சிற்பம், மோதூர் அகழாய்வில் கண்டெடுத்த தொல்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. எல்லாவற்றையும் விட நடுகற்கள் மிகுதியாக வைக்கப்பட்டுள்ளதால் அவை குறித்து விரிவாகக் காண்போம். சந்தூரிலிருந்து வந்த எட்டு நடுகற்களில் ஏழு கட்டனை பருமருடையதாகும்.

## மாந்தபருமன் நடுகல் :

தருமபுரி அருகே பென்னாகரம் செல்லும் வழியில் கடகத்தூரும் கொளகத்தூரும் உள்ளன. இவ்விரு ஊர்களில் இருந்து கொண்டு வந்து அகழ்வைப்பகத்தில் வைக்கப்பட்டுள்ள சிற்பங்களுள் புத்தர் சிலைகளும் நடுகல் சிற்பமும் குறிப்பிடத்தக்கவையாகும். கொளகத்தூரில் இருந்து கொண்டு வரப்பட்ட நடுகல்லில் மாந்தபருமன் என்ற மன்னன் பெயர் உள்ளது. பல்லவ மன்னன் போல் பெயர் இருப்பினும் பல்லவர் காலத்தில் தகடூரை யொட்டிய பகுதியில் சுதந்திரமாக நாடாண்ட மன்னனாக இவன் இருந்துள்ளான் எனலாம்.

நடுகல் வீரன் உருவத்திற்கு மேல் பகுதியிலும் வலப்புறத்திலும் வட்டெழுத்தில் கல்வெட்டு காணப்படுகிறது. வீரன் இடது கையில் வில்லையும் வலது கையில் குறுவாளையும் ஏந்தியுள்ளான். மாந்தபருமனுடைய 22ஆவது ஆட்சியாண்டின்போது விரிஊர் நாட்ட வர்கரு இரும்புறை சாத்தன் என்பவனோடு தொறுக்கொள்ள சென்று பட்ட வீரன் ஒருவனை இந்நடுகல் குறிப்பிடுகிறது. வர்கரு என்பது ஊர்ப்பெயராக இருக்கலாம். கொளகத்தூர் அருகில் 'வரகூரு' என்ற பெயரில் ஓர் ஊர் உள்ளது. அவ்வூரே 'வர்கரு' என்று நடுகல் கல்வெட்டில் வெட்டப்பட்டுள்ளது. இந்த வரகூரைச் சார்ந்தவனே இரும்புறை சாத்தன் ஆவான். மாந்தபருமனுடைய மற்றோர் நடுகல் செங்கம் வட்டம் மேல்புஞ்சையில் உள்ளது. கடலாடியில் வேறோர் நடுகல் உள்ளது. மாந்தபருமர் என்ற பெயர் பொன்மாந்தனார் என்ற பெயருடன் ஒன்றுபடுகிறது. எனவே கங்கரின் கீழ் இருந்த பொன்மாந்தனாரே சுயாட்சி பெற்ற நிலையில் மாந்தபருமராக நாடாண்டிருக்கலாம். பொன்மாந்தனார் பற்றி அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளார்கள். சந்தூரிலிருந்து கொண்டு வந்து தருமபுரி அகழ்வைப்பகத்தில் வைத்துள்ள நடுகற்கள் வேறோர் இடத்தில் இடம் பெறுகின்றன.

## லளிகம் நடுகல் :

தருமபுரி அருகே லளிகம் என்ற ஊர் உள்ளது. இவ்வூரில் இருந்து நரசிம்மவர்மன் காலத்ததாகக் கருதப்படும், சிதைந்த நிலையில் கூடிய நடுகல் கல்வெட்டு ஒன்று அகழ்வைப்பகத்தில் உள்ளது.

## நவகண்ட சிற்பங்கள் :

தருமபுரி அகழ்வைப்பகத்தில் மூன்று நவகண்ட சிற்பங்கள் உள்ளன. அம்மூன்றில் இரண்டு பெண்ணேஸ்வரமடத்தில் இருந்து கொண்டு வரப்பட்டவை. காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டாகும். இரண்டு கைகளாலும் வாளைப் பிடித்தபடி கழுத்தினை அரிவது போல் வீரர்கள் காட்டப்பட்டுள்ளனர். வீரருடைய தலை அலங்காரம் எழிலுடன் உள்ளது. மூன்றாவது நவகண்ட சிலை புதுமையானது. பாய்ந்து செல்லும் குதிரை மீது அமர்ந்த ஒரு வீரன் தன் தலைக்குமேல் இருகையினால் வாளைப் பிடித்த நிலையில் உள்ளான். இறந்துபட்ட

வீரனுடைய தலையைக் கூடை ஒன்றில் வைத்து வேறோர் வீரன் எடுத்துச் செல்வதுபோல் சிற்பம் உள்ளது.

## பூசாரி நடுகல் :

பூசை செய்யும் பூசாரியின் நடுகல் சிற்பம் ஒன்றும் அகழ்வைப் பகத்தில் உள்ளது. இடக்கையில் பூசைமணியும் வலக்கையில் வாளும் இவன் வைத்துள்ளான். இடையாடையில் சிறிய கத்தி உள்ளது. பூசாரி அருகில் மலர் ஏந்திய ஒரு பெண் சிற்பம் உள்ளது. இச்சிற்பம் போச்சம்பள்ளியில் இருந்து வந்ததாகும். காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டாகும்.

## சதிக்கல் சிற்பம் :

தருமபுரி அகழ்வைப்பகத்தில் குந்தாணியில் இருந்து கொண்டு வந்து வைத்துள்ள இரண்டு சதிக்கல் சிற்பங்கள் கி.பி. 13ஆம் நூற்றாண்டாகும்.

## புலிக்குத்திப்பட்டான் கற்கள் :

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள் விலங்குகள் வாழ்வதற்கேற்ற மாவட்டங்கள் எனலாம். புலிக்குத்திப்பட்டான் கற்கள் இவ்விரு மாவட்டங்களில் மிகுதியாக உள்ளன. தருமபுரி அகழ்வைப்பகத்தில் புலிக்குத்திப் பட்டான் கற்கள் நான்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு புலிக்குத்திப்பட்டான் நடுகற்கள் கிருஷ்ணகிரி வட்டம் பிக்கன ஹள்ளி என்ற ஊரில் இருந்து கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ளன. ஆனந்தூர் என்ற ஊரில் இருந்து இரண்டு புலிக்குத்திப்பட்டான் கற்கள் எடுத்து வந்து வைக்கப்பட்டுள்ளன. இரண்டும் கி.பி. 15ஆம் நூற்றாண்டு ஆகும். ஆனந்தூரில் இருந்து வந்த புலிக்குத்திப்பட்டான் கற்களில் ஒன்று 30 வரிகளைக் கொண்ட கல்வெட்டுடன் வீரன் புலியுடன் மோதும் காட்சி செதுக்கப் பட்டுள்ளது. விஜய நகர மன்னர் காலத்தில் முக்கண்ண உடையார் ஆட்சியின் போது பரூர் பற்றில் ஆனந்தூரில் இருக்கும் முதலிகளில் ஐயன் வெள்ளைக் காமினியார் விழுப்பரையர் பெயரும் வயிரக்கண் பெயரும் இதில் உள்ளன. 21ஆம் வரி முதல் இறுதி வரி வரை எழுத்துகள் பொரிந்துள்ளதால்

முழு வாசகம் அறிய முடியவில்லை. கல்வெட்டின் தொடக்கத்தில் விஜயநகர வேந்தர் மெய்க்கீர்த்தி உள்ளது. மிண்டகிரி என்ற ஊரில் காணப்படும் நடுகல் ஒன்றிலும் முக்கண்ண உடையார்க்கு யாண்டு பதினாலாவது என்றுள்ளது. இரண்டாம் புக்கரே முக்கண்ணரா? அல்லது முக்கண்ணுடையார் என்றே ஓர் அரசர் இருந்தாரா? என்பது தெரியவில்லை. விஜயநகர வேந்தர்கள் பொதுவாக ஆட்சியாண்டு குறிப்பிடுவதில்லை. சக ஆண்டும் கலியாண்டும் தமிழ் ஆண்டுமே குறிப்பிடுவர். எனவே விஜயநகர மன்னர் மரபில்லாத வேறோர் அரசமரபினராக இந்த முக்கண்ணரைக் குறிப்பிடலாம். இவ்வகழ் வைப்பகத்தில் காரிமங்கலத்தில் இருந்து கொண்டு வந்து வைத்துள்ள இராவண மரச்சிற்பம் கம்பீரமாக உள்ளது. மேற்பரப்பு ஆய்விலும் மோதூர் அகழாய்விலும் கிடைத்த தொல்பொருட்களும் பழைய துப்பாக்கிகளும், பழைய காசுகளும், முதுமக்கள் தாழியும், ஈமப்பேழையும் வேறு சில பழம் பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அந்தேவனப் பள்ளியில் இருந்து கொண்டு வந்து வைத்துள்ள நொளம்பர் காலத்துத் துர்க்கை சிற்பம் எழில் வாய்ந்ததாகும். மாவட்டத்தில் சேகரிக்கப்பட்ட ஓலைச் சுவடிகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## தகடூர் நடுகல்

தருமபுரி மதிகோன் பாளையம் அருகில் நெடுஞ்சாலையில் இருந்த நடுகல் தற்போது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. கல்வெட்டு வாசகம் வருமாறு :

சுவஸ்திஸ்ரீ அரிமிதைய மாவலிவாணராயர் கங்கநாடும், புறமலை நாடும், கோயினூர் நாடும், கோவூர் நாடும், தாயனூர் நாடும், பற்ற நாடும் ஆன அவர்க்கு தான் ஆகி பிள்ளை கொண்டு உள்புகுந்து வஞ்சித்து நாடு கொண்டான் நுளம்பர். அவன் போரில் கருப்பிணி அருளராக அவளைக் காத்திருந்து ஆண்பிள்ளை பெறுவதும், தகடூர் புகுந்து நுளம்பன் பலத்தோடே துணிந்து நாடு பாவினார் சங்கரக் குட்டியார் அவரோடு உடன்புகுந்து தகடூரில் மீட்டார் நாகந்தை சங்கரக்குட்டியார் கல் நாடு.

# 15. கிருஷ்ணகிரி - அரசு அருங்காட்சியகம்

தமிழ்நாட்டில் வரலாற்றுக்கு முந்தைய காலம் தொடங்கி இன்றைய காலம் வரை வரலாற்றில் இடம் பெற்ற அரிய சான்றுகளையும் தொல்பொருட்களையும், ஆவணங்களையும் பதப்படுத்தப்பட்ட விலங்குகள் மற்றும் பறவைகளின் உடல்களையும் மாவட்டந்தோறும் உள்ள அருங்காட்சியகங்களில் வைத்து அரசு பாதுகாக்கிறது. நம் முன்னோர்களின் கலை, இலக்கியம், பண்பாடு மற்றும் அறிவியல் மேம்பாட்டினை அருங்காட்சியகத்துறை வெளிப்படுத்தி வருகிறது எனலாம்.

கிருஷ்ணகிரி நகரில் அமைந்துள்ள அரசு அருங்காட்சியகத்தில் இந்திய நாட்டின் சிற்பத் திறனை வெளிப்படுத்தும் சிற்பங்களின் மாதிரி உருவங்களும், நடுகற் சிற்பங்களும், காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன.

இவற்றுடன் உயிரியல், தாவரவியல், நாணயவியல் என்று பிரித்துக் காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மானிடவியல் பகுதியில் மனிதனின் பரிணாம வளச்சி பற்றி மாதிரி காட்சிக் கூடம் அமைத்து விளக்கப்பட்டுள்ளது.

கோட்டைகளும், அங்கே காணப்படும் சிற்பங்களையும் துல்லியமாக அறியும் வண்ணம் நிழற்படங்கள் வைக்கப் பட்டுள்ளன.

இவற்றோடு இம்மாவட்ட மலைவாழ் மக்கள் பற்றிய விவரங்களும் அவர்களின் ஆடை அணிகலன்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

சுதந்திரப் போராட்ட வீரர்கள் பற்றிய குறிப்புகள் அடங்கிய பட்டியல் பலகையும், அவர்களின் உருவப்படங்களும் இடம் பெற்றுள்ளன. சமீபத்தில் தொடங்கிய இவ்வருங்காட்சியகம் எதிர்காலத்தில் பெரிய வளர்ச்சியடையும் எனலாம்.

# 16. சின்னக் கொத்தூர் நடுகற்கள்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்புடைய ஊர் சின்னக் கொத்தூர். இந்தச் சின்னக் கொத்தூர் குஞ்சம்மா கோயிலின் கூரையில் ஐந்து நடுகல் கல்வெட்டுகள் உள்ளன. அத்திமல்லன் நடுகல் அவைகளில் ஒன்றாகும். ஆறு வரிகளுடன் கூடிய இந்த நடுகல் பழந்தமிழரின் சிலம்புப் போரினை அழகாகச் சித்தரிக்கிறது. வீரன் வலதுகையில் குறுவாளை ஏந்தி இடது கையில் சிலம்பினை முன் நீட்டி அடி பெயர்த்து வைத்துத் தாக்கவரும் எதிரியின் குடுமியைப் பிடித்தநிலையில் உள்ளான். அவனைப் பின்னால் இருந்து சிலம்பால் (மூங்கில்கழி) ஒருவன் அடித்து வீழ்த்துகிறான். பின்புறமுள்ள வீரன், முன்புறமுள்ள வீரன் இருவரும் சிலம்பு வைத்திருக்கும் தோற்றம் இக்காலச் சிலம்புப் பயிற்சியை அப்படியே காட்டுகிறது. இங்கே மூன்று வீரர்கள் உள்ளனர். இவர்களுக்குக் கீழ்ப் பகுதியில் கத்தி, கேடயம் ஏந்திய வேறு மூன்று வீரர்கள் போரிடும் தோற்றத்தில் உள்ளனர். நடுகல் வீரன் உருவம் மட்டும் மிகப் பெரிதாக வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது. திரிபுவன மல்லபூராதிராயன் அத்திமல்லன் தாமந்த தேவற்கடியான் மகன் மாராழ்வான் என்பவன் நரசிங்க தேவனுக்குப் படைத் துணையாய்ச் சென்று வீர மரணம் அடைந்துள்ளான். இந்நடுகல்லில் மங்கலச் சொல் ஏதுமில்லை. குறுநில மன்னர்களாக அத்திமல்லர்கள் கிருஷ்ணகிரியையொட்டிய பகுதிகளில் குறிப்பாகச் சின்னக் கொத்தூரில் இருந்துள்ளனர். இதில் அத்திமல்லன் ஆகிய மல்ல பூராதியன் அரசன் ஆவான். இவனுடைய முதலிகளில் (படைத்தலைவர்கள்) தாமந்த்தேவன் ஒருவன் ஆவான். இந்தப் படைத்தலைவன் மகன் மாராழ்வான் என்பவன் நரசிங்க தேவனுடன் சேர்ந்து கொண்டு எதிரியைத் தாக்கினான். ஆயின் போரில் இறந்துபடவே நடுகல்லாகி விட்டான். இரு குழுக்களிடையே

பகைமை இருந்துள்ளது. நரசிங்கனுக்காக மாண்ட மாராழ்வான் தந்தை அத்திமல்லன் அதிகாரிகளில் ஒருவன். முதலி என்பதைச் சாதிபட்டமாகவும் கருதலாம். இதே கோயிலில் மற்றொரு நடுகல், 5 வரிகளுடன் சிற்பங்களையும் கொண்டுள்ளது. வீரன் இடக்கையில் வில்லில் நாணேற்றியபடி வலக்கையில் குறுவாள் வைத்துள்ளான். எதிரில் உள்ள வீரன் விடும் அம்பு வீரன் கழுத்திற்கு நேராகப் பாய்கிறது. முரசர்காமுண்டச் செல்வ நாயகன் என்பவன் இராகுத்தனுடன் போரிடச் செல்வநாயகன் இறந்துள்ளான். இராகுத்த மல்லன் என்பவன் அத்திமல்லன் மரபில் வந்தவனாக இருக்கலாம். பூசலில் பட்டான் என்று கல்வெட்டு முடிகிறது. இக்கல்வெட்டு கி.பி. 14ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியைக் கொண்டுள்ளது.

குஞ்சம்மா கோயிலில் உள்ள மூன்றாவது நடுகல் ஏழுவரிகளைக் கொண்டுள்ளது. இந்த நடுகல்லில் உள்ள வீரர்களில் ஒருவன் மிக உயரமாகவும் மற்றொருவன் உயரம் குறைந்தும் காணப்படுகின்றனர். உயரமாக உள்ள வீரன், இடது காலை ஊன்றி வலது காலைத் தூக்கி அடியெடுத்து, வேகமாகச் செல்வது போல் காட்டப்பட்டுள்ளான். வலக்கரத்தில் குறுவாளும் இடக்கரத்தில் வில்லும் (வில்லில் அம்பும் சேர்ந்துள்ளது) ஏந்தியுள்ளான். இரண்டாவது வீரன் தன் கையில் உள்ள வேலினால் எதிரியைத் தாக்குவது போல் உள்ளான். இவ்வீரனின் மற்றோர் கரத்தில் (இடதுகரம்) கேடயம் உள்ளது. இவ்வீரனின் இடக்கால் முட்டிக்குக் கீழே ஓர் அம்பு பாய்ந்து செல்கிறது. இவ்விரு வீரர்களுக்காக இந்நடுகல் எடுக்கப்பட்டுள்ளது.

பூரத்தாழ்வார் செலவாண்டையின் ஆட்சியின்போது பொத்தாமரை சிறையிலே விட்டு, கொள்ளையடிக்க வந்தபோது பூசல் மேற்கொள்ள சோமயனின் தம்பி வீம்மையனும் மகன் வடிவமை நாயகனும் போரில் பங்கு பெற்று வீரமரணம் அடைந் துள்ளார்கள். மேலே குறிப்பிட்ட உயரமான வீரர் அண்ணனாகவும் உயரம் குறைந்தவன் தம்பியாகவும் இருக்கலாம். சோமைய நாயகனுடைய இரு பிள்ளைகள் பூசல் செய்த செயலும் வீரமரணம் அடைந்த விபரமும் இதில் உள்ளன.

பூரத்தாழ்வார் என்பவர் செல்வாண்டை (செல்லாண்டை?) மேலே எடுத்து பொத்தாமரை திறைலே விட்டு பூசல்செய்ய என்று கல்வெட்டின் தொடக்கப் பகுதி உள்ளது.

நான்காவது நடுகல்லும் ஐந்து வரிகளில் உள்ளது. வீரன் வலக்கையை மேலே தூக்கிய நிலையில் குத்துவாளுடன் காட்சி தருகிறான். இவன் தன் இடது கையில் உள்ள வாளைக் கொண்டு குதிரையை வெட்டுகிறான். குதிரையும் இவன் மீது பாயத் தயாராகிறது. அருகில் குதிரை வீரன் கையில் கத்தியுடன் காட்சி தருகிறான்.

*பூர்வாதியா குமரனானச் சிக்கரசிறுப்*
*பிள்ளைகளில் சொக்கந் கருவாயன்*
*பள்ளி இடுபூசலில் குதிரை குத்திபட்டான்*

என்பது கல்வெட்டு வாசகமாகும். சொக்கன், கருவாயன்பள்ளி இடுபூசலில் குதிரையுடன் போரிட்டுக் குதிரை குத்தி இறந்துள்ளான். கருவாயன்பள்ளி என்பதை ஊராகக் கருதாமல் சொக்கனுடைய விருதுப் பெயராகவும் பொருள் கொள்ளலாம். பள்ளி என்பது வன்னிய மரபில் அல்லது பள்ளர் மரபில் வந்தவரைச் சுட்டும். சிறுப்பிள்ளை கடைசி மகனைச் சுட்டும். குமரனான சிக்கரன் கொக்கனின் தந்தையாவான். குஞ்சம்மா கோயிலில் உள்ள ஐந்தாவது நடுகல் எட்டு வரிகளைக் கொண்டுள்ளது. திரிபூவன மல்ல பூர்வாதராயந்தக தேவராயன் என்பவன் சிற்றரசன். பொதும்பர் கோட்டையைக் கிர மாணிக்க சணாகர் அழிச்சபோது, பொன்மாணி விராப்பிச்ச ஆண்டை மகன்... மகன் திருமலையில் அடி எல்லையில் ஆண்டைக் கூறுபட்டார். எதிரி, கோட்டையை அழித்தபோது அதனைக் காக்கப் பொன்மாணி விராப்பிச்சையின் ஆண்டை மகன் ஆண்டை ஈடுபட்டுள்ளான். திருமலை எல்லையில் ஆண்டை இறந்துபட்டுள்ளான். (நடன காசிநாதன் கல்வெட்டிதழ் 8 த.தொ.ஆ.துறை சென்னை) மேற்கண்ட நடுகல் கல்வெட்டுகளில் சில வரிகள் வருமாறு.

*திரிபுவன மல்ல பூராதிராயன் அத்திம*
*ல்லன் முதலிகளில் தாமந்ததே*
*வற்கடியார் மகன் மாராழ்வ*
*ான். நரசிங்க தேவநுக்*
*கு படைத்துணை போய்பட்டான்.*

கங்கமன்னன் இரண்டாம் பிருதிவி பதிக்கு ஹஸ்தி மல்லன் (அத்திமல்லன்) என்ற பட்டமிருந்தது. முதலாம் பராந்தக

சோழனுடைய சிற்றரசர்களில் இவனும் ஒருவன். பாணாதிராஜன் என்ற பட்டத்தை முதலாம் பராந்தகன் இவனுக்கு அளித்துள்ளான். கல்வெட்டின் காலம் கி.பி.10 ஆம் நூற்றாண்டாகும்.

*1. முரசர் காமுண்ட....*
*2. செல்வ நாயகன் அ*
*3. த்தி மல்லன் பட்ட*
*4. ப் பூசலில் பட்டான்*

அரசன் பெயர் இல்லை. எனினும் இரண்டாம் பிருதிவிபதி காலத்ததாக இருக்கலாம்.

*ஸ்வஸ்தி ஸ்ரீ பூரா*
*த்தாழ்வார் செவைாண்டை*
*மேலே எடுத்து பொத்தாம*
*ரை திறைலே விட்ட பூசல் செ*
*யைசிலே சோமைய்யர் நாய*
*க மகன் வடிவமைய நாயகன்*
*தம்பியும் மகனும் பட்டார்.*

இருவர் இறந்துபட அவ்விருவருக்காக இந்நடுகல் எடுப்பிக்கப் பட்டது.

# 17. ஆங்கிலேயர் காலத்தில் தருமபுரி மாவட்டம்

மூன்றாம் மைசூர் யுத்தத்தின் இறுதியில் (1792 A.D.) சேலம் மாவட்டம் ஆங்கிலேயர் வசமானது. கேப்டன் ரீச் முதல் ஆட்சியர் ஆனார். இவர் முதலில் கிருஷ்ணகிரியில் இருந்து வந்தார். சேலம் மாவட்டத்திற்குச் சேலம் தலைமையிடமாகவும் கிருஷ்ணகிரி தாலுக்காவாகவும் அமைக்கப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் சேலம் மற்றும் கிருஷ்ணகிரி ராயக்கோட்டை, சங்ககிரி, நாமக்கல், ஆத்தூர் முதலிய இடங்களில் பட்டாளங்கள் இருந்தன. கொங்கு நாட்டில் இருந்த வரித்தீர்வை ரயத்துவாரி என்ற நேரிடைத் தீர்வையாகும்.

கிருஷ்ணகிரி கோட்டை ஹைதர் காலத்தில் பலமுறை முற்றுகை இடப்பட்டது. ஆங்கிலேயர் பிடித்த பின்பும் இது ஒரு ராணுவத் தளமாகத் திகழ்ந்தது. சிலசமயம் மாவட்டத் தலைமையிடத்தையும் பெற்றிருந்தது. 1832இல் இங்கிருந்த படை நீக்கி விட்ட பிறகு இதன் பெருமை குன்றிவிட்டது. புதுப்பேட்டையை 1794இல் கிரஹாம் கட்டினார். சென்னை கவர்னர், வந்த போது அதற்கு தௌலதாபாத் என்று பெயரிட்டார். இப்பெயரே இன்றும் நிலைத்து விட்டது.

ஐதர் 1761, மற்றும் 1766இல் படையெடுத்தார். 1767இல் மராட்டியர்கள் படையெடுத்தனர். பல ஊர்களையும் பிடித்துக் கொண்டு அவர்கள் சேனை பாரமகால் வரைக்கும் வந்து விட்டது. ஐதரால் அதை தடுக்க முடியாமற் போக உடனே ஒப்பந்தம் செய்து கொண்டு பணம் கொடுக்க அதைப் பெற்றுக் கொண்டு மராட்டியர்கள் திரும்பி விட்டனர்.

கம்பெனி துருப்புக்களுக்குக் கர்னல் ஸ்மித் என்பவர் தலைமை தாங்கினார். சென்னையில் இருந்து 3000 துருப்புக்கள் பாரமகாலை நோக்கி வந்தன. வாணியம்பாடி, திருப்பத்தூர், காவேரிப்பட்டணம்,

பிடிப்பட்டன சூன் 3இல் கிருஷ்ணகிரி முற்றுகை இடப்பட்டது. அதற்குள் ஸ்மித் பெங்களூரில் இருந்து வந்து தலைமை ஏற்றுக் கொண்டான். ஆகஸ்ட் மாதத்தில் ஐதரும் நிஜாமும் சேர்ந்து கிருஷ்ணகிரி வழியாக வந்தார்கள். 1797இல் ஐதர் காக்கங்கரை பாளையம் இறங்கியிருந்த ஆங்கிலேயரைச் சூழ்ந்து கொண்டான். திடீரென்று தாக்கி ஆங்கிலேயப் படைகளில் 1/3 பங்கைக் கொன்று கால்நடைகளை பிடித்துக் கொண்டான். ஐதர், காவேரிபட்டணம் வந்து மாக்கேயின் வசத்திலிருந்த சேனையைத் தாக்கினான். கர்னல் ஸ்மித் சிங்காரபேட்டை வழியாக திருவண்ணாமலை சென்றான். ஐதர் பின் தொடர்ந்து செங்கத்தில் போர் புரிந்தான்.

ஜெனரல் உட்டும், ஸ்மித்தும் மீண்டும் போருக்குச் சென்றனர். ஓசூர், பாகலூர் முதலிய இடங்களில் சமயம் பார்த்துக் கொண்டு இருந்தனர். ஐதருடைய படை தொந்தரவு செய்து கொண்டே இருந்தது. நவம்பர் 20ஆம் தேதி ஆறலேரி என்ற இடத்தில் தனியாக உட் அகப்பட்டுக் கொண்டான். அதற்குள் துணைப்படை வரவே ஐதர் விலகிக் கொண்டான்.

இந்தச் சமயம் பார்த்து ஐதர் பெரும் படையைத் திரட்டிக் கொண்டு கஜ்ஜல் கட்டிக் கனவாய் வழியாக தானே நேராகக் கிழக்கே சென்றான். சேலம் வட்டத்தில் இருந்த எல்லா ஊர்களும் ஒன்றன்பின் ஒன்றாக பிடிபட்டன. பிறகு ஈரோடு, கரூர், திண்டுக்கல் ஆகிய ஊர்களை டிசம்பர் இறுதியில் ஐதர் பிடித்துக் கொண்டான். பிறகு ஐதர் செய்த சாகசச் செயல் சரித்திரத்தில் இடம் பெற்றது. தன்னுடைய சேனைகள் முழுவதும் திரட்டி பாராமகாலுக்கு அனுப்பினான்.

6000 குதிரை, 300 காலாட்படைகளை மட்டும் கொண்டு 3 நாட்களில் 130 மைல் ஓடிச் சென்றான். ஆங்கிலேயர் பயந்து ஒப்பந்தம் இட்டனர்.

1774இல் திப்பு பலபகுதிகளை தன் வசமாக்கினான். 7.12.1782இல் தனது 60வது வயதில் ஐதர் இறந்தார். 1799 மே நான்காம் தேதி திப்புவை ஓர்போர் வீரன் சுட்டுக் கொன்றான்.

## சர் தாமஸ் மன்றோ நினைவுத் தூண் :

வரலாற்றுச் சிறப்பு மிக்க தருமபுரி நகருக்குப் பெருமை சேர்க்கும் சின்னங்களில் சர்தாமஸ் மன்றோ நினைவுத் தூணும் ஒன்றாகும்.

ஆங்கிலேயராக இருந்தாலும் இந்தியரின் நல்வாழ்விற்காகப் பாடுபட்ட தாமஸ் மன்றோ குறிப்பிடத்தக்கவர் ஆவார். தங்கள் நலனுக்காகப் பாடுபட்ட தாமஸ் மன்றோ அவர்களுக்குத் தங்கள் நன்றியைத் தெரிவிக்கும் பொருட்டுத் தருமபுரியில் நினைவுத் தூண் ஒன்றை மக்கள் அமைத்துள்ளனர்.

இது ஒழுங்கான கருங்கற்களைக் கொண்டு கட்டப்பட்ட நினைவுத் தூண். சுமார் 20 அடி உயரம் உள்ளது. கட்டிடத்திற்குச் சிமெண்ட் இணைப்புப் பொருளை கலந்து நன்கு கட்டப்பட்டுள்ளது. தூண் நல்ல நிலையில் உள்ளது. இத்தூணின் அடிப்பாகத்தில் கல்வெட்டு வாசகம் உள்ளது.

கல்வெட்டு வாசகம்.

*THIS PILLAR IS ERECTED BY*
*THE GOVERNMENT OF MADRAS*
*TO MARK THE ASSOCIATION OF DHARMAPURI*
*WITH*
*SIR THOMAS MUNRO*
*WHO LIVED HERE FROM APRIL 1792 TO MARCH 1799*
*AS ASSISTANT TO THE SUPERINTENDENT OF REVENUE IN*
*THE BARAMAHAL*

ஸர் தாமஸ் மன்றோ துறைக்கும் தருமபுரிக்குமுள்ள சம்மந்தத்தை காட்டுவதற்காக சென்னபட்டணம் பாரமஹாலில் ரெவின்யூ சூபரின் டெண்டெண்டுக்கு உதவி உத்தியோகஸ்தராயிருந்து

1792ம் ஷு ஏப்ரல் மீ முதல் 1799ம் ஷு மார்ச்சு மீ வரையில் இங்கே வசித்து வந்தார்.

இந்த ஸ்தம்பம் கட்டியிருக்கும் கல் தளத்திலிருந்து சில கஜ தூரத்தில் அவருடைய வீடும் அவருக்கு இஷ்டமான தோட்டமும் இருந்தன என்று கல்வெட்டு வாசகம் எழுதப்பட்டுள்ளது.

மன்றோ அவர்கள் 1792 முதல் சுமார் ஏழு ஆண்டுகள் தருமபுரியில் தங்கிப் பணிபுரிந்துள்ளார். இப்பொழுதுள்ள வனத்துறை அல்லது மருத்துவ மனையின் தாய் சேய் நலப்பிரிவு இயங்கும் கட்டிடங்களில் மன்றோ தங்கி இருக்க வாய்ப்பு உள்ளது. தான் தருமபுரியில் இருந்த பொழுது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஏற்கனவே இங்கிருந்த சோழர்காலக் குளத்தைச் சீர் செய்துள்ளார். தோட்டம் ஒன்றும் ஏற்படுத்தியுள்ளார். அதனால்

அக்குளமும் தோட்டமும் நெடுநாட்களாகவே மன்றோ சாப்பு குளம் என்றும் மன்றோ சாப்புத் தோட்டம் என்றும் வழங்கப்பட்டு வந்தன.

விவசாயிகள் அரசுக்கு நேரடியாக நிலவரி செலுத்தும் ரயத்துவாரி முறை ஏற்பட வழி அமைத்தார். 1799இல் பணி நிமித்தமாக சென்னைக்கு குடியேறினார். அவர் தருமபுரியை விட்டு வெளியேற மனமின்றிச் சென்றார் என்பதை அவரே தமது வாழ்க்கைக் குறிப்பில் குறிப்பிடும் பொழுது :

"இது மிகவும் ரம்மியமானதோர் பிரதேசம். இவ்விடத்தில் உள்ள ஒவ்வொரு மலையும் மரமும் எனக்கு இன்பத்தை தருகிறது. நான் தருமபுரியிலிருக்கும் போது எல்லாம் இந்த தோட்டத்தில் ஒரு மணி நேரமாவது கழித்து வருவேன். இவ்விடத்தை விட்டு இப்போது நான் செல்ல வேண்டியிருப்பதை நினைக்க வெகு நாட்கள் பழகிய நண்பனை விட்டு பிரிய நேர்ந்தால் எவ்வித கவலை உண்டாகுமோ அத்தகு கவலை உண்டாகிறது."

என்று குறிப்பிடுவதில் இருந்து அறியலாம். சென்னை மாகாணத்தின் கவர்னராகப் பொறுப்பு ஏற்ற மன்றோ 1799ஆம் வருடம் ஜூலைத் திங்கள் 6ஆம் நாள் காலமானார்.

இவ்வாறான வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதால் மன்றோ நினைவுத் தூணினைப் பாதுகாப்பது அவசியமாகும்.

# 18. வரலாற்றுச் சிறப்புடைய ஊர்கள்

தருமபுரி என்றும் கிருஷ்ணகிரி என்றும் பிரிக்கப்படாமல் தருமபுரி மாவட்டமாக இருந்த தகடூர் நாடு தொல் பழங்காலம் தொடங்கி ஆங்கிலேயர் ஆட்சி வரை தொடர்ச்சியான வரலாற்றைக் கொண்டுள்ளது. பழைய தருமபுரி மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பல ஊர்கள் உள்ளன. கல்வெட்டுகள் அல்லது தொல்லியல் தடயங்கள் உள்ள ஊர்கள் அனைத்தையும் பட்டியல் இட்டு விளக்காமல் முக்கியமான ஊர்களை மட்டும் குறிப்பிட்டு, அவ்வூர்களின் சுருங்கிய வரலாற்றினைக் குறிப்பிட்டுள்ளோம். நடுகற்கள் மிகுதியாக உள்ள இம்மாவட்டத்தில் குறைந்த அளவே தொன்மையான கோயில்கள் உள்ளன. புத்தர் சிற்பங்களும் தீர்த்தங்கரர் திருமேனிகளும் இம்மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்டாலும் தற்போதைய நிலையில் தொன்மையான சமணப்பள்ளியோ அல்லது புத்தப்பள்ளியோ வழிபாட்டில் இல்லை என்றே குறிப்பிடலாம். எனினும் பழங்காலத்தில் புத்தப் பள்ளிகளும் சமணர்ப் பள்ளிகளும் இருந்தமைக்குச் சில சாசனங்கள் சான்றாக உள்ளன. இதுவரை தருமபுரி மாவட்டத்தில் தமிழ்பிராமி எழுத்தில் கூடிய லேனா எழுத்துகள் (குகையில் உள்ள சாசனம்) கண்டறியப்படவில்லை. தருமபுரி மாவட்டத்தில் மிகுதியான மலைகள் மற்றும் பெருங்கற்கால ஓவியங்கள் இருப்பதால் எதிர்காலத்தில் தமிழ் பிராமியில் உள்ள கல்வெட்டுகள் கண்டறிய வாய்ப்புண்டு. இனி வரலாற்றுச் சிறப்புடைய சில ஊர்களைக் காண்போம்.

## அதியமான்கோட்டை :

தருமபுரியிலிருந்து சேலம் செல்லும் நெடுஞ்சாலையில் 6 கி.மீ. தொலைவில் அதியமான்கோட்டை என்ற தொன்மையான ஊர் உள்ளது. 2000 ஆண்டுகட்கு முன் தகடூர் நாடாண்ட அதியமான் பெயரில் ஊர் ஏற்பட்டுள்ளது. சங்க காலத்தில் எடுக்கப்பட்ட

கோட்டைகள் முழுவதும் மண்கோட்டைகளே ஆகும். அவைகள் காலவெள்ளத்தில் - மாற்றார் படையெடுப்பிலும் - இயற்கைச் சீற்றத்தில் மக்களின் அறியாமையில் அழிந்துபட்டுள்ளன. அதியமான் கோட்டையில் கோட்டைமேடுகள் ஆங்காங்கே ஓரளவு தற்போது தெரிகின்றன. இங்குச் சங்க காலத்தைச் சேர்ந்த ஓடுகள் அதாவது கருப்பு சிவப்புப் பானை ஓடுகள் கிடைக்கின்றன. சென்னைப் பல்கலைக் கழகத்தின் பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறை இங்கே அகழாய்வு நடத்தியது. கி.பி. முதல் நூற்றாண்டுக்கு முன்னர் இருந்தே மக்களின் வாழிடமாக இவ்வூர் இருந்தது அகழாய்வால் உறுதியாகிறது. சங்க காலத்திற்குப் பின்னர் பல்லவர் காலத்தில் நாடாண்ட அதியமான்கள் நாமக்கல் என இன்றழைக்கப்படும் ஆரைக்கல்லில் இருந்து நாடாண்டுள்ளனர். அக்காலக் கட்டத்தில் தகடூர் மற்றும் அதியமான்கோட்டை ஆகிய பகுதிகள் கங்கர் மற்றும் மாவலிவாணராயர்களால் ஆளப்பட்டன. பின்னர் நுளம்பர்கள் நாடாண்டனர். நுளம்பர் ஆட்சியின்போது அதியமான்கோட்டை மகேந்திரமங்கலம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. நுளம்ப மன்னன் மகேந்திரனால் இப்பெயர் ஏற்பட்டது.

அதியமான் கோட்டையில் சோமேஸ்வரன் கோயில் என்ற சிவன் கோயிலில் குலோத்துங்க சோழனுடைய 19ஆவது ஆட்சியாண்டு மற்றும் 25 ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் காணப் படுகின்றன. போசள மன்னன் இரண்டாம் நரசிம்மனின் ஒரு கல்வெட்டும் இவனது மகன் சோமேஸ்வரனுடைய இரு கல்வெட்டுகளும் (கி.பி. 1247 மற்றும் 1249) உள்ளன. இரண்டாம் நரசிம்மனின் கல்வெட்டு மகேந்திர மங்கலத்தில் பரமேஸ்வரம் உடையார்க்குக் கோயில் எடுத்ததைக் கூறுகிறது. காலம் கி.பி. 1235 ஆகும். அதாவது நொளம்பர் காலத்தில் ஏற்பட்ட பெயர் போசளர் காலத்திலும் தொடர்ந்துள்ளது எனலாம். நுளம்ப மன்னன் மகேந்திரன் காலத்தில் இங்குப் பைரவர் கோயில் கட்டப்பட்டுள்ளது. கோயில் கிழக்குப் பார்த்தபடி உள்ளது. வீரராமநாதன் என்ற போசள மன்னன் கல்வெட்டில் (கி.பி. 1260) மயீந்தீஸ்வரம் உடையார் என்ற சிவன் கோயில் பெயர் கூறப்படுகிறது. இதுவே முன் சொன்ன பைரவர் கோயில் போலும். சோமேஸ்வரன் கல்வெட்டிலும் மயீந்தீஸ்வரம் கோயில் பெயர் உள்ளது.

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் அதிகைமான் மரபினர் இப்பகுதியை ஆண்டுள்ளனர். அக்காலக் கட்டத்தில் அதியமான் கோட்டையி லிருந்து நாவல் தாவளம் வரை அதியமான் பெருவழி இருந்துள்ளது.

## கோயில்களும், கல்வெட்டுக்களும் :

அதியமான்கோட்டையில் சைவ, வைணவ கோயில்கள் மட்டுமின்றிச் சமணர்கள் பள்ளியும் இருந்திருக்க வேண்டும். இதனை உறுதிப்படுத்த ஓர் அழகிய தீர்த்தங்கரர் சிற்பம், சோமேஸ்வரர் கோயிலின் அருகே காணப்படுகிறது.

இங்குப் பைரவநாதன் கோயில், சோமேஸ்வரன் கோயில், சென்றாயப் பெருமாள் கோயில், விநாயகர் கோயில், அம்மன் கோயில் எனப் பல கோயில்கள் உள்ளன. சென்றாயப் பெருமாள் கோயிலில் 16ஆம் நூற்றாண்டு வண்ண ஓவியங்கள் உள்ளன.

வீர நரசிம்மனின் தானைத் தலைவனான மாதவ தண்ணாக்கனின் மந்திரியான பரமாயசகானி என்பவன் மகேந்திரமங்கலத்தில் பரமேஸ்வரமுடையார் கோயிலை அடி முதல் நுனி வரை கட்டியதையும் இறைவனைப் பிரதிஷ்டை செய்ததையும், சைவாச்சாரியருக்கும் கோயிலுக்கும் சில நிலங்களை தானமாகக் கொடுத்ததையும் சாசனங்கள் மூலம் அறிகிறோம்.

சிவன் கோயிலின் முன் மண்டபச் சுவரில் உள்ள கல்வெட்டு போசளமன்னன் சோமேஸ்வரதேவனின் 17ஆவது ஆட்சியாண்டில் அவரது நன்மைக்காகச் சோமைய தண்ணாயக்கர் என்பவர் மயீந்தீஸ்வரமுடைய நாயனார்க்குக் குளத்தூர் ஏரிக்குக்கீழ் நிலம் கொடுத்ததைக் குறிக்கிறது. கி.பி.1228ஆம் ஆண்டில் கண்ணனூரில் மன்னன் இருந்தான் என்பதையும் இவனது தந்தையான வீரநரசிம்மனின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் இவன் ஆட்சி செலுத்தியுள்ளான் என்பதையும் அறிய முடிகின்றது. சகம் 1156இல் காடவராயனுக்கும் பாண்டியனுக்கும் எதிரான போரில் இவன் தந்தைக்கு உதவியுள்ளான் என்று அறிகிறோம்.

பைரவர் கோயிலில் வடக்கு, தெற்கு, அதிஷ்டானங்களில் உள்ள கல்வெட்டு போசளமன்னன் வீரநரசிம்ம தேவனின் 17ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஆகும். அதாவது கலியாண்டு 4336 சகம் 1157 ஆகும். மாதவ தண்ணாயக்கரின் அமைச்சராகிய பரமாய சாகனி என்பவர் மகேந்திர மங்கலத்தில் பரமேஸ்வரம் உடையார் கோயில் எடுத்ததையும், நந்திமங்கலத்தில் வசிக்கும் விடுகாதர் என்ற அக்கோயில் அர்ச்சகருக்கு நிலம் அளித்ததையும் இக்கல்வெட்டு குறிக்கின்றது.

அதியமான்கோட்டைப் பகுதி போசளர்கள் வசமாக இருந்தபோது மயீந்திரமங்கலமாக இருந்து பின்னர் தகடூர் பகுதியை ஆண்ட

விடுகாதழகிய பெருமாள் காலத்தில், மீண்டும் அதியமான் கோட்டையாகப் பெயர் மாற்றம் பெற்றது. பின்னர் வந்த சோழ மன்னர்களும், விஜய நகர மன்னர்களும் இப்பெயரையே பயன்படுத்தி உள்ளனர்.

சோமேஸ்வரதேவன் நன்மைக்காகத் தகடை நாட்டாரும் புறமலை நாட்டாரும் அங்கணப்பற்று நாட்டாரும் 79 நாட்டாரும் நகரத்தாரும் இறையிலியாக நிலங்களைக் கோயிலுக்கு அளித்துள்ளனர்.

கல்வெட்டில்லாமல் சிற்பங்களை மட்டும் கொண்ட வீரர் கற்களும் அதியமான்கோட்டையில் உள்ளன.

## அதியமான்கோட்டை ஓவியங்கள் :

அதியமான்கோட்டையில் உள்ள சென்றாய பெருமாள்கோயில் மத்திய அரசு தொல்லியல் துறையின் பராமரிப்பில் இருந்து வருகிறது. இக்கோயில் மண்டப விதான வண்ண ஓவியங்கள் எழுத்துப் பொறிப்புகளுடன் உள்ளன. இராமாயணம், மகாபாரதம், பாகவதக் கதைகள் இடம் பெற்றுள்ளன. அனுமன் சீதையைக் காணும் இராமாயண ஓவியத்தில் மகிழ்ச்சியுடன் சோகமும் ஒருங்கே காண்கிறோம். கிருஷ்ணனின் விஸ்வரூப தரிசனம், நான்கு சக்கரவண்டி மீது அமர்ந்து செல்லும் நேர்த்தி, இராமேஸ்வரம் கடலில் வானரப்படைகள் கற்கள் சுமந்து வரும் அழகு, போரிடும் அரக்கர்கள் போர் வெறி யாவும் தத்ரூபமாக உள்ளன. இவ்வோவியங்கள் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் வரையப்பட்டதாகும். மறைந்த பாரதப் பிரதமர் இராஜீவ்காந்தி, அன்னை சோனியாகாந்தி மற்றும் மறைந்த மக்கள் தலைவர் ஜி.கருப்பையா மூப்பனார், இக்கோயிலைப் பார்வையிட வந்தபோது இந்நூலாசிரியருள் ஒருவரான. ச. கிருஷ்ணமூர்த்தி வரலாற்றை விளக்கிக் கூறும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

## அகரம் :

தருமபுரி வட்டத்தில் பென்னாகரம் செல்லும் பாதையில் அகரம் என்ற ஊர் உள்ளது. இவ்வூரில் வீரராமநாததேவனின் 44ஆவது ஆட்சியாண்டில் குலோத்துங்க சோழத் தகடாதராயன் கனகலை பாடரிப்பட்டன் என்பவன் பெயர் சாசனத்தில் உள்ளது. கல்வெட்டின் துவக்கத்தில் வெண்கொற்றக் குடை, குத்துவிளக்கு, கெட்டில், பாதம், வாள், கேடயம் உள்ளதால் தகடாதராயன் படைத் தலைவன்

என்பது தெரிகிறது. தமிழகமெங்கும் அகரம் என்ற பெயரில் பல ஊர்கள் உள்ளன. பிராமணர்களின் வாழிடமாக அகரத்தை அறிஞர் குறிப்பிடுவர்.

## அமானில்லாபுரம் :

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டத்தில் வேடியப்பன் கோயிலுக்கருகில் உள்ள தனிக்கல்லில் கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுள்ளது. கல்வெட்டுடன் சிற்பமும் உள்ளது. ஒரு பெண் அமர்ந்த நிலையில் வணங்கியபடி உள்ளாள். அவளுக்கு வலப்புறம் கண்ணாடி, விளக்கு, விலங்கொன்றும் இடப்புறம் முக்காலியும் உள்ளன. 'அத்தபூப்பலப் பற்றில் புரவியல் சேக்கிழார் நாட்டு நாயகம் செய்வார்' என்ற பெயர் உள்ளது. மாதேவன் கல் அடிப்பித்தவன் ஆவான். முஸ்லீம் ஆடவர் ஒருவரின் பெயரால் இவ்வூர் தற்போது வழங்கப்படுகிறது.

## அத்திமோட்லு :

தருமபுரி வட்டத்தில் உள்ள அத்திமோட்லு என்ற ஊரில் தொன்மை வாய்ந்த சிவன் கோயில் உள்ளது. அக்கோயில் முன் மண்டப வடக்குப் பக்க முற்றத்தில் கல்வெட்டொன்று உள்ளது. திருக்கண்ணீஸ்வரமுடைய நாயனாற்குக் குலோத்துங்க சோழ தகடாதராயன் ஆட்சியின்போது சேரமான்பெருமாள் என்பவன் நிவந்தமாக நன்செய் நிலங்கள் அளித்துள்ளான். காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டாகும். கி.பி. 15-16 ஆம் நூற்றாண்டளவில் இறைவனின் வழிபாட்டுக்கும் அமுதுபடிக்கும், திருவிளக்கிடல் பணிக்குமாகச் சில வரிகள் வழங்கியமையை வேறொரு கல்வெட்டில் காண்கிறோம். அத்தி என்பதற்கு யானை, அத்திமரம் எனப் பல பொருள்கள் உள்ளன. மோட்லு என்பது மேடு என்று பொருளாகும்.

## அனுமந்தபுரம் :

தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனுமந்தபுரத்தில் இருந்த பல்லவ மன்னன் ஈஸ்வரவர்மனுடைய இரண்டு நடுகற்கள் தற்போது சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளன. ஈஸ்வரவர்மனின் 17ஆவது ஆட்சியாண்டின்போது காடந்தைகள் சேவகன் புதூர் சாத்தான் என்பவனும் சுட்டி என்பவனும் பகைவர் போரிட வந்தபோது போரிட்டு மாண்டுள்ளனர். படுத்தான்கொட்டாய் நடுகல்லிலும்

காடந்தை என்ற சொல் இடம் பெற்றுள்ளது. அனுமந்தன் + புரம் = அனுமந்தபுரமாயிற்று.

## ஆதனூர் :

தருமபுரி வட்டம் ஆதனூரில் பேருந்து சாலையருகே ஒரு கல்வெட்டுள்ளது. ஸ்ரீ பட்டன் காளிதாசன் என்பவருக்கு நான்கு பேர் கூடி, பட்ட விருத்தியாக நிலம் அளித்ததை இது குறிப்பிடுகிறது. பெருமாள் கோயில் வாசலில் உள்ள சிதைந்த ஒரு நடுகல் ஈஸ்வர வர்மனுடையதாகும். ஆநிரைப் போர் அதில் இடம் பெற்றுள்ளது. நெடுஞ்சாலையில் உள்ள மூன்றாவது கல்வெட்டு வீரவல்லாளன் ஆட்சியின்போது முதலிகளில் குச்சிக் காமிண்டன் தோநாப்பன், பாலாண்டை முதலி, மாசியாண்டை அழக முதலியழகாண்டை ஆகியோர் ஏதோ கொடையளித்த செய்தி உள்ளது. ஆதன் + ஊர் = ஆதனூராயிற்று எனலாம்.

## அச்சல்வாடி :

அரூர் வட்டத்தில் உள்ள அச்சல்வாடியில் கல்வட்டங்கள் காணப்படுவதுடன் வேடியப்பன் கோயிலும் உள்ளது. கி.பி. 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நடுகல் கல்வெட்டும் அம்பு பாய்ந்து மாண்ட நடுகல் வீரன் சிற்பமும் உள்ளது. ஈ தண்ணிமாரன் எருமைத்தொறு போரின் போது புலிக்கல் என்ற ஊரில் மாண்டுள்ளான்.

## அரூர் :

அரூர் வட்டத்தின் தலைநகராக விளங்கும் அரூரில் காளியம்மன் கோயிலில் உள்ள இலக்குமி சிலையின் பின்புறம் 'சிவபாத சேகரக் கற்கடகமாராயன் கண்ணன் படலன், என்பவன் பெயரும், வியாபாரி ஐய்யன்தேவன் பெயரும் உள்ளன. விடுகாதழகிய நல்லூர் என்று இவ்வூர் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் வழங்கப்பட்டுள்ளது. அரியூர் என்று கல்வெட்டில் ஊர்ப்பெயர்உள்ளது. விடுகாதழகியப் பெருமாள் பிற்காலச் சோழர் காலத்தில் தகடூரையாண்ட அதியமான் மரபினன் ஆவான். இவனுடைய பெயரில் அரூர் வழங்கப்பட்டுள்ளது. அரூரில் வாணியாறு ஓடுகிறது.

## அலமேலுமங்காபுரம் :

அரூர் வட்டத்தில் உள்ள அலமேலுமங்காபுரம் என்ற ஊரின் கோட்டை மேட்டில் கி.பி. 8ஆம் நூற்றாண்டு வட்டெழுத்து நடுகல்

உள்ளது. பாண அரசரின் சேவகன் வெளியநக்கன் பெயர் அதில் உள்ளது. தமிழ் எழுத்தில் எழுதப்பட்ட நுளம்பர் கல்வெட்டில் செக்கு உருவாக்கிய விவரம் உள்ளது. செக்கினை இறையமன் என்பவன் மன்னன் வியளேச்சுரன் பெயரில் ஏற்படுத்தி உள்ளான். அலர்மேலு மங்கை என்பதே அலமேலு மங்கை என வந்துள்ளது எனலாம்.

### உட்டபட்டிதண்டா :

அரூர் வட்டம் உட்டபட்டிதண்டா என்ற ஊரில் குண்டாற்றங் கரையில் கி.பி. 7ஆம் நூற்றாண்டு வட்டெழுத்து நடுகல் உள்ளது. பண்நனோதி என்பவனுடைய சேவகன் கங்கவிசய ஏனாதி என்பவன் போரில் மாண்டுள்ளான். அவனுக்கு இவ்வூரில் நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. ஏனாதி என்பது பட்டப் பெயராகும்.

### கடத்தூர் :

அரூர் வட்டம் கடத்தூர் கிராமத்தில் உள்ள காந்திபுரம் சந்தைப் பேட்டையில் கி.பி. 1287இல் வெட்டப்பட்ட புலிக்குத்திப்பட்டான் நடுகல் உள்ளது. ஆண்பிளைப் பெருமாள் என்பவர் புலியுடன் போரிடும் தோற்றத்தில் சிற்பமும் 10 வரி கல்வெட்டும் காண்கிறோம். கடத்தூர் நாட்டு நாயகம் செய்பவனாக ஆரோதன் இருகன் பெருமாள் இருந்துள்ளான். இவன் மகனே நடுகல் வீரன் ஆவான். புதிய கற்காலக் கருவிகள் இவ்வூரில் கண்டறியப்பட்டன. அச்சு குத்திய காசுகளும் சேகரிக்கப்பட்டன. கே. என் புதூர் நடுகல்லில் கடத்தூர் நாடு இடம் பெறுகிறது. காலம் கி.பி. 8ஆம் நூற்றாண்டாகும்.

### கணப்பனூர் :

அரூர் வட்டம் கணப்பனூரில் கொங்கணி அரசன் சிவமாரன் காலத்தில் வெட்டப்பட்ட நடுகல் கல்வெட்டு வட்டெழுத்தில் உள்ளது. சிவமாறனின் 47ஆவது ஆட்சியாண்டில் புறமலை ஆண்ட குறுநிலத் தலைவனாகக் கந்தவாணதி அரைசர் இருந்துள்ளார். இவருடைய மகன் போரில் பங்கு கொண்டுள்ளார். போரில் வாணிகச் சடையனார் மாண்டுள்ளார். கந்தவாணதி அரைசர் அரூர் பகுதியில் இருந்த சிற்றரசர் எனலாம்.

### கதிரம்பட்டி :

அரூர் வட்டம் கதிரம்பட்டி என்ற ஊரின் தென்பெண்ணை யாற்றங்கரையில் தனிநபருக்குச் சொந்தமான காட்டில் இரண்டு

நடுகற்கள் உள்ளன. முதல் மகேந்திரவர்மனுடைய ஏழாவது ஆட்சியாண்டில் இறந்துபட்ட போர் வீரர்களுக்குரிய நடுகற்கள் இவைகள் ஆகும். காரிமங்கலம் கங்கதி அரசருடன் போரிட்ட ஏறன் மற்றும் குளவர் என்பவருடைய இருபிள்ளைகள் போரில் மாண்டுள்ளனர். ஏறு + அன் = ஏறன் எனலாம். ஏறு காளையாகும்.

## சுல்தானிப்பாடி :

அரூர் வட்டம் சுல்தானிப்பாடியில் கி.பி. 6ஆம் நூற்றாண்டு எழுத்தமைதி கொண்ட வட்டெழுத்து நடுகல் உள்ளது. மாம்கோடு பெருமக்கள் பறைகட்டியார், பாப்பம்பட்டி சென்று தொறுக் கொண்ட போது அதனைத் தடுக்கும் போரில் வாண இரவஞ்சி மாண்டுள்ளார். கொற்றன் காடன் நடுகல் எடுப்பித்துள்ளார். நடுகல் அருகே நரிப்பள்ளி என்ற ஊர் உள்ளது. பறைகட்டி என்ற சொல் பறையர் என்பதுடன் தொடர்புடையது ஆகும். முஸ்லீம் ஒருவரின் பெயரில் சுல்தானிப்பாடி உள்ளது. பாடி, வாடி போன்ற சொற்கள் முல்லை நிலத்துடன் தொடர்புடையவை எனலாம்.

## குரும்பட்டி :

அரூர் வட்டம் குரும்பட்டி முறிவேடியப்பன் கோயிலில் மாவலிவாணராயருடைய வட்டெழுத்து நடுகல் உள்ளது. புறமலை நாட்டையாண்டு வந்த புலையமன்னார் அடியாளும் பெருவணயனின் பேரனுமான தாழன் என்பவன் இறந்து பட்டுள்ளான். அவனது நினைவாக தீர ஏரிப் பாசனத்தில் 6 செறுவு நிலம் விடப்பட்டுள்ளது. புலைய மன்னார் என்ற பெயரில் உள்ள முன்னொட்டு புலையர் என்ற சாதித் சொல்லுடன் தொடர்புடையது எனலாம். அடியாளை (போர்வீரன்) வைத்துள்ள நிலையில் புலையமன்னார் இருந்துள்ளார்.

## கூக்குடப்பட்டி :

அரூர் வட்டம் கூக்குடப்பட்டி என்ற ஊரில் முத்துவேடியப்பன் கோயில் உள்ளது. பல்லவ மன்னன் ஈச்சுவர பருமருடைய இரண்டாவது ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட ஒரு நடுகல்லின் மூலம், சாத்தன் என்பவன் நடுகல் வீரனாக மாறியதை அறிகிறோம். அதே யாட்சியாண்டைச் சேர்ந்த மற்றோர் நடுகல்லின் மூலம் பாரமதாயர் மகன் கண்ணமாறன் இறந்து பட்டதையும் அறிகிறோம். கந்தவாணதி அரைசர், மேற்கங்கப் படையோடு போரிட்டுள்ளார். ஈச்சுவர பருமர் என்ற பல்லவமன்னருடைய ஆட்சிக் காலத்தில்

நிகழ்ந்த போரினை மேற்படி நடுகற்கள் புலப்படுத்துகின்றன. குக்குடம் என்பது கோழியாகும். கு என்பதே கூ என விரிந்துள்ளது.

### கூடலூர் :

அரூர் வட்டம் கூடலூர் கிராமம் பாளை வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல் மூலம் கற்கடக முத்தரையன் கங்கனின் மகனான படலனின் நினைவாக அவன் தம்பி தித்தன் வீரக்கல் எடுப்பித்துள்ளான் என்று அறிகிறோம். கூடலூர் என்ற பெயரில் தமிழகத்தில் பல ஊர்கள் உள்ளன.

### கெரஹோடஹள்ளி :

அரூர் வட்டம் கெரஹோடஹள்ளியில் கல்வீடு அமைப்பில் வேடியப்பன் கோயில் உள்ளது. முதல் இராசேந்திரன் மெய்க்கீர்த்தியுடன் உள்ள நடுகல்லின் மூலம் பாகலபள்ளி கி.பி. 1032 இல் எதிரிகளால் அழிக்கப்பட்டபோது வேசாளப் பேரையர் மருகன் அண்ணயன் மகன் பப்பய்யன் போரில் இறந்துள்ளான். இவனுடைய மகன் பாலிதேவன் கல் எடுப்பித்துள்ளான். இதே ஊரில் உள்ள சிதைந்த வேறோர் கல்வெட்டு தேவப் பெருமாளைச் சுட்டுகிறது. கெரஹோடஹள்ளி, பாகலப்பள்ளி என்ற ஊர்ப்பெயர்கள் கன்னட, தெலுங்குச் சொற்கள் எனலாம்.

### கைலாவரம் :

அரூர் வட்டம் கைலாபுரம் கூட்டாத்துறை வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்லின் மூலம் கட்டிணை பருமருடைய 37 ஆவது ஆட்சியாண்டின்போது புறமலைநாட்டைக் கந்தவாணதி யரையர் ஆள அருட்டிறையர் தொறுக்கொண்டபோது அமர நிலையார் சேவகர் பையச்சாத்தனார் நிறை மீட்டு இறந்துள்ளார் என்று அறிகிறோம். கந்தவாணதியரையர் புறமலை ஆண்ட சிற்றரசர் ஆவார்.

### கொண்டல்மடுவு :

அரூர் வட்டம் கொண்டல்மடுவு என்ற சிற்றூரில் உள்ள வேடியப்பன் கோயிலில் கி.பி. 8-9 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இரு நடுகற்கள் உள்ளன. சிதைந்த நிலையில் உள்ள இந்நடுகற்கள் ஆநிரைப் போர்களைச் சுட்டுகின்றன.

## கோட்ரம்பட்டி :

அரூர் வட்டம் கோட்ரம்பட்டி சாலையருகே நுளம்ப மன்னர் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த நடுகல் உள்ளது. நாகமங்கல காவிதிகள் என்பவர் போரில் இறந்துள்ளார் என்பதை அந்நடுகல் மூலம் அறிகிறோம். காவிதி என்ற சொல் உயர்பதவியைக் குறிக்கும் எனலாம்.

## சிந்தல்பாடி - பள்ளிப்பட்டி :

அரூர் வட்டம் சிந்தல்பாடி பள்ளிப்பட்டி செல்லியம்மன் கோயிலில் சுபதொங்க தேவருடைய ஐந்தாவது ஆட்சியாண்டைச் சார்ந்த கல்வெட்டுள்ளது. சிந்தகப்பாடியைச் சேர்ந்த காமுண்டன் அளப்பமாறன் கண்ணையன் எதிரிகளுடன் போரிட்டு மாண் டுள்ளான். ஊரைக்காக்கும் போரில் வீரன் வீரமரணம் எய்தியுள்ளான். பள்ளிப்பட்டி என்ற சொல் பள்ளிகளுடன் தொடர்புடையது எனலாம்.

## சின்னக்கவுண்டன்பட்டி :

சின்னக்கவுண்டன்பட்டி அரூர் வட்டத்தில் உள்ளது. இவ்வூர் நவலையருகே உள்ளது. இங்குள்ள இரு நடுகற்களில் ஒன்று குதிரை யோடு போரிட்டு இறந்த வீரன் ஒருவனைக் குறிப்பிடுகிறது. மற்றோர் நடுகல் கன்னட மொழியில் உள்ளது.

## சின்னாங்குப்பம் :

அரூர் வட்டம் சின்னாங்குப்பம் வேடியப்பன் கோயிலில் இரண்டு நடுகல் கல்வெட்டுகள் உள்ளன. இரண்டும் வட்டெழுத்தில் அமைந்த கங்கர் நடுகற்களாகும். வீரச்சேனாதியார் போரிட்டு மாண்டதை ஒரு நடுகல்லும் செருப்பச்சடையன் மாண்டதை வேறொரு நடுகல்லும் குறிப்பிடுகின்றது. புருஷவர்மனுடைய ஆட்சியில் புறமலை நாட்டை பிருணிதுவியார் ஆண்டுள்ளார்.

## சூரநத்தம் :

அரூர் வட்டம் சூரநத்தம் என்ற ஊரில் ஆற்றின் மேல் கரையில் வீரராசேந்திரன் என்ற பட்டப்பெயருடன் கூடிய மூன்றாம் குலோத்துங் கனுடைய 17ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி.1195) கல்வெட்டுள்ளது. வன்னெஞ்சப் பெருமாள் என்ற இறைவன் பெயர் உள்ளது. சூர என்பது வீரன் என்று பொருள்படும். நத்தம், கிராமமாகும்.

## செல்லம்பட்டி :

அரூர் வட்டம் செல்லம்பட்டி வேடியப்பன் கோயிலில் இரண்டு நடுகற்கள் உள்ளன. ஒன்று கி.பி. 898-லும் மற்றொன்று கி.பி. 900த்திலும் வெட்டப்பட்டுள்ளன. கி.பி. 898இல் தகடூர் மாவலிவாணராயரடியான் கூடல் மாணிக்கன் உளைக்குன்றினை ஆண்டு வந்தான். அவனுடைய மாமனும் கோவூர் நாட்டுத் தலைவனும் ஆனமழற்பையனின் அடியான் சூழ் புளியன் என்பவன் புலியுடன் போரிட்டு இறந்துள்ளான். இரண்டாவது நடுகல்லின் மூலம் சிவமாரைய்யனும் பிருதிபதியும் மறவகுன்றில் போரிட்ட போது கூடல் மாணிக்கன் இறந்துள்ளான். மூத்த மகன் மாதே வன்னி நடுகல் எடுப்பித்துள்ளான்.

## தாளநத்தம் :

அரூர் வட்டம் தாளநத்தம் மண்டில் நடப்பட்டுள்ள மூன்றாம் இராசராசனுடைய கல்வெட்டு, கி.பி.1238இல் கூடியதாகும். தாழையூர் உடைய அப்பன் என்பவன் கற்கடக மாராயனுடைய பரம்பரை நன்றாக வாழ ஆரப்பூரில் உள்ள ஈசாந சிவாச்சாரியார் மடாலயத்திற்கு நிலங்களைத் தானமாகக் கொடுத்துள்ளான் என்ற செய்தி கல்வெட்டில் உள்ளது. ஈசான மடம் என்ற பெயரில் வேறு சில சைவ மடங்கள் இருந்துள்ளன. ஈசான தேசிகர் என்ற தம்பிரான், திருவாடுதுறை ஆதீன வரலாற்றில் இடம் பெறுவார். காலம் 16ஆம் நூற்றாண்டாகும்.

## தின்னஹள்ளி :

அரூர் வட்டம் தின்னஹள்ளி என்ற சிற்றூரில் உள்ள நடுகல் சிம்மவிஷ்ணுவின் 27ஆவது ஆட்சியாண்டில் நிகழ்ந்த போரினைச் சுட்டுகிறது. கோவூர் நாட்டு அளப்பை கங்க அரசர் மக்கள் சிம்ம விஷ்ணுவுடன் சென்று போரிட்டுள்ளார். கங்கரின் சேவகர் அடிம்பாற்றரைசர் மக்களான நந்தி கட்டியார் போரில் இறந்துபட்டுள்ளார். இவருக்கு நடுகல் எடுக்கப்பட்டது. கங்கர் பல்லவர் போரினை இந்நடுகல் சுட்டுகிறது எனலாம்.

## பாப்பம்பாடி :

அரூர் வட்டம் பாப்பம்பாடியில் உள்ள இரண்டு நடுகற்கள் தருமபுரி மாவட்டத்தில் உள்ள தொன்மையான நடுகற்கள் எனலாம்.

புதுப்பட்டியிலிருந்து பாப்பம்பாடி செல்லும் அண்ணாசாலையில் உள்ள வேடியப்பன் கோயிலில் பாண மன்னருடைய நடுகல்லும் விஷ்ணுவர்மன் என்ற பல்லவனுடைய நடுகல்லும் உள்ளன. விண்ணப்பபேரேனாதி, கொற்றந்தைகோடன் ஆகியோர் போரில் மாண்டுள்ளனர். இவ்வூர் அருகில் இருளப்பட்டி என்ற ஊர் உள்ளது. தமிழகத்திலேயே உள்ள நடுகற்களிலேயே தொன்மையான நடுகற்கள் இவைகள் என்பர்.

## புட்டிரெட்டிப்பட்டி :

அரூர் வட்டம் புட்டிரெட்டிப்பட்டி சோமேஸ்வரன் கோயிலில் உள்ள சுந்தரம்பாள் என்ற அம்மன் கோயில் கருவறையில் விஜயநகரப் பேரரசர் நரசிங்கதேவர் கல்வெட்டுள்ளது. அவர் ஆட்சியில் திப்புராசா உடையார் இப்பகுதியை ஆண்டுள்ளார். தாத்திரட்டியார் என்பவர் தாழை நத்தக் கோயிலுக்குத் தானம் அளித்துக் கல்வெட்டும் வெட்டியுள்ளார். சங்கராந்தியன்று தானம் அளிக்கப்பட்டுள்ளது. சங்கிராந்தி, தைப் பொங்கலாகும்.

## பூதநத்தம் :

அரூர் வட்டம் பூதநத்தம் காட்டாற்றின் கிழக்கே உள்ள நடுகல்லின் மூலம், பல்லவ மன்னன் நரசிம்மவர்மன் காலத்தில் முதியப் போவனார் என்பவர் தொறுப்போரில் மாண்ட விபரம் அறிகிறோம்.

## பெரியபண்ணிமடுவு :

அரூர் வட்டம் பெரிய பண்ணி மடுவு என்ற ஊரில் வாணியாற்றுப் பாலத்தருகே நுளம்ப மன்னன் ஐயப்பதேவனுடைய நடுகல் உள்ளது. பூமயன் என்பவன் ஆநிரைகளை எதிரிகள் கவர்ந்து சென்றபோது அவற்றை மீட்கும் போரில் மாண்டுள்ளான்.

## மணியம்பாடி :

அரூர் வட்டம் மணியம்பாடி என்ற சிற்றூரில் தனியார் கொல்லையில் ஒரு கல்வெட்டு உள்ளது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி. 1198இல்) இடங்கைமாசேவன நல்லூரான சாத்தப்பாடி குப்பையூர் வீரம் செய்வார்க்கு நன்கொடை அளித்த விவரம் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது.

## முத்தனூர் :

அரூர் வட்டம் முத்தனூர் ஏரிக்கரையில் கங்க மன்னன் சிரீபுருஷவர்மனுடைய 16ஆம் ஆட்சியாண்டின்போது வெட்டப்பட்ட கல்வெட்டுள்ளது. அமரடக்கியார் புறமலை நாட்டின் மேலைப் பகுதியை ஆண்டு வந்துள்ளார். காமையனார் என்பவர் வேளாள நாட்டிலிருந்து மனங்கொற்றமங்கலத்து ஆநிரைகளைக் கவர்ந்துள்ளார். அதைத் தடுக்கும் போரில் அமரடக்கியர் சேவகன் வறுமச்சாத்தன் இறந்துபட்டுள்ளான். கி.பி. 928இல் பொறிக்கப்பட்ட மற்றோர் நடுகல் வீரநுளம்பன் காலத்ததாகும். சகர ஆண்டும் நுளம்பனின் ஆட்சியாண்டும் கல்வெட்டில் உள்ளது. ஆநிரை மீட்புப் போரில் பலான்னையூர் காமுண்டர் மணியர் மணியமனார் இறந்து நடுகல்லாக மாறியுள்ளார். காமுண்டர் என்ற சொல் கவுண்டர் என்ற சொல்லுடன் தொடர்புடையதாகும். கிராமத்தலைவர் எனலாம்.

## மென்சி :

அரூர் வட்டம் மென்சி வேடியப்பன் கோயிலில் முதல் இராஜேந்திரன் காலத்தில் பொறிக்கப்பட்ட நடுகல் உள்ளது. ஒலிப்பிப் பேரரையன் மகன் இராமன் பெயர் கல்வெட்டில் உள்ளது. இவன் நடுகல்லாகியுள்ளான்.

## மொண்டுகுழி :

அரூர் வட்டம் மொண்டுகுழி என்ற ஊரில் முதல் மகேந்திரவர் மனுடைய காலத்தைச் சேர்ந்த இரண்டு நடுகற்கள் காணப்படு கின்றன. மகேந்திரவர்மனுடைய பதினான்காவது ஆட்சியாண்டில் கடிகாவின் அஞ்சினார் மகன் பொற்கோவனார் என்பவர் வீரவாண் ணரைசருடைய மகன் பொன்மோதனாரோடு நரிப்பள்ளியில் போரிட்டு மாண்டுள்ளார். மக்கள் என்ற சொல் மகன் என்ற பொருளிலும் வீரன் என்ற பொருளிலும் இங்கு வந்துள்ளது. கல்வெட்டில் வரும் அஞ்சி என்பவர் அதியமான் மரபில் வந்தவனாக இருக்கலாம். இரண்டாவது நடுகல் மன்னனின் 15ஆவது ஆட்சியாண்டில் (கி.பி.605) வெட்டப்பட்டுள்ளது.

பொற்கோவனார் சேவகர் புளிகளாலும் தேஞணிச் சாத்தன் என்பான் நரிப்பள்ளி சென்று பொன்மோதனாரோடு மோதி இறந்துள்ளான். தேஞணிசாத்தன் பெயரில் தேன்கனிக்கோட்டை ஏற்பட்டிருக்கலாம் என்று ஆய்வாளர் கருதுவர். பொன் என்ற அடையுடன் பலருடைய பெயர்கள் நடுகற்களில் உள்ளன. பொன் என்பது மாட்டைக் குறிக்கும் எனலாம்.

## மோட்டுப்பட்டி :

அரூர் வட்டம் மோட்டுப்பட்டியில் மகாதேவர் கோயில் அருகே பாறையில் முதல் இராசராசனுடைய கொடை வழங்கிய கல்வெட்டு மெய்க்கீர்த்தியுடன் உள்ளது. புறமலை நாட்டு அரியூருடைய (அரூர் என்க) வீரசோழக் காமுண்டன் மகன் நன்னி காமுண்டன் நெல்வாய் மகாதேவர் திருச்சென்னடைக்கு நிவந்தமாக நிலம் விட்டுள்ளார். புறமலை நாட்டவர்கள் நொந்தாவிளக்கு ஒன்றும் வைத்துள்ளார்கள். காமுண்டன் என்ற அடை தந்தை மற்றும் மகன் இருவருக்கும் வழங்கப்பட்டுள்ளதால் இதனைச் சாதிப் பெயராகவே கருத வேண்டியுள்ளது.

## வடகரைக்கோட்டை :

அரூர் வட்டம் வடகரைக்கோட்டையில் தனிக்கல் ஒன்றில் 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுள்ளது. பொன்பரப்பின சதுர்வேதி மங்கலம் கல்வெட்டில் சுட்டப்படுகிறது. ஓர் ஊர் பதின்மூன்று பங்கிட்டு இறைவன், பெருமாள், பிராமணர் மற்றும் சிலருக்கு வழங்கியதைக் கல்வெட்டில் காண்கிறோம். கோட்டை என்ற பின்னொட்டுடன் பல ஊர்கள் தருமபுரி மாவட்டத்தில் தற்போதும் உள்ளன.

## வெங்கடதாரஹள்ளி புதூர் :

அரூர் வட்டம் வெங்கடதார ஹள்ளியில் மாரியம்மன் கோயில் புராதனமானது. இக்கோயில் அருகே உள்ள தனிக்கல்லில் 12-13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுள்ளது. கங்கனுடைய வேளைக்காரன் சாக்கத்தொறுவாளன் என்பவன் பெயரும் அவன் மகன்பூவன் என்பவன் பெயரும் அதில் உள்ளது. ஈண்டு வேளைக் காரன் என்ற சொல் சேவகர் போல் போர்வீரரைச் சுட்டும் எனலாம்.

## வேடகட்டமருவு :

அரூர் வட்டம் வேடகட்ட மருவு என்ற சிற்றூரில் விஜயநகர மன்னன் கம்பணனுடைய ஆட்சியின்போது பொம்மைய நாயக்கர் அளித்த கொடையினை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது.

## ஆம்பள்ளி :

ஊத்தங்கரை வட்டம் ஆம்பள்ளி என்ற சிற்றூரில் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் சமணப்பள்ளி (கோயில்) ஏற்படுத்தப்பட்டது. ஊரின்

மேற்கேயுள்ள பாறையில் உள்ள கல்வெட்டு இதனைக் குறிப்பிடுகிறது. மூன்றாம் இராசராசனுடைய ஏழாவது ஆட்சியாண்டின்போது இராசராச அதியமானார் விடுகாதழகிய பெருமாளேன் ஆழ்வான் பள்ளியில் (கோயிலில்) கங்க காமிண்டன் என்பவன் குட்டை ஏற்படுத்த, பெரும்பள்ளி ஆழ்வார்க்குப் பள்ளிச்சந்தமாக விடுகாதழகிய பெருமாள் நிலம் அளித்துள்ளார். ஆம்பள்ளி என்ற ஊர்ப்பெயரே சமண சமயத் தொடர்பினைச் சுட்டுகிறது எனலாம்.

ஆம்பள்ளியில் விடுகாதழகிய பெருமாள் ஆழ்வாருக்காகக் கங்க காமிண்டன் பள்ளிச்சந்தமாக ஒரு குட்டையை வழங்கி ஒரு பாடல் கல்வெட்டும் பொறித்துள்ளான்.

*'வஞ்சியர் குலபதி எழுனி*
*வகுத்த வியக்கரியக்கரோடு*
*எஞ்சிய வழிவு திருத்தி*
*எண்குண விறைதிருமலை வைத்தான்*
*அஞ்சிதன் வழிவருமவன்*
*வழிமுதலி கலி அதிகனவன்*
*விஞ்சையற் தலைபுனை தகைமையர் காவலன்*
*விடுகாதழகிய பெருமாளே'.*

## ஆனந்தூர் :

ஊத்தங்கரை வட்டம் ஆனந்தூரில் சோழர் காலத்தில் கட்டப் பட்ட சிவன் கோயில் உள்ளது. வீரராஜேந்திர சோழனுடைய ஆட்சியின்போது கி.பி.1188இல் ஆனந்தூரில் உள்ள தான்தோன்றீஸ் வரமுடைய நாயனார் கோயிலில் நந்தாவிளக்கு வைக்க துறுமூருடையான் ஏற்பாடு செய்துள்ளான். எண்ணெய் வழங்கியதுடன் சிவலோகக் காணியாக நிலமும் அளித்துள்ளான். இக்கல்வெட்டு ஒரு பாறையில் உள்ளது. தனி நபருக்குச் சொந்தமான நிலத்தில் உள்ள கல்வெட்டில் திருவண்ணாமலை உடைய நாயனார் அமுதுபடி, விஸ்வநாத தேவன் சந்தி பூசை, திருமடைப்பள்ளி ஆகியவற்றிற்குத் தென்பற்றில் நிலம் வழங்கிய விபரம் உள்ளது.

இவ்வூரில் இருந்த மிகப்பெரிய புலிக்குத்திக்கல், தருமபுரி அகழ்வைப்பகத்திற்குக் கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ளது. விஜய நகர மன்னர் காலத்தில் முக்கண்ண உடையார் ஆட்சியின் போது வாழ்ந்த ஒருவர் பெயர் உள்ளது. அதாவது ஆனந்தூர் முதலிகளில் ஐய்யன் வெள்ளைக்காமினியார் பெயர் நடுகல்லில் வருகிறது. சிதைந்த இந்நடுகல் சிற்பம் பல நூல்களில் இடம் பெற்றுள்ளது.

## ஒட்டம்பட்டி :

தருமபுரி மாவட்டத்தில் ஒட்டம்பட்டி என்ற பெயரில் சில ஊர்கள் உள்ளன. ஊத்தங்கரை வட்டம் ஒட்டம்பட்டியில் வேடியப்பன் கோயில் உள்ளது. கொங்கணி அரசைச் சேர்ந்த சிவமாறனுடைய ஆட்சியின்போது மாவலிவாணராயன் கங்க நாட்டை ஆண்டு வந்துள்ளான். அப்போது தகடூரை நோக்கி இந்திரன் (இராட்டிர கூட மன்னன்) படையெடுத்து வர, கண்ணனூரை ஆண்ட கமியத்தழமன் போரில் பங்கு கொண்டு இறந்துள்ளான். வில், குறுவாள் ஏந்தியுள்ள நடுகல் வீரனின் மார்பில் இரண்டு அம்புகள் பாய்ந்துள்ளன. மாவலிவாணராயருடன் இராஷ்டிரகூடர் போரிட்டனர் எனலாம்.

## கானம்பட்டி :

ஊத்தங்கரை வட்டம் கானம்பட்டியில் விளாநத்தம் வேடியப்பன் கோயிலில் சிம்மவிஷ்ணுவின் 27ஆவது ஆட்சியாண்டில் வெட்டப் பட்ட நடுகல் உள்ளது. வதிசெலாவன் என்பவன் ஆதிரைப் போரில் மாண்டுள்ளான். அவனுக்கு எடுக்கப்பட்டதே இந்நடுகல் ஆகும்.

## குன்னத்தூர் :

ஊத்தங்கரை வட்டம் குன்னத்தூரில் உள்ள பாறையில் கி.பி. 15ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுள்ளது. மன்னன் பெயர் ஆட்சியாண்டு எதுவும் இல்லை. குன்றத்தூர் மக்கள், பிராண உத்தார உலகன் என்பானுக்கு நிலக்குடை அளித்துள்ளார்கள். பிரபுட தேவராயபுரத்து அசேஷ மகாஜனங்கள் என்று குன்றத்தூர் மக்கள் அழைக்கப்பட்டுள்ளனர். பிராமணர் வாழ்ந்த ஊராகக் குன்னத்தூர் இருந்துள்ளது. குன்றத்தூர் என்ற பெயரில் தமிழ்நாடெங்கும் பல ஊர்கள் உள்ளன.

## கொண்டம்பட்டி :

ஊத்தங்கரை வட்டம் கொண்டம்பட்டி என்ற ஊரில் நுளம்ப சோழன் நடுகற்கள் இரண்டு உள்ளன. ஒன்றில் தள்ளப்பாடி என்ற ஊர் மேல் பகைவர் படை வந்து ஆநிரைகளைக் கவர்ந்தபோது உதப்பியூரைச் சார்ந்த நுங்கிலன் தொண்டையனின் மகன் இறந்துபட்ட விவரம் உள்ளது. காலம் 9ஆம் நூற்றாண்டாகும். மற்றோர் கல்வெட்டு கி.பி. 11ஆம் நூற்றாண்டு. இது மிகவும் சிதைந்துள்ளது.

## சாவடியூர் :

ஊத்தங்கரை வட்டம் சாவடியூரில் பாறை ஒன்றின் மீது வீர ராஜேந்திரனுடைய கல்வெட்டு மெய்கீர்த்தியுடன் உள்ளது. தகடூர் எயில் நாட்டு மலையடி குன்றத்து வெள்ளாளன் குறசாத்தன் அடியான் தாசையன், மாணிக்கம் செட்டியார் மகன் வசவையனார் பெயர்கள் உள்ளன.

## நடுப்பட்டி :

ஊத்தங்கரை வட்டம் நடுப்பட்டி என்ற ஊரில் முதலாம், மகேந்திரவர்மனுடைய இரண்டு நடுகற்கள் வேடியப்பன் வனத்தில் உள்ளன. முதல் நடுகல், மன்னனின் எட்டாவது ஆட்சியாண்டில் மேல்வேள் நாட்டுக் குப்பையூரில் காவிதி வடுகன் ஆநிரை மீட்டுப் போரில் மாண்டதைக் குறிப்பிடுகிறது. இரண்டாவது நடுகல் கி.பி. 609இல் மீவேணாட்டில் உள்ள குப்பை ஊரினை ஆளும் வாணிகர் ஊர் கொள்ள அங்குக் கிணங்கன் போரில் இறந்ததைக் குறிப்பிடுகிறது. இந்நடுகல், முனியப்பன் கோயில் என வழங்கப் படுகிறது. இரண்டும் வட்டெழுத்தில் எழுதப்பட்டவையாகும். காவிதி என்ற பட்டப்பெயருடன் கன்னட வீரன் (வடுகன்) இருந்துள்ளான்.

## நவலை :

அரூர் வட்டம் நவலை என்ற ஊரில் அச்சுக்குத்தப்பட்ட காசுகள் (1080 கிராம் வெள்ளியில் கூடியவை) வாழைத்தோட்டத்தில் கிடைத் துள்ளது. தொல்லியல் துறை தருமபுரி தொல்லியல் அலுவலராக இருந்த ச. கிருஷ்ணமூர்த்தி மேற்படி காசுகளை அரசிற்காகப் பெற்று வந்துள்ளார். மேலும் இவ்வூரில் நவலை எட்டுக்கொட்டாய் ஏரிக்கரையில் கொங்கணி அரசைச் சார்ந்த சிவமாரபருமனின் மூன்றாவது ஆட்சியாண்டு நடுகல் உள்ளது. கந்த வாணதியரையன் மீது வாணபருமன் படை கொண்டு எதிர்க்க அப்போது சாவப்பனார் படையைச் சார்ந்த உண்ணி இறந்துள்ளார். இதே ஊரில் கன்னடமொழியில் உள்ள நடுகல் பெண்ணைக் கள்ளர் கடத்த முயன்றபோது நிகழ்ந்த போரில் இறந்து பட்ட வீரனைச் சுட்டுகிறது.

## நாதியனூர் :

ஊத்தங்கரைவட்டம் நாதியனூர் வேடியப்பன் கோயிலில் சிம்மவிஷ்ணுவின் 25ஆவது ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட

நடுகல் உள்ளது. மொக்கப்பாடியைச் சேர்ந்தவர்கள் ஆநிரைகளைக் கவர, அதனைத் தடுக்கும் போரில் மைந்தைகள் குமாரச்சதியார் மாண்டுள்ளார். சதியார், சதியர் எனப்படும் அதியமானுடன் தொடர்புடையவர் போலும். காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டாகும்.

## பாவக்கல் :

ஊத்தங்கரை வட்டம் பாவக்கல் சாலையருகே அனிவாரத இளவரையன் பள்ளிச்சந்தமாக (சமணர் கோயில்) நிலக்கொடை அளித்துள்ளான் என்ற விவரம் ஒரு கல்வெட்டு மூலம் அறிகிறோம்.

## புலியானூர் :

ஊத்தங்கரை வட்டம் புலியானூரில் வேடியப்பன் வனத்தில் ஐந்து நடுகற்கள் உள்ளன. முதல் நடுகல் சிம்ம விஷ்ணு காலத்தது ஆகும். ஆயின் சிதைந்துள்ளது. இரண்டாவது நடுகல் சிம்ம விஷ்ணுவின் 19ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்தது. மேல்வேனாட்டில் சிறுப்பாழ் என்ற பகுதியை ஆண்ட பாலாசிரியர் மக்கள் சிறுப்படு வானாரு என்பவர் கருங்காலப்பாடியில் ஆநிரைகளைக் கவர்ந்த போது மாண்டுள்ளார்.

முதல் மகேந்திர வர்மனின் 20ஆவது ஆட்சியாண்டின் போது தொறுக்கவர்ந்த பாலாசிரிகரின் மகன் வீரவரு என்பவர் மாண்டதை மூன்றாவது நடுகல் குறிப்பிடுகிறது. நான்காவது நடுகல் கோவிசை செயவிருமனின் 20ஆவது ஆட்சியாண்டில் நிகழ்ந்த ஆநிரைப் போரைச் சுட்டுகிறது. போரில் மாறன் என்பவன் மாண்டுள்ளான்.

புலியனூர் வயலில் கிடக்கும் மிகவும் பொறிந்துள்ள ஐந்தாவது நடுகல் தமிழ் எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

## பெரியபொம்மட்டி :

ஊத்தங்கரை வட்டம் பெரியபொம்மட்டி பெரிய வேடியப்பன் கோயிலில் நுளம்பர் கால நடுகற்கள் இரண்டு உள்ளன. இரண்டும் வீரநுளம்பனின் 15 ஆவது ஆட்சியாண்டைச் சார்ந்தவை. ஆநிரை மீட்புப் போர்களில் செகத்தூருடைய மாணிக்கடையனார் என்பவரும் மாமண்டய்யன் என்பவனும் அவனுடைய அடியானும் மாண்டுள்ளனர் என்றறிகிறோம்.

## போத்தன்கோட்டை :

ஊத்தங்கரை வட்டம் போத்தங்கோட்டை என்ற ஊரில் கல்லாற்றுக்கரையில் இருந்த நடுகல் தற்போது தருமபுரி அகழ்வைப் பகத்தில் உள்ளது. முதல் மகேந்திரவர்மனுடைய 15ஆவது ஆட்சியாண்டின்போது கோவூர் நாட்டுக் கீழ்வழிப் பள்ளக்கூரில் வாழும் நஞ்சுணியார் மகன் கொற்றாடை ஆநிரை மீட்புப் போரில் மாண்டுள்ளார் என்ற விபரம் அதில் உள்ளது. போத்தரையர் என்ற பல்லவருடைய பட்டப் பெயருடன் போத்தன்கோட்டை அமைந்துள்ளது.

## மெய்யாண்டிபட்டி :

ஊத்தங்கரை வட்டம் மெய்யாண்டிப்பட்டி நொண்டி வேடியப்பன் கோயிலில் உள்ள வேடியப்பன் சிலையின் மேல் சிவமாறனுடைய 20ஆவது ஆட்சியாண்டு சாசனம் உள்ளது. பெரும்வாண்ணக்கமாரியாரும் மற்றொருவரும் ஆநிரைக் கவர்ந்தபோது போரில் இறந்து பட்டுள்ளனர் என்ற செய்தி சாசனத்தில் உள்ளது.

## ராமகிருஷ்ணம்பதி :

ஊத்தங்கரை வட்டம் ராமகிருஷ்ணம்பதியில் இரண்டு நடுகல் கல்வெட்டுகள் உள்ளன. கங்கபருமரைசர் நான்காவது ஆட்சி யாண்டின் போது நிகழ்ந்த தொறுப்போரில் மசிநறுக்கனார் மாண்டுள்ளார். தொறுப்போரினை மேற்கொண்டவர் முரப்புரக் கயத்தான் ஆவார். பிள்ளையார் சிலைக்குக் கீழ் நடுகல் கல்வெட்டுள்ளது. மற்றோர் நடுகல் கழனியில் உள்ளது. கட்டணைபருமரின் 10ஆவது ஆட்சியாண்டின்போது பெரும்பாணதி அரையன் கங்க நாட்டையாள அதிவகூர் என்ற இடத்தில் நிகழ்ந்த ஆநிரைப் போர் சுட்டப்படுகிறது. அதிவகூர் என்பதே ராமகிருஷ்ணம்பதியின் பழைய பெயராக இருக்கலாம்.

## ரெட்டியூர் :

ஊத்தங்கரை வட்டம் ரெட்டியூரில் உள்ள ஒரு நடுகல், அய்யப்ப தேவனுடைய ஆட்சியின்போது வேணாடுடைய இராசப்பையனூர் அடியான் அரையகுட்டி என்பவன் பன்றியைக் கொன்று தானும் மாண்டுள்ளான் என்கிறது. வேடியப்பன் கோயிலில் உள்ள மற்றோர் நடுகல் கங்கமாத்தாண்டார் மகன் பாண அடிகளைச் சுட்டுகிறது.

மூன்றாவது கல்வெட்டு அம்பலம் எடுத்த வளஞ்சியரைக் குறிப்பிடுகிறது.

## வரதன்பட்டி நத்தமேடு :

ஊத்தங்கரை வட்டம் வரதன்பட்டி நத்தமேட்டில் சிவமாற பருமனாகிய கொங்கணி அரசனுடைய நடுகல் உள்ளது. கூடல் என்ற ஊரில் நிகழ்ந்த போரில் மனைமகன் உலகாதி மாண்டுள்ளான். மனைமகன் என்ற சொல் அகம்படியன் மற்றும் சேவகன் என்ற சொல்லின் பொருளுடையது எனலாம்.

## வெங்கடாபுரம் :

ஊத்தங்கரை வட்டம் வெங்கடாபுரத்தில் பன்றி குத்திப்பட்டான் நடுகல் எழுத்துகள் மிகவும் பொறிந்த நிலையில் காணப்படுகிறது. வீரன் பன்றியைக் குத்த வேட்டை நாய்கள் இரண்டு அருகே செதுக்கப்பட்டுள்ளன.

## வெள்ளாளன்பட்டி :

ஊத்தங்கரை வட்டம் வெள்ளாளப்பட்டி என்ற ஊரில் மஞ்சள் மேட்டு வேடியப்பன் கோயில் உள்ளது. அதில் பாண மன்னன் அரிமிறை பருமருடைய ஆட்சியில் நிகழ்ந்த போர் சுட்டப்படுகிறது. அரிமிறை பருமன் பேரரசராக இருந்தபோது மாவலிவாணராயர் கங்க நாடு, புறமலை நாடு, கோவூர் நாடு, கோயினூர் நாடு, வேள்கலி நாடு, மன்னநாடு, நாயனூர் நாடு என ஏழு நாடுகளை ஆண்டுள்ளார். அண்ணாமன் என்பவன் எதிரிகளுடன் போரிட்டு இறந்துபட முத்தூரைச் சார்ந்தார் நேத்தார்பட்டியாக நிலம் அளித்துள்ளனர். வெள்ளாளர் பெயரில் ஏற்பட்ட ஊராக இவ்வூர் அமைந்துள்ளது.

## இளவம்பாடி :

கிருஷ்ணகிரி வட்டம் இளவம்பாடி வேடியப்பன் கோயிலில் 10ஆம் நூற்றாண்டு நடுகல் கல்வெட்டுள்ளது. கோவூர் நாட்டைச் சேர்ந்த சிறுபுலூரில் வாழும் தாழிபுகனார் என்பவரின் மகன் மோடன் ஊரைக்காக்கும் போரில் பங்கு கொண்டு இறந்துள்ளான் என்ற விபரம் அதில் உள்ளது.

## காரிமங்கலம்

சங்க காலந்தொடங்கி கி.பி. 17ஆம் நூற்றாண்டு வரை தகடூர் என வழங்கப்பட்ட ஊர் இன்று தருமபுரி என அழைக்கப்படுகிறது.

ஆயின் அன்றுமுதல் இன்றுவரை எவ்வித மாற்றமுமின்றிக் காரிமங்கலம் என்ற ஊர் வழங்கப்பட்டு வருகிறது. அன்று தகடூர் நாட்டில் ஓர் ஊராக இருந்தது. இன்று தருமபுரி மாவட்டத்தில் ஓர் ஊராக உள்ளது. இந்தக் காரிமங்கலம் பேரூராகவும், ஊராட்சி ஒன்றியமாகவும் இன்று விளங்குகிறது. அன்று அதியமான் பெருவழியில் இருந்த காரிமங்கலம் இன்று தருமபுரி கிருஷ்ணகிரி நெடுஞ்சாலைக்கிடையே உள்ளது. இவ்வூர்ப் பெயர்க்காரணத் தையும், காலந்தோறும் காரிமங்கலத்தின் வரலாற்றையும் தெரிந்து கொள்வது சுவையான செய்தியாகும்.

காரி என்ற குறுநில மன்னனுடன் காரிமங்கலத்தை டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை தொடர்புபடுத்துவார். ஆயின், வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது இக்கருத்து வலிமையானதாக இல்லை.

*திருக்கோவலூர் திருமுடிக்காரியை, அதியமான் வென்றதை*
*"முரண்மிகு கோவலூர் நூறிநின்*
*அரணடு திகிரி யேந்தியதோள்"*

- என அவ்வையார் குறிப்பிடுவார்.

திருக்கோயிலூர் அருகேயுள்ள ஜம்பை-பிராமி கல்வெட்டு அதியமான் நெடுமான் அஞ்சி வெட்டியதாகும். ஆகவே காரியின் நாட்டில் இருந்த திருவதிகை அல்லது அதிராஜமங்கலத்தை, அதியமானுடன் தொடர்புபடுத்துவது போல் காரியுடன் காரிமங்கலத்தைத் தொடர்புப்படுத்த வழியில்லை. திருமுடிக்காரியும் சேர மன்னனும் ஒரு கூட்டாகவும், அதியமானும், ஓரியும் (கொல்லிமலை அரசன்) மற்றொரு கூட்டாகவும் இருந்தாலும் காரி, ஓரியை வென்றதாகப் பார்க்கிறோமே ஒழிய தகடூர் வரை வந்ததாகத் தெரியவில்லை. எனினும் பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேர மன்னர் தகடூர் வரை வந்து போரிட்டு வென்றுள்ளார். சேர, சோழ பாண்டியரைப் போல சத்திய புத்திரராகிய அதியமான்களைப் பேரரசர் அசோகரே தம் கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ளார். காரி, ஓரி போன்ற எந்தக் குறுநில மன்னரையும் குறிப்பிடாத அசோகர் அதியமான் மரபை மட்டும் குறிப்பிட்டது குறிப்பிடத் தக்கதொன்றாகும். ஆகவே, காரியின் பெயரால் காரிமங்கலம் தோன்றியிருக்குமா? என்பது ஐயமேயாகும்.

காரி என்ற பெயரில் பல புலவர்கள் சங்க காலந்தொடங்கி இருந்துள்ளனர். காரிக்கிழார், காரிக்கண்ணனார் முறையே பாண்டிய நாட்டிலும், தொண்டை நாட்டிலும் வாழ்ந்துள்ளனர். சோழ நாட்டிலும் இவர்கள் வாழ்ந்துள்ளனர். காரிக்கிழார், பாண்டியன்

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் போற்றியுள்ளார். 'முக்கட் செல்வர் நகர் வலம் செயற்கே இறைஞ்சுக பெரும', என்று கூறுவதால் இவர் சிவநேயச் செல்வர் எனலாம். ஆதலால் இவர்களுடன் காரிமங்கலத்தைத் தொடர்புபடுத்த முடியவில்லை. சைவ அடியார்களில் காரிநாயனாரும் ஒருவர் ஆவார். சோழ நாட்டவர் ஆவார்.

காரியாறு என்ற பெயருடனும், காரிமங்கலத்தைத் தொடர்பு படுத்த முடியவில்லை. காரீரியாய ஜனம் என்றால் மழையை விரும்பினவர்கள் செய்யும் காமிய இஷ்டி என்று பொருள். மழையின்றி வறண்ட பகுதியான காரிமங்கலத்திற்குக் காரீரியாய ஜனம் பொருத்தம். எனினும் கல்வெட்டுச் சான்று வலிமையாக இல்லை. காரியுண்டிக் கடவுள் அல்லது காரிநாயனார் என்ற இறைவன் பெயருடன் இவ்வூரைத் தொடர்புபடுத்த முடியுமா? என்று பார்க்கலாம். அப்பர், திருக்காளத்தி செல்லும்முன் திருக்காரிக்கரை இறைவனை (தொண்டை நாடு) வணங்கிச் சென்றுள்ளார். ஆகக்காரி என்ற பெயரில் இறைவனும், காரி என்ற இறைவன் பெயரில் ஊர்ப்பெயரும் வழங்கியிருக்க வாய்ப்புண்டு. காரிமங்கலம் என்ற பெயரை முதன் முதலில் முதல் மகேந்திரவர்மன் காலத்தில் இருந்து தான் பார்க்கிறோம். ஆகவே, காரி என்ற இறைவன் பெயரில் அமைந்த ஊர் காரிமங்கலமாகும் என்று நாம் குறிப்பிடலாம்.

காரிமங்கலம், முதல் மகேந்திரவர்மனுடைய ஆட்சிக் காலத்தில் கோவூர் நாட்டில் ஓர் ஊராக இருந்துள்ளது. கி.பி. 597இல் கோவூர் நாட்டைச் சேர்ந்த காரிமங்கலத்தில் ஆநிரைப் போர் நிகழ்ந்துள்ளது. இப்போரில் பங்கு கொண்டு இறந்தவர்களுக்கு இரண்டு நடுகற்கள் எடுக்கப்பட்டுள்ளன. ஒன்றில் புரவர்பெற்றாண்டான் கோம்புளிகன் மகன் ஏறனும், மற்றொன்றில் குளவர் என்பவருடைய மக்களிருவரும் குறிப்பிடப்படுகின்றனர். பல்லவர் காலந் தொடங்கிப் பல கல்வெட்டுகளில் கோவூர் நாடு சுட்டப்படுவதைப் பார்க்கிறோம். சங்க காலத்தில் கோவூர்கிழார் என்றே ஒரு புலவர் இருந்துள்ளார். ஆயின் அவர் இந்தக் கோவூரைச் சேர்ந்தவரல்லர். கோவூர் நாடு குறித்துச் செங்கம் வட்டம், சின்னையன்பேட்டை நடுகல் குறிப்பிடுகிறது. கம்பவர்மனுடைய மூன்றாவது ஆட்சியாண்டில் எயில் நாட்டார் (கிருஷ்ணகிரி, ககனகிரிமலை முதலிய பகுதிகள் அடங்கியது) மீகொன்றை நாட்டில் எருமைகளைக் கவர்ந்து செல்ல வயிரமேக வாணகோவரையன் சேவகன் மலையனாருடைய செம்பத் தொண்டன் மகன் காரிப்பெருமான் பாசாற்றூரில் நிரை மீட்கப் போரிடுகிறான். பின் கோவூர் நாட்டுச் சிற்றிடையாற்று முதுகொன்றை

மூக்கின்மீமலை அய்ங்கயக் கரையில் போரிட்டு மாள்கிறான். கோவூர் நாட்டில் சிற்றிடையாறு இருந்தமையைப் பார்க்கிறோம். மூக்கின்மீமலை என்பது இன்று மூக்கனூர் மலை என வழங்கப்படுகிறது. மூக்கனூர் பற்று எனவும் இது வழங்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் குதிரைமலை என வழங்கப்பட்டதே பின் மூக்கின்மீமலையாகவும், மூக்கனூர் மலையாகவும் மாறியுள்ளது. கோவூர் என்பது ஏறக்குறைய காவேரிப்பட்டிணத்திலிருந்து மூக்கனூர் மலை வரை தருமபுரிக்கு வடகிழக்கில் இருந்தது எனலாம். மூக்கனூர் மலைக்கு மறுபுறம் புறமலைநாடு இருந்துள்ளது. (அரூர், கடத்தூர் ஆகிய பகுதிகள் அடங்கியது)

பல்லவர் காலத்தில் கோவூர் நாட்டைக் ''கங்கதி அரைசர்'' ஆண்டுள்ளனர். காரிமங்கலம் என்ற ஊரைச் சுட்டும் நடுகற்கள் காரிமங்கலத்தில் இல்லை. அரூர் வட்டத்தில் கதிரம்பட்டி என்ற ஊரின் தென்பெண்ணையாற்றங்கரையில் உள்ளன. காரிமங்கலத்தி லிருந்து சுமார் 25 கி.மீ. தூரத்தில் உள்ள கதிரம்பட்டியில் உள்ள இவ்விரு நடுகற்களையும் ஊர் மக்கள் வேடியப்பன் கோயில் என அழைத்து வழிபடுகின்றனர். செங்கம் வட்டம் சின்னையன்பேட்டை நடுகல்லில் வரும் காரிப் பெருமான் - காரிமங்கலத்தில் இருந்த இறைவன் பெயரையொட்டி இடப்பட்டதா? என்று உறுதியாகக் கூறமுடியவில்லை. ஆயினும் காரி என்ற பெயரில் காரிமங்கலத்தில் கோயில் இல்லை. கோவூர் நாடு தருமபுரி கல்வெட்டுகளில் அடிக்கடி இடம் பெறுகிறது. கோவூர் நாட்டைச் சேர்ந்தவர் மிகுந்த வீரம் படைத்தவர் எனலாம். பரமேச்சுவர வருமனுடைய ஒன்பதாம் ஆட்சியாண்டில் (கி.பி. 7ஆம் நூற்றாண்டு) கோவூர் நாட்டு கோயில்பட்டர் ஆநிரைகளைக் கவர்ந்தபொழுது மேற்செங்கை, மாமுடையபாரதாயர் மகன் தொறு மீட்டு வீரமரணம் அடைந்ததைச் செங்கம் வட்டம் மேல் பள்ளிப்பட்டு ஆனந்தவாடி காட்டின் நடுவில் உள்ள மொசசேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல் குறிப்பிடுகிறது. கோயில் பட்டர் என்ற சொல் பூசாரி என்ற பொருளில் இன்றிக் குறுநில மன்னர் அல்லது தலைவர் என்று குறிப்பிடலாம். (கோயில் - அரசன் வாழுமிடம்) கோவூர் நாட்டை ஆண்ட ஒருவரே மேற்கண்ட தொறுகவர்தலில் ஈடுபட்டமை பார்க்கிறோம். தருமபுரி மாவட்டத்தில் கோவூர் இருந்ததுபோல் தென்னாற்காடு மாவட்டத்தில் கோவலூர் இருந்துள்ளது. அவ்வூரும் மேற்கோவலூர் எனப் பிரிந்து வடஆற்காடு ஒட்டிய பகுதியில் அக்காலத்தில் சிறப்புடன் இருந்துள்ளது. நொளம்பர் காலத்திலும் கோவூர் சிறந்து விளங்கியது. குறிப்பாக அன்னையனார் ஆட்சியில், கோவூர் நாட்டு சிறுபுளூர் தாழ்புகனார்

மகன் மோடன் ஊர் அழிவில் இறந்ததை இளவம்பாடி நடுகல் தெரிவிக்கிறது. சிறுபுளூர் தருமபுரியில் தற்போது எங்குள்ளது என்று தெரியவில்லை. சென்னை குன்றத்தூர் செல்லும் வழியில் ஒரு கோவூர் உள்ளது. காரிமங்கலத்திலிருந்து தென்கிழக்கில் 5 கி.மீ. தூரத்தில் உள்ள ஊர்க் (துக்கோஜனஹள்ளி) கல்வெட்டில் வரும் பையூரை நிலையுடையதாகக் கொண்ட மதுராந்தக வீர நொளம்ப ராஜநாராயண வைரவன் பொன்னம்பல கூத்தன் என்ற அரசியல் அதிகாரிக்கும் இங்குள்ள பைரேசுவரர் கோயிலுக்கும் தொடர்புண்டா என்றும் ஆய்வு செய்யலாம். (பையூர் காரிமங்கலத்திற்கும் காவேரிப்பட்டினத்திற்கும் இடையில் உள்ள ஓர் ஊர்)

## செப்புச் சிலைகள் :

காரிமங்கலத்தில் வேணுகோபால் சுவாமி கோயிலில் மூன்று செப்புச் சிலைகள் உள்ளன. வேணுகோபால், ருக்குமணி, சத்யபாமா என அழைக்கின்றனர். வேணுகோபால் சிலையின் கீழே பீடத்தில் மூன்று வரி கன்னடக் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. "காரி மங்கலம் விநாயகு பாலசாமி உபையம் வாப்யாய நமஹவம் ஶ்ரீ" என்று எழுதப்பட்டுள்ளது.

## இராவணன் மரச்சிற்பம் :

காரிமங்கலம் கடைத்தெருவில் மண்டபம் ஒன்றில் இராவணன் மரச்சிற்பம் வைக்கப்பட்டிருந்தது. அச்சிற்பம் தற்போது தருமபுரி அகழ்வைப்பகத்தில் உள்ளது. நீளம், அகலம். கணம் 6X6X1எனலாம். பத்துத் தலைகளுடன் கூடிய இச்சிற்பம் கி.பி. 18ஆம் நூற்றாண்டில் செய்தது எனலாம். இச்சிற்பத்தில் இரண்டு கால கட்ட பணிகள் தெரிகின்றன. முதலில் மரத்தால் செய்யப்பட்டு வண்ணப்பூச்சு செய்யப்பட்டது. பின் கண்ணாடித் துண்டுகளைப் பதித்தனர். இப்பணி மராட்டியர் கலைப்பாணியாகும்.

## சோழர் காலமும் காரிமங்கலமும் :

அரூர் வட்டம் சிந்தல்பாடி ஈசுவரன் கோயில் கருவறையில் உள்ள மூன்றாம் குலோத்துங்கன் காலக் கல்வெட்டு உள்ளது. காரிமங்கலத்துக் கெண்டையன் மலையன் என்பவன் சிவனீச்சுரமுடைய இறைவற்கு ஒரு சந்தி விளக்கு எரிக்க ஒரு பொன் உபையமாக வழங்குகிறான். மேலும் கானுழான், உடையான், யாசக வேளான், பிடவாரியார் ஆகியோரும் தானம் செய்கின்றனர். தானத்தைப் பெற்றுக் கொண்ட தில்லை நாயகப்பட்டனான

மூவாயிரத்தொருவன் ஏழு சந்தி விளக்குகளை வைக்கச் சம்மதிக்கிறான். ஆகக் காரிமங்கலத்தைச் சேர்ந்தவர்கள் பிற ஊர் கோயில்களுக்கும் உதவியமையைப் பார்க்கிறோம்.

## காரிமங்கலத்தில் உள்ள கோயில்கள் :

காரிமங்கலத்தில் அருணேசுவரர் கோயில் தொன்மை வாய்ந்தது ஆகும். இக்கோயில் போசளர் காலத்தில் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் புதுப்பித்துக் கட்டப்பட்டிருக்க வேண்டும். இக்கோயிலுக்குப் போகும் வழியில் நவகண்ட சிற்பம் ஒன்றுள்ளது. சிற்ப அமைப்பை நோக்கும் போது கி.பி. 10-11 ஆம் நூற்றாண்டு எனலாம். வலக்கை, கத்தியைத் தரையில் ஊன்ற இடக்கை வாளால் தன் கழுத்தை அறுத்துக் கொள்ளும்படி உள்ளது. பக்கவாட்டில் பார்ப்பதுபோல் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. குடுமி பின்புறம் உள்ளது. அணிகலன் மிகக் குறைவாகும். வடக்குப் பார்த்த திசையில் முகம் உள்ளது. நவகண்ட சிற்பங்கள் தருமபுரி மாவட்டத்தில் பல இடங்களில் உள்ளன என்பதை ஈண்டுக் குறிப்பிட வேண்டும்.

அருணேசுவரர் கோயில் சிறிய குன்றின் மீது கட்டப்பட்டுள்ளது. தெற்குப் பார்த்த வாயில். கோயிலின் கோபுரம் கி.பி. 1895இல் ராமசெட்டி என்பவரால் புதுப்பித்து கட்டப்பட்டுள்ளது. கோயில் புதுப்பிக்கப்படும்போது கல்வெட்டுகள் மறைவது அல்லது சிதைவது தற்காலத்தில் நாம் பல கோயில்களில் காணலாம். அருணேசுவரர் கோயிலும் இதற்கு விதிவிலக்கல்ல. இங்குள்ள கருவறையில் மூன்று கல்வெட்டுகள் உள்ளன. ஒன்றில் பரிவார ஆலயத்திற்கு எதிரில் தெற்குத் திசை பார்த்த கருவறைச் சுவரில் 5 வரிகளைக் கொண்ட கல்வெட்டு உள்ளது. இது போசள மன்னருடையதாகும்.

*"ஸ்வஸ்தி ஸ்ரீ சோமீசுர (தே)வர்க்கு யாண்டு 12 ஆவது*
*ஆறணீ. நாயகர் கோயிலில் கோணா... பாச்சைக்*
*கோணான் பனையா... வாண்டை செய்யும் கடவேன்"*

கல்வெட்டில் இறைவன் பெயர் 'ஆரணீஸ்வரமுடைய நாயனார்' என்பதறிகிறோம். மேலும் கன்னடக் கல்வெட்டொன்றும் சிதைந்த நிலையில் கூடிய விஜய நகர வேந்தர் கல்வெட்டும் பார்க்கிறோம். கருவறை கோஷ்டங்களில் தெற்கில் தக்ஷிணாமூர்த்தியும், மேற்கில் விஷ்ணுவும், வடக்கில் நான்முகனும் பார்க்கிறோம். பரிவார ஆலயத்தில் லிங்கங்களும், மயிலேறும் ஆறுமுகமும் பார்க்கிறோம். மேற்கில் கிழக்குப் பார்த்த திசையில் அபித குஜாம்பாள் தனிக்கோயில் உள்ளது. கோயிலில் பைரவர் கிழக்கில் உள்ளார்.

தெலுங்கு மொழியில் காரிமங்கல அருணாசலேஸ்வரர் என எழுதப்பட்ட ஒரு கல்வெட்டும் இங்கு உள்ளது. பங்குனி உத்திர திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது.

மலையின் உச்சியில் சென்றாய பெருமாள் கோயில் உள்ளது. கோலால அம்மன் கோயில் மக்களால் பெரிதும் போற்றப்படுகிறது. பல ஊர்களிலிருந்து மக்கள் வந்து வழிபட்டுச் செல்கின்றனர்.

இலட்சுமி நாராயண கோயில் இங்குள்ள விஷ்ணு கோயில்களில் சிறப்பானதாகும். இங்குள்ள மண்டபத்தில் உள்ள தூண்கள் சாளுக்கிய கலைப்பாணியைக் கொண்டவையாகும். இலக்குமியை இடப்பக்கத் தொடையில் அமர்த்தியபடி விஷ்ணு காட்சி தருகிறார். நான்கு கைகள் உள்ளன. ஒரு கையில் அம்மனை அணைத்தபடி, மற்றொரு கையில் அபயம். பின் இரு கைகளில் சங்கு, சக்கரம் பற்றியுள்ளார். கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபத்துடன் நேர் கிழக்கே சாளுக்கியர் தூண்கள் இங்குக் காண்கிறோம்.

மேற்கண்ட கோயில்கள் தவிர வீரபத்திரர் கோயில், பைரேஸ்வரர் கோயில், வேணுகோபால் கோயில் போன்ற வேறு சில கோயில்கள் காரிமங்கலத்தில் உள்ளன. வீரபத்திரர் கோயில் முன்பாக உள்ள கல்வெட்டு கன்னட மொழியில் உள்ளது. கி.பி. 1557இல் சதாசிவராயருடைய ஆட்சியின் போது வெட்டப்பட்டது.

## கிருஷ்ணகிரி

மாவட்டத் தலைநகரான கிருஷ்ணகிரி குன்றுகளால் சூழப்பட்டது. பல வசதிகளையும் தன்னகத்தே பெற்றுத் தொழில் மையமாகவும் கிருஷ்ணகிரி விளங்குகிறது. தவிர வியாபார ஸ்தலமாகவும், சிறந்த நகரமாகவும் உள்ள கிருஷ்ணகிரி ஒரு புறம் புதுமைப் பொலிவோடும் மறுபுறம் தொன்மைச் சிறப்போடும் விளங்கி வருகிறது.

இன்று நாகரிகத்தின் வேகத்திற்கு ஏற்ப துரிதமாக வளர்ச்சி யடைந்து வரும் கிருஷ்ணகிரியின் பின்னணியில் நீண்ட நெடிய தொரு வரலாற்றுச் சிறப்பு புதைந்து கிடக்கிறது.

இதுவரையில் எழுதப்பட்ட மாவட்ட விவர நூல்கள், விஜயநகர அரசர் காலத்திற்கு முற்பட்ட வரலாற்றைக் குறிப்பிடவில்லை. அண்மைக்கால ஆய்வுகளின் மூலம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து கிருஷ்ணகிரியின் தொன்மையான வரலாற்றை குறிப்பிட முடியும்.

## சையத்பாஷா மலை ஓவியங்கள் :

கிருஷ்ணகிரி பழைய பேட்டையில் சையத்பாட்சா மலை ஒன்று உள்ளது. இம்மலையில் கோட்டையும், கோயில்களும், தர்காவும் உள்ளன. ஆயினும் இம்மலையில் சுமார் 700 அடி உயரத்தில் குகை போன்ற பாறையில் வெள்ளை வண்ணத்தில் கூடிய ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இத்தொல்பழங்கால ஓவியங்கள் தொன்மையானதாகவும் தத்ரூப மாகவும் காட்சியளிக்கின்றன.

இதில் சிறிய வடிவில் முதலில் இரண்டு மனித உருவங்களும் நான்கு பறவைகளின் உருவங்களும் காணப் படுகின்றன. இவ்வோவியத்தில் முதல் வீரன் வலது கையை மேலே உயர்த்திய நிலையில், இடது கையில் கேடயத்துடன் இடுப்பில் நீண்ட கத்தி ஒன்றை சொருகிய நிலையில் காணப்படுகிறான். மற்றொரு வீரன் முதல் வீரனைத் திரும்பிப் பார்த்த நிலையில் காணப்படுகிறான். அவனது வலக்கையின் இடுப்பருகே கத்தியும் இடது கையில் கேடயமும் காட்டப்பட்டுள்ளன. தவிர இவனது இடையில் சிறிய கத்தி (பிச்சுவா) ஒன்றும் காணப்படுகிறது. இவ்விரண்டு வீரர்களின் அருகில் இரண்டு பெரிய பறவைகளும் இரண்டு குஞ்சுப் பறவைகளும் உள்ளன. அப்பறவைகளைக் காட்டுக் கோழிகள் எனலாம். இப்பறவைகளின் உடலில் அம்பு எய்திருப்பதால், பறவை வேட்டையை இவ்வோவியம் குறிப்பிடுகின்றது போலும்.

தவிர ஓவியங்களுக்கு அருகில் வரிசையாக ஐந்து ஆடவர் கை கோத்தபடி நாட்டியமாடுவது போல் வரையப்பட்டுள்ளது. கோயம் புத்தூர் மாவட்டம் வெள்ளெருக்கன்பாளையத்தில் (வேட்டைக்காரன் மலை) உள்ள ஓவியம் போல இதுவும் காணப்படுகிறது. இது தவிர பல்வேறு வகையான மரம், செடி, கொடி, சிமிழ் போன்ற உருவங்களும் வட்டமாக ஓவியத்தைச் சுற்றித் தீட்டப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரி வட்டத்தில் பல்வேறு இடங்களில் பெருங்கற்கால ஓவியங்கள் கண்டு பிடிக்கப்பட்டாலும், இவ்வோவியங்கள் மிகச் சிறிய வடிவில் உள்ளன. குரால் கவியிலும் ஓவியமுண்டு.

## சோழர் காலக்கோயில் :

பழையகோட்டை நரசிம்ம பெருமாள் கோயில், சோமேசுவரர் கோயில் ஆகியவற்றில் அரிய சிற்பங்கள் உள்ளன. சோமேசுவரர் கோயில் கட்டியவர் பெயரும், கல்வெட்டும் உள்ளது. "இக்கோயில் எடுப்பித்த குணமதாசர் இவர்" என்பது அக்கல்வெட்டின் வாசகமாகும். இச்சிற் பத்தில் குணமதாசர் கையில் உருத்திராட்ச மாலையுடன் அமர்ந்தபடி உள்ளார். இதே கோயிலில் உள்ள மற்றொரு சிற்பம் குணமதாசர் மகன் சிற்பமாகும். அதில் எழுதப்பட்ட கல்வெட்டில் "இவர் குணமதாசர் மகன் கங்கை கொண்ட சோழ பல்லவ ஆதித்தன்" என்று பொறிக்கப்பட்டுள்ளது.

கங்கைகொண்ட சோழன் என்ற பெயர் முதலாம் ராசேந்திரனுக்கு உரியதாகும். இவருடைய பெயரைக் கொண்ட பல்லவ ஆதித்தன் கி.பி. 11ஆம் நூற்றாண்டில் கிருஷ்ணகிரியில் வாழ்ந்து வந்துள்ளார். இவர் ஓர் அரசாங்க அதிகாரி போலும். மற்றொரு சிற்பம் குணமதாசரின் மனைவிமார் இருவரின் உருவங்களாகும். இதில் உள்ள கல்வெட்டில் "இவர்கள் குணமதாசர் தேவிமார் சிறிய காமவையும் பெரிய காமவையும்" என்று உள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நபர்கள் கோயில் ஒன்றை எடுத்து, தானம் புரிந்துள்ளார்கள். அக்கோயில்தான் இன்று சோமேசுவரர் கோயிலாகும். மேற்கண்ட சிற்பங்களும் கல்வெட்டுகளும் இக்கோயிலில் இன்றும் அழியாமல் உள்ளன.

## கவிஈஸ்வரர் கோயில் :

கிருஷ்ணகிரிக்கு அருகிலுள்ள குந்தாணியைத் தலைநகரமாகக் கொண்டு கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டுகளில் போசளர் என்ற ஒய்சாளர் ஆட்சி செலுத்தி வந்தனர். போசளர் வம்சத்தில் வந்த வீரராமநாத தேவர் காலத்தில், ஒரு சிவன் கோயில் கொங்கு நாட்டைச் சேர்ந்த ஒருவரால் கட்டப்பட்டது. இதனை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது. சையத் பாட்சா மலையின் அடிவாரத்தில் பாறை ஒன்றில் இக்கல்வெட்டு உள்ளது. ஸ்ரீ போசள வீரராமநாத தேவர்க்கு யாண்டு 23ஆவது கொங்கல் ஏழூரிலிருக்கும் வியாபாரிகளில் வடசேரி உடையாரான மாதரசர் தேசிமாகர் எடுத்த அம்பலம் என்று அதில் உள்ளது. கொங்கல் என்பது கொங்கு நாடாகும். ஏழூர் நாமக்கல் அருகில் இன்றும் இதே பெயரில் வழங்கப்படுகின்றது. இந்தக் கோயில் கவி ஈஸ்வரர் கோயில் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயில் மலையடிவாரத்தில் உள்ளது. கோயிலில் கல்வெட்டு

எதுவுமில்லை. மலைக்குகையில் ஒரு தெலுங்கு கல்வெட்டும் உள்ளது. இது விஜயநகர அரசர் காலத்தது போலும்.

## விஜயநகரர்காலக்கல்வெட்டு :

கிருஷ்ணகிரி பழையபேட்டையில் லட்சுமிநரசிம்ம பெருமாள் கோயில் தொன்மை மாறாத கட்டிட அமைப்புடன், சிறந்த சிற்பங்களையும், தன்னகத்தே கொண்டுள்ளது. சக ஆண்டு 1322-ல் (கி.பி.14ஆம் நூற்றாண்டு) கோயிலுக்குத் தானம் புரிந்த செய்தி ஒரு கல்வெட்டில் உள்ளது. இக்கல்வெட்டில் "மேலைக் கோட்டை" என்ற பெயர் காணப்படுகிறது. கிருஷ்ணகிரியின் பழைய பெயராக இப்பெயர் இருக்கலாம் என்று கூறப்படுகிறது. நரசிம்ம பெருமாள் கோயில் கருவறை கோஷ்டங்களில் உள்ள சிற்பங்களை நோக்கும்போது திருவரங்கத்துள் போசளர் எடுத்த வேணுகோபால் போல உள்ளது. தென்புற கோஷ்டத்தில் காலிங்க நர்த்தனர், மருத மரத்தில் கயிற்றில் கட்டப்பட்ட பாலகிருஷ்ணன் ஆகிய சிற்பங்கள் நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளது. வடக்கில் குழலூதும் வேணுகோபாலும், இசையில் மயங்கும் கிளியும், மயிலும், பாம்பும், பசுவும், சிறுத்தைப் புலியும், மானும் எழிலுறச் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பங்களைக் காணும் போது

*"சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச் செங்கண்வாய்க் கொப்பளிக்க"*

என்ற "பாசுரம்" நம் நினைவிற்கு வருகிறது.

மேலும் அர்த்த மண்டபத்தின் தென்புறச் சுவரில் குதிரை மீது அமர்ந்த வீரன் உருவமும் உள்ளது. மண்டபத்தின் உள்ளே உள்ள தூண்களில் ஏராளமான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மகாமண்டபம், மடைப்பள்ளி, வேணுகோபால் சன்னதி ஆகிய கட்டிட அமைப்பு மிகவும் பழமையானாலும் நம்மை கவரத் தவறுவதில்லை. தெலுங்குக் கல்வெட்டுகளும் இங்கு உள்ளன. அவைகள் அப்பாஜ்யா, ரங்கையா, லீலாவதி போன்றோர் திருப்பணிகளை ஞாபகப்படுத்துகிறது. இங்கு கி.பி. 1827-இல் செய்த வெங்கலத் தேர் ஒன்றும் உள்ளது.

கிருஷ்ணகிரி பெங்களூர் நெடுஞ்சாலையில் வட்டாட்சியர் அலுவலகம் அருகே சாலையின் ஓரத்தில் வெண்கொற்றக் குடையுடன் கூடிய ஓர் அரசனைக் குறிப்பிடும் நடுகல் சிற்பம் உள்ளது. கிறித்துவ தேவாலயத்தில் காணப்பட்ட நடுகல் வீரனின் சிற்பம் தற்போது தருமபுரி அகழ்வைப்பகத்தில் உள்ளது. பயணியர் மாளிகையின் அருகில் காணப்படும் "பார்வதி பரமசிவன்" சிற்பமும்,

விஜயநகர அரசர் காலத்தைச் சேர்ந்த கலைப்பொக்கிஷங்கள் எனலாம். இது தவிர வேறு சில கோயில்களையும் கிருஷ்ணகிரி நகரம் தன்னகத்தே கொண்டுள்ளது.

## பெயர் வர காரணம் :

கிருஷ்ணகிரியின் ஊர்ப்பெயரை விளக்க முற்பட்ட "லியோபான்" கிருஷ்ணகிரி மலை மீது கிருஷ்ணர் கோயில் ஒன்று இருந்ததாகவும், அதன் காரணமாகக் கிருஷ்ணகிரி என்ற பெயர் வந்ததாகவும் கூறுவார். கிருஷ்ணர் கோயில் எங்கிருந்தது என்பது தெரியவில்லையென்றும் குறிப்பிட்டு, அக்கோயில் அழிக்கப் பட்டிருக்கலாம் என்றும் அவர் கூறுகின்றார். தவிர கிருஷ்ணகிரி என்ற பெயருக்கு மற்றொரு காரணமும் உண்டு. சந்திரகிரியின் தலைவராக விளங்கிய கிருஷ்ணராவ் என்பவரின் அதிகாரியான (உறவினரான) ஜெகதேவராயன் என்பவன் கிருஷ்ணகிரி நகரை தம் தலைவரின் நினைவாகப் பெயர் வைத்ததாகச் சிலர் கூறுகிறார்கள். இது ஏற்புடையதாக உள்ளது. ஜெகதேவராயன் பெயரில் "ஜெகதேவி" ஏற்பட்டது போல கிருஷ்ணகிரியும் ஏற்பட்டிருக்கிறது என்று கூறலாம். பாரமஹாலை (12 கோட்டைகளை) கட்டியவன் ஜெகதேவராயன் என்று பார்க்கிறோம். அந்தப் பன்னிரண்டு கோட்டைகளில் கிருஷ்ணகிரியும் ஒன்றாகும். விஜயநகர அரசர் காலத்திற்கு முன்னர் இவ்வூர் மேலைக்கோட்டை என்று அழைக்கப்பட்டது. தவிர இது எயில் நாட்டில் ஓர் ஊராக இருந்துள்ளது.

இந்துக்களின் கோட்டையாக இருந்த கிருஷ்ணகிரி கி.பி. 17ஆம் நூற்றாண்டளவில் முஸ்லிம்களின் கோட்டையாக மாறியது. கிருஷ்ணகிரி மலையும், சையத்பாஷா மலை ஆயிற்று. சையத் அக்பர், சையத்பாட்சா என்ற இரு பக்கீர்கள் இந்து மன்னன் கிருஷ்ணராஜனுடன் போரிட்டதாகவும், அல்லாவின் கருணையால் வெற்றி பெற்றதாகவும் கூறப்படுகிறது. இக்கோட்டையின் உச்சியில் சையத் பாட்சா சையத் அக்பர் என்ற இரு முஸ்லிம்களின் சமாதிகள் இன்றும் காணப்படுகின்றன. இங்கு முஸ்லீம்கள் தவிர இந்துக்களும் வருகின்றனர். கோட்டை அமைந்திருக்கும் குன்று, மற்ற குன்றுகளைப் போலன்றிப் பெரும் கற்பாறைகளைக் கொட்டி வைத்தாற்போல காணப்படுகிறது. குன்றின் மீது மூன்று அரண்களாகக் கோட்டை அமைந்துள்ளது. மதில்சுவரின் பல பகுதிகள் அழிந்த நிலையில் காணப்படுகிறது. ஸ்ரீவீர ஹனுமானின் "சிற்பங்களும் உள்ளன. ஒரு சிறந்த கோட்டையின் காட்சியை கிருஷ்ணகிரிக் கோட்டை பெற்றுள்ளது. கி.பி. 1692ஆம் ஆண்டு

செய்த பழமையான பீரங்கி ஒன்று மலையின் உச்சியில் உள்ளது. திப்புசுல்தானுக்குச் சொந்தமாக இருந்த இக்கோட்டை ஆங்கி லேயரால் கைப்பற்றப்பட்டது. ஆங்கிலேயரை எதிர்த்தத் திப்பு பிரான்சிடமிருந்து ஆயுத உதவியைப் பெற நாடினான். அதற்காக ஒரு தூதுக் குழுவைச் சிபாரிசுக்கு அனுப்பினான். அக்குழுவில் மீர்குலாம்அலியும் ஒருவராவார். இவருக்குப் பிரான்சு நாட்டு அரசவையில் 16ஆம்லூயி மற்றும் அவர் மனைவி ''மேரிஆண்டோனெட்டி'' உருவம் பதிக்கப்பட்ட மெடலைப் பிரான்சு அரசு வழங்கிக் கௌரவித்தது. இவருடைய சந்ததியினர் இன்றும் இம்மெடலைப் பொக்கிஷமாகப் பாதுகாத்து வருகின்றனர். திப்புவாலும் ஆங்கிலேயராலும் மீர்குலார் போற்றப்பட்டுள்ளார். கிருஷ்ணகிரி வலிமை வாய்ந்த கோட்டையென்பதால் அதனைத் திப்புவிடமிருந்து கைப்பற்ற ஆங்கிலேயர்கள் பெரிதும் விரும்பினர் ஆங்கிலேயர் திப்பு யுத்தத்தில் 1-6-1767இல் நடந்த தாக்குதலில் பிட்ஜ்ரால்ட் என்பவர் ஈடுபட்டார். அவருக்கு முழு வெற்றி கிட்டவில்லை. அதன் பின் 11-11-1771இல் மாக்ஸ்வெல் என்பவர் போரில் இறங்கினார். வெற்றி பெறவில்லை. இறுதியாக 19-3-1792இல் ஸ்ரீரங்கப்பட்டினம் உடன்படிக்கைக்குப் பின் திப்புவின் கோட்டையானக் கிருஷ்ணகிரி ஆங்கிலேயரின் வசத்திற்கு வந்தது.

1792 ஏப்ரல் மாதம் ஐந்தாம் தேதி ''கேப்டன் ரீடின்'' கிருஷ்ணகிரியின் பொறுப்பை ஏற்றார். பின்னர் 1799இல் பாரமஹால் இராணுவக் கேந்தரமானது. 1803-இல் கோட்டையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட, பயங்கர விபத்து கோட்டையின் பல பகுதிகளைச் சேதமாக்கியது. அதில் ஆரீஸ், ஸ்மித் போன்ற முக்கிய அதிகாரிகளும் உயிரிழந்தனர்.

கிருஷ்ணகிரி என்பது இன்றுள்ள பழைய பேட்டையையே முன்பு குறிப்பிட்டது. எனினும் கிருஷ்ணகிரியொட்டி கேப்டன் கிரகாமும், திவான் பேஷ்காரரான லக்ஷ்மணராவும் சேர்ந்த புதிய நகரம் ஒன்றை நிறுவினர். கேப்டன் கிரகாமின் பெயர் புதிய நகருக்கு வைக்கத் திட்டமிடப்பட்டாலும் சென்னை மாநில ஆளுநர் விருப்பத்தின்படி தௌலதாபாத் (வளநகர்) என்ற பெயரே வைக்கப்பட்டது. ஆனால் கிருஷ்ணகிரி என ஊர் வழங்கப்பட்டு வருகிறது. இப்புதிய நகரம்தான் இன்று புதுப்பொலிவுடன் காட்சியளிக்கும் வியாபார ஸ்தலமாகவும், பழமையின் சின்னமாகவும், மையப் பகுதியாகவும் எழில்மிகு நகரமாகவும் காட்சி தருகின்றது.

## குப்பம் :

கிருஷ்ணகிரி வட்டம் குப்பம் என்ற ஊரில் உள்ள தனியார் கொல்லையில் கி.பி. 17-18ஆம் நூற்றாண்டு எழுத்தமைதி கொண்ட கல்வெட்டுள்ளது. வராந்தக முதலியார் நெல்லூர் தேவர் நயினார் என்பவர் குரோதன வருஷத்தில் தானம் செய்துள்ளார்.

## குருவிநாயனப்பள்ளி :

கிருஷ்ணகிரி வட்டம் குருவிநாயனப்பள்ளியில் பெருங் கற்காலக் கல்பதுக்கைகளும் பெருங்கற்கால ஓவியங்களும் உள்ளன. இம்முடி புக்கண்ண உடையார் நன்மைக்காக நிலங்களைத் தட்சிணாமூர்த்தி பண்டிதற்கு அளிக்கப்பட்டுள்ளது ஒரு கல்வெட்டில் உள்ளது. இங்கிருந்து மூன்று கால்களுடைய ஜாடி (Jar) ஒன்று சேகரிக்கப்பட்டுள்ளது.

## சந்தூர் :

கிருஷ்ணகிரி வட்டம் சந்தூர் என்ற ஊர் வரலாற்றுச் சிறப்புடைய ஊராகும். இவ்வூரிலிருந்த 8 நடுகல் கல்வெட்டுகள் தற்போது தருமபுரி அகழ்வைப்பகத்தில் உள்ளன. கட்டணைபருமர், சிவமாறன், முதல் மகேந்திரன் ஆகியோர் காலங்களில் நிகழ்ந்த போர்கள் அவைகளில் இடம் பெற்றுள்ளன. மேலும் இதே ஊரில் தனியார் வயலில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. கி.பி. 1520இல் கவுண்டர் செம்பாவைபீராண்டை மாரப்பன், குடங்கை என்ற ஏரியைத் தூரெடுத்துச் சீர் செய்ததால், அவனுக்குக் குடங்கை முதல் மடை பாசனத்தில் பத்தில் ஒரு பகுதி வழங்கப்படுகிறது. கட்டணை பருமர் காலத்தில் சந்தூர், சந்திரபுரம் என வழங்கப்பட்டது. பெரும்பாணிள வரைசர் சிற்றரசராக அப்போது இருந்துள்ளார். முதல் மகேந்திர னுடைய நடுகல்லில் வெய்யவடுகன் பெயர் உள்ளது. சந்தூர் அருகே தட்டக்கல் என்ற புராதன ஊர் உள்ளது.

## சப்பாணிப்பட்டி (நத்தமேடு)

கிருஷ்ணகிரி வட்டம் சப்பாணிப்பட்டி சின்னாத்துப்பள்ளம் ஈசுவரன் கோயிலில் சண்டேசுவரரைப் போற்றும் பாடல் கல்வெட்டு உள்ளது. மேலும் தேசிபட்டணத்து தேசிநாயகர் கோயிலில் சபையார் கூடி எடுத்த நடவடிக்கையையும் இதில் காண்கிறோம். காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டாகும்.

## சென்னசமுத்திரம் :

கிருஷ்ணகிரி வட்டம் சென்னசமுத்திரம் மலையடிவாரத்தில் மலைதிம்மன் கோயிலில் 14-15ஆம் நூற்றாண்டு கல்வெட்டு தெளிவின்றி உள்ளது. ஊர் எல்லை தொடர்பான விபரம் அதில் உள்ளது. மிளையர்தம்பிகள் நால்வர் அண்ணன் மாண்டுவிட அங்கவாலை (எலும்புகளை அடக்கம் செய்த ஆலயம்) எடுத்துள்ளனர் என்று தோன்றுகிறது.

## தட்டக்கல் :

கிருஷ்ணகிரி வட்டம் தட்டக்கல்லில் கூத்தாண்டார் கோயில் அருகில் உள்ள கானப்பாறையில் இரு கல்வெட்டுகள் உள்ளன. தொட்டிமாரன் என்பவன் காணிதானம் செய்த விவரம் ஒன்றில் உள்ளது. மற்றோர் கல்வெட்டு வீரராமநாதனுடையதாகும். கி.பி. 1291இல் விக்கிரம சோழ நாட்டை நாயகம் செய்கின்ற தித்தாழ்வான் மகன் விதிப்பிள்ளை என்பவன் புலியை வளைந்து குத்தியுள்ளான். இறுதியில் புலியுடன் இவனும் மாண்டுள்ளான்.

## திம்மாபுரம் :

கிருஷ்ணகிரி வட்டம் திம்மாபுரத்தில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. 1528இல் புதுப்பற்று நாடு ஜீவிதம் உடைய தோப்புகள் கோயிலுக்கு வழங்கப்பட்டன. இரண்டாவது சிதைந்த கல்வெட்டு நிலக்கொடையையே சுட்டுகிறது.

## தீர்த்தம் :

கிருஷ்ணகிரி வட்டம் தீர்த்தம் என்ற ஊரில் தொன்மை வாய்ந்த சிவன் கோயில் உள்ளது. மேலும் ஊரில் 8 கல்வெட்டுகளும் உள்ளன. முதல் சாசனம் தீர்த்த நாயனார்க்குப் பூவனியத்திலிருக்கும் வியாபாரி பெருஞ்செண்பாக்கமுடையன் சந்தி விளக்கெரிக்க ஒரு பொன் அளித்துள்ளான் என்று கூறுகிறது. காலம் கி.பி. 1225 ஆகும். இரண்டாவது கல்வெட்டும் வியாபாரியுடையது. காலம் கி.பி. 1417 அன்னதாத உடையாரது நன்மைக்காகக் கோயிலுக்குத் தானம் அளிக்கப்பட்டுள்ளது. தீர்த்தத்து உடையார் சிவனீஸ்வரமுடைய நாயனார் என இறைவன் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளான். மூன்றாவது துண்டுக் கல்வெட்டு இராக்கால அமுதுபடிக்குப் பல்வேறு வரிகள் வழங்கிய விபரத்தைக் குறிப்பிடுகிறது.

அண்ணாமலை செட்டியார் தானமாக வழங்கியதை ஒரு கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. நான்காவது கல்வெட்டாக இதனைக் குறிப்பிடலாம். திருமாலை திருமேற்பூச்சு அமுதுபடி, பூசை இடம் பெறுகிறது. பாக்கு, வெற்றிலை கோயிலுக்கு அளித்துள்ள தாமத்தப் பரமாராயன் போற்றப்பட வேண்டியவன் ஆவான். தனியார் வயல் நடுவில் உள்ள பாறை கல்வெட்டொன்று பிராமணர்களுக்கு வழங்கிய தானத்தைக் குறிப்பிடுகிறது எனலாம். விஜய நகர வேந்தர் வீரதேவராயர் கல்வெட்டு, புகழ்ச்சி மாலையாக உள்ளது. ஏழாவது கல்வெட்டு பலவரிகளைச் சுட்டுகிறது. எட்டாவது கல்வெட்டு முழுமையின்றி உள்ளது. அதாவது காப்புரை மட்டும் உள்ளது.

## நரிமேடு :

கிருஷ்ணகிரி வட்டம் நரிமேடு என்ற ஊரில் அரசன் பெயர் ஆட்சியாண்டில்லாத கல்வெட்டுள்ளது. பதினோறு நபர்களுக்கு பன்னிரண்டு பங்குகள் அளிக்கப்பட்ட விவரத்தை 147 / 1973 எண்ணுள்ள நடுகல் வெளிப்படுத்துகிறது. (தருமபுரி மாவட்டக் கல்வெட்டுகள் முதல் தொகுதி)

## நெடுங்கல் :

கிருஷ்ணகிரி வட்டம் நெடுங்கல் என்ற ஊரின் பாறையருகே ஒரு கல்வெட்டுள்ளது. மதுராந்தக வீள நுளம்பனைக் கல்வெட்டு சுட்டுகிறது. நிலம் பன்னிரண்டு பாகங்களாகப் பிரித்துச் சிலருக்கு வழங்கியுள்ளனர்.

## கங்கதேவனபள்ளி

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டம் கங்கதேவனபள்ளியில் முதலாம் குலோத்துங்கனுடைய 32ஆவது ஆட்சியாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒரு பாறையில் உள்ளது. தீர்த்த மலையில் திரிபுராந்தக தேவருக்கு, வீரராஜேந்திர ஜனநாடுடை யானும் கோயில் தமரும் சேர்ந்து பராந்தகநல்லூரில் நிலக்கொடை அளித்துள்ளனர். குலோத்துங்கனுடைய மெய்க்கீர்த்தியும் கல்வெட்டில் உள்ளது. இதே ஊரில் உள்ள முனீசுவரன் கோயில் என வழங்கப்படும் நடு கல் கோயிலில் முதலாம் இராசேந்திரனுடைய கல்வெட்டுள்ளது. ஆநிரை மீட்புப் போரினை இந்நடுகல் குறிப்பிடுகிறது.

## கங்காவரம் :

கிருஷ்ணகிரி வட்டம் கங்காவரம் என்ற ஊரில் மூன்று நடுகல் கல்வெட்டுகள் உள்ளன. முதல் கல்வெட்டில் முதலாம் குலோத்துங்கன் ஆட்சியின்போது கி.பி. 1073இல் தகடூர் நாட்டு ஐங்குன்றத்தைச் சேர்ந்த வெள்ளாளன் பூதனான் மல்லையன் பெயர் உள்ளது. நாத்துகன் என்பவன் இறந்துபட்டுள்ளான். கல்வீடு அமைப்பில் நடுகல் உள்ளது. வீரன் தனியாகவும் கல்வெட்டு தனியாகவும் உள்ளது. வாளும் வில்லும் வீரன் ஏந்தியுள்ளான். குதிரை மீது ஓர் ஆடவனும் நின்ற நிலையில் பெண்ணும் உள்ளனர். கல்லின் மேற்புறம் சுவர்க்கக் காட்சி உள்ளது. முதலாம் இராசேந்திரனுடைய 24ஆவது ஆட்சியாண்டு நடுகல், இராசேந்திர சோழக் காமுண்டன் ஆநிரைப் போரில் ஈடுபட எயில் நாட்டுக் காமுண்டன் பேழையன் ஆநிரை மீட்டு இறந்துள்ளான். காலம் கி.பி. 1036 ஆகும்.

கங்காபுரத்தில் இருக்கும் மூன்றாவது நடுகல், மூன்றாம் இராசேந்திர சோழனுடைய ஆட்சியின்போது (கி.பி. 1249) வீரராசேந்திர எயில் நாட்டு ராஜனுடைய அடியான் ஈழச்சான்றான், எயில் நாட்டுக் காமுண்டன் கடுமையாக காவல் மேற்கொண்டு இறந்துள்ளான். ஈழச் சான்றான் குறிப்பிட்ட சாதியைக் குறிக்கும் சொல் எனலாம். இரு வீரருடன் நடுகல் வீரன் போரிடுகிறான். கத்தி இடையில் உள்ளது. சுவர்க்கக் காட்சியும் காட்டப்பட்டுள்ளது. கங்கதேவன பள்ளி, கங்காவரம் என்ற பெயர்கள் கங்கமரபினரை நினைவூட்டுகின்றன.

## காத்தாடிக்குப்பம் :

கிருஷ்ணகிரி வட்டம் காத்தாடிக்குப்பம் மாவுமில் எதிரில் ஒரு நடுகல் உள்ளது. முதலாம் இராஜாதிராஜனுடைய ஆட்சியின்போது (கி.பி.1048) எயில் நாட்டு மேலையூரைச் சார்ந்த வீரன் இறந்து பட்டுள்ளதை நடுகல் குறிப்பிடுகிறது. நடுகல் வீரன் அமர்ந்துள்ளான். குதிரை ஒன்றும் குடைபிடித்த வீரரும் இருப்பதால் வீரன் படைத் தலைவன் எனலாம். தேவமகளிர், வீரனை மேல் உலகத்திற்கு அழைத்துச் செல்கின்றனர்.

இரண்டாவது நடுகல், மூக்கனுடையார் மருமகன் செட்டி போரில் இறந்ததைக் குறிப்பிடுகிறது. கல் வீடு அமைப்பில் இதுவும் உள்ளது.

## காரக்குப்பம் :

கிருஷ்ணகிரி வட்டம் பாலாற்றின் தென்கரையில் உள்ள ஒரு கொல்லையில் ஜொம்மன உடையார் கல்வெட்டு உள்ளது. காலம் கி.பி 1404 ஆகும். அங்கண நாட்டுப் பாலசமுத்திரத்தைச் சார்ந்த மதுரகன் என்ற அலுவலர் குறிக்கப்படுகிறார்.

## குட்லட்டி :

கிருஷ்ணகிரி வட்டம் குட்லட்டி பெருமாள் கோயில் வளாகத்தில் இம்முடிபுக்கராயன் கல்வெட்டுள்ளது. தாமிரமிண்டர் என்ற நாட்டு நாயகம் செய்பவர் கூறப்படுகிறார்.

## கூசனப்பள்ளி :

ஒசூர் வட்டம் கூசனப்பள்ளியில் திம்மராயன் கோயில் என்ற புராதனமான கோயில் உள்ளது. கி.பி. 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று கோயிலுக்கு வழங்கிய கொடையைக் குறிப்பிடுகிறது. இராஜராஜ கற்கடக மகாராஜன், சோமநாதர் மற்றும் பலமுதலியார்களின் பெயர்கள் கல்வெட்டில் உள்ளன.

## கொத்தூர் :

ஒசூர் வட்டம் கொத்தூரில், வீரவல்லாள தேவருடைய ஆட்சியின்போது வெட்டப்பட்ட கல்வெட்டொன்று தனியார் கொல்லையில் உள்ளது. காலம் கி.பி. 1511 ஆகும். இராமண்ணன் என்பான் அத்தியூர், தேனுழான்பள்ளம் ஆகிய ஊர்களை இணைத்து வீரவல்லாளப்பட்டினமாக்கி ஒரு சிலருக்குக் கொடையாக அளித்துள்ளான். கொடை பெற்றவர் பல்வேறு வரிகளைச் செலுத்த வேண்டும். நாடு, நகரம், பதினெண் விஷயம் என்ற சபைகள் கல்வெட்டில் உள்ளன.

## தேர்ப்பேட்டை :

ஒசூர் நகருக்கு அருகில் தேர்ப்பேட்டை உள்ளது. இவ்வூரில் சோழிங்கர் கோயில் உள்ளது. கோயில் முன் உள்ள கல் மீது கி.பி. 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கோயில் கொடை இடம் பெறுகிறது. செவிட நாயனார் கோயில் மடபதிகள், மாஹேச்சுரர், பட்டர், நம்பிமார், வீரபத்திரர், ஆசாரியர் ஒன்று கூடி தானம் தந்துள்ளனர். மலையடி

வாரத்தில் உள்ள ஒரு கல்வெட்டு சூலக்குறியுடன் உள்ளது. இது நில விற்பனையைச் சுட்டுகிறது. ஏரிக்கரையில் உள்ள மூன்றாவது கல்வெட்டு தனிநபருடைய நிலம் கோயில் நிலமாக்கப் பட்டதும் பின் மீண்டும் அத்தனி நபருக்கே அளிக்கப்பட்டதும் கூறப்படுகிறது. முரசூர் ஐந்நூற்றுவர் முன்னிலையில் நிலம் திருப்பி அளிக்கப்பட்டது. கோயில் மேலைத் திருச்சிற்றம்பலம் என வழங்கப்பட்ட விவரம் இக்கல்வெட்டில் உள்ளது. நான்காவது கல்வெட்டு, வாய்க்காலுக்குப் பாவுக்கல்லாக மாற்றப்பட்ட கல்வெட்டாகும். செவிட நாயனார் கோயிலுக்கு வழங்கிய கொடையை இது சுட்டுகிறது. சேவிடை நாயனார் என்பதே செவிட நாயனார் என்றுள்ளது எனலாம்.

## பாரந்தூர் :

ஒசூர் வட்டம் பாரந்தூர் சாலையில் சித்திரமேழி விண்ணகர நாட்டார் மற்றும் தாமோதரப் பெருமாளைச் சுட்டும் கல்வெட்டு உள்ளது. மற்றோர் கல்வெட்டு நடுகல் கல்வெட்டாகும். நடுகல் வீரன் மூன்று குதிரை வீரர்களுடன் போரிடும் காட்சி உள்ளது. பதிமிதேவன் வாரந்தூரைப் பற்றி அழிக்க முனைந்தபோது மேலையூர் மார காமிண் னின் மகன் அதனைத் தடுத்து ஐந்து குதிரை வீரர்களைக் கொன்று இறுதியில் தானும் மாண்டுள்ளான். மன்னர் பெயர் ஆட்சியாண்டில்லா இந்நடுகல் கி.பி. 13ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியைக் கொண்டுள்ளது. ஐந்து வீரர்களை ஒரே வீரன் கொன்றதினால் நடுகல் வீரனுடைய வீரம் வெளிப்படுகிறது.

## பேகேபள்ளி :

ஒசூர் வட்டம் பேகேபள்ளி என்ற ஊரின் சாலையில் கிடக்கும் கல்வெட்டு பாடல், கல்வெட்டு போல் உள்ளது. காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டாகும்.

## மேல்சூடாபுரம் :

ஒசூர் வட்டம் மேல்சூடாபுரம் ஈஸ்வரன் கோயிலில் மல்லபூரவாதிராஜனின் கல்வெட்டு சேவிடை சமுத்திரம் என்ற ஏரியைக் காரைக்கிழான் கட்டுவித்ததையும் சேவிடை நாயனார்க்கு வழங்கிய நிலம் போக எஞ்சிய நிலங்களைத் திருவேகம்பமுடையான் என்பவனுக்கும் பிராமணர்க்கும் விட்டமையையும் குறிப்பிடுகிறது.

## நொகனூர் :

தேன்கனிக்கோட்டை வட்டம் நொகனூரில் அனுமார் கோயிலுக்குத் தென்கிழக்கில் உள்ள நடுகல்லில் மன்னன் பெயர் ஆட்சியாண்டு இல்லை. இது கி.பி. 14ஆம் நூற்றாண்டு எழுத்தமைதி யுடன் உள்ளது. கல்வெட்டு வாசகத்துடன் இரு குதிரைகளின் மீது அமர்ந்த வீரர்களின் சிற்பங்களும் உள்ளன. அமராபதி நாடன் பெயரும் வீமகாமுண்டன் மகன் சொரை... காமுண்டன் பெயரும் கல்வெட்டில் உள்ளன. கல்வெட்டு பொரிந்துள்ளதால் முழுமை யாகப் படிக்க இயலவில்லை. காமுண்டன் இறந்த வீரனாகவும் அமராதிபதி நாடன் நொகனூரை ஆண்ட குறுநிலத் தலைவனாகவும் கருதலாம்.

## பத்திக்கவுண்டனூர் :

தேன்கனிக் கோட்டை வட்டம் பத்திக் கவுண்டனூரில் திண்ணூர் மாரியம்மன் கோயிலின் அருகே ஒரு வட்டெழுத்து நடுகல் உள்ளது. மன்னன் பெயர் ஆட்சியாண்டு இல்லை. இது கி.பி. 8-9ஆம் நூற்றாண்டு எழுத்தமைதி எனலாம். ஒதியத்தூருடையான் சேவகன் போரில் மாண்டுவிட அவன் குடும்பத்திற்கு நிதி வழங்கப் பட்டுள்ளது. இதே ஊரில் மாரியம்மன் கோயிலில் உள்ள கல்வெட்டு வேள்புலியன் கோயிலுக்கு ஏதோ தானம் செய்துள்ளதைக் குறிப்பிடுகிறது.

## பாரூர் :

கிருஷ்ணகிரி வட்டம் பாரூரில் தொன்மை வாய்ந்த சிவன் கோயில் உள்ளது. கோயிலில் நான்கு கல்வெட்டுகள் உள்ளன. வீர ராமநாதன் தமது 40ஆவது ஆட்சியாண்டில் வேலம்பட்டு என்ற ஊரைத் தேவதானமாகப் பாரூர் ஈசானீஸ்சுவரர் திருநாள் செலவிற்காக அளித்துள்ளார். காவகப் பழகியான் ஆணையில் ஒப்பமிட்டுள்ளான்.

வீரராமநாததேவர் நன்மைக்காக பாரூர் நாட்டவர், ஈஸ்வரன் கோயில் திருப்பணிக்குப் பணம் அளித்ததை ஒரு கல்வெட்டு சுட்டுகிறது. மற்றோர் கல்வெட்டும் இதேபோல் திருப்பணிக்குத் தானம் செய்ததைச் சுட்டுகிறது. இருமடி நாட்டு நாயகம் செய்வார் இடம் பெறுகின்றனர். வீர விஸ்வநாத தேவருடைய ஆட்சியின்போது (கி.பி. 1297) விக்கிரமபாண்டியச் சோழ கோநாரேன் சர்வமான்யமாக நிலக்கொடையை ஈசானீஸ்வரமுடைய நாயனார் கோயிலுக்கு அளித்துள்ளார்.

## பேரிகை :

ஒசூர் வட்டம் பேரிகையில் திருவகத்தீஸ்வரமுடையார் என்ற பழைய கோயில் உள்ளது. இதில் மூன்று சாசனங்கள் உள்ளன. முதல் சாசனம் அத்திமல்லன் மகன் தாமத்தாழ்வார் தம்பியார் கங்காணன் மகன் பூமிநாயகன் இறையிலியாகப் பல வரிகளுடன் நிலத்தை அகத்தீஸ்வரமுடையாருக்கு வழங்கியதைக் குறிப்பிடுகிறது. இரண்டாவது கல்வெட்டு வீரவல்லாள தேவனுடைய ஆட்சியின் போது தானம் செய்யப்பட்ட விபரத்தைக் குறிப்பிடுகிறது. மாசந்தி நாடு பெருமாள் குலசேகரதேவர் சிங்கராயன், மருமகன் சோமநாத தேவரான செல்லப்பிள்ளை என்ற பெயர்கள் உள்ளன. மூன்றாவது கல்வெட்டு சகம் 1242இல் வெட்டப்பட்டது. வல்லாள தேவன் நன்மைக்காக கோயிலுக்குக் கொடை அளித்த விபரம் இதில் உள்ளது.

## பையூர் :

கிருஷ்ணகிரி வட்டம் பையூரில் உள்ள சாசனப் பாறையில் வீரராமநாததேவனுடைய 22ஆவது ஆட்சியாண்டில் ஒரு கல்வெட்டு வெட்டப்பட்டது. சாசனம் வெட்ட விடுகாதழகிய பெருமாள் என்ற அதியமான் ஆணையிட்டுள்ளான். வீரநுளம்பன் பெயரும் கல்வெட்டில் வருகிறது. சந்ததியில்லா அடிமை கொள்ள என்று பார்க்கிறோம்.

## பொன்னேரி :

கிருஷ்ணகிரி வட்டம் பொன்னேரியில் சாலையோரம் உள்ள கல்வெட்டு கி.பி.1387இல் வெட்டப்பட்டது. தகடூர் நாட்டின் அதிகாரியான ஆரோதன் இராமநாயன், பொன்னிக்கூத்தனிடம் ஏரிக்குப் பொருள் கொடுத்து மண் வார ஏற்பாடு செய்துள்ளான்.

## போச்சம்பள்ளி :

தற்போது போச்சம்பள்ளி தனிவட்டமாக உருவாகியுள்ளது. இங்குள்ள உயர்நிலைப் பள்ளி மைதானத்தில் சோமீசுர தேவர் காலத்தில் வெட்டப்பட்ட ஒரு கல்வெட்டு உள்ளது. அதில் ஊர்ப்பெயர் போச்சையன்பள்ளி என்றுள்ளது. இவ்வூர், பந்தலப்பள்ளி திருவனந்தீஸ்வரமுடைய நாயனார்க்குத் தேவதானமாக வழங்கப் பட்டுள்ளது. மன்னன் நன்மைக்காகத் தானம் செய்யப்பட்டுள்ளது.

## மகாராஜாக்கடை :

கிருஷ்ணகிரி வட்டம் மகாராஜாக்கடையில் அங்கணாநாச்சி மலை உள்ளது. மலையின் உச்சியில் உள்ள குடைவரையில் பெருங்கற்கால ஓவியமுள்ளது. மேலும் நூற்றுக்கணக்கான பெருங்கற்காலக் கல்திட்டைகளும் உள்ளன. ஆறு கல் திட்டைகளில் பெருங்கற்கால ஓவியங்கள் உள்ளன. மேலும் ஊரில் பனைமரத்துப் பண்டா என வழங்கப்படும் பாறையில் மூன்றாம் இராசராசனின் 14ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுள்ளது. அங்கண அரைசு நிலை உடைய ஜயங்கொண்ட சோழ எயினாடாழ்வான் பெருமான் மகன் அடிமைகளின் தலைவனாகப் பணிபுரிவதாகத் தன்னைத் தானே இட்டுக் கொண்டு எழுதித் தந்ததைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. காலம் கி.பி. 1230 ஆகும். இதே ஊரில் முனியப்பன் கோயில் முன்பாக வேறோர் கல்வெட்டுள்ளது. இதுவும் மூன்றாம் இராசராசனுடையதாக இருக்கலாம். எயில் நாடாழ்வான் வேளைகாரன் தயாண்டைசாவாதே மாம்படையார் மணாட்டி மினாள் என்ற வாசகம் உள்ளது. எயில்நாடு தகடூரில் இருந்த நாடுகளுள் ஒன்றாகும்.

## அச்சந்திரம் :

ஓசூர் வட்டம் அச்சந்திரம் என்ற ஊரில் திம்மராய சுவாமி கோயில் உள்ளது. கோயில் கருவறையில் நான்கு கல்வெட்டுகள் உள்ளன. அத்திசமுத்திரம் என இவ்வூர் அழைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள திருவத்தியூர்ப் பெருமாளுக்கு விளக்கேற்றுவதற்கு முதலீடாகப் பத்துப் பணம் செம்பிதேவன் அளித்துள்ளான். மற்றோர் கல்வெட்டில் செம்பிதேவன் சகோதரன் மாதேவன் முதலீடாகப் பத்துப்பணம் கோயிலுக்கு வழங்கி விளக்கு வைக்க ஏற்பாடு செய்துள்ளான் என்று அறிகிறோம். மூன்றாவது கல்வெட்டின் மூலம் தசபாண்டையேன் என்பவர் திருவத்தியூர் ஆழ்வார்க்குச் சந்திவிளக்கு வைக்க 12 காசு அளித்துள்ளார் என்றுள்ளது. நான்காவது கல்வெட்டு கங்காண்டை நாயன அதிகைமான் ஆட்சியின்போது கண்ணமங்கலத்து ஜெயங்கொண்ட சோழவேளான் மார்க்கயனேன் விளக்கு வைக்க பத்துப் பணம் முதலீடாக வழங்கியுள்ளான். நான்கு கல்வெட்டுகளும் கி.பி. 14ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியைக் கொண்டுள்ளன என்று கல்வெட்டாய்வாளர் பத்மாவதி கருதுகிறார். (கல்வெட்டிதழ்)

## அனுசோனை :

தேன்கனிக்கோட்டை வட்டம் அறுசோனை என்ற ஊரில் ஈர்லு குடில் என வழங்கப்படும் இடத்தில் முதல் இராசேந்திரன்

கல்வெட்டுள்ளது. அஞ்சிட்டம் என்ற ஊரை நாயகம் செய்யும் கங்க ஆடவர்சாமியாரின் மகன் கங்கமார்த்தாண்ட ஆடவசாமி என்ற வீரன் கோயில் காரியமாக உழுது கொண்டிருந்த போது புலி வந்து தாக்க அதனைக் கொன்று வீரனும் இறந்துள்ளான். அஞ்சட்டமே தற்போது அஞ்செட்டி துர்க்கம் என வழங்கப்படுகிறது. அஞ்சட்டி துர்க்கம் 951 மீட்டர் உயரத்தில் உள்ளது. மலை உச்சியில் சிதைந்த நிலையில் கோட்டையும் சிவன் கோயிலும் உள்ளன. திப்பு சுல்தான் ஆட்சியில் கோட்டை இருந்துள்ளது. 1791 மற்றும் 1799 என இருமுறை ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி இக்கோட்டையைப் பிடிக்கப் போரிட்டுள்ளது.

## மட்டியூர் :

தேன்கனிக்கோட்டை வட்டம் மட்டியூர் என்ற சிற்றூரில் சிவனப்பன் தோட்டத்திற்கருகில் ஒரு கல்வெட்டுள்ளது. சீயகல் நாட்டு மாரதேவன் இராச்சியத்தில் உள்ள மட்டப்பள்ளியில் வாழ்ந்த குலையாண்டான் ஏதோ கட்டிடம் ஒன்றைக் கட்டி வைத்துள்ளான் என்று தெரிகிறது.

## மனேகல் :

ஒசூர் வட்டம் மனேகல்லில் முனியம்பா கொல்லையில் உள்ள பாறையில் கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுள்ளது. சூரியதேவற்குத் தானம் தரப்பட்டுள்ளது. பல்லவரையன் கண்டன் தானம் தந்துள்ளான்.

## மிடுதேபள்ளி :

ஒசூர் வட்டம் மிடுதேபள்ளி என்ற ஊரில் ஓடையின் நடுவே உள்ள பாறையில் (முஸ்திமனுவங்கா) ஒரு கல்வெட்டுள்ளது. வீரவல்லாளனுடைய ஆட்சியின்போது இது வெட்டப்பட்டது. மாசந்தி நாட்டு, நாட்டு நாயகம் செய்வாரும் தேவரும் தானம் புரிந்துள்ளனர். பொன்னுழான் என்பவன் கல்வெட்டு வெட்ட ஏற்பாடு செய்துள்ளான்.

## மிண்டகிரி :

கிருஷ்ணகிரி வட்டம் மிண்டகிரி சிவன்கோயில் அருகேயுள்ள கல்வீடு அமைப்பு கொண்ட நடுகல் முக்கண் உடையார் காலத்தில் வெட்டப்பட்டது. செல்லா நம்பன் என்ற செம்படவன் புலியைக் குத்தி தானும் இறந்துள்ளான் என்ற செய்தி அதில் உள்ளது.

## முச்சந்திரம் :

தேன்கனிக்கோட்டை வட்டம் முச்சந்திரம் என்ற ஊரின் ஏரியில் உள்ள பாறையில் முதல் குலோத்துங்கனின் இரு கல்வெட்டுகள் மெய்க்கீர்த்திகளுடன் உள்ளன. முடிகொண்ட சோழ மண்டலத்து சோழவளநாட்டு சீயகல்நாட்டுக்கோன் தானம் செய்ததை இரு கல்வெட்டுகளும் குறிப்பிடுகின்றன.

## முழுவனப்பள்ளி :

தேன்கனிக்கோட்டை வட்டம் முழுவனப்பள்ளி என்ற ஊரில் மான்ய கொல்லையில் சிதைந்த நிலையில் ஒரு கல்வெட்டு உள்ளது. 16ஆம் நூற்றாண்டு எழுத்தமைதி உடைய இக்கல்வெட்டில் காமன் என்பவனின் பெயர் உள்ளது.

## முள்ளகொண்டா :

கிருஷ்ணகிரி வட்டம் முள்ளகொண்டா என்ற ஊரின் வயல் நடுவே பாறையில் அரசன் பெயர் ஆட்சியாண்டில்லாத கல்வெட்டுள்ளது. வரத நாயக்கன் என்பவன் பிராமணர்களுக்குத் தானம் தந்ததை இக்கல்வெட்டு சுட்டுகிறது. காலம் கி.பி. 16ஆம் நூற்றாண்டாகும்.

## மேகலச்சின்னம்பள்ளி

கிருஷ்ணகிரி வட்டம் மேகலச்சின்னம்பள்ளியில் விஜய நகர அரசர் காலக் கல்வெட்டுகள் இரண்டுள்ளன. முதல் கல்வெட்டில், வேப்பம்பள்ளியான செடிலசமுத்திரம் என்ற ஊர் முழுவதும் வேதம் ஓதுவாருக்கு வழங்கிய கொடையைக் கூறுகிறது. மற்றோர் கல்வெட்டு வீரபுக்கண்ணன் நன்மைக்காகப் பிராமணர்களுக்குத் தானம் தந்ததைக் குறிப்பிடுகிறது.

## மொட்டுக்கொளத்தான்கொட்டாய் :

கிருஷ்ணகிரி வட்டம் மொட்டுக்கொளத்தான் என்ற சிற்றூரில் தனியார் கொல்லையில் விஜயநகரப் பேரரசர் காலக் கல்வெட்டுள்ளது. மகாமண்டலேஸ்வரன் திம்மையன் ஊரில் மடம் ஏற்படுத்தி அது செம்மையாக நடைபெற தானமும் புரிந்துள்ளான்.

## மோட்டூர் :

கிருஷ்ணகிரி வட்டம் மோட்டூரில் வீரண்ணன் கொல்லையில் இரண்டாம் இராசேந்திரன் மெய்க்கீர்த்தியுடன் உள்ள கல்வெட்டு உள்ளது. (கி.பி. 1017) கங்கநாட்டுப் புல்லமங்கலத்து அவனமச்சி பள்ளியில் வாழ்ந்த ஒருவன் பாம்பு கடித்து இறந்துபட நடுகல் எடுப்பிக்கப்பட்டது. இறந்தவன் பெயர் சாமுண்டான் என்பதாகும். இவனுடைய மனைவி விச்சிகந் என்பவளும் தீப்பாய்ந்து இறந்துள்ளாள். எனவே இது மாசதிக்கல் எனலாம்.

## வரட்டனப்பள்ளி :

கிருஷ்ணகிரி வட்டம் வரட்டனப்பள்ளி என்ற ஊர் புதிய கற்கால மக்கள் வாழ்ந்த தொன்மையான ஊராகும். இங்குப் பதினான்காம் நூற்றாண்டில் கட்டப்பட்ட நரசிம்ம சுவாமி கோயிலும் அதில் கல்வெட்டொன்றும் உள்ளது. இராஜராஜ கற்கடக மகாராஜன் கண்ணுடைய பெருமாள் என்பவன் 28 பிராமணர்களுக்கு வரட்டனப்பள்ளியான கங்கராயசதுர்வேதி மங்கலத்தைத் தானமாக அளித்துள்ளான் என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது.

## வாடாமங்கலம் :

கிருஷ்ணகிரி வட்டம் வாடாமங்கலத்தில் பெருமாள் கோயில் முற்றத்தில் உள்ள நடுகல்லின் பின்புறம் மூன்றாம் இராசராசனின் கல்வெட்டுள்ளது. காலம் கி.பி. 1233 ஆகும். திரிசூலமும் சில குறிகளும் எழுத்துகளுக்கு மேல் உள்ளன. பூமித்தன்மபாலன் என்பவன் திருவகத்தீஸ்வரமுடைய நாயனார்க்குத் தேவதானமாக நன்செய் நிலம் அளித்ததைக் கல்வெட்டு சுட்டுகிறது. நடுகல்லின் முன்புறம் தெலுங்கு மொழிக் கல்வெட்டு ஒன்று உள்ளது. தானத்தை மாற்ற முனைபவர் பஞ்சபாதகரில் ஒருவன் என்று ஓம்படைக் கிளவியில் கூறப்பட்டுள்ளது.

## பெரும்பாலை :

தர்மபுரி மாவட்டத்தின் எல்லையில் பெரும்பாலை அமைந்துள்ளது. கொங்கு நாட்டின் எல்லையை குறிக்கும் கொங்கு மண்டல சதகம், பின்கண்ட பாடலைச் சுட்டுகிறது.

*"வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு*
*குடக்குப் பொறுப்புவெள்ளிக் குன்று - கிடக்கும்*
*கழித்தண் டலை மேவு காவிரிசூழ் நாட்டுக்*
*குளித்தண் டலையளவு கொங்கு."*

கொங்கு நாட்டின் வடவெல்லையாகக் கூறப்படும் பெரும்பாலை இவ்வூராக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கொங்கு நாடு தகடூர் நாட்டை உள்ளடக்கியது என்று சிலர் கூறுவர். எனினும் கொங்கு நாடு தனி தகடூர் நாடு தனி என்பதே உண்மையாகும். தகடூர் நாடு தனிநாடு என்பதை மேலே கூறப்படும் பாடலில் குறிப்பிட்ட பெரும்பாலையைக் கொண்டு தனி நாடாகக் கருதலாம்.

இங்கு மேற்பரப்பு ஆய்வு செய்த பொழுது வண்ணம் பூசப்பட்ட சிவப்பு பானை ஓடுகள் சேகரிக்கப்பட்டன. (Russet Coated ware) இதன் காலம் கி.பி. 300-600 எனலாம்.

## ஜெகதேவிபாளையம்

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டத்தில் கிருஷ்ணகிரியில் இருந்து தென் கிழக்காக 15 கி.மீ. தொலைவில் ஜெகதேவிபாளையம் அமைந்துள்ளது. இவ்வூர் விஜயநகர மன்னர் ஜெகதேவராயர் பெயரில் வந்தது என்பர். ஜெகதேவராயர் பெனுகொண்டாவில் ஆட்சி புரிந்தவர்.

ஜெகதேவி, ஜெகதேவிதுர்கம் என்றும் அழைக்கப்படும். இங்கு இரண்டு மலைகள் உள்ளன. மேற்கே அமைந்தது கெவலவாடி. கிழக்கே அமைந்தது ஜெகதேவி துர்கம் ஆகும். இந்த மலையின் மீது சுற்றுச் சுவர்கள் காணப்படுகின்றன. இந்தச் சுற்றுச் சுவர்கள் தற்பொழுது மிகவும் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. கல்லுடைப்பவர்கள் இப்பகுதியை ஆக்கிரமித்துள்ளனர்.

இந்த ஜெகதேவி பாரமகால் என்று அழைக்கப்படும் பன்னிரண்டு கோட்டைகளில் ஒன்று ஆகும். ஹைதரபாத்தில் இருந்து பெனுகொண்டாவிற்கு ஜெகதேவராயர் வந்து சேர்ந்தார். இரண்டாம் ரங்கராயர் இவரின் ஆட்சிக் காலத்தில் ஜெகதேவராயர் சந்திரகிரியின் பகுதிக்குத் தலைமை ஏற்றுச் சென்றவர். பின்னர் அந்தப் பகுதியே தற்பொழுது பாரமகால் என்று அழைக்கப்படும் பகுதி ஆகும். மன்னர் இரண்டாம் ரங்கராயர் தன் மகளை இவருக்கு திருமணம் செய்து வைத்தார். ரங்கராயர் 64 குடும்பங்களுடன் ஜெகதேவியில் ஜெகதேவராயரை குடி அமர்த்தினார்.

1589இல் ஜெகதேவராயர் மகன் ஜெகதேவராயன்II பெனுகொண்டாவைக் கோல்கொண்டாப் படைகளிடமிருந்து பாதுகாத்தார். அதற்குச் சன்மானமாகக் கருநாடகாவில் உள்ள சென்னபட்டணம் ஜாகீரைப் பெற்றார். பின்னர் தன் தலைநகரை ஜெகதேவியில் இருந்து சென்னபட்டணத்திற்கு மாற்றினார்.

பாரமகாலுக்கு உட்பட்ட பகுதியை இம்மடி ஜெகதேவராயர், ஜெகதேவராயரின் கொள்ளுபேரன் சில காலம் பாதுகாத்து வந்தனர். பின்னர் சாம்ராஜ் மைசூரை ஆட்சி புரிந்து கொண்டு இருந்த சமயம் படை திரட்டிச் சென்னபட்டணத்தைக் கைப்பற்றினார். ஜெகதேவ ராயர் வம்சத்தினர் மீண்டும் தங்களது பழைய தலைமை இடமான இராயகோட்டைக்கே ஜெகதேவி வழியாகச் சென்று சேர்ந்தனர்.

## இண்டூர் :

தருமபுரி வட்டத்தில் உள்ள இண்டூர் புராதனமான ஊராகும். பென்னாகரம் செல்லும் பாதையில் உள்ள இவ்வூரில் மூன்று கல்வெட்டுகள் உள்ளன. முதல் கல்வெட்டு புருஷவர்மனின் 21ஆவது ஆட்சியாண்டில் மாவலிவாணராயர் கங்க நாடாண்ட போது வீரன் நொடையார் மகன் மாதிஞ்--- சுத என்பவன் பகைவருடன் கலந்து (போரிட்டு) மாண்டுள்ளான். இரண்டாவது கல்வெட்டு முதல் இராஜாதிராஜனுடைய மெய்க்கீர்த்தியாக உள்ளது. மூன்றாவது கல்வெட்டில் முதலாம் இராஜாதிராஜனுடைய 31ஆவது ஆட்சியாண்டின் போது நிகழ்ந்த தொறுப்போர் இடம் பெறுகிறது. பனைக்குளத்துச் சிறுகூடல் முனிவர் குறிக்கப்படுகிறார்.

## இருமத்தூர் :

தருமபுரி மாவட்டத்தில் போச்சம்பள்ளி செல்லும் பாதையில் உள்ள இருமத்தூரில் புக்கராயரின் கல்வெட்டுள்ளது. கலி 4653இல் தொண்டை மண்டலத்து உத்தரமேலூர் பற்று நெல்வாயில் அரும்பாக்கிழான் முதலிப்பிள்ளை ஏதோ தானம் செய்த விபரம் அதில் உள்ளது.

## எற்ற சீரணஹள்ளி :

தருமபுரி வட்டத்தில் பென்னாகரம் செல்லும் பாதையில் எற்ற சீரணஹள்ளி என்ற ஊர் உள்ளது. இரண்டாம் இராசேந்திரன் மெய்க்கீர்த்தியுடன் உள்ள நடுகல்லில் புல்லமங்கலத்துப் பாண்டிகாமுண்டர் பள்ளியில் கேலியர் மாச்சக்காவுண்டர் மகன் விச்சிக்காமுண்டர் பன்றியைக் குத்திக்கொன்று தானும் இறந்து பட்டான். பாண்டிகாமுண்டன் பள்ளியிலிருக்கும் வெள்ளாளன் நொ(ழுபு)ரின் பாலகாமுண்டன் மகன் புளியன் என்பவன் கி.பி. 1052இல் பன்றியுடன் மோதி இறந்துள்ளான். கி.பி. 13ஆம்

நூற்றாண்டைச் சேர்ந்த சிதைந்த நடுகல்லில் காமுண்டன் கோயில், கலம், ஆகிய சொற்கள் உள்ளன. இதுவும் பன்றி குத்திப்பட்டான் நடுகல் எனலாம்.

## கடகத்தூர் :

தருமபுரி வட்டத்தில் கடகத்தூர் என்ற ஊரில் 10 கல்வெட்டுகள் உள்ளன. சாலையோரமுள்ள தனிக்கல்லில் உள்ள கல்வெட்டு வீர ராமநாதனுடையதாகும். தகடநாட்டில் பாடியான பொய்யாமொழி சதுர்வேதி மங்கலம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நன்கொடை தந்த விபரமுள்ளது. இவ்வூரில் உள்ள சோழீச்சுவரர் கோயிலில் சில கல்வெட்டுகள் உள்ளன. வாகூரைச் சார்ந்த இவர் கோயிலுக்குத் தீப்பந்தம் அளித்துள்ளதை ஒரு கல்வெட்டு (கி.பி.1441) குறிப்பிடு கிறது. கடைக்கோட்டூரான தேசிஉய்யக்கொண்ட சோழப் பட்டினத்து நயினார் முடிகொண்ட சோழீஸ்வரமுடைய நாயனார் என இறைவன் வழங்கப்பட்டுள்ளார். அள்ளாயம் எனப்படும் வரி இதில் இடம் பெறுகிறது. சந்தையில் வசூலிக்கப்படும் வரி இதுவாகும். வீரபிரதாப தேவர் ஆட்சியின்போது (கி.பி. 1430) கடைக்கோட்டூரான தேசிஉய்யப்பட்டணம் என ஊர் வழங்கப்பட்டது. மல்லிகார்ச்சுன தேவராயர் காலத்தில் கோயில் பணிக்குச் சில பெண்கள் அமர்த்தப் பட்டுள்ளனர். இவ்வூரிலிருந்து சில சிற்பங்கள் தருமபுரி அகழ்வைப்பகத்திற்குக் கொண்டு வரப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. புத்த சமயம் முற்காலத்தில் செல்வாக்காக இவ்வூரில் இருந்துள்ளது தெரிகிறது. கடகத்தூர் அருகில் கொளகத்தூர் என்ற ஊர் உள்ளது. இங்கும் தொன்மையான கல்வெட்டுகள் உள்ளன.

## குட்டூர் :

தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு அருகேயுள்ள குட்டூரில் மலையின் தென்சரிவில் விடுகாதழகிய பெருமாள் கல்வெட்டுள்ளது. இவருடைய அதிகாரியான திருத்தரையன் என்பவன் சிங்கம் பெருமாளுக்குப் பெரிய பிராட்டியாரை எழுந்தருளிவித்து நிகழ்ச்சி அதில் இடம் பெறுகிறது. மற்றோர் கல்வெட்டு பொன்னம்பலக் கூத்தன் என்பவன் பட்டர்களுக்குச் சர்வ மான்யமாக மதுராந்தக சதுர்வேதி மங்கலத்தை மதுராந்தக வீரநுளம்பன் காலத்தில் வழங்கியதைக் குறிப்பிடுகிறது.

## குண்டலநாயக்கன்பட்டி :

வீர ராமநாதனுடைய ஆட்சியின்போது (கி.பி.1296) தகடை நாட்டு மோதூர் நாட்டை நாயகஞ் செய்யும் அதிகாரி ஒருவன் தன்னுடைய மகன் தில்லைக்கூத்தன் நன்மைக்காகக் கூத்தி சமுத்திரம் என்ற ஏரியைத் தோற்றுவித்து அதனைப் பிராமணர்க்குத் தானமாக்கியுள்ளான். அத்துடன் பத்துக் கண்டக விதை விளையக் கூடிய நிலத்தையும் அளித்துள்ளான். கல்வெட்டில் இடம் பெறும் மோதூரில்தான் தொல்லியல் துறை அகழாய்வு மேற்கொண்டது. கல்வெட்டு தருமபுரி வட்டத்தில் உள்ள குண்டலநாயக்கன்பட்டி குன்றின் சரிவில் உள்ளது.

## குண்டூரேப்பன்கொட்டாய் :

தருமபுரி வட்டம் குண்டூரேப்பன்கொட்டாய் என்ற ஊர் பாலக்கோடு செல்லும் வழியில் உள்ளது. பனைகுளத்துப் பள்ளியில் பள்ளிக்காரன் புளியக்காமுண்டன் மகன் வசவகாமுண்டன் மகன் பெயர் அதில் உள்ளது. காலம் கி.பி. 1045 ஆகும்.

## குண்டலஹள்ளி :

தருமபுரி மாவட்டம் குண்டலஹள்ளி மாரியம்மன் கோயில் தெருவில் கலி நீக்கியார் கோனேரி செட்டி என்று பெயர் பொறித்த கல்வெட்டு உள்ளது. வட்டெழுத்தில் உள்ள இக்கல்வெட்டு கி.பி. 9ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியைக் கொண்டுள்ளது.

## கொளகத்தூர் :

தருமபுரி வட்டம் கொளகத்தூர் தமுக்கமேட்டில் மாந்தபருமர் என்ற அரசரின் நடுகல் கல்வெட்டுள்ளது. மாந்தபருமர் பல்லவர் அல்லாத சிற்றரசர் ஆவார். வட்டெழுத்தில் இந்நடுகல் அமைந்துள்ளது. இதே ஊரில் ஏரிக்கரையருகே பிள்ளையார் கோயில் முன்பு சோமீசுரதேவர் நன்மைக்காகச் சில தனிநபர்கள் கோயிலுக்கு நிலங்கள் இறையிலியாக அளித்துள்ளனர் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. சோமேசுரனுடைய மற்றோர் கல்வெட்டு தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் வெட்டப்பட்டுள்ளன. அதுவும் சோமீசுர தேவன் நன்மைக்காக வழங்கிய தானம் குறித்த கல்வெட்டே யாகும். 79 நாட்டவர்களும் முதலிகளும் பட்டவிருத்தியாகப் பிராமணர் களுக்கு நிலமளித்ததை ஒரு கல்வெட்டு (கி.பி. 1249) குறிப்பிடுகிறது. கொளகத்தூரில் இருந்து சில கற்சிற்பங்கள் தருமபுரி அகழ்வைப்பகத்திற்குக் கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ளன.

## கோட்டைபைரவஹள்ளி :

தருமபுரி வட்டம் கோட்டைபைரவஹள்ளி என்ற ஊரில் தனியார் கொல்லையில் ஒரு கல்வெட்டுள்ளது. சோமீஸ்வர தேவனுடைய ஆட்சியில் (கி.பி. 1244) தான்தோன்றீஸ்வரமுடைய நாயனார்க்கு நாட்டவர்கள் தானங்கள் தந்தமை மூன்று கல்வெட்டுகளில் உள்ளன. சிங்கயதண்ணாக்கர், சோமய தண்ணாக்கர், சோமீசுரதேவன் ஆகியோர் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளனர்.

## சின்னப்பட்டி :

தருமபுரி வட்டம் சின்னப்பட்டி விஷ்ணு கோயிலின் அருகில் உள்ள செக்கில் விகளகோரன் என்ற நுளம்பமன்னன் பெயர் இடம் பெறுகிறது. காலம் கி.பி.10ஆம் நூற்றாண்டு ஆகும்.

## சோமேனஹள்ளி :

தருமபுரி வட்டம் சோமேனஹள்ளி அம்மன் கோயில் முன்புறம் உள்ள தூணில் கி.பி. 1241இல் உள்ள கல்வெட்டு பனையக்குளத்து பள்ளியில் இருந்து வாழும் வெள்ளாளன் மூக்கன் சோமநாதன் மற்றும் உலோகமாணிக்கச் செட்டியார் இருவரும் ஏதோ தருமம் செய்துள்ளனர் என்ற தகவலைக் குறிப்பிடுகிறது.

## பரிகம் :

தருமபுரி வட்டம் பரிகம் என்ற ஊரில் இரண்டு நடுகற்கள் உள்ளன. முதலாம் இராசேந்திரன் ஆட்சியாண்டு 19இல் ஒரு நடுகல் தோன்றியது. ஊருக்குத் தெற்கில் இந்நடுகல் உள்ளது. பந்நாட்டு வாணபுரத்து ஊராளி காவிதி வீரசோழ வாணவரையனான மாசன் ஆநிரை மீட்புப் போரில் இறந்துள்ளான். ஊரார் அவன் வீட்டாருக்கு நேத்தார்பட்டியாக நிலம் அளித்துள்ளனர். மற்றோர் கல்வெட்டு சிதைந்துள்ளது.

## பலிஞ்சிரஹள்ளி :

தருமபுரி வட்டம் பலிஞ்சரஹள்ளி என்ற ஊரில் நான்கு சாசனங்கள் இருந்தன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் நடுகல் தருமபுரி அகழ்வைப்பகத்திற்குக் கொண்டு வரப்பட்டுக் காட்சியில் வைக்கப்பட்டது. மற்றோர் சிதைந்த நடுகல்லில் இருவர் மாண்ட விபரமுள்ளது. மூன்றாவது நடுகல் நொளம்ப மன்னன் அய்யப்ப

தேவன் ஆட்சியில் நாகன் மாண்டவிபரமுள்ளது. நான்காவது கல்வெட்டு ஏரிக்கரையில் உள்ளது. ஆதனூர் சிவனீஸ்வரமுடைய நாயனார் கோயிலுக்குத் தகடாதராயன் தானம் செய்துள்ளான் என்ற விபரம் அதில் உள்ளது.

## பாப்பாரப்பட்டி :

தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு செல்லும் பாதையில் பாப்பாரப்பட்டி என்ற புராதன ஊர் உள்ளது. தியாகி சுப்பிரமண்யர் கடைசி காலத்தில் இவ்வூரில்தான் வாழ்ந்துள்ளார். பாரத மாதாவிற்கு இங்கே கோயில் உள்ளது. ஊர் ஏரிக்கரையருகே கி.பி. 1034இல் காமுண்டன் வேள்கலியன் சோழன் வீமனான மதிராந்தகவேளான் என்பவன் மதகு இடுவித்ததைக் குறிக்கிறது. கம்பன்ன உடையார் ஆட்சியின்போது வல்லியூர் சிவனீஸ்வரமுடைய நாயனாருக்கு வல்லிநாயகன் நிலத்தானம் செய்துள்ளார். சிதைந்த சில கல்வெட்டுகளும் ஊரில் உள்ளன. இரண்ய அய்யர் என்ற கருநாடக பிராமணர் இங்கு வந்து அக்ரஹாரம் உருவாக்கியதாகத் தெரிகிறது. இரண்டு முருகர் கோயில்கள் ஊரில் உள்ளன.

## பாலவாடி :

தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியருகே பாலவாடி என்ற ஊர் உள்ளது. இங்கு இரண்டு வட்டெழுத்து நடுகற்கள் உள்ளன. 'தகடூர் படையுள் எறிந்துபட்ட பரைகளியனார் மாண்டதை ஒரு நடுகல்லும் நொச்சிச் சாத்தன் தொறுமீட்புப் போரில் இறந்ததை இரண்டாவது நடுகல்லும் குறிப்பிடுகிறது. பாகற்றூரில் ஆநிரைப்போர் நடந்துள்ளது. இவ்விரண்டும் கி.பி. 7-8 ஆம் நூற்றாண்டு எனலாம்.

## பூசெட்டிஹள்ளி :

தருமபுரி வட்டம் பூசெட்டிஹள்ளி என்ற ஊரில் சிதைந்த வட்டெழுத்து நடுகல் உள்ளது.

## பேகாரஹள்ளி :

தருமபுரி வட்டம் பேகாரஹள்ளியில் பெருமாள் கோயில் அருகில் தகடைநாயகன் வெங்கூரன்பள்ளியில் நிலங்களைக் கோயிலுக்கு அளித்துள்ளான். மற்றோர் கல்வெட்டிலும் திருவிடையாட்டம் மற்றும் பட்டவிருத்திக்கு நிலம் அளித்த விவரமுள்ளது.

## மல்லசமுத்திரம் :

பாலக்கோடு வட்டம் மல்லசமுத்திரம் பெருமாள் கோமில் வடக்கில் உள்ள பலகைக் கல்லில் மூன்றாம் குலோத்துங்கனின் நடுகல் கல்வெட்டு அம்மன் சிற்பத்துடன் உள்ளது. காலம் கி.பி. 1197 ஆகும். அம்மன் சிற்பத்துடன் இரண்டு குத்து விளக்குகள், சூரிய சந்திரர்கள், ஏர்கலப்பை, வெட்டறுவாள், கத்தி, உளி, கம்பு, கத்தி, பறவை, வேட்டைநாய், மீன் மற்றும் இறந்துபட்ட வீரன் காட்டப்பட்டுள்ளனர். இடங்கைத் தொண்ணூற்று ஒன்பது, மூன்று மண்டல நிகமந்தபொற்கொல்லர், கைக்கோளர், சீயவாணியந், ஞானாவிசயசேனாதிபதி, பள்ளிகள், பன்னாட்டார், அக்கசானில அதிகாரி ஸ்ரீ பலிக்குட்டிகள் ஒன்று கூடி வேளார்பள்ளியான நடுகல் வீரன் கூலிசேவகனுக்கு நிலக்கொடை அளித்துள்ளனர்.

## மான்காரன்கொட்டாய் :

தருமபுரி வட்டம் மான்காரன்கொட்டாய் என்ற ஊரில் சிவன் கோமில் முன்பாக ஒரு கல்வெட்டு முழுமையின்றி உள்ளது. அதில் அம்மையப்பன் என்ற பெயர் உள்ளது. 13ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியாக இக்கல்வெட்டுள்ளது.

## முள்ளானூர் :

தருமபுரி மாவட்டம் அரூர் காரிமங்கல சாலையில் முள்ளானூர்க் கோட்டை அமைந்துள்ளது. கி.பி. 1235இல் முள்ளானூரவரும் ஆனானம்பியாரும் சேர்ந்து சிவகலியாண நம்பி அனந்த பட்டனுக்குக் கல் தூம்பு நட உரிமை வழங்கி நிலம் அளித்துள்ளனர்.

## மூக்கநாயக்கன்பட்டி :

தருமபுரி வட்டம் மூக்கநாயக்கன்பட்டி ஏரியருகே கி.பி. 14 - 15 ஆம் நூற்றாண்டு கல்வெட்டுள்ளது. மாச்சகாமுண்டனும் அவன் தம்பியும் தங்கள் வம்ச நன்மைக்காகக் கோமிலுக்கு நிலக்கொடை அளித்துள்ளனர் என்று மேற்படி கல்வெட்டு குறிப்பிடுகிறது.

## மூக்கனூர் :

தருமபுரி அரூர் சாலையில் மூக்கனூர் உள்ளது. இவ்வூர் சாலையில் 10-11ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நடுகல் உள்ளது. கள்ளச் சோழன் ராஜனின் பெயர் அதில் உள்ளது. தேவகன்னியர் நடுகல் வீரனை அழைத்துச் செல்லும் புடைப்புச் சிற்பமும் உள்ளது.

இதே ஊரில் அம்மன் கோயில் அருகில் கி.பி. 1478இல் பிள்ளை, செட்டி, பட்டர் கூடி தானம் செய்தமை குறித்த கல்வெட்டும் உள்ளது. அள்ளாயம் என்ற வரி இதில் வருகிறது.

## வேட்டம்பட்டி :

தருமபுரி வட்டம் வேட்டம்பட்டி அம்மன் கோயிலில் பொம்மி நாயக்கன் கல்வெட்டுள்ளது. கணக்கு மல்லப்பன் உத்தரவிட்ட தானம் இதில் இடம் பெறுகிறது. 30 தோடு வழங்கப்பட்டுள்ளது.

## மாரண்டஹள்ளி :

பாலக்கோடு வட்டம் மாரண்டஹள்ளி பெருமாள் கோயில் எதிரில் உள்ள பாறையில் மூன்றாம் இராசராசன் கல்வெட்டுள்ளது. மோதூர் கிராமத்தைச் சிங்கபெருமாள் கோயிலுக்குச் சர்வமான்யமாய் இராஜராஜ பிரமராயன் வழங்கி ஆணையிட்டுள்ளான். தகடை நாட்டு மோதூர் என ஊர் சுட்டப்படுகிறது.

இரண்டாவது கல்வெட்டு தற்போது தருமபுரி அகழ்வைப் பகத்தில் வைக்கப்பட்டுள்ளது. விஜய நகரவேந்தன் புக்கராயர் காலத்தில் தகடூர் நாட்டு நாயகம் செய்வான் பொன்னேரியைத் தூரெடுத்து மானியமாகத் தானம் வழங்கிய விபரம் கல்வெட்டில் உள்ளது. நாயகம் செய்தவன் ஆடலியத்தன் ஆரோதன வெந்மாராயன் பொன்னன் ஆவான். மூன்றாவது கல்வெட்டும் தருமபுரி அகழ்வைப்பகத்தில் உள்ளது. ஸ்ரீ புக்கராயன் ஆட்சியின் போது தகடூர் நாட்டு நாயகம்செய்வான் 31 ஆடுகளை மானியமாக அளித்துள்ளான்.

## தொப்பூர் :

தருமபுரியிலிருந்து சேலம் செல்லும் பாதையில் 26 கி.மீ. தொலைவில் தொப்பூர் மலை உள்ளது. இம்மலையின் கணவாயே தொப்பூர்க் கணவாய் ஆகும். தொப்பு முதலியார் 1698-99இல் இங்கு யாத்திரிகர்களுக்குச் சத்திரம் கட்டி வைத்தார். மலையின் கிழக்கில் மனுகொண்டான் மலையில் கோட்டையின் எச்சமுள்ளது. ஹைதருடன் கி.பி.1761இல் கர்னல் உட் இங்குப் போரிட்டுள்ளார். 1791இல் திப்பு இவ்வூரில் ஆங்கிலேயருடன் போரிட்டுள்ளார் என்பது வரலாறு ஆகும்.

## தளி :

லிட்டல் இங்கிலாந்து எனப்படும் தளியில் இருந்த கோட்டை மைசூர் போர்களில் அழிந்துபட்டது. கி.பி. 1530இல் கோட்டை

கட்டப்பட்ட விவரம் கன்னடக் கல்வெட்டு மூலம் அறிகிறோம். வேணுகோபாலசுவாமி கோயில் இங்குள்ளது. திப்புசுல்தானால் கட்டப்பட்ட மசூதியும் இங்குள்ளது.

## சிவாடி :

தருமபுரி வட்டம், தருமபுரியில் இருந்து 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது சிவாடி எனும் சிறிய கிராமம். இங்குச் சைவ, வைணவக் கோயில்கள் உள்ளன.

சிவாடி சிவன் கோயில் சிதைந்து விட்டது. எனினும் நான்கு உருண்டை வடிவில் உள்ள தூண்கள் மட்டுமே கோயில் இருந்ததற்குச் சாட்சி கூறும் வண்ணம் உள்ளன. கருங்கற்களால் நேர்த்தியாக வடித்த ஒரு தூணில் காணப்படும் கல்வெட்டு, பல செய்திகளை நமக்கு உணர்த்தி நிற்கின்றன.

தகடூர் நாடு கி.பி. 13ஆம் நூற்றாண்டில் சோழப்பேரரசின் இறுதிக் காலகட்டத்தில் இருந்த பொழுது இப்பகுதியை அதியர்களின் வழித்தோன்றல்களான அதியமான்கள் ஆட்சி புரிந்தனர்.

மூன்றாம் இராசராசன் காலத்தில் தகடூர் பகுதியை இராசராச அதியமான் என்னுங் குறுநில மன்னன் ஆண்டு வந்தான். இவன் தகடூர் வியாபாரி கந்தமுழான் ஜெயங்கொண்டான், திருவண்ணா மலையுடையான், பரமண்டலேஸ்வர ஜெயபாலன் என்பானுக்கு, வேள்நங்கக்காரன் அணைப்பகுதியில் முப்பது கண்டகம் விதை விதைக்கும் அளவிற்கு நிலத்தைத் தானமாகக் கொடுத்துள்ளான். அதனைக் கந்தமுழான் தகடூர் செங்கணீஸ்வரமுடைய மகாதேவற்குத் திருப்படி மாற்றுக்குத் தேவதானமாக விட்டதை இக்கல்வெட்டு குறிக்கின்றது. கோச்செங்கணீஸ்வரம் என்பது முதலாம் இராஜாதி ராஜனுடைய தகடூர் கல்வெட்டு மூலம் தகடூரில் காணப்படும் கோச்செங்கணீஸ்வரம் என்று யூகித்துணர முடிகின்றது. அந்தக் கோயில் தூண் அதன் அழிவிற்குப் பின் இங்கு கொண்டு வந்திருக்கலாம்.

தருமபுரியில் காணப்படும் அரியரநாதசுவாமி கோயிலில் படிக்கட்டாகப் பயன்படுத்தப்படும் கல்வெட்டிலும் கோச்செங்கணீஸ் வரம் குறிப்பிடப்படுகின்றது. எனவே தருமபுரியில் இருந்த பழமையான கோயில் ஒன்று சிதைந்த பின் ஆங்காங்கே அதன் எச்சங்கள் மட்டும் சிதறி வெவ்வேறு பகுதிகளுக்கு எடுத்துச் சென்றிருக்கலாம்.

சிவாடியில் காணப்படும் கல் தூண்களைத் தவிர வேறு எவ்வித சான்றுகளும் காணப்படவில்லை. மேலும் பட்டையான தூண்கள் இரண்டும் காணப்படுகின்றன. இவை பிற்காலத்தில் அமைந்த கோயிலின் பகுதியாகவே தோன்றுகின்றது. பழமையான கோயில்கள் கிடைக்கப் பெறாவிட்டாலும் சிவாடியில் உள்ள பழமையான தூண்களும், கல்வெட்டும் சோழர்களின் ஆதிக்கத்தையும் அவர்கள் ஆட்சி முறையையும் கட்டிடக் கலையையும் அறிந்து கொள்ள துணை புரிகின்றன.

## கும்மளாபுரம் :

தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டத்தில் கும்மளாபுரம் அமைந்துள்ளது. இவ்வூர் ஒசூரில் இருந்து 27 கி.மீ. தொலைவிலும் தளியில் இருந்து 15 கி.மீ. தொலைவிலும் உள்ளது. இவ்வூர் இயற்கை எழிலுடன் அமைந்த ஒன்று ஆகும்.

மிகுதியாகக் குளங்களும், ஏரிகளிலும் இருந்தன என்பதால் அக்குளங்களிலும், ஏரியிலும் தாமரை மலர்கள் பூத்துக் குலுங்கி இருந்திருக்கலாம். எனவே தாமரை நகர் என்ற பெயர் பொருத்தமாகும்.

இவ்வூரில் 770 லிங்காயத்தார் குடும்பங்கள் வாழ்ந்தாகவும் குறிப்பிடுகின்றனர். அவர்களில் சிலரே இன்று இங்கு எஞ்சியுள்ளனர்.

இப்பகுதியில் இடிபாடுடன் கோயில்களும், நடுகற்களும், ஆங் காங்கே காணப்படுகின்றன. இவற்றை ஒப்பு நோக்கும்பொழுது பல கோயில்கள் இருந்திருக்கலாம் என்று நினைக்கத் தோன்றுகின்றது.

## கோயில்கள் :

வீரபத்திரர் கோயில், கங்கணபள்ளி, மாதேஸ்வர ஆலயம், முத்துராயசுவாமி ஆலயம், நாகமங்கல வீரபத்ரசுவாமி, ஈஸ்வரன் கோயில், லட்சுமி நரசிம்மன் கோயில், கௌரம்மா கோயில், பெரியமடம் பங்கதராயர் ஸ்வாமி, ஓதையம்மன் தேவஸ்தானம், ஒய்யாள பரமேஸ்வரர் கோயில், மேலூர் பஸ்வேஸ்வரர் கோயில், நாகதேவர் கோயில், மாரியம்மன் கோயில், ஆஞ்சிநேயர் கோயில், அனுமந்தராயர் கோயில் எனப்பல கோயில்கள் உள்ளன.

சுமார் 17 கோயில்களை நின்ற இடத்திலிருந்தே ஆங்காங்கே காண முடிகின்றது. சிலவற்றில் துவஜஸ்தம்பம் மட்டுமே உள்ளது.

## நடுகற்கள் :

ஊர் நடுவில் இரண்டு நடுகற்கள் உள்ளன. மூன்றாவது நடுகல் கங்கணப்பள்ளி செல்லும் சாலையில் அமைந்துள்ளது. இரண்டு

நடுகற்களில் உள்ள வீரர்கள் ஈட்டி எறிகின்றனர். மூன்றாவது நடுகல் பாதி புதைந்து காணப்படுகின்றது.

கும்மளாபுரத்தின் கிழக்கே அமைந்துள்ள நான்காவது நடுகல் மிகவும் சிறப்பாக உள்ளது. இந்நடுகல் மூன்று பிரிவாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அடிப்பாகத்தில் பன்றியோடு போரிடுவது போன்று வீரன் காட்டப்பட்டுள்ளான். அருகில் இரண்டு நாய்களும் காட்டப் பட்டுள்ளன. இவை வேட்டை நாய்களாகக் கருதுவர். அடுத்த பகுதியில் இறந்த வீரன் அமர்ந்த நிலையிலும் இரண்டு பக்கமும் பெண்டிரும் உள்ளனர். வீரன் சொர்க்கத்தை அடைய மேலுலகம் செல்வது போலத் தோன்றுகின்றது. மூன்றாம் பகுதியில் நந்தவனமும் துவார பாலகர்களும் காட்டப்பட்டு அதனுள் நந்தியும் காட்டப் பட்டுள்ளது. எனவே வீரத்திருமகன் இறந்தவுடன் இறைவனின் திருப்பாதத்தை சென்றடைவதாக இது அமைந்துள்ளது.

கும்மளாபுரத்தில் பெரிய மடத்திற்கு செல்லும் வழியில் உள்ள கோயிலில் பலகைக்கல் ஒன்றில் கன்னடக் கல்வெட்டு இரண்டு பக்கமும் வெட்டப்பட்டு உள்ளது. மேலும் இங்குக் குதிரை வீரன் சிற்பமும் காண்பதற்கு மிகவும் அழகாக வடிக்கப்பட்டுள்ளது.

பிரபுலிங்க லீலை, சித்தேஸ்வர சுவாமி எழுதிய நூலில் இருந்து இப்பகுதியில் 101 கோயில்கள் மற்றும் குளங்கள், கிணறுகள், இருந்ததாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. ஆய்வில் இக்கருத்து உண்மை என்றே கருதுவது போல பல தடயங்கள் நமக்கு ஆங்காங்கே கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது ஆகும்.

## விநாயகர் சிற்பம் :

கும்மளாபுரம் சிவன் கோயிலில் காணப்படும் விநாயகர் சிற்பம் தருமபுரி மாவட்ட சிற்பங்களுக்கு மட்டுமின்றித் தமிழக சிற்பங்களுக்கு எல்லாம் தலைசிறந்தது போன்று அமைந்துள்ளது. சுமார் 1மீ உயரம் உள்ள இச்சிற்பம் பளிங்கு கல்லில் செதுக்கப்பட்டது ஆகும். பளிங்கு கல்லில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் அரிதாகவே காணப்படுகின்றன. இதற்கு முன்னர் காஞ்சிபுரத்தில் வழக்கறுத்தீஸ்வரர் ஆலயத்தில் ஓர் விநாயகர் சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டது. இச்சிற்பம் இளஞ்சிவப்பு நிறத்தில் செய்யப்பட்ட ஒன்று. இதன் உயரம் சுமார் ஒரு அடி. இச்சிற்பத்தில் காணப்படும் தலையலங்காரம் தாமரை மலரை வைத்தது போன்ற அமைப்பைக் கொண்டுள்ளது. இதுபோன்ற கலைப்பாணி பாலர்கள் கலைப்பானி என்று கூறுவர். போர் நிமித்தமாக வடநாட்டின் பகுதியில் இருந்து இதுபோன்ற சிற்பங்கள் கலை நுணுக்கம் கருதிக் கைப்பற்றிக் கொண்டு வந்திருக்கலாம்.

## சிந்தகப்பாடி :

குலோத்துங்க சோழனின் குறுநில மன்னனாகத் திகழ்ந்த இராஜராஜ அதியமானார் எனும் விடுகாதழகியப் பெருமாள் தருமபுரிப் பகுதியில் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் பல கோயில்களைப் புணரமைத்தமையும் தானம் செய்துள்ளமையும் இம்மாவட்டக் கல்வெட்டுக்களின் மூலம் அறிந்தோம். இவ்விடுகாதழகியப் பெருமாள் சிந்தகப்பாடி சிவனீஸ்வரர் கோயிலுக்கும் தானம் செய்த விவரம் தெரிய வருகிறது.

''நிகரிலி சோழ மண்டலத்து கங்க நாட்டு தகடூர் நாட்டுப் புறமலை நாட்டு சிந்தகப்பாடி சிவனீஸ்வர முடையார்'' என்று கல்வெட்டு குறிப்பிடும் இடமானது தற்பொழுது தர்மபுரியில் இருந்து தென்கரைகோட்டை செல்லும் சாலையில் சுமார் 28 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சிந்தகப்பாடி எனும் சிந்தல்பாடி இவ்வூரின் பெயர். கி.பி. 9-10ஆம் நூற்றாண்டு முதலே சிந்தகப்பாடி என்று அழைக்கப்பட்டு வந்துள்ளது. இதற்குரிய கல்வெட்டு சான்றானது சிந்தல்பாடி அருகே உள்ள பள்ளிப்பட்டு என்ற கிராமத்தில் காணப்படும் நடுகல்லே உணர்த்தி நிற்கின்றது. இவ்வூர் பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் அமைந்துள்ளது.

சிந்தகப்பாடி என்ற பெயர் கங்கர்கள் ஆண்ட சிந்தரையர் பெயரால் உருவாகியிருக்கலாம். சிந்தகம் என்பது புளியைக் குறிப்பது. புளிய மரங்கள் அடர்ந்து அதிக அளவில் காடாகத் திகழ்ந்ததால் இவ்வூர் சிந்தகப்பாடி என்று பெயர் பெற்று இருக்கக் கூடும் என்பதை முன்பே குறிப்பிட்டோம்.

## கோயில் அமைப்பு :

சிவனீஸ்வரமுடைய நாயனார் கோயில் ஊரின் மேற்கே அமைந்த திருக்கற்றளி ஆகும். கர்ப்பகிருகம், அர்த்தமண்டபம், என்ற அளவில் அமைந்த இக்கோயிலில் இலிங்க உருவமாகச் சிவனீஸ்வரமுடையார் காட்சியளித்துக் கொண்டுள்ளார். அர்த்த மண்டபத்தை ஆறு தூண்கள் அலங்கரிக்கின்றன. விதானத்தில் மீன் இலச்சினை செதுக்கப்பட்டுள்ளது. கோயிலின் மேற்குப் பகுதியில் கிழக்கு பார்த்த நிலையில் நந்தியும், நந்தி மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளன. நந்தி சிற்ப அமைப்பை நோக்கும் பொழுது அது காலத்தால் கி.பி. 12-13ஆம் நூற்றாண்டு போலத் தோன்றுகிறது. கோயிலின் அதிஷ்டானம் மண் மூடிய நிலையில்

இருந்தது. அதனை தூய்மை செய்து பார்த்த பொழுது அங்கு சில கல்வெட்டுக்கள் இருந்தமை வெளிக் கொணரப்பட்டது.

## கல்வெட்டுச் செய்திகள் :

இங்கு 14 கல்வெட்டுகள் உள்ளன. தற்பொழுது சில சாசனங்கள் சிதிலமடைந்துள்ளன. இக்கல்வெட்டுகள் அரிய செய்திகளை நமக்குத் தெரிவிக்கின்றன.

இப்பகுதியை அரசாண்ட மன்னர்களான போசள மன்னன் சோமீஸ்வரன், சோழ மன்னர்களான மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன் ஆகியோர் கல்வெட்டுகள் இங்கு உள்ளன. குலோத்துங்கசோழன் காலத்தில் குறுநில மன்னராகத் திகழ்ந்த இராசராச அதியமானார், விடுகாதழகியப் பெருமாள் ஆகியோர் பற்றிய குறிப்புகள் கல்வெட்டுகளில் காண முடிகின்றன.

போசள மன்னன் சோமீஸ்வரன் காலத்தில் கங்கய தண்ணாக்கன் என்பவன் சிவனீஸ்வரமுடைய நாயனார்க்குத் திருநொந்தா விளக்கு எரிப்பதற்கு ஆலமேடு என்ற இடத்தில் விளைச்சலில் ஒரு பங்கை அளித்துள்ளான். சோழர்கள் காலத்திலும் இக்கோயில் பூசைக்காக நிலம் அளித்ததுடன் நொந்தா விளக்கு வைக்கத் தேவதானமாக நிலங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

சிந்தகப்பாடியைச் சுற்றியுள்ள ஊர்ப் பெயர்கள் ஸ்ரீகானப்பள்ளி, மழவராயப் புத்தேரி, புளியாழ்வான் பற்று, காரிமங்கலம், சோகத்தூர் என்ற ஊர்களும் நாட்டுப் பிரிவுகளாகக் கங்கநாடு, தகடூர் நாடு, புறமலை நாடு ஆகிய நாடுகளும் கல்வெட்டுகளில் கூறப்படுகின்றன. மேலும் காரிமங்கலத்தைச் சேர்ந்த கொண்டையன் மலையன் என்பவன் சிவனீஸ்வரமுடைய இறைவனுக்கு ஏழுசந்தி, விளக்குகள் எரிக்கக் கொடுத்த 12 பசுக்களையும், பொன்னையும் இக்கோயிற் காணியுடைய சிவப்பிராமணர் தில்லை நாயகப்பட்டன், மூவாயிரத் தொருவன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

தற்புருஷ தேவன் என்பவன் கி.பி. 13ஆம் நூற்றாண்டளவில் கொடை அளித்த குறிப்பும் கல்வெட்டொன்றில் உள்ளது.

சோகத்தூரில் உள்ள சில நிலங்களைப் பெய்யனாயன் என்பவன் சிந்தகப்பாடி சிவனீஸ்வரமுடைய நாயனார் கோயிலுக்கு அளித்ததையும் ஒரு சாசனம் சுட்டுகிறது. கண்டகம் என்ற அளவை ஒன்றையும் கல்வெட்டுகளில் காண்கிறோம். கல்வெட்டுச் செய்திகளை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இக்கோயில் கி.பி. 12-13ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டு இருக்கலாம் என்று தோன்றுகிறது.

## ஓசூர் :

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வருவாய் வட்டத்திலேயே மிகுந்த பரப்பளவு கொண்ட வட்டமாகத் திகழ்வது ஓசூர் வட்டமாகும். குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருக்கும் ஊர் எனவே ஊசூர் என்று குறிப்பர். அடுத்துக் கருநாடக தாக்கத்தால் இவ்வூரை ஒசவூர் என்றழைத்தனர். ஒசவூர் என்பது புதிய ஊர் என்ற பொருளில் அமைந்தது.

கல்வெட்டுகளில் ஓசூர், செவிடபாடி என்று கூறப்பட்டுள்ளது. இப்பெயர் சேயுடைபாடி என்று இருந்திருக்க வேண்டும். அதுவே செவிடபாடி என மருவி இருக்கலாம். ஹோசூரின் பழைய பகுதி சண்டவதி என வழங்கப்படும்.

## ஸ்ரீசந்திரசூடேஸ்வரர் திருக்கோயில் :

தமிழகத்தில் மலையின் மீது அமைந்த திருத்தலங்களிலே ஸ்ரீ சந்திரசூடேஸ்வரர் திருத்தலமும் ஒன்று. இங்குள்ள மலையின் அடிவாரத்தில் மரகதசரோவர் என்னும் குளம் காணப்படுகிறது. இதனைப் பச்சைகுளம் என்றும் குறிப்பிடுகின்றனர்.

ஹோசூரில் உள்ள கல்வெட்டுகளைத் தமிழக அரசு தொல்லியல் துறை படியெடுத்துத் தருமபுரி மாவட்டக் கல்வெட்டுகள் முதல் தொகுதியில் பதிப்பித்துள்ளது. 37 கல்வெட்டுகள் நூலில் இடம் பெற்றுள்ளன. பெரும்பாலும் சந்திர சூடேஸ்வரர் கோயிலில் கல்வெட்டுகள் உள்ளன.

கோயில் கருவறையில் ஸ்ரீ சந்திர சூடேஸ்வரர் இலிங்க வடிவில் காட்சியளிக்கின்றார். பார்வதி தேவி மரகதாம்பாள் என்னும் பெயரில் தனி சன்னதியில் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றார்.

கோயில் பிரகாரத்தின் வடகிழக்குப் பகுதியில் ஜலகண்டீஸ்வரர் இலிங்க வடிவில் காட்சியளிக்கின்றார். கோயிலின் உட்பகுதியில் விநாயகர், முருகர், சூரியன், சந்திரன், கஜலட்சுமி, துர்க்கை ஆகிய சிற்பங்கள் உள்ளன. சமயக் குரவர்கள் நாலவர் சிற்பமும் அழகுற அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

## ஸ்ரீசந்திரசூடேஸ்வரர் கோயில் கல்வெட்டுகள் :

இத்திருக்கோயிலில் பெரும்பான்மையான கல்வெட்டுகள் தமிழ்மொழி கல்வெட்டுகள் ஆகும். போசள மன்னன் வீரராமநாதன், வல்லாள தேவன்திரிபுவன மல்ல பூர்வாதிராஜர், முதலாம்

குலோத்துங்கன், அத்திமல்லன், தாமத்தாழ்வார் ஆகிய மன்னர்களது கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. குறுநில மன்னர் பூர்வாதிராஜர், என்பவர் ராமனாதன் ஆட்சியில் ஓசூர் பகுதியைத் தன் ஆதிக்கத்தில் வைத்திருந்தார். ஒசூர்ப் பகுதியை கி.பி. 1257 முதல் கி.பி. 1275 வரை அத்திமல்லர் வம்சத்தினர் தம் வசம் வைத்து ஆட்சி செய்துள்ளனர்.

முரசுநாடு, சோழவள நாடு, தென்கூற்று நாடு, என நாட்டுப் பிரிவுகளும் கூறப்படுகின்றன. பூசை செய்ய அரிசி, நெய், தேங்காய், மோர், பால், உப்பு, வெல்லம், வாழைப்பழம், மிளகு ஆகியன கோயிலுக்கு அளித்தமையை 13ஆம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது.

கிழக்குப் பார்த்த நிலையில் அமைந்த இக்கற்றளியில் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. முதலாம் நுழைவு வாயிலில் உள்ள கோபுரம் இங்குச் சிறியதாக அமைத்துள்ளனர். இது காலத்தால் பிற்பட்டது. நுழைவுவாயிலின் தோற்றத்திற்கு ஏற்ப அமையவில்லை இந்த கோபுரம். எனவே கோபுரம் இல்லாத குறையை நீக்க அமைத்த பகுதியாக இதனைக் கருதலாம்.

கோயிலின் இரண்டாவது நுழைவு வாயிலில் ஐந்து அடுக்குகளைக் கொண்டு அமைந்த கோபுரம் உள்ளது. இக்கோபுரம் அண்மைக் காலத்தில் புணரமைப்புச் செய்து நல்ல நிலையில் காணப்படுகிறது.

இங்கு மாசி - பங்குனி மாதத்தில் 10 நாள்கள் தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. இங்கு அமைந்துள்ள மூன்று மலைகளில் சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளுக்கும் கோயில்கள் உள்ளன. தெப்பக்குளம் சந்திர சூடேஸ்வரர் கோயிலருகே உள்ளது. இராமநாயக்கன்குளம் ஊருக்கு வடக்கில் உள்ளது. திப்புவின் கோட்டைச் சிதைவுகளும் உள்ளன. வெங்கடரமணர் என்ற விஷ்ணு கோயிலும் சிறிய சில கோயில்களும் ஓசூரில் உள்ளன. தொழில் நகரமாக ஓசூர் விளங்குகிறது.

## கம்பையநல்லூர் :

தருமபுரியில் இருந்து சுமார் 25கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது கம்பையநல்லூர் எனும் ஊர். இவ்வூரின் மேற்கே சனத்குமார நதி ஓடுகின்றது. இவ்வூரில் கோட்டை ஈஸ்வரன் கோயில் - தேசிநாதசுவாமி திருக்கோயில், கோட்டை மாரியம்மன் கோயில்,

பெருமாள் கோயில், காமாட்சியம்மன் கோயில், பிள்ளையார் கோயில் எனப் பல கோயில்கள் அமைந்துள்ளன. இங்கே மிகவும் பழைமை யான கோயில் கோட்டை தேசிநாதர் கோயில் ஆகும்.

கி.பி.13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் இவ்வூர் "பெண்ணைக் கரை மருவுஞ்சிறுகோட்டை குளன்நாகை என அழைக்கப்படுகிறது. அதாவது மூன்றாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டு தெளிவாக ஊர்ப்பெயரை எடுத்துரைக்கின்றது. பின்னர் வீரவிஸ்வநாத தேவரின் இரண்டாவது ஆட்சியாண்டில் வெட்டப்பட்ட கல்வெட்டில் நாகையன்பள்ளியான காலிங்கராய சதுப்பேதி மங்கலம்" என்றுள்ளது. எனவே கி.பி. 13ஆம் நூற்றாண்டில் போசளர்கள் காலத்தில் நாகையன்பள்ளி என்ற பெயர் காலிங்கராயன் சதுப்பேதி மங்கலம் என்ற பெயர் மாற்றம் பெற்றுள்ளது. சதுர்வேதி மங்கலம் என்பது பிராமணர்களுக்குத் தானமாக அளித்த ஊர் எனலாம். இறைவன் பெயர் உடையார் தேசிநாயகர் ஆகும்.

கி.பி. 15ஆம் நூற்றாண்டில் "அலைமலை தற்றிய கங்கநாட்டுத் தகடநாட்டு மூக்கனூர் பற்றுக் கம்பையநல்லூர் நாயனார் தேசிநாயநார்க்கு" என்று சாசனம் குறிப்பிடுகின்றது. எனவே கி.பி. 15ஆம் நூற்றாண்டு முதல் கம்பைய நல்லூர் எனும் பெயர் வழங்கி வருகிறது என்பது தெளிவாகிறது. இப்பெயரே இன்றும் வழங்கப்படுகிறது.

மேலும் செவிவழிச் செய்தியாகச் சிலர் கூறும் பொழுது கம்பி, நல்லி, என்ற இரண்டு நாட்டிய மகளிர் இவ்வூரில் சிறப்புற்று இருந்தனர். அவர்களின் இரண்டு பெயரையும் இணைத்து கம்பிநல்லி ஊர் என்று அழைத்தனர் என்றும் அது பிறகு மருவி, கம்பையநல்லூர் என வந்ததாகவும் கூறுகின்றனர். விஜயநகர மன்னன் கம்பணனுடனும் ஊர்ப்யெரை இணைத்தும் பேசுவர்.

எவ்வாறாகினும் கி.பி. 15ஆம் நூற்றாண்டு முதல் கம்பைய நல்லூர் என்ற பெயர் இவ்வூருக்கு ஏற்பட்டுத் தொடர்ந்து இன்றுவரை நிலைத்து வழங்கப்படுகிறது எனலாம்.

## கோட்டைக் கோயில் :

கம்பைய நல்லூர் ஸ்ரீ தேசி நாயகனீஸ்வரர் திருக்கோயில் ஊரின் வடகிழக்கே அமைந்துள்ளது. கர்ப்பகிரகம், இடைக்கட்டு, அர்த்த மண்டபம், முக மண்டபம் என்ற அமைப்பில் கற்றளியாகக் கட்டப்பட்ட இத்திருக்கோயில் தற்பொழுது சிதைவின் காரணமாக வடக்குச் சுவர்ப்பகுதி மட்டும் செங்கற்சுவர் எழுப்பி முழுமை செய்துள்ளனர். விமானம் இரண்டு தளங்களைக் கொண்டுள்ளது.

அழகிய சுதை வேலைபாடு காண்கிறோம். அண்மையில் ஊர்ப்பொது மக்கள் உபயத்தால் கோயிலைச் சுற்றி மதில்சுவர் எழுப்பப் பட்டுள்ளது.

இக்கோயிலில் கர்ப்ப கிரகத்தை அடுத்து வருவது இடைக்கட்டு. இடைக்கட்டை அடுத்து அர்த்த மண்டபம் 14 தூண்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. தூண்களில் விசேட வேலைபாடுகள் இல்லை. இரண்டு நுழைவாயில்கள் கிழக்கு, தெற்கு பகுதிகளில் அமைந்துள்ளன. இரண்டு நுழைவு வாயில்களிலும் நந்திகளும், நந்தி மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டு நந்திகளில் கிழக்கு வாயிலில் உள்ளது சற்று பழமையானதாகத் தோன்றுகின்றது. தெற்கு வாயில் நந்தி கி.பி. 15-16ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருத இடமளிக்கின்றது.

## அர்த்த மண்டபம் :

அர்த்த மண்டபம் 14 தூண்களைக் கொண்டு தாங்கி நிற்கின்றது. இங்குத் தட்சிணாமூர்த்தி, துர்க்கை அம்மன், நாக அம்மன் சிற்பங்கள் அழகுற வடிக்கப்பட்டு வழிபாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளன. அர்த்த மண்டபத்தின் வலப்புறம் விநாயகரும், சுப்ரமணியரும், இடப்புறம் அம்மன் சிற்பமும் வைக்கப்பட்டுப் பூசைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிவன், பார்வதி உற்சவ மூர்த்திகள் (செப்புத் திருமேனிகள்) கி.பி. 14-15ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

## மகாமண்டபம் :

தெற்குப் பகுதியில் எட்டுத் தூண்களுடன் அழகிய சிற்பங் களைக் கொண்டு மகாமண்டபத்தை ஏற்படுத்தியுள்ளனர். இங்குக் காணப்படும் தூண்களில் நாட்டியமாடும் மகளிர், மத்தளம் கொண்டு இசை எழுப்பும் ஆடவர் சிற்பங்கள் உள்ளன. அநுமன் போரிடும் காட்சி எழிலுடன் உள்ளது. இறைவனை வணங்கும் அடியார் சிற்பங்களும் பிற சிற்பங்களும் உள்ளன. இத்தூண்கள் கி.பி. 15-16ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவைகளாகத் தோன்றுகின்றன.

கோயிலைச் சுற்றியுள்ள வெளிப்புறச் சுவரில் அமைந்த தேவ கோட்டங்களில் சிற்பங்கள் எதையும் காண இயலவில்லை. மேலும் தென்திசைக் கடவுளான தட்சிணாமூர்த்தி இருக்க வேண்டிய தேவ கோட்டத்தின் அருகே முனிவர் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. எனவே இங்குத் தட்சிணாமூர்த்தி சிற்பம் இல்லாவிடினும் இது தட்சிணாமூர்த்திக்குரிய இடம் என்பதை முனிவர்களின் சிற்பத்தைக்

கொண்டு உணரலாம். அர்த்த மண்டபத் தேவ கோட்டத்தில் விநாயகர் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. எனவே இங்கு விநாயகர் சிற்பம் வைத்திருக்கலாம் என்று உணர முடிகின்றது.

பொதுவாகக் கோயிலின் அமைப்பையும் அதன் கட்டிட வேலைப்பாட்டையும் ஒப்பு நோக்கும்பொழுது கர்ப்பகிரகம், அர்த்த மண்டபம், மற்றும் கிழக்கு வாசல், நந்தி மண்டபம், நந்தி ஆகியவை கி.பி. 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை எனலாம்.

மகாமண்டபத்தில் காணப்படும் தூண்களின் அமைப்பு, அதில் காணப்படும் புடைப்புச் சிற்பங்களின் அமைதி, தெற்கு வாசல் நந்தி மண்டபம், நந்தி ஆகியவை விஜயநகரப் பேரரசர் காலத்தவை எனலாம்.

கோயிலில் உள்ள பாடல் கல்வெட்டுக்களும், இறைவனைப் போற்றும் 'நமசிவாய' கல்வெட்டும், அதே அமைப்பில் மன்னன் பெயரை மாற்றி மந்திர எழுத்துக்கள் போல அமைத்த "விலங்கா மொழி" கல்வெட்டையும் கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது இக்கோயிலின் சிறப்புத் தன்மை தெளிவாகும்.

## கல்வெட்டுகள் :

இக்கோயிலில் 10 கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அக்கல் வெட்டுகள் பல செய்திகளை நமக்குத் தெளிவுப்படுத்துகின்றன. இந்த ஊரின் பெயர், இங்கு வீற்றிருக்கும் இறைவன் பெயர், இந்த ஊரை ஆட்சிபுரிந்த மன்னர்கள், சமுதாயத்திற்கும் கோயிலுக்கும் செய்த நற்பணிகள், நாட்டுப் பிரிவுகள், சமுதாய முன்னேற்றம், சமுதாய அமைப்பு என பல்வேறு செய்திகளையும் அறிகிறோம்.

சோழர், போசளர், விஜயநகர மன்னர் எனப்பலரும் இப்பகுதியை ஆட்சிபுரிந்துள்ளனர். சோழர்கள் காலத்தில் மூன்றாம் குலோத்துங்க சோழனும் அவனது குறுநிலத் தலைவனாகத் திகழ்ந்த விடுகாதழகிய பெருமாள் என்பவனும் ஆட்சிபுரிந்துள்ளனர். போசளர்களில் வீர விஸ்வநாதன், விசயநகர மன்னர்களான வீர தேவமகராயர், இம்மடிபுக்கராயர், கம்பண்ண உடையார் கல்வெட்டுக்களும் கோயிலில் உள்ளன.

குலோத்துங்க சோழனுடைய 22ஆவது ஆட்சியாண்டில் விலங்காமொழி விடுகாதழகிய பெருமாள் பெண்ணைக் கரையில் சிறுக்கோட்டை என்னுமிடத்தில் தன்பெயரால் ஒரு கற்றளி எடுப்பித்துள்ளான். அவனது நாடு பாலியாறு, பொன்னியாறு பெண்ணையாறு என்ற மூன்று ஆறுகளை உடையது எனக் கல்வெட்டு சுட்டுகிறது. மேலும் "காரணய கையான்" என

இம்மன்னன் பாராட்டப்படுகின்றான். இவன் கற்றளி எடுப்பித்ததையும் ஒரு சாசனம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. இச்செய்திகள் யாவும் எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் பாடலாக வெட்டப் பட்டுள்ளது. இங்குக் குறிக்கப்பட்ட விடுகாதழகிய பெருமாள் அதிகமான் பரம்பரையில் வந்தவர் என்பதும் இவர் தகடூர் நாட்டைச் சிறிது காலம் ஆட்சிபுரிந்துள்ளார் என்பதும் திருப்பணிகள் புரிந்துள்ளார் என்பதும் தெரிகின்றன. எழுத்துக்களை மாற்றி அமைத்து இறைவனைத் துதிப்பது அதாவது நமசிவாய என்பதை மாற்றி மாற்றி அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதே போன்று தன் அடைமொழிப் பெயரான விலங்கா மொழி என்பதை ஐந்து எழுத்துக்களாகப் பிரித்து ஐந்து வரிகளில் அமைத்துப் பெயரை நேரடியாகப் படிக்க முடியாதது போல வெட்டி வைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். ஐந்து எழுத்துக்களையும் தனித்தனியாக எழுதி வைத்துள்ளமை சிறப்பிற்குரியது ஆகும். கல்வெட்டினைத் தமிழிசையுடன் கல்வெட்டாய்வாளர் ஆ.பத்மாவதி தொடர்புபடுத்தி ஆய்ந்துள்ளார். திருமந்திரத்துடன் ஒப்பிட்டும் ஆய்வு செய்யலாம்.

## பாடல் கல்வெட்டு வருமாறு :

*உரைமருவும் குலோத்துங்க சோழ தேவர்க்கு*
*உரைத்தயான் டிருபதின்மே லிரண்டிற் பெண்ணைக்*
*கரைமருவுஞ் சிறுகோட்டை குளன்நாகை நாயகற்*
*களித்துக்கற்றளிதன் பேரிட்டகா ரனைய கையான்*
*திரைமருவுந் தடங்கமலத் தகடை மன்னன்*
*செழும்பாலி பெண்ணைத்திரு நன்மூன் றுடைய*
*விரைமருவுந் தார்மார்பன் ராஜராஜ வதிகன்*
*விலங்காமொழி விடுகாதழ கியப்பெரு மாளேய்*

அடுத்து

| | | | | |
|---|---|---|---|---|
| ந | சி | ய | ம | வா |
| ய | ம | வா | ந | சி |
| வா | ந | சி | ய | ம |
| சி | ய | ம | வா | ந |
| ம | வா | ந | சி | ய |
| வா | ம | ய | ந | சி |
| ந | சி | வா | ம | ய |
| ம | ய | ந | சி | வா |
| சி | வா | ம | ய | ந |
| ய | ந | சி | வா | ம |

அடுத்துத் தன் பெயரையும் மந்திர எழுத்து போன்று அமைத்துள்ளதைக் காணலாம். தென்புறச் சுவரில் கால் வரியில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு வருமாறு

| | | | | |
|---|---|---|---|---|
| மொ | லங் | ழி | வி | கா |
| வி | கா | மொ | லங் | ழி |
| லங் | ழி | வி | கா | மொ |
| கா | மொ | லங் | ழி | வி |
| ழி | வி | கா | மொ | லங் |

விலங்கா மொழி என்பது இவ்வாறு மாற்றி வெட்டப் பட்டுள்ளது.

போசளர் காலத்தில் இக்கோயிலில் வீற்றிருக்கும் இறைவனைத் தேசிநாதர், தேசிநாயகர் என்றே குறிப்பிட்டுள்ளனர். அந்தத் தேசி நாயகர்க்கு மதுராந்தக வீரநுளம்பன் இராசநாராயண பைரவன் என்பான் போசள அரசன் வீர விஸ்வநாதன் நலனுக்கும், தன் நலனுக்குமாகப் புறமலை நாட்டுக் கடம்பர்பள்ளியில் உள்ள நன்செய், புன்செய் நிலங்களைச் சர்வமானியமாக அளித்துள்ளான்.

வீர விஸ்வநாதனின் இரண்டாவது ஆட்சி ஆண்டில் உத்தம சோழ கங்காதரயன் என்பவன், நாகையன்பள்ளியான காலிங்கராய சதுப்பேதி மங்கலத்தில் உள்ள இறைவனுக்கு மன்னன் வீர விஸ்வநாதனுக்கும் இவனுக்கும் நல்வாழ்வு வேண்டி நிலக்கொடை அளித்துள்ளான்.

விஜய நகர மன்னன் இம்மடி புக்கராயன் காலத்தில் வெட்டப் பட்ட கல்வெட்டின் மூலம் மூக்கனூர் பற்று நாட்டவர்கள், தேசிநாதர் கோயிலிற் பணிபுரிய மலையப்பட்டான் அழகிய திருச்சிற்றம்பலம் உடையான் என்பானுக்குப் பெரிய நம்பி என்ற பட்டம் கொடுத்து அனைத்துப் பொறுப்புகளையும் அளித்துள்ளனர் என்று காண்கிறோம்.

'தேசிநாதர் திருக்கோயிலுக்குத் திஷேத்திறவரனுமாய் சையி வாசிரியம் பூசை தேவகன்மி அழ பகை வித்தாரம் இக்கோயிலுக்கு உள்ள இலாப லோபம் இவனே அனுபவித்து இருக்கக் கடவன் ஆகவும் இருக்கிற அளவுக்கு மூக்கனூர் பற்று மகாநாடு பூராவுமாக குடுத்தபடி உனக்கு ஒரு பணமும் பத்துக் குளத்துக்குத் தானியமும்' என்று சாசனத்தில் வெட்டப்பட்டுள்ளது.

வீர மகாதேவராயர் காலத்தில் கம்பைநல்லூர் தேசிநாயனார் மகா பூசைக்கு ஈசம்பாடி என்ற ஊரைத் தேவதானமாகக் கொடுத்ததை ஒரு கல்வெட்டு குறிக்கின்றது. இதில் குறிக்கும் ஈசம்பாடி தற்பொழுது ஈச்சம்பாடி என்று வழங்கப்பட்டு வருகின்றது.

மூக்கனூர் பற்று என்பது ஒரு முக்கியமான மையப் பகுதியாகும். அதனுள் அடங்கிய ஊராகக் கம்பையநல்லூர் இருந்துள்ளது. இங்கே ஒரு சிறுகோட்டை இருந்தது என்பதும் தெளிவாகிறது. இன்றும் கோட்டைப் பகுதி என்றே உள்ளூர் மக்கள் அழைத்து வருகின்றனர். கோட்டைப் பகுதிகள் அழிந்து போனாலும் கோட்டைமேடு, கோட்டைக்கோயில்கள் எனக் குறிப்பிடப்படுவதால் இங்குக் கோட்டை இருந்துள்ளது என்பதை உணர முடிகின்றது.

## பெண்ணேசுவர மடம் :

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காவேரிப்பட்டினத்திற்கு அருகே 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சிற்றூர் பெண்ணேசுவர மடம். இவ்வூர் தருமபுரியில் இருந்து சுமார் 35 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரின் தென்பெண்ணை ஆற்றங்கரையில் அமைந்த கோயிலே 'பெண்ணைநாயனார்' திருக்கோயில் ஆகும். பெண்ணை நாயனாருடன் உடனுறைபவளாக ஸ்ரீவேதநாயகி அம்மனும் வீற்றிருக்கிறார்.

## கோயில் அமைப்பு :

கோயிலின் முன் உயர்ந்த எழுநிலை மாடக்கோபுரம் அமைக்கப் பட்டுள்ளது. எண்திசைக்காவலர்கள் (அஷ்டதிக் பாலர்கள்) கொண்ட விமானம், கருவறை, அர்த்த மண்டபம், முக மண்டபமும் என்ற அமைப்பில் கோயில் கிழக்கே பார்த்த நிலையில் காட்சியளிக்கிறது. கோபுரம் தெற்கு நோக்கி அமைந்துள்ளது.

## திருச்சுற்றுமாளிகை :

திருச்சுற்று மாளிகையில் விநாயகர் சிற்பமும், சப்தமாதர்கள் மற்றும், சூரிய சந்திரன் சிற்பங்களும் காணப்படுகின்றன. அர்த்த மண்டபம், முகமண்டபத்தை உருளை வடிவத்தூண்கள் தாங்கு கின்றன. சப்தமாதர் சிற்பங்களுடன் ஒரு விநாயகர் சிற்பமும் வைக்கப் பட்டுள்ளது. திருச்சுற்று மாளிகையில் வடமேற்கு மூலையில் ஸ்ரீவேதநாயகி அம்மன் சன்னதி அமைந்துள்ளது. தென்மேற்கே ஸ்ரீஇராமர், லட்சுமணன், சீதை, அனுமன் ஆகிய சிற்பங்கள் உள்ளன. ஸ்ரீவேதநாயகி அம்மன் கோயில் பூசையும் சிறப்புடன் நடைபெற்று வருகிறது.

## தேவகோட்டச் சிற்பங்கள் :

இக்கோயிலில் நாற்பதுக்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றில் போசளர், சோழர், விஜயநகரர் எனப் பேரரசர்கள் பலருடைய கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு மன்னரும் தத்தம் ஆட்சிக் காலத்தில் இங்குள்ள பெண்ணை நாயனாருக்குப் பொன்னும், பொருளும் இறையிலி நிலமும் அளித்தமையை இக்கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

போசள மன்னன் வீரநரசிங்கன் காலத்துக் கல்வெட்டு ஒன்றின் மூலம் பெண்ணை நாயனார் கோயிலுக்கு மதுராந்தக வீரநுளம்பன் வயிரவன் விமலன் என்பவன், நிலம் அளித்ததை அறிகிறோம். அவற்றில் ஆண்பிள்ளை பெருமாள் கொல்லை, தட்டான் குட்டை, மாதேவன் கொல்லை, சிறுக்கன் கொல்லை, புளியமடை ஆகிய நிலங்களை மன்னன் குறிப்பிடுகின்றான். இவை அனைத்தும் இறையிலியாக வழங்கப்படுகின்றன. காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டாகும்.

## சோறு வேண்டுகிறவன் தலை துண்டித்தல்

போசள மன்னன் வீரராமநாதன் நாற்பத்தொன்றாம் ஆட்சி ஆண்டில் வெட்டப்பட்ட கல்வெட்டில், பெண்ணையாண்டார் மடத்திலும், பெண்ணைநாயனாருக்கு நிலம் வழங்கிய தேவதான மான ஊர்களிலும் எவன் ஒருவன் சோறு வேண்டுகிறானோ அதாவது பிச்சை எடுத்தல் மற்றும் பிற நலிவுகள் செய்கின்றானோ அவனை ஓர் அதிகாரியோ அல்லது ஊர்க் கணக்கரோ தண்டித்தல் வேண்டும் என்றுள்ளது. தண்டனை யாது எனில் அவனது தலையை அறுத்து விட வேண்டும். மேலும் நலிந்தவர்கள் இல்லாமல் போகவே அமுது படிக்கு மானியமாகத் தேவதானம் கொடுத்தோம் என்று கல்வெட்டில் காணப்படுகின்றது. 'இரந்துண்டு உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்' என்ற குறளுடன் இக்கல்வெட்டைத் தொடர்புபடுத்தலாம். எனவே இரந்துண்டு வாழ்தலை கி.பி. 13ஆம் நூற்றாண்டில் கடுமையாகக் கண்டித்ததுடன் தண்டனையும் வழங்கியுள்ளனர். மேலும் இங்குப் பெண்ணையாண்டார் மடம் ஒன்று இருந்ததையும் ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. தற்பொழுது ஊர்ப் பெயரே பெண்ணேசுவரம் மடம் என்று அழைக்கப்பட்டு வருகின்றது. சோமேஸ்வரன் காலத்தில் இப்பெண்ணை நாயனார் கோயிலில் தேவகன்மிகள் நால்வர் கோயிலுக்கு நீர்நிலையொன்றை அளித்தது பற்றியும் காண முடிகிறது.

## சோழர் கல்வெட்டுகள் :

சோழர் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகளில் மூன்றாம் குலோத்துங்கன் மற்றும் மூன்றாம் இராசராசன் கல்வெட்டுகள் பல காணப்படுகின்றன. பெரும்பாலும் பெண்ணை நாயனார்க்கு நந்தா விளக்கு வைத்தல், இறையிலியாகத் தேவதானம் வழங்குதல் போன்றவையே அவைகள் எனலாம். பெண்ணை நாயனார்க்குத் திரிபுவன வீரதேவனின் பெயரால் நிகழ்ந்த சந்திகாலப் பூசைக்கு வேண்டி அமுதுபடி, சாத்துபடிகளுக்கான நிலம், வழங்கியதைத் தெளிவாகக் காணமுடிகின்றது. மூன்றாம் குலோத்துங்கனின் பத்தாவது ஆட்சியாண்டில் இக்கோயிலில் சிவப்பிராமணராக இருந்த விடுகாதன் என்னும் ஸ்ரீமாதேஸ்வரபட்டர் அத்திமல்லனுக்கு நான்கு நாள்கள் பூசை செய்யும் உரிமையை மன்னன் வழங்கியுள்ளான். மேலும் குலோத்துங்கனின் முப்பதாவது ஆட்சியாண்டில், குலோத்துங்க சோழன் கோட்டையில் தண்டநாயகம் செய்து வந்த செயங்கொண்டான் மல்லன் என்பவன், தன் மகன் ஏறாண்டையன் நன்மைக்காகப் பெண்ணைநாயனார் கோயிலிலே சண்டேஸ்வரரை எழுந்தருளச் செய்து பரிகலன்களும் பூசையின் பொருட்டு நிலங்களும் இறையிலியாக அளித்துள்ளான். மூன்றாம் இராசராசனின் பட்டத்தரசியான வாணகோவரையர் மகளார் கூத்தாடும் தேவநாச்சியார் கோயிலுக்கு ஒரு விளக்கு வைத்துள்ளார்.

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் பெண்ணேஸ்வர மடமும், சேரமான் பெருமாள் மடமும் இருந்துள்ளன. மடங்கள் செம்மையாக நடைபெற நிலங்கள் தானமளித்தமையைக் கல்வெட்டுகள் தெளிவாக்குகின்றன. மூன்றாம் இராசராசனின் மனைவியின் பெயரை இவ்வூர்க் கல்வெட்டு மூலம் அறிகிறோம். இவர் வாணகோவரையன் மகளுமாவார். சுத்தசலாகை என்ற பெயரில் வாசிபடாநற்காசு சோழர் காலத்தில் புழக்கத்தில் இருந்ததை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது.

## விஜயநகர அரசர் கல்வெட்டுகள் :

விஜயநகரமன்னர்களின் கல்வெட்டுக்களில் ஸ்ரீவிருபாட்சி ராயர், ஸ்ரீ வீரபுக்கண்ண உடையார், வீரகம்பண உடையார் மற்றும் முக்கண்ண உடையார் எனப் பல மன்னர்கள் இடம் பெறுகின்றனர். ஸ்ரீமல்லபூர்வாதிராயன் என்பவன் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் ஒசூர் பகுதியைத் தலைமையகமாக வைத்துக் கொண்டு கிருஷ்ணகிரி வரை உள்ள பகுதிகளைச் சிறிதுகாலம் தன் ஆட்சிக்குட்படுத்தி வைத்திருந்தான். இம்மன்னனது கல்வெட்டுகள் ஒசூர், பேரிகை,

சூளகிரி பகுதியில் அதிகம் காணலாம். திம்மையன் என்ற சிற்றரசன் தருமபுரிப் பகுதியில் இருந்துள்ளான்.

கி.பி. 1476 இல் விருபாட்சிராயர் பங்குனி மாதம் பௌர்ணமி நன்னாளில் பாரூர் பற்று மல்லிகைக்கல் என்ற இடத்தில் தானத்தை வழங்கியுள்ளதை ஒரு கல்வெட்டு குறிக்கிறது.

இவ்வூரை ஸ்தலசமுதாயமாகக் கொண்ட பிராமணர்களுக்குச் சிலவற்றை சபையார் செய்துள்ளனர். பெண்ணை நாயனார்க்குத் திரு அர்த்த சாமபூசைக்கும் அமுதுபடிக்கும் தானம் கொடுக்கப்பட்டதை ஒரு சாசனம் சுட்டுகிறது.

இங்குத் தேவாரப்பள்ளி ஒன்று செம்மையாக நடைபெற்று வந்ததையும் ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது. மல்லபூர்வாதிராயன் கல்வெட்டில் குதிரைச்சாரிகை என்ற வரி காணமுடிகின்றது. ஈஸ்வரன்கோயில் நுழைவாயிலில் உள்ள படியின் மேல் கி.பி. 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டின் மூலம் கோயிலில் திருமண்டபம் ஒன்று தளமிட்ட செய்தி உள்ளது. வெள்ளப்ப நாடன் மேற்சேரிகண்டன் கண்டச் செட்டி என்பவனே இப்பணிக்குத் தன்மம் செய்துள்ளான். மேற்சேரி என்ற ஊர் தற்போது சேலம் மாவட்டத்தில் மேச்சேரி என வழங்கப்படுகிறது.

கி.பி.1369ஐச் சேர்ந்த கம்பணஉடையார் கல்வெட்டு கண்டரகண்டர் வெளிப்பெருவாய்க்கால் ஏற்படுத்தப் பட்டதைக் குறிப்பிடுவதுடன் சோமப்பதெண்ணாயக்கர் மகன் கூளிமாராயன் வெற்றிகளையும் பட்டியலிடுகிறது.

சிவலோகமுடையார் என்பவர் சிவநாமம் முழுதுடைய பிள்ளையாரைப் போசள வீரராமநாதன் காலத்தில் எழுந்தருள் வித்துள்ளார்.

## கோயிலைச் சுற்றி அமைந்துள்ள சிற்பங்கள் :

தன் தலையைத்தானே அரிவதை நவகண்டம் என்று குறிப்பர். இது நேர்த்திக் கடனாகும். ஒரு நவகண்ட சிற்பம் இவ்வூரில் உள்ளது. அடுத்து இசைக் கலைஞன் ஒருவன் தன் கையில் தம்புராவை மீட்பது போல நின்று கொண்டுள்ளான். இவன் ஒரு சிறந்த இசை வல்லுநன். இவன் இறந்த காரணத்தால் அவனுக்கு நடுகல் ஏற்படுத்தியதைக் கோயில் நுழைவு வாயிலின் அருகே உள்ள சிற்பம் நமக்கு எடுத்துரைக்கின்றது. ஒருவேளை இவன் கோயிலில் இறைவனுக்கு இசையை வாசிக்கும் கலைஞனாக இருந்திருக்கலாம். கல்வெட்டில் இடம் பெற்ற மாராயன் என்ற கொட்டுவான் இவனாக இருக்கலாம்.

இங்குள்ள இளைஞர்கள் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தன்று நடந்து சென்று இறைவனைத் தரிசித்து வருகின்றனர். திருவண்ணாமலை கிரிவலம் போல், தருமபுரி மாவட்டத்தில் பெண்ணையாண்டார் கிரிவலம் சிறப்புப் பெற்று வருகின்றது.

நடசாலை :

நடசாலை என்று அழைக்கப்படும் இவ்வூர் கிருஷ்ணகிரி வட்டத்தில் அமைந்துள்ளது. கிருஷ்ணகிரியில் இருந்து 16 கி.மீ. தொலைவில் நடசாலை கிராமம் உள்ளது. இவ்வூர் அருகில் சென்ன சந்திரம், குந்தாணி, ஆகிய பழைய ஊர்களும் உள்ளன.

நடசாலை, நெடுசால் என்றும் குறிக்கப்படும். இவ்வூரில் அமைந்த நாயனாரை நெடுந்தேவர் என்றே கல்வெட்டுக்களும் குறிப்பிடுகின்றன. நடசாலைத் திருக்கோயிலில் முழுமையானதும், சிதைந்ததுமாக 15 கல்வெட்டுகள் உள்ளன. சோழர், போசளர், நுளம்பர், விசயநகர மன்னர்கள் எனப்பல அரச வம்சத்தினர் கல்வெட்டுகளும் இங்குள்ளன.

போசள மன்னன் வீரராமநாதனின் 37ஆம் ஆட்சியாண்டில் ஜெயங்கொண்ட சோழமண்டலத்தில் நெடுந்தேவருக்கு விளக் கெரிக்கக் கொடுத்த கொடை பற்றிய குறிப்பும் உள்ளது. திரிபுவன மல்லபூர்வாதிராயன் என்ற குறுநில மன்னன், மற்றும் அவனது வம்சத்தைச் சேர்ந்தவர்களான தாமத்தாழ்வார் அத்திமல்லன் பூர்வாதிராஜன், போன்றவர்கள் கிருஷ்ணகிரி - ஓசூர் பகுதியை ஆட்சி புரிந்தமைக்கும் இக்கோயில் கல்வெட்டுகள் சான்றுகளாக உள்ளன.

இக்கல்வெட்டுக்களின் மூலம் கி.பி. 14-15ஆம் நூற்றாண்டில் இக்கோயிலுக்குத் திருப்பணிகள் நடந்தமையும், நிலங்கள், விளக்குகள் தானமாக வழங்கியமையும் அறிகிறோம்.

இங்குக் குறிக்கப்படும் நாட்டுப் பிரிவுகளாவன : விரிவுநாடு, எஞ்ஞாடு, மோதூர் நாடு, திருமுனைப்பாடி நாடு, புதுக்குன்றி நாடு, நடுவிநாடு, என்பனவாகும்.

மன்னன் பெயர் ஆட்சியாண்டில்லாத கி.பி. 13-14ஆம் நூற்றாண்டு எழுத்தமைதி உடைய கல்வெட்டில் கணக்கன் மாச்சனக் காரப் பல்லவரையன் குழைஞ்சானநேன் சந்தி விளக்கு வைக்க ஒரு பொன் அளித்துள்ளான் என்று அறிகிறோம். நெடுசாலையில் விஜயநகர அரசர் காலத்தில் அர்த்த சாமபூசை சிறப்பாக நடைபெற்றதை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது.

அத்திமல்லன் மகன் தாமத்தாழ்வார் என்பவர் நிகளீங்கீச்சுர நாயகர் திருப்பணிக்கும் மடவிலாசத்தில் உள்ளவர் உணவுக்குக்கு மாக நிலம் அளித்துள்ளார். சூர்யபெருமாள் என்ற அதிகாரி தோளுக்கும் வாளுக்கும் நன்றாக வேண்டிச் சூரியகாமுண்டர் ஓர் ஏரியை நெடுந் தேவநாயனார்க்குத் தானமாக அளித்துள்ளார். மல்லபூர்வாதிராசன் அப்போது நாட்டையாண்டுள்ளான். மாராயன் என்பவனது பிள்ளையை நெடுந்தேவநாயனார் கோயிலுக்குக் கொட்டுவானாக (மத்தளம் அடிப்பவனாக) நியமித்ததைக் கல்லிலும் செம்பிலும் கோயில் தானத்தார் வெட்டி வைத்துள்ளனர்.

கோயிலில் கண்டெடுத்த செப்புத்திருமேனிகள் எழில் வாய்ந்தவை. நடராசர், சிவகாமி, உமாமகேஸ்வரர் ஆகியவை சோழர்காலச் சிலைகள் எனலாம். நெடுந்தேவர் என்றே இறைவன் சாசனங்களில் அழைக்கப்பட்டுள்ளார்.

## குந்தாணி :

குந்தாணி, கிருஷ்ணகிரியில் இருந்து 22 கி.மீ. தொலைவில் உள்ளது. நடுகற்களும், சிற்பங்களும் இவ்வூரில் காணப்படுகின்றன. இவ்வூர் 13ஆம் நூற்றாண்டில் போசள மன்னன் வீர ராமநாதனின் தலைநகரமாகத் திகழ்ந்த ஊர் ஆகும்.

போசள மன்னன் வீர சோமேஸ்வரன் கி.பி. 1254இல் இறந்தபின் அவனது மகன் வீரராமநாதனுக்கு இப்பகுதி உரியதாயிற்று. வீரசோமேஸ்வரனுக்கு வீரநரசிம்மன் என்ற மூன்றாம் நரசிம்மனும், வீரராமநாதன் என்ற மகனும் இருந்தனர். போசள அரசின் மைசூரை ஒட்டிய பகுதிகள், மூன்றாம் நரசிம்மனுக்கும், தமிழ் நாட்டுப் பகுதிகள் வீரராமநாதனுக்கும் பிரித்து வழங்கப்பட்டன.

தமிழ்நாட்டின் பகுதியை வீரராமநாதன் திருச்சிக்கு அருகில் உள்ள 'கண்ணனூர்க் கொப்பத்தைத்' தலைநகராய்க் கொண்டு ஆண்டான். பாண்டியன் மாறவர்மன் குலசேகரன், சோழர், போசளர் பகுதிகளை வென்றபோது கண்ணனூர்க் கொப்பத்தைப் பிடித்துக் கொண்டான். கடும் முயற்சிக்குப் பின் வீரராமநாதன் கண்ணனூரை மீண்டும் வென்றான். தன் தமையனிடம் கலகம் செய்து அவனிடமிருந்தும் சில பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டான். இவ்வாறு வீரராமநாதன் பெங்களூர், கோலார், தும்கூர் ஆகியப் பகுதிகளைத் தமிழகத்துடன் சேர்த்துக் குந்தாணியைத் தலைநகராக்கி ஆட்சிபுரிந்தான். அந்தக் குந்தாணியே தேவர்குந்தாணி ஆகும்.

குந்தாணி கோயில் அதிட்டானத்தில் காணப்படும் முதலாம் குலோத்துங்கன் காலக் கல்வெட்டிலிருந்து அரசனின் சிற்றரசனான சோழபல்லவராயன் தந்த பொன்னின் வட்டியைக் கொண்டு சிவப்பிராமணர்கள் அமாவாசைதோறும் நாழி உழக்கு நெய்யும், நாநாழி அரிசியால் திருவதமும் கறியமுதும், தயிரமுதும் செய்தல் வேண்டும் என்று அறிகிறோம். மார்கழித் திருவாதிரை நாளன்று அபிஷேகம் பண்ணவும் நாற்பது சந்தி விளக்குகள் எரிக்கவும் வேண்டும் என்று அறிகிறோம்.

திரிபுவனமல்ல பூர்வாதிராயனான பூமிநாயகன் தனது பிறந்த நட்சத்திரமான திருமூலத்தின்போது திருவேகம்பம் உடைய நாயனார்க்குத் திருவமுது செய்யவும், நாள்தோறும் ஒரு திருமாலை சாத்தவும் அவனது நாட்டில் புதுப்பற்றில் உள்ள காக்கும்நாயகன் நல்லூரைத் தேவதானமாகக் கொடுத்துள்ளதை ஒரு கல்வெட்டில் காண முடிகின்றது.

இவற்றில் குறிப்பிடும் அசுவம், வெட்டி, பயிறு, காணம், விச்சுப்பாட்டம், அம்மைச்சாரிகை, குதிரைச் சாரிகை, கலியாணத் தாயம் போன்ற எல்லாவிதமான ஆயங்களும் அவ்விறைவனுக்கே இறையிலியாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

கோயிலின் இறைவன் பெயரைக் குறிப்பிடும்பொழுது "திருவேகம்பமுடைய நாயனார்" என்றே காணப்படுகிறது.

கோயிலில் காணப்படும் கல்வெட்டுகள், கட்டிடக் கலை அமைப்பு ஆகியவற்றை கொண்டு இக்கோயில் கி.பி. 13-14ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக் கருத முடிகின்றது.

## இராயக்கோட்டை :

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மிகவும் தொன்மையான வரலாற்றுச் சான்றுகளைத் தன்னகத்தே கொண்ட ஊர்களில் முதன்மை இடத்தை வகிப்பது இராயக்கோட்டை என்றால் அது மிகையாகாது. வரலாற்றுக் காலத்தில் கங்கப்பல்லவர் முதல், மைசூர் அரசர்கள் வரை இப்பகுதியை ஓர் சிறப்பான இடமாகப் பயன்படுத்தினர், சிலர் இப்பகுதியில் கோட்டையை அமைத்துத் தலைநகராக்கி ஆட்சி புரிந்துள்ளனர். இங்குக் காணப்படும் மலைக்கோட்டையும் அங்குள்ள கல்வெட்டுக்களுமே இதற்குச் சான்றாகும். இராயக்கோட்டைச் செப்பேடு பல்லவர் வரலாற்றிற்குப் பெருந்துணை புரிகின்றது.

பாலக்கோடு - ஓசூர் செல்லும் சாலையில் பாலக்கோட்டில் இருந்து 24 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. ராயர்கள்

(விசயநகர மன்னர்கள்) கோட்டைகள் கட்டி வாழ்ந்தனர். இக்கோட்டைகள் இன்றும் கண்டு களிக்கும்படி உள்ளது. மத்திய அரசு தொல்லியல் துறை இக்கோட்டையைப் பாதுகாத்து வருகின்றது. ஜெகதேவராயர் வம்சம் இப்பகுதியை ஆட்சிபுரிந்தபொழுது இராயக்கோட்டை தலைமை இடமாக இருந்தது. இவ்வூரின் பெயரும் அதன் தொடர்பால் ஏற்பட்டதே என்று கருதலாம். கொல ரீட் காலத்தில் இவ்வூர் தாலூகா தலைமை இட அந்தஸ்தைப் பெற்றிருந்தது. அதுவும் கி.பி. 1796-97 இல் கலைக்கப்பட்டது. இராயர்கள் கட்டிய கோட்டையைக் காரணமாக வைத்து ஊர்ப்பெயரும் இராயக்கோட்டை என்றே அழைக்கப்படுகின்றது. இராயக்கோட்டை பாலகாட்டின் ஒரு பகுதியாகவும் பாரமகாலின் ஓர் அங்கமாகவும் திகழ்ந்துள்ளது.

ஊரின் வடக்கே உள்ள புதியபேட்டையின் அருகே சிறிய கோட்டையும், மலையின் மீது தென்மேற்காகவும், தென்வடலாகவும் கட்டப்பட்ட கோட்டைச் சுவர்களும் இன்றும் காணலாம். இங்குள்ள கோட்டையின் ஒரு பகுதியை ''சலாபத்கான் பீரங்கிப்படை'' அமைவிடம், என்று அழைத்து வருகின்றனர். இவர் திப்புவின் மதிப்பைப் பெற்ற கில்லேதார்களில் ஒருவர் என்று வரலாறு குறிப்பிடுகின்றது.

கீழே அமைந்த கோட்டையில் பிரிட்டிஷ் அரசின் பாதுகாவலர் கள் தங்கியிருந்துள்ளனர். தற்பொழுது அவை அரசு அலுவலகங் களாக மாற்றப்பட்டுள்ளன. வடமேற்கே அழகிய குளம் ஒன்று நீள் சதுர வடிவில் படிக்கட்டுகளுடன் கட்டப்பட்ட நிலையில் காணப்படு கின்றது. இதனைத் துபாஷ்கிணறு என்று அழைக்கின்றனர். இந்தக் கிணறு ஓர் பாறையைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளது.

மலையடிவாரத்தில் இருந்து சிறிது தொலைவில் கோட்டை மதில் சுவர்கள் துவங்குகின்றன. அழகாகவும் நேர்த்தியாகவும் அமைக்கப்பட்ட இக்கோட்டைச்சுவர் மலை மேலே செல்கின்றது. ஆங்காங்கே தரைப்பகுதிகளும் காண முடிகின்றன.

இம்மலையின் மேலே செல்லும் பாதையிங் பாறையைக் குடைந்து படிக்கட்டுகள் அமைத்துள்ளனர். இவை துர்வாச முனிவர் தவம் புரிந்ததாக நம்பப்படும் குகையை நோக்கிச் செல்கிறது. மிகவும் செங்குத்தாகச் செல்லும் இந்தப் பாதை அருகே ஒரு பெரிய துவாரம் வட்டமாகக் காணப்படுகின்றது. இத்துவாரத்தின் முன்பு ஒரு இலிங்கம் வைக்கப்பட்டுப் பூசை செய்யப்படுகின்றது. இந்த மலையில் இன்றும் முனிவர்கள் தவம் செய்து வருவதாகச் சிலர் குறிப்பிடுவர்.

கங்கப் பல்லவரான மாவலிவாணாதிராயனது நான்காவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஒன்று கன்னடத்தில் வெட்டப்பட்டது இங்கே உள்ளது.

இலட்சுமிநாராயணன் கோயிலில் காணப்படும் தமிழ்க் கல்வெட்டு ஒன்று வீர ராமனாதன் ஆட்சியின்போது வெட்டப் பட்டுள்ளது. விஜய நகரர் காலத்துக் கல்வெட்டு மூலம் பாரமகால் சென்னப்பட்டிணம் ஜாகீர் உடன் ஜெகதேவராயர் காலத்தில் இணைக்கப்பட்டு மூன்று தலைமுறைகள் இப்பகுதியை தலைநகர மாகக் கொண்டு ஆட்சிபுரிந்துள்ளமையும் வெளிப்படுகின்றது.

பின்னர் மராத்தியர்கள் இட்டிபால்ராவ் ரத்தினகிரியை ஆட்சிபுரிந்தவன் மூலம் இப்பகுதியை தனதாக்கினான். இவர்களுக்கு மைசூர் ராஜாக்கள் துணை நின்றனர். பின்னர் இப்பகுதி மைசூர் அரசர் வசம் சென்றது. அடுத்து வந்த ஆங்கிலேயர்ரான மேஜர் கௌடீ கி.பி. 1791இல் இந்தப் பகுதியைக் கைப்பற்றினார். இந்தக் கோட்டைப் பகுதியை அழிக்காமல் தன் வசமாக்கித் தமது பாதுகாப்பில் ஆங்கிலேயர் வைத்துக் கொண்டனர்.

இவ்வாறு ராயக்கோட்டை வரலாற்றில் பல சிறப்புகளைப் பெற்றுள்ளது. இந்தக் கோட்டை மதில் சுவர்கள் இன்றும் காண்போரை வியக்கச் செய்யும் வகையில் அதன் அமைப்பும் கட்டிடக் கலையும் திகழ்கின்றது என்பதில் ஐயமில்லை.

## தென்கரைக்கோட்டைக் கோயில் :

தருமபுரி மாவட்டத்தில் ஏராளமான தரைக்கோட்டைகளும் மலைக்கோட்டைகளும் இருந்திருக்கின்றன. கோட்டைகளின் பெயர்களைக் கொண்டே ஊர்ப் பெயர்களும் அமைந்தன. அவ்வாறு இன்றும் பெயர் விளங்கி வருபவற்றுள் வீரபத்ரதுர்க்கம், தட்டக்கல் ஆகியன மலைக்கோட்டைகள் ஆகும். தரைக்கோட்டைகளுள் தேன்கனிக் கோட்டை, அதியமான் கோட்டை, தென்கரைக் கோட்டை முக்கியமானவையாகும்.

தரைக்கோட்டைகள் பெரும்பாலும் மண்ணாலமையும். சுற்றுச் சுவரின் வாயில் பகுதி மட்டும் கருங்கற்களைக் கொண்டும் அமைப்பர். மலைக் கோட்டைகள் முழுவதும் கற்களைக் கொண்டே அமைந்திருக்கும். மண்ணால் எழுப்பியதாலோ என்னவோ பெரும்பாலான தரைக்கோட்டைகளை இன்று நாம் காண முடியாமல் போய்விட்டன. சில தரைக்கோட்டைகள் சிறு தடயம் கூட கிடைக்காமல் மண்மேடாகவும் போய்விட்டன. எனினும் தென்கரைக்

கோட்டை சுமார் 50 ஏக்கர் பரப்பில் முழுமைத் தோற்றத்தில் கோட்டை மதில் சுவர்களும் உட்பகுதியில் கிடங்கு மற்றும் சைவ, வைணவக் கோயில்கள் ஆகியவற்றுடன் திகழ்கின்றது. தென்கரைக்கோட்டை தர்மபுரியிலிருந்து சுமார் 35 கி.மீ. தொலைவில் அரூர் செல்லும் பாதையில் இராமியம்பட்டிக்கருகில் உள்ளது.

கோட்டை நுழைவாயில் மதில் சுவரில் விநாயகர் சிற்பமும் அனுமனின் சிற்பமும் நம்மை வரவேற்பது போன்றிருக்கும். கோட்டை நுழைவாயில் வளைந்து வளைந்து செல்லும் அழகே தனியாகும்.

தென்கரைக்கோட்டையில் ஸ்ரீ கலியாணராமர் கோயில், ஸ்ரீ நஞ்சுண்டேஸ்வரர் கோயில், ஸ்ரீ சஞ்சீவிராயன்கோயில், விநாயகர் கோயில் ஆகியன உள்ளன. இவற்றுள் சிறப்புள்ளது ஸ்ரீ கலியாண ராமர் திருக்கோயில் ஆகும். கல்யாணத் திருக்கோலத்தில் இராமர் சீதையுடன் நின்ற திருக்கோலத்தில் உள்ளார். உற்சவச் செப்புத் திருமேனிகளும் உள்ளன.

## கோயில் அமைப்பு :

கலியாணராமர் கோயிலானது கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், முன் மண்டபம், மகா மண்டபம் ஆகியவை அமைந்த பெரிய கோயிலாகும். மகாமண்டபம், கலைச் சிறப்பு மிக்க அரும் படைப்பாகும். கர்ப்பகிருகத்தில் கலியாணராமர், சீதை, இலட்சுமணன் மற்றும் அனுமனுடன் காட்சி தருகிறார். மகாமண்டபம் 29 தூண்களைக் கொண்டது. இம்மகாமண்டபத்தில் உள்ள தூண்களில் மன்னர்களின் திருவுருவச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இடையில் குறுவாளும், முறுக்கிய மீசையும் தலைப்பாகையும் அணிந்து கம்பீரமான தோற்றத்தில் இறைவனை வணங்குவது போன்ற கோலத்தில் அவர்கள் உள்ளனர். கோயிலில் நவகண்டம் ஒன்று காணப்படுகின்றது. தன் தலையைத் தானே கொய்யும் வழக்கத்தின் அடிப்படையில் அமைந்தது நவகண்டமாகும்.

மண்டபத்தின் நான்கு பக்கமும் வெளிப்புறத்தில் அமைந்துள்ள தூண்களில் புலியைக் குத்தும் குதிரை வீரர் சிற்பங்கள் உள்ளன. எழுத்தில் எழுதி உணர வைக்க முடியாத அழகுடன் தத்ரூபமாக இவைகள் செதுக்கப்பட்டுள்ளன. சீறிவரும் கோரப்புலியின் உடலில் வட்டமான புள்ளிகளையும் செதுக்க மறக்கவில்லை அந்த சிற்பி. வீரன் கோபக்கனல் தெறிக்க புலியின் கழுத்துப் பகுதியில் கிழித்துக் கொண்டு வந்துள்ளதைக் கண்டு வியக்கலாம்.

குதிரையின் வாய் திறந்தவாறும், அதன் நாக்கு மேல்நோக்கித் தாடையில் ஒட்டியவாறும் இரண்டையும் இணைத்துக் காட்டியுள்ளமை இரசிக்கத் தக்கவை. மண்டபத்தின் விதானமும் சிற்பங்களால் நிறைந்துள்ளன. கல் தாமரையும், இராகு-கேது, சூரிய-சந்திரன் முதலானவை புடைப்புச் சிற்பங்களாகக் காட்டப் பட்டுள்ளன. வடக்கே உள்ள தூண்களில் பள்ளி கொண்ட பெருமாள், இலட்சுமி, நர்த்தன கிருஷ்ணன், அனுமன் சிற்பங்களும் கிழக்கேயுள்ள தூண்களில் ராமர், இலட்சுமணன் - சீதை ஆகியோரும் தெற்குத் தூண்களில் ஆழ்வார்களும், காட்டப்பட்டுள்ளனர். இம்மண்டபம் நாயக்கர் கலைப் பாணிக்கு நல்ல எடுத்துக்காட்டு ஆகும்.

மண்டபத் தூண்கள், மற்றும் பிற இடங்களிலும், அதிகம் காணப்படுவன அனுமனின் சிற்பங்களே, அனுமன் வழிபாடானது விஜயநகர ஆட்சியில் தான் பரவலாக தலைதூக்கியது. அனுமனின் சிற்பங்கள் பல்வேறு தோற்றங்களில் உள்ளன.

சில தூண்களில் கொடிப்பெண் சிற்பங்களும் விளக்கேந்திய பாவை சிற்பங்களும் உள்ளன. கல்யாணராமர் கோயில் அதிட்டான அமைப்பை நோக்கும் பொழுது செஞ்சிநாயக்கர் கலைப்பாணியை ஒத்துக் காணப்படுகிறது. மண்டபத்தூண்களில் இசைத் தூண்கள் சிலவும் இங்குள்ளன. தென் தமிழ்நாட்டில் இசைத்தூண்கள் பல கோயில்களில் காணமுடியும்.

## தீர்த்தமலை :

தகடூர் நாட்டில் உள்ள மலைகளில் தீர்த்தமலை சிறப்புப் பெற்றது. மலை மீது துர்க்கைக்கு மிகவும் பழங்காலத்தில் கோயில் இருந்திருக்கிறது. அங்குப் பல்லவர் கால துர்க்கை ஒன்று இருக்கிறது. துர்க்கை எட்டு கரங்களுடன் நின்ற நிலையில் இருக்கிறாள். அவளது கரங்களில் சக்கரம், கத்தி, சங்கு, வில், கேடயம், மணி முதலியன இருக்கின்றன. இந்த சிற்பத்திலே "ஸ்ரீ பகவதி குருச்சூலி கோடுடைய... என்று வட்டெழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இதுபோல் தெய்வத்தின் பெயரும் அந்தச் சிற்பத்திலேயே எழுதப்பட்டிருப்பது அரிதாகும். இந்த மலையின் மேல் சிவன் கோயில் ஒன்று உள்ளது. இந்தக் கோயிலை முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் உத்தமசோழ புறமலை நாடாழ்வான் என்பவன் புதியதாகக் கட்டியிருக்கிறான். அதற்கு வழிபாட்டுக்குச் சில ஊர்களையும் கொடுத்திருக்கிறான்.

'சுவஸ்திஸ்ரீ பூர்வதேசம் கங்கையும் கிடாரமும் கொண்ட கோப்பரகேசரி பன்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது (கி.பி. 1041) நிகரிலி சோழ மண்டலத்துத் தகடூர் நாட்டுப் புறமலை நாட்டு தீர்த்த மலையுடைய மகாதேவர் கோயில் புதுக்குவித்து முக மண்டபமும் எடுப்பித்தே கற்கடைவையிரியேநான வியளன் மறப்படை கண்டநான இராசேந்திர சோழ விரியூர் நாடுடையநான உத்தமசோழப் புறமலை நாடாழ்வேன், தீர்த்தமலை மாதேவர்க்கு திருநந்தா விளக்கு இரண்டும் திருமடைப்பள்ளிப் புறமாகக் குடுத்த ஊர் குறுமுதலியும் அவ்வடி மங்கலமும் அலைமலை நாட்டில் அலையூரும் குடுத்தேன்' என்றுள்ளது.

இதே ஆண்டில் அவனுடைய அடியான் மும்முடிச் சோழர் ஆதி என்பவன் இந்த கோயிலில் ஷேத்திர பாலர் கோயிலும் சண்டேஸ்வரர் கோயிலும் கட்டி வைத்தான்.

இவ்வாறு சைவப்புகழ் பெற்ற ஊர் தீர்த்தமலை. இங்குப் பஞ்சதீர்த்தங்கள் மலைமீது வற்றாது வந்துகொண்டே உள்ளன. மூலிகைச் செடிகள் நிறைந்த இப்பகுதியில் சித்தர்கள் பலரும் வாழ்ந்து வந்துள்ளனர். கி.பி. 16ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட இவ்வூர் தலபுராணம் ஒன்றுள்ளது.

சீலிநாயக்கனின் கருவூலம் இங்கிருந்ததாக நம்பப்படுகிறது. இராமர் தீர்த்தம், அகஸ்தியர் தீர்த்தம், அக்கினி தீர்த்தம், குமர தீர்த்தம், கௌரி தீர்த்தம் என 5 தீர்த்தங்கள் உள்ளன. மாசிவிழா இங்குப் பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது. சீலிநாயக்கருடைய தெலுங்குக் கல்வெட்டு, கோயில் கருவறையைப் புதுப்பித்ததைக் கூறுவதுடன் காசிவிஸ்வநாதர் கோயில் கட்டப்பட்டதையும் கூறுகிறது. திருப்புகழில் இவ்வூர் முருகர் போற்றப்பட்டுள்ளார்.

தருமபுரி மாவட்டத்தில் ஆஞ்சிநேயர் சிற்பங்கள் யாவும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. மாவட்டத்தின் எண்திசையிலும் எண் திசைக் காவலர்களாக வீரஆஞ்சிநேயர் உருவச் சிலைகளைப் பலகைக் கற்களைக் கொண்டு புடைப்புச் சிற்பங்களாகவும் குன்றுகளின் பாறைகளைக் குடைந்தும் செய்துள்ளனர்.

நல்லம்பள்ளியில் இருந்து தொப்பூர்க் கணவாய் அருகே இயற்கையான பள்ளத்தாக்கில் 10 அடி உயரம் உள்ள வீர ஆஞ்சிநேயர் சிற்பம் உள்ளது. இன்று கோயிலாக இது மாற்றப்பட்டுச் சுற்றி அமைந்துள்ள கிராம மக்கள் வழிபடும் தெய்வமாக திகழ்ந்து வருகின்றது. காலம் 17-18ஆம் நூற்றாண்டாகும்.

விஜயநகர மன்னர்கள் தங்கள் ஆளுகையில் உள்ள பகுதியில் வைணவத்தைப் பரப்பும் நோக்கோடு எழுப்பிய கோயில்களிலும், பொது இடங்களிலும் அனுமன் சிற்பத்திற்கு முதலிடம் கொடுத்துள்ளனர்.

முத்தம்பட்டி ஆஞ்சிநேயர், வடக்கே காணப்படும் பாறையில் செதுக்கப்பட்ட ஒன்று ஆகும். இங்குள்ள மலையின் மீது அண்மையில் இராமர், இலட்சுமணர், சீதை சிற்பங்களைச் செய்து வைத்துள்ளனர். சனிக்கிழமை தோறும் பூசைகளும், அன்னதானமும் நடைபெறுகின்றது. தற்பொழுது இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் இக்கோயில் கொண்டு வரப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றது. தொடர் பூசைகளும், திருவிழாக்களும் எடுத்து இவ்வூர் மக்கள் வீர ஆஞ்சிநேயரை வழிபட்டு வருகின்றனர்.

தருமபுரி ஸ்ரீபிரசன்ன வெங்கடரமணர்க் கோயிலில் புடைப்புச் சிற்பமாக அனுமன் ஒரு தனிக் கல்லில் வடிக்கப்பட்டுள்ளார். தலையலங்காரத்தில் உச்சிக்குடுமி காட்டப்பட்டுள்ளது. வாலில் மணி தொங்கவிடப்பட்ட நிலையில் கம்பீரமாக அனுமன் காட்சியளிக்கிறார்.

தருமபுரியருகேயுள்ள சோகத்தூரில் 6 அடி உயரமுள்ள ஆஞ்சிநேயர் சிற்பம் காணப்படுகிறது. மகாராஜாக்கடை மலை உச்சியில் 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பெரிய அனுமன் சிற்பம் உள்ளது.

## பாலகொண்டராய துர்க்கம் :

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் வட்டத்தில் பாலகொண்டராய துர்க்கம் செங்குத்தான மலைச்சரிவின் பாதத்தில் அமைந்தது. இந்தப் பாலகொண்டராயன் (துருகம்) மலையானது சங்கிலித் தொடர்போல மலைகளைத் தொடர்ந்து அடுக்கிக் கொண்டே செல்கிறது. இங்குள்ள சில துர்க்கங்கள் வருமாறு :

| | | |
|---|---|---|
| அங்குசகிரி துருகம் | - | 3038 அடி |
| பாலகொண்டராய துருகம் | - | 3046 அடி |
| வீரபத்திர துருகம் (காவேரிப்பட்டினம் அருகே) | - | 3038 அடி |

| | | |
|---|---|---|
| ராயகோட்டை துருகம் | - | 3239 அடி |
| சூளகிரி துருகம் | - | 2895 அடி |
| அஞ்செட்டி துருகம் | - | 3192 அடி |
| குந்துகோட்டா | - | 3319 அடி |
| மல்லிகார்ஜுனர் துருகம் | - | 2996 அடி |

இவைகள் கடல் மட்டத்தில் இருந்து அளக்கப்பட்ட உயரங்கள் ஆகும்.

தருமபுரியைப் புறமலை நாடு என்பர். புறத்தே மலைகள் சூழ்ந்ததால் இதனை புறமலை நாடு என்ற பொருள்பட அழைத் துள்ளனர். இப்பகுதியில் பலமலைத் தொடர்கள் காணப்படுகின்றன.

பாலகொண்டராயன் துருகம், பல சிறப்புக்களைப் பெற்றது. இம்மலைமேல் மண்டபம் அமைந்துள்ளது. ஜமீன்தார் பெயரில் ஊர் அழைக்கப்படுகிறது. எல்லைக் காவல் படை வீரர்கள் இங்கு தங்கி நாட்டைக் காத்தனர். கிருஷ்ணகிரி கோட்டை போல சிறப்பு வாய்ந்த பாலகொண்டராயன் மலையின் உச்சியில் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. மேலமலை கிராமத்தின் சிற்றூராகப் பாலகொண்ட ராயன் துர்க்கம் விளங்குகிறது.

## வீரபத்ரதுர்க்கம் :

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்தில் வீரபத்ர துருகம் எனும் சிறிய கிராமம் அமைந்துள்ளது. இப்பகுதி முழுவதுமே மலைகளால் சூழப்பட்டுள்ளது. இவ்வூரை அடைய வேண்டுமெனில் காவேரிப்பட்டிணம் - கொத்தூர் செல்லும் சாலையில் மோரணஹள்ளி என்ற கிராமத்தில் இறங்கி மோரணஹள்ளி ஏரியை அடைய வேண்டும். ஏரிக்கரையில் இருந்து சுமார் 5 கி.மீ. தூரம் சென்றால் ஊரையும், மலையையும் அடையலாம்.

## துருக்கம் :

துருக்கம் என்றால் மலையரண், மலை, காடு, மதில் என்ற பல பொருள்படும். இங்குத் துருக்கம் என்பது இம்மலை மீது காணப்படும் மதில்கள், படிக்கட்டுகள், கட்டிடங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதி ஆகும். இவையனைத்தும் உள்ள பாதுகாப்பு பகுதியைத் துருக்கம் என்று அழைத்தனர். கோயில்கள், தங்குமிடம், மதில் சுவர்கள் போன்ற பகுதிகள் இங்கு காணப்படுகின்றன.

## துருகமலை :

இம்மலையின் மீது மூன்று நுழைவு வாயில்களும் மண் மற்றும் செங்கல் இவற்றை கொண்டு எழுப்பப்பட்ட சுவர்களும் ஆங்காங்கே உள்ளன. மலையில் சிற்சில இடங்களில் பாறைகளிலேயே பாதை வெட்டப்பட்டுள்ளது. இங்கு ராஜா படுக்கை, ராணி குளிக்குமிடம், என்ற பகுதிகள் இருப்பதாகச் சில பகுதிகளைக் குறிப்பிடுகின்றனர். இங்குத் தானிய கிடங்கு போன்ற பெரிய அறை ஒன்று செங்கல், சுண்ணாம்பு கலந்து கட்டப்பட்டு அழகாக உள்ளது. அடுத்துக் காணப்படும் கட்டிடப்பகுதி பூச்சு வேலையின்றிச் செங்கற்களை கொண்டு அடுக்கி கட்டிய நிலையில் காணப் படுகின்றது. இவை அனைத்தும் நாயக்கர் காலக் கலைப் பாணியாகும் என்பதை அதன் நுழைவுப் பகுதிகளையும் பிற அமைப்புகளையும் வைத்துக் கூறலாம். இவைகள் மலையின் உச்சிப்பகுதியில் அமைந்துள்ளன. காலம் கி.பி. 16-17ஆம் நூற்றாண்டு எனலாம்.

## கோயில்கள் :

இங்கு மலையின் மீது வீரபத்திரர் கோயில் ஒன்றும், விஷ்ணு கோயில் ஒன்றும் உள்ளன. பெருமாள் கோயில் இடிபாடுகளுடன் உள்ளது. நுழைவு வாயில்கள் நன்கு அலங்கரிக்கப்பட்டுள்ளன. துவார பாலகர் சிற்பம், கொடிப் பெண்கள் ஆகியவை மிகவும் நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளன. தசாவதார நிகழ்ச்சிகளைத் தூண்களில் புடைப்புச் சிற்பங்களாகச் சித்தரித்துக் காட்டியுள்ளனர். இக்கோயில் கர்ப்பகிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என அமைந்துள்ளது.

வீரபத்திரர் கோயிலில் உள்ள வீரபத்திரர் சிற்பம் கால் பகுதியில் கமண்டல மாலை காட்டப்பட்டுள்ளது. நின்ற நிலையில் நான்கு கரங்களுடன் இச்சிற்பம் காட்டப்பட்டுள்ளது. மலையின் மேல் பகுதியில் இருந்து பாதி தொலைவு வந்தால் ஒரு சமதளப்பகுதியைக் காணலாம். அப்பகுதியில் அதிக அளவு பானை ஓடுகளும் செங்கல் துண்டுகளும், சுடுமண் பொருட்களான புகைப்பான்களும், சேகரிக்கப்பட்டன. இவற்றில் அலங்காரம் செய்யப்பட்ட புகைப்பான்கள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

## மலையடிவாரத்தில் அமைந்த கோயில் :

மலையடிவாரத்தில் ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் திருக்கோயில் உள்ளது. நின்ற நிலையில் விஷ்ணு நான்கு கரங்களுடன் சங்கு, சக்கரம், அபயம், வரதம் என்ற நிலையில் வடிக்கப்பட்டுள்ளார். கர்ப்ப கிரகத்தில் காணப்படும் இம்மூலவர் சிற்பம் நேர்த்தியானது.

இக்கோயில் விஜயநகரர் காலத்தில் புதுப்பித்து இருக்கலாம். அங்குக் காணப்படும் உதிரிச் சிற்பங்கள் மிகவும் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. சிதைந்த சிற்பங்கள் இளம் பச்சை நிற கற்கள் போன்று தோன்றுகின்றன.

கர்ப்பகிரகம், அர்த்த மண்டபம் போன்ற அமைப்புகளும், கோயில் மதில் சுவர்களும் இருந்துள்ளன. ஆனால் தற்பொழுது சிதைந்து காணப்படுகின்றன.

## சுற்றுப்புறக் கிராமங்கள் :

இப்பகுதியில் அமைந்த பிற கிராமங்கள் முத்தாலப்பள்ளம், பூமாலைக்கல், களிச்சலம்பள்ளம், மோரணஹள்ளி, குண்டாங்காடு ஆகும்.

## துர்க்கம் தொன்மை :

துர்க்கம் பகுதியைச் சுற்றி அமைந்துள்ள கிராமங்களில் புதிய கற்கால கைக்கோடரி போன்ற கல் ஆயுதங்களைத் தங்கள் குலதெய்வம் எனக் கூறி மக்கள் கிராம தேவதையாக வழிபட்டு வருவதைக் காணமுடிந்தது. துருக்கம் மலைப்பகுதியும் இதன் சுற்றுப்புறமும் புதிய கற்கால மனிதர்கள் வாழ்ந்துள்ளமையை இதன் மூலம் அறிய முடிகின்றது.

துருக்கம் பகுதியில் புதிய கற்காலம் தொடங்கி, விஜயநகரர் காலம் வரை வரலாற்றுத் தடயங்கள் கிடைத்துள்ளன. இங்குக் காணப்படும் நான்கு கால் மண்டபத்தில் பாலுணர்வைத் தூண்டும் சிற்பங்களும் உள்ளன. பொதுவாக வீரபத்திர துருக்கம் விஜயநகரர் காலத்திலும் பின்னர் பாளையக்காரர்கள் காலத்திலும் சிறப்புப் பெற்ற இடமாகத் திகழ்ந்துள்ளது.

## இலளிகம் :

தருமபுரியில் இருந்து 15 கி.மீ. தூரத்தில் தெற்கில் அமைந்த கிராமம் இலளிகம் ஆகும். நல்லம்பள்ளி, கோவிலூர் என்ற ஊர்களைக் கடந்து இவ்வூருக்குச் செல்ல வேண்டும். இவ்வூரில் புதிய கற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. பல்வேறு கோயில்கள் இவ்வூரில் உள்ளன. கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டு இவ்வூரில் தனிநபர் வீட்டிலிருந்து இந்நூல் ஆசிரியர்களில் ஒருவரான திரு. ச. கிருஷ்ணமூர்த்தி கண்டறிந்து தருமபுரி அருங்காட்சியகத்தில் கொண்டு வந்து சேர்த்துள்ளார். பாண அரசர் சேவகன் வயிரன் என்பவன் போரில் பங்கு கொண்டு இறந்த செய்தி இந்நடுகல்லில் உள்ளது.

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் இலக்குமி நாராயணப் பெருமாள் கோயில் இருந்ததாகவும் அது ஊருக்கு மேற்கில் இருந்ததாகவும் இக்கோயிலுக்கு இரண்டு நந்தா விளக்குகளை முந்நூற்றுவர் பணி செய்மக்கள் தானம் செய்ததாகவும் அறிகிறோம். அந்தக் கோயில் நாளடைவில் சிதைந்த காரணத்தினால் சென்னக்கேசவப் பெருமாள் கோயில் ஆக்கப்பட்டதாகக் கூறுவர். இக்கோயில் எதிரில் ஒரு கல்வெட்டுள்ள பலகை உள்ளது. ஆயிரத்து ஐந்நூற்றுவர், எழுநூற்றுவர், மூவாயிரவர் போன்று முந்நூற்றுவர் ஒரு கூட்டமாகும்.

கி.பி. 16ஆம் நூற்றாண்டில் புலியோடு போரிட்டு வீர மரணம் அடைந்த வீர சைவ மரபைச் சேர்ந்த நடுகல் வீரன் சிற்பம் இங்குள்ளது. வீரனில் கழுத்தில் இலிங்கம் காட்டப்பட்டுள்ளது. கி.பி. 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்தில்லா புலிக்குத்திப்பட்டான் நடுகல் சிற்பமும் அனுமார் சிற்பமும் இவ்வூரில் உள்ளன.

இவ்வூரில் சிவன் கோயிலுடன் குறிஞ்சியம்மன் என்ற கிராம தேவதைக் கோயில் உள்ளது. இங்குள்ள குன்று பழமையானது. இவ்வூரில் கிறித்துவ ஆலயம் ஒன்றும் சிறப்புடன் இயங்கி வருகின்றது.

ஊர் மண்டில் காணப்படும் இரண்டு பலகைக் கற்களில் சில எண்கள் வெட்டப்பட்டுள்ளன. தமிழ் எண்களில் கூடிய அவ்வெண்கள் புரியாத புதிராக உள்ளன. 502 இல் ஆரம்பித்து 5,

2, 5 என்ற முறையில் கூட்டி எழுதப்பட்டுள்ளது. நூறு, பத்து என்ற எண்களின் மேல் புள்ளி இடப்பட்டுள்ளன. 528 வரை எட்டு எண்கள் இக்கல்வெட்டில் காண்கிறோம். இறுதியில் குள்ளப்பசாமி படையாட்சி என்ற பெயர் உள்ளது. எண்களுக்கிடையே இ,மெ,ச என்ற எழுத்துக்கள் உள்ளன. மற்றொரு கல்வெட்டில் 1825 என்ற எண்ணில் பத்தைக் குறிக்கு மிடத்தில் புள்ளி இடப்பட்டுள்ளது. ஆயிரத்துக் குறிக்கும் இடத்திலும் புள்ளியிடப்பட்டுள்ளது. 2333 மற்றும் 3744 எண்களில் ஈற்றெண் களிலும் இரண்டாம் எண்களிலும் புள்ளிகள் உள்ளன. தொல்காப்பி யரும், நன்னூலாரும் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியிட வற்புறுத்தினரே ஒழிய தமிழ் எண்களுக்குக் குறிப்பிடவில்லை. ஆயின், இங்கு எண்களில் புள்ளிகள் இடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் வேறு எங்கும் தமிழ் எண்களுக்குப் புள்ளிகள் காணப்படவில்லை.

## மல்லப்பாடி

மல்லப்பாடி, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூர், தமிழக வரலாற்றில் ஓர் சிறப்பான இடத்தைப் பெற்றுத் திகழ்ந்து வருகின்றது. தமிழகத்திலேயே முதன் முதலாக வரலாற்றுக்கு முந்தைய கால பாறை ஓவியங்கள் இங்கு தான் கண்டறியப்பட்டது. இதன் அடிப்படையிலேயே பின்னர் தமிழகத்தின் பிற இடங்களிலும் வரலாற்றிற்கு முந்தைய கால ஓவியங்கள் இருப்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

பாறை ஓவியங்கள் மல்லப்பாடியின் கிழக்கே அமைந்துள்ள மலையில் காணப்படும் இயற்கையான கற்குகையின் பக்கவாட்டுப் பாறைகளில் உள்ளன. வெண்மை நிறத்தில் ஓவியங்களைக் காணலாம். குதிரையின் மீது செல்லும் வீரன், ஈட்டியை எறிவது போன்று காட்டப்பட்டுள்ளான். இது வேட்டையாடுதலைக் குறிக்கின்றது. இவ்வோவியங்கள் சுமார் 2500 ஆண்டுகட்கு முந்தையன ஆகும். கிருஷ்ணகிரியில் இருந்து பர்கூர் வழியாகச் சென்றால் பர்கூரில் இருந்து 3 கி.மீ. தொலைவில் இவ்வூரைச் சென்று அடையலாம். இவ்வூர் மல்லப்ப நாயக்கர் ஆட்சி காலத்தில் அம்மன்னன் பெயராலேயே அழைக்கப்பட்டிருந்தல் கூடும் எனச் சிலர் கருதுகின்றனர். மல்லர் என்ற இனத்தவருடனும் ஊர்ப்பெயரைத் தொடர்புபடுத்தலாம்.

## கோயில்கள் :

இங்குச் சிவன் கோயில் ஒன்றும், வைணவர் கோயில்கள் இரண்டும், ஆஞ்சிநேயர், விநாயகர், மாரியம்மன் ஆகிய கோயில் களும் உள்ளன. அவற்றில் சிவன் ஆலயமும், வைணவ ஆலயமும் காலத்தால் முந்தையவை. இவற்றில் வைணவக் கோயில்கள் இரண்டும் கற்றளிகள் ஆகும்.

## சிவன்கோயில் :

இக்கோயில் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. அதிட்டானம் மட்டும் கருங்கற்கலால் அமைக்கப்பட்டுள்ளது. குமுதப்படையில் கல்வெட்டுக்கள் உள்ளன. நந்தியும், விநாயகர் சிற்பமும் அருகில் உள்ள மரத்தடியில் வைக்கப்பட்டுள்ளன. கோயில் சிதல மடைந்துள்ளது.

## வைணவக் கோயில்கள் :

ஊரின் வடகிழக்கே ஓர் விஷ்ணு கோயிலும் தென்கிழக்கே மற்றொரு கோயிலும் காணப்படுகின்றன. இரண்டும் ஒரே அமைப்பில் கட்டப்பட்டுள்ளன. இவற்றை முறையே இராமசாமி கோயில், கிருஷ்ணசாமி கோயில் என்று அழைக்கின்றனர்.

## கிருஷ்ணசாமி கோயில் :

இக்கோயில் கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்ற அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. நான்கு தூண்கள் மண்டபத்தைத் தாங்குகின்றன. நான்கு தூண்கள் சுவர்களிலும் இணைக்கப் பட்டுள்ளன. மொத்தம் எட்டு தூண்கள் மகாமண்டபத்தை அலங்கரித்துத் தாங்கி நிற்கின்றன. கிழக்கே வாயிற்பகுதி காணப் படுகின்றது. வாயிலின் இருமருங்கிலும் கொடிப்பெண் சிற்பங்கள் அழகிய வேலைப்பாடுடன் காட்டப்பட்டுள்ளன. நரசிம்ம மூர்த்தியும், தேவியும் மற்றும் விஷ்ணுவின் அவதாரங்கள் பத்தும் அழகிய புடைப்புச் சிற்பங்களாகத் தூண்களில் திகழ்கின்றன. தூண்கள் எண்பட்டை வடிவில் அமைந்து அழகிய வேலைபாடுகளுடன் திகழ்கின்றன.

மகாமண்டபத்தை ஒட்டிய தூணில், வாலி, இராமானுஜர் காட்டப்பட்டுள்ளனர். அடுத்துச் சீதை, இராமர் மற்றும் ஆழ்வார்களும் காணப்படுகின்றனர். ஒரு தூணில் நரசிம்ம அவதாரம், இரண்யன் மோட்சம், மச்ச அவதாரம் பொறிக்கப்பட்டுள்ளன. நரசிம்மர் எட்டு கைகளுடன் உள்ளார். இராமர், சீதை, வாலி, மூவரின் உருவமும் காலிங்கநர்த்தன மூர்த்தியும் காட்டப்பட்டுள்ளனர். இங்குக் காட்டப்பட்ட அவதாரங்கள் அனைத்தும் எளிதில் புரிந்து கொள்ளும் நிலையில் சிறிய சிறிய புடைப்புச் சிற்பங்களாகத் தூண்களில் நான்கு புறமும் செதுக்கப்பட்டுள்ளன. வாமனர் அவதாரம் சிற்பமாக வடிக்கப் பட்டுள்ளது. கூர்ம அவதாரமும், அடுத்து காட்டப்பட்டுள்ளது. குழல் மூலம் இசை எழுப்பும் கிருஷ்ணர் உருவமும் சிறப்பானது. அனுமன், சீதையை அசோகவனத்தில் காணும் சிற்பமும் நரசிங்க மூர்த்தி சிற்பமும் இங்கே உள்ளன.

நாட்டியமாடும் மாதற் சிற்பமும், இசைக் கருவிகளை வாசிக்கும் இசை விற்பன்னர்களின் சிற்பங்களும் தெளிவாகக் காட்டப் பட்டுள்ளன. இசைக் கலைஞர்களைக் காட்டும்பொழுது அவர்கள் சவுரியுடன் காட்டப்பட்டுள்ளனர். குள்ளப்பூதங்களும் காட்டப் பட்டுள்ளன.

மண்குடத்தில் மத்தைவிட்டுத் தூணில் கட்டிய கயிற்றால் பெண்டிர் வெண்ணெய் எடுக்க வேண்டி அந்த குடத்தில் மோரைக் கடைவதும் அப்பெண்ணிடம் கண்ணன் சென்று இளமாதரின் கண்ணைப் பொத்திக் காலால் அவளது அங்கங்களின் மீது படச் செய்வதும் காணும்பொழுது ஆழ்வார்களின் பாசுரங்கள் நினைவுக்கு வருகின்றன.

இக்கோயிலின் அருகே சிதைந்த சிற்பங்கள் சில காணப்படுகின்றன. அவைகளில் ஒன்று அமர்ந்த நிலையில் இடக்காலைத் தொங்கவிட்ட நிலையில் கழுத்து முதல் கால் வரை ஆபரணங்களுடன், உள்ளது. கால் வரை ஆடை காட்டப்பட்டுள்ளது. கம்பீரமாக அமர்ந்து காட்சி தரும் இச்சிற்பம் இக்கோயிலை கட்டியவரின் திருவுருவச் சிற்பமாக இருக்க வாய்ப்பு உள்ளது. கோயிலின் விமானமும், கோபுரமும் தற்போது இல்லை. கோயிலின் வெளிப்பகுதியிலும் அழகிய வேலைப்பாடுகள் காண முடிகின்றன. இதன் கலை அமைப்பும், சிற்ப அமைதியும் பார்க்கும் போது விஜய நகர வேந்தர் காலத்தில் எழுப்பப்பட்டது என்று கூறலாம்.

## திருவுருவச் சிற்பங்கள் :

இக்கோயிலில் அமைந்துள்ள தூண்களில் திருவுருவச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அரசனும், அரசியும் இறைவனை வணங்குவது போன்று காட்டப்பட்டுள்ளனர். விஜயநகர, நாயக்க மன்னர்கள் காலத்தில்தாம் தாங்கள் எழுப்பிய கோயில்களில் மண்டபத் தூண்களில் அரசனும் அரசியும் இறைவனை வணங்குவது போன்று செதுக்குவர் எனலாம்.

## இராமசாமி கோயில் :

வடகிழக்கே அமைந்துள்ள இக்கோயில் அமைப்பும் முன்பு கூறிய கோயில் அமைப்பிலேயே கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், முகமண்டபம் என அமைந்துள்ளது. கிழக்கே வாயில் அமைப்பு கொண்டுள்ளது. இங்குக் காணப்படும் எட்டு தூண்களிலும் அதே போன்று அதிக அளவு வேலைபாடுகள் காணமுடிகின்றன. சிற்பங்கள் மிகவும் நேர்த்தி யாகவும், தெளிவாகவும் செதுக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள தூண்களில் பறவைகள், நின்ற நிலையில் வாமணர். நரசிம்மம், மச்சம், கூர்மம், நர்த்தன கிருஷ்ணன், ராமானுஜர் அன்னப்பட்சி என்று அழகிய சிற்பங்களை வடித்துக் காண்போருக்கு கலை இன்பத்தைச் சிற்பிகள் அளித்துள்ளனர்.

## திருவுருவச் சிற்பங்கள் :

இங்கும் அரசனும் அரசியும் நின்ற நிலையில் இறைவனை வணங்குவது போன்றும், தெற்குச் சுவரில் ஏழு பெண்களுடன் இறைவனை வணங்குவது போன்றும் காட்டப்பட்டுள்ளனர். முதல் இரண்டு தூண்களில் வடக்குப் பக்கம் நோக்கிய நிலையில் அரசனும் அரசியும் இறைவனை வணங்கும் நிலையில் திருவுருவச் சிற்பங்களைப் படைத்துள்ளனர்.

தெற்குப்புற வெளிச்சுவரில் இராமன் வனத்தை அழிப்பது போன்ற காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. அதாவது ஒரே அம்பால் வரிசையாக அமைந்த மராமரங்களை வீழ்த்துவது மிகவும் இயற்கையாக காணப்படுகின்றது. மரம் வீழ்ந்து கிடப்பது போன்ற தோற்றத்தை நம் கண் முன்னே இது காட்டி நிற்கின்றது.

இங்குக் காணப்படும் ஒவ்வொரு சிற்பமும் ஒவ்வோர் வகையில் சிறப்புப் பெறுகின்றது. இயற்கையான மலைக் குன்றுகளுக்கு அருகில் எழுப்பப்பட்டுள்ள இந்த இராமசாமி, கிருஷ்ணசாமி எனப்படும் கோயில்கள் இவ்வூருக்குப் பெருமை சேர்க்கும் எனலாம். இரண்டு கோயில்களிலும் கர்ப்பகிரகத்தில் மூலவர் சிற்பம் காணப்படவில்லை. அதனை அவ்வூர் அருகிலும் எங்கும் காண முடியவில்லை. இருப்பினும் விஷ்ணுவின் அவதாரங்கள் பற்றிய சிற்பங்களே அதிக அளவு காணப்படுவதால் இவை வைணவர்களுக்கு உரிய கோயில்கள் என்பது புலப்படுகின்றன.

இராமனின் பெருமைகளை உரைப்பதால் இதனை இராமசாமி கோயில் என்றும், அடுத்து கிருஷ்ணனின் சிறப்பை விளக்குவதால் அதனைக் கிருஷ்ணசாமி கோயில் என்றும் அழைக்கின்றனர். பிற சான்றுகள் தெளிவாக இல்லை. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நாயக்கர் கள் காலத்தில் பல கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் மல்லப்ப நாயக்கன் காலத்தில் இக்கோயில்கள் ஏற்பட்டிருக்கக் கூடும். நாயக்கர் கலைப்பாணியை ஒத்தே சிற்பங்களும் காண முடிவதால் இவைகளை 15-16ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதலாம். தமிழக அரசு தொல்லியல் துறையின் பராமரிக்கப்பட்ட சின்னங்களாக இவ்விரு கோயில்கள் இருந்துள்ளன.

## மோதூர்

மோதூர், தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்தில் அமைந்துள்ள ஓர் சிறிய கிராமம். தருமபுரி - கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையில் இருந்து 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள பைசுஅள்ளியில் இருந்து மேற்கே 5 கி.மீ. சென்றால் இவ்வூரை அடையலாம். சங்க இலக்கியங்களில் தகடூர் யாத்திரை, புறநானூறு, அகநானூறு போன்ற நூல்களில் மூதூர் என்ற ஊர் ஒன்று சுட்டப்படுகிறது. மூதூர் என்பது பழைமையான ஊர் என்று பொருள். மூதூரே தற்பொழுது மோதூர் என்று பெயர் மருவி வழங்கப்படுகிறது.

மோதூரைச் சுற்றிலும் தொன்மையான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்கள் பல உள்ளன. பிக்கனஹள்ளி, பனையகுளம், திருமலவாடி, பாகல்பட்டி, கோயிலூர், மாட்லாம்பட்டி, தொகரப்பள்ளி, மயிலாடும்பாறை, கங்காவரம், குட்டூர், வேடர்தட்டக்கல், சந்தூர் போன்ற இடங்கள் வரலாற்றிற்கு முந்தைய காலத்தைச் சார்ந்தவை ஆகும். மோதூர் கிராமத்தின் தென் மேற்கே சுமார் 100க்கும் மேற்பட்ட பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் (கல்வட்டங்கள்)

காணப்படுகின்றன. மேற்பரப்பு ஆய்வின்போது கைக்கோடரிகளும் பழைய கற்காலத்தைச் சார்ந்த கல் ஆயுதங்களும், கூர் தீட்டும் கற்கருவிகளும், பொடி செய்யும் அரைப்பான்களும், புதிய கற்கால மக்கள் மற்றும் பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய பானை ஓடுகளும் ஏராளமாக கிடைத்தன. இவற்றை ஆதாரமாக கொண்டு இப்பகுதியைத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் சிறப்பு ஆணையர் திரு. டி.எஸ். ஸ்ரீதர் இ.ஆ.ப. அவர்களின் தலைமையில் அகழாய்வாளர்கள் ஆய்வை மேற்கொண்டு பல அரிய செய்திகளை வரலாற்று உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளனர். (அகழாய்வில் ச. செல்வராசு மற்றும் தி. சுப்பிரமண்யன் ஈடுபட்டனர். ஒருங்கிணைப்பாளராக அகழாய்வாளர் வெ. இராமமூர்த்தி விளங்கினார். ஆய்வறிக்கை தயாரிப்பதில் ஸ்ரீகுமாரும் உதவியாக இருந்தார்.)

## மோதூர் அகழாய்வு :

மோதூரில் மூன்று மண்மேடுகள் அடையாளம் காணப்பட்டன. ஒன்று மன்று அமைந்த மேடு, இரண்டாவது சாம்பல் மேடு, மூன்றாவது கோட்டை மேடு. இம்மூன்று மேடுகள் மட்டுமின்றிப் புதைகுழிகள் நிரம்பக் காணப்பட்ட மோதூர் தென்மேற்கே காணப்பட்ட பெருங்கற்காலக் கல்வட்டங்களையும் 2004-2005 ஆம் ஆண்டு அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது.

## அகழ்வுக் குழிகள் :

பதினைந்து அகழ்வுக்குழிகள் மோதூரில் அகழ்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டன.

## முதல் மண்மேடு :

'மன்டு' என்று இன்றழைக்கப்படும் இந்த மண்மேட்டில் 11 அகழ்வுக்குழிகள் அகழ்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு குழியும் இயற்கை மண் காணப்படும் வரை ஆய்வைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. கீழ் மண்மேட்டில் தான் அதிக அளவில் புதிய கற்கால மக்களால் பயன்படுத்தப்பட்ட கைக்கோடரிகள், உலக்கை, அரைப்பான்கள், கூர்தீட்டும் கருவிகள், வட்டுசில்லுகள், கல் உருளை, போன்ற கல் ஆயுதங்கள் ஏராளமானவை கிடைத்தன. இங்கு மூன்று மண் அடுக்குகள் காணப்பட்டன. முதல் இரண்டு மண்

அடுக்குகள் பெருங்கற்காலத்தையும் மூன்றாவது மண் அடுக்கு புதிய கற்காலத்தையும் சார்ந்தவைகளாகக் கருதுகிறோம்.

இங்குப் புதிய கற்காலத்தைச் சார்ந்த சாம்பல் நிற மட்பாண்டங்கள், மஞ்சள் பழுப்பு நிற மட்பாண்டங்கள், சிவப்புநிறச் சொரசொரப்பான மட்பாண்டங்கள் ஆகியவை காணப்பட்டன. இவற்றுடன் தாய்த் தெய்வச் சுடுமண் பொம்மை ஒன்றும், செம்பு வளையல்களும் இங்குக் கிடைத்துள்ளன.

தாய்த் தெய்வச் சுடுமண் பொம்மை ஒன்று கிடைத்துள்ளது. பெருங்கற்கால மக்கள் வரைந்த பாறை ஓவியங்களில் உள்ள உருவங்களில் கூர்மையான மூக்கும், தலைப்பகுதியும் இருப்பதைப் போல் காணப்படுவதால் இந்தச் சுடுமண் பொம்மை, காலத்தால் முற்பட்டதாகக் கருதுவர்.

## இரண்டாவது மண்மேடு :

சாம்பல் மேட்டில் இரண்டு அகழ்வுக் குழிகள் அகழப்பட்டன. இவற்றில் நான்கு மண் அடுக்குகள் காணப்பட்டன. இங்கே கி.பி. 17ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 300 வரையிலான கலைப் பொருட்களாகச் சுடுமண் புகைப்பான், காதணிகள், வட்டுகள், நூற்புக் கருவிகள், சங்கு வளையல்கள், சுடுமண் பாவைகள் நன்கு அலங்கரிக்கப்பட்ட நிலையில் கிடைத்துள்ளன. ஒரு சுடுமண் பாவை, ஜடா மகுடமும், நீண்ட காதுகளையும், அவற்றில் காதணி களையும், கழுத்தணிகளையும் கொண்டுள்ளது. ஆடையின்றிக் காட்டப்பட்ட இந்த பெண் உருவம் தாய் தெய்வமாக இருக்கக் கூடும். இந்த மண்மேட்டில் வரலாற்றுக் காலம் துவக்கம் வரையிலான தொல்பொருட்களும், பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. இந்த அகழ்வுக் குழியில் கருப்பு சிவப்புப் பானை ஓடுகள் காணப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்க ஒன்று ஆகும்.

## மூன்றாவது மண்மேடு :

கோட்டை மேட்டுப் பகுதியில் ஒரே ஒரு அகழ்வுக்குழி போடப்பட்டது. இங்கே பெருங்கற்காலத்தைச் சார்ந்த மட்கலன்களும், கைக்கோடரிகளும் மேலும் கல் ஆயுதங்களும், கிடைத்துள்ளன. இங்கு மூன்று மண் அடுக்குகளே காணப்பட்டன. இந்த மண்மேடு பெருங்கற்காலப் பண்பாட்டு காலம் வரையே, தடயங்களைத் தாங்கி யுள்ளதை அறிய முடிந்தது.

## பெருங்கற்காலப் புதைகுழிகள் :

இங்கு மூன்று இடங்களில் குழிகள் வெட்டப்பட்டன. இங்கே கல்வட்டங்கள் கலைக்கப்படாமல் உள்ளன. மையப்பகுதியை உள்ளூர் மக்கள் சிதைத்துள்ளனர். இவற்றில் ஈமப்பேழை ஒன்று சிதைந்து சிறு சிறு துண்டுகளாகச் சேகரிக்கப்பட்டன. தவிர 6 கல்மணிகள் சேகரிக்கப்பட்டன. இவை பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தைச் சார்ந்தவை என்பதில் ஐயமில்லை. பெரும்பான்மையான பெருங்கற்காலப் பண்பாட்டு நினைவிடங்களில் மேற்கொண்ட அகழாய்வில் ஆயிரக்கணக்கான கல்மணிகள் கிடைத்துள்ளதை போன்று மணிகள் இங்கும் கிடைத்துள்ளன. சிறப்பு ஆணையர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர் ஒப்பிட்டு ஆய்வு செய்யுமாறு குறிப்பிடுகிறார்

மோதூர் அகழாய்வு மூலம் தருமபுரி மாவட்டத்தில் மக்கள் சுமார் 5000 ஆண்டுகட்கு முன்பிருந்து வாழ்ந்து வந்துள்ளனர் என்பது உறுதியாகிறது. இவ்வகழாய்வு மூன்று பண்பாட்டுக் கூறுகளை கணித்து முடிவு செய்கின்றது. முதற்பண்பாட்டு காலம் கி.மு. 3000 முதல் 1000 கி.மு. வரை புதிய கற்காலம் எனலாம். இரண்டாம் பண்பாட்டுக்காலம் கி.மு. 1000 முதல் கி.மு. 300 வரை பெருங்கற்காலம் எனலாம். மூன்றாவது பண்பாட்டுக்காலம் கி.பி. 300 முதல் கி.பி. 400 வரை வரலாற்றுக் காலம் எனலாம்.

**உதவிய நூல்கள் :**

1. Dr. Narasimhaia. B — 1980 Neolithic and megalithic cultures in Tamil Nadu Delhi Sundeep prakasam.
2. Dr. Allachin. F.R. — Piklihal Excavation Andhra pradesh government Achalycal series 1960
3. Prof. Seshadri. M — Report on the excavation at T. Narsipur, government of Mysore 1971
4. Dr. K. Rajan — Excavation at mayiladum paarai Tamilnadu 2004 Tamil University. Thanjavoor.

# 19. தருமபுரி மாவட்ட செப்பேடுகள்

தருமபுரி மாவட்டத்தில் கிடைத்த இராயக்கோட்டைச் செப்பேடுத் தொகுதி தொன்மை வாய்ந்தது. இச்செப்பேட்டினை அறிஞர்கள் விரிவாக ஆய்ந்துள்ளனர். பல்லவர் வரலாற்றிற்குப் பெரிதும் உதவியாக இச்செப்பேடு உள்ளது.[1] மேலும் சில பட்டயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியருகே மலையூர் என்ற ஊரில் வாழும் ஏகாம்பரக் கவுண்டரிடம் உள்ள பட்டயமும் கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக் கோட்டை வட்டம் அஞ்செட்டியருகில் உள்ள சித்தாண்டபுரத்தில் உள்ள செப்பேடும் ஒரே செய்தியைக் கூறும் இருபிரதிகள் எனலாம். ஓலைச் சுவடியாகப் பென்னாகரம் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் நஞ்சப்பனிடம் உள்ளது. வன்னியர் வீரத்தைப் பேசும் இச்செப்பேடு 110 வரிகளைக் கொண்டுள்ளது. சித்தாண்டபுரம் செப்பேட்டை இந்நூல் ஆசிரியருள் ஒருவரான ச.கிருஷ்ணமூர்த்தி விரிவாக ஆய்ந்துள்ளார்.[2]

சிறுதலைப்பூண்டியைச் சேர்ந்த உலகளந்த கவுண்டனும் ஏகாம்பர கவுண்டனும் மேற்கு நோக்கிச் சென்றபோது சிங்கிரிப் பட்டியில் (சிங்காரப் பேட்டை) வேடர்கள் நூறுபேர் மறித்தபோது அவர்களில் நால்வரைக் கொன்று விட்டு இறுதியாக ஆலம்பாடி வந்தனர். ஆலம்பாடியைச் சேர்ந்த இறுப்பாளி நாயக்கன் இவர்களை ஆதரித்தான். நாயக்கன் பொருட்டு நாயக்கன் எதிரி மரியண்ணனுடன் காணுகாம்பள்ளியில் போரிட்டு 12 பேரைக் கொன்றார்கள்.

சிறிது காலத்தில் சில நாயக்கர்கள் இவர்களிடம் வரி கேட்கவே சச்சரவு மூண்டது. நாயக்கர்கள் ஆடு, மாடு கொள்ளையடித்தார்கள். எனவே கவுண்டர்கள் 10 பேரைக் கொன்றார்கள். வழக்கு ஜெகதேவ ராயனிடம் சென்றது. இராயர் வேடரிடம் 100 பணம் அபராதமாகப்

பெற்றுக் கொண்டு கவுண்டர்களுக்கு நாட்டாண்மையாகச் சில ஊர்களை வழங்கினார். வலங்கையருக்கும் கவுண்டர்களுக்கும் பிறகு சண்டை நடந்தது. வழக்கு மைசூர் அரசரிடம் சென்றது. பிரமாச்சிக் கவுண்டன், கவுண்டர் சார்பாக வழக்கிற்குச் சென்றான். கவுண்டருக்குச் சார்பாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இபுறாம் சாய்பு அவர்கள் குழந்தைக் கவுண்டனுக்குப் பட்டயம் எழுதித்தருகிறார். வெவ்வேறு காலங்களில் மூன்று கவுண்டர்களுக்குச் செப்பேடுகள் வழங்கிய விபரம் இந்தச் செப்பேட்டில் உள்ளது.

## தீர்த்தகிரி குலாளர்ச் செப்பேடு

காவேரிப்பட்டணம் குலாளர் சமூகத்திடம் குயவர் குறித்த இருசெப்பேடுகள் உள்ளன. கி.பி. 15ஆம் நூற்றாண்டில் திருநீலகண்டர் பெயரில் மடம் ஏற்படுத்துகின்றனர். மடத்தில் திருநீலகண்டரைத் தாபித்து இராமலிங்கப் பண்டாரத்தை நியமிக்கின்றனர். தீர்த்தமலையின் சிறப்பு இதில் ஒதப்படுகிறது.

மற்றோர் செப்பேடு பிரபுடதேவராயர் காலத்தில் வேட்கோவ ராகிய குயவர்களுக்கு வரியில்லை என்பது குறித்த செப்பேடு ஆகும். மயிலாப்பூரில் இருந்து வரிவசூலிக்க வந்த வீரமுட்டி வேட்கோவர் சோலை செட்டி வீட்டில் இரண்டு பணம் வரியும் மூன்று வேளை விருந்தும் கேட்டான். சோலை செட்டி மறுத்தான். சோலை செட்டியின் பெண் சாதுர்யமாய் நடந்து வரிவிலக்குப் பெறுகிறாள். புலவர் கூத்தாடி உட்படப் பலர் வரிவிலக்குப் பெறுகின்றனர். (தமிழ்நாட்டுச் செப்பேடுகள். 2003 ச. கிருஷ்ணமூர்த்தி)

## நாயக்கன்கொட்டாய் பஞ்ச கம்மாளர் செப்பேடு

தருமபுரி வட்டம் நாயக்கன் கொட்டாய் தங்கவேல் ஆசாரியிடம் 10.02.1671இல் வெளியிடப்பட்ட செப்பேடு உள்ளது. தீர்த்தகிரியில் பஞ்சகம்மாளர் மடம் ஒன்றை ஏற்படுத்தியதுடன் மடாதிபதியையும் நியமிக்கின்றனர். ஆசாரிமார்கள் ஒப்பமிட்டுள்ளார்கள். (ஆவணம் இதழ் ஜூலை 2000) மேலும் சில செப்பேடுகளை ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

---

*அடிக்குறிப்பு : 1. பல்லவர் செப்பேடுகள் 30-உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தரமணி. சென்னை.*

*2. தமிழ்நாட்டுச் செப்பேடுகள் தொகுதி-2 ச.கிருஷ்ணமூர்த்தி, மெய்யப்பன் தமிழாய்வகம் சிதம்பரம் 2002*

# 20. தகடூரை ஆட்சிபுரிந்த மன்னர்களின் பட்டியல்

| வ. எண் | அரசன் பெயர் | | அரச மரபு மற்றும் காலம் |
|---|---|---|---|
| 1. | அதியமான் நெடுமிடல் | | சங்ககாலம் |
| 2. | அதியமான் நெடுமான் அஞ்சி | | சங்ககாலம் |
| 3. | அதியமான் பொகுட்டெழினி | | சங்ககாலம் |
| 4. | பெருஞ்சேரல் இரும்பொறை - சேரன் | | சங்ககாலம் |
| 5. | கோச்செங்கணான் - சோழன் | | சங்ககாலம் |
| 6. | களப்பிரர் | | சங்க காலத்திற்குப் பிறகு ஆண்டனர் |
| 7. | சிம்மவர்மன் | | பல்லவர் |
| 8. | சிம்மவிஷ்ணு | | பல்லவர் |
| 9. | மகேந்திரவர்மன் | | பல்லவர் |
| 10. | நரசிம்மவர்மன் | | பல்லவர் |
| 11. | ஈஸ்வரவர்மன் | | பல்லவர் |
| 12. | பொன்மாந்தனார் | | பல்லவர் சிற்றரசர் |
| 13. | முதலாம் சிவமாறன் கி.பி. 670-715 | | கங்கர் |
| 14. | ஸ்ரீபுருசன் கி.பி. 726-788 | | கங்கர் |
| 15. | கட்டானை பருமன் 8ஆம் நூற்றாண்டு | | கங்கர் |
| 16. | இரண்டாம் சிவமாறன் | கி.பி. 788-814 | கங்கர் |
| 17. | இரண்டாம் மாறசிம்மன் | | கங்கர் |
| 18. | நுளம்ப மகேந்திரன் | | நுளம்பர் |
| 19. | அய்யப்பதேவன் | 9ஆம் நூற் | நுளம்பர் |

| | | | |
|---|---|---|---|
| 20. | அன்னிகன் | 10ஆம் நூற் | நுளம்பர் |
| 21. | இருள்சோரன் - நுளம்பர் | 10ஆம் நூற் | நுளம்பர் |
| 22. | கந்தவாணதியரையர் சிற்றரசர் | 10ஆம் நூற் | |
| 23. | அரிமறை பருமர் | 8-9ஆம் நூற் | பாணர் |
| 24. | முதலாம் இராசராசன் | 985-1014 | சோழர் |
| 25. | முதலாம் இராசேந்திரன் | 1012-1036 | சோழர் |
| 26. | முதலாம் இராசாதிராசன் | 11ஆம் நூற் | சோழர் |
| 27. | வீரராஜேந்திரன் | 11ஆம் நூற் | சோழர் |
| 28. | முதலாம் குலோத்துங்கன் | 11ஆம் நூற் | சோழர் |
| 29. | விக்கிரம சோழன் | 12ஆம் நூற் | சோழர் |
| 30. | இரண்டாம் குலோத்துங்கன் | 12ஆம் நூற் | சோழர் |
| 31. | மூன்றாம் குலோத்துங்கன் | 12-13ஆம் நூற் | சோழர் |
| 32. | மூன்றாம் இராசராசன் | 13ஆம் நூற் | சோழர் |
| 33. | மூன்றாம் ராஜேந்திரன் | 13ஆம் நூற் | சோழர் |
| 34. | இராசராச அதியமான் | 13ஆம் நூற் | அதியர் மரபு குறுநில மன்னர் |
| 35. | விடுகாதழகிய பெருமாள் | 13ஆம் நூற் | அதியர் மரபு குறுநில மன்னர் |
| 36. | கற்கடக மாராய மரபினர் | 10ஆம் நூற் | நுளம்பர் குறுநில மன்னர் |
| 37. | குலோத்துங்க சோழ தகடாதராயன் | 13ஆம் நூற் | அதியமான் மரபினர் |
| 38. | இரண்டாம் வீரநரசிம்மன் | 13ஆம் நூற் | போசளர் |
| 39. | வீரசோமேஸ்வரன் | 13ஆம் நூற் | போசளர் |
| 40. | வீரராமநாதன் | 13ஆம் நூற் | போசளர் |
| 41. | வீரவிசுவநாதன் | 13-14ஆம் நூற் | போசளர் |
| 42. | மூன்றாம் வல்லாளன் | 14ஆம் நூற் | போசளர் |
| 43. | திரிபுவன மல்ல பூர்வாதிராயன் | 10ஆம் நூற் | அத்திமல்லன் குறுநில மன்னன் |
| 44. | அத்திமல்லன் மகன் தர்மத்தாழ்வார் | 10ஆம் நூற் | குறுநில மன்னன் |
| 45. | தர்மத்தாழ்வார் மகன் அத்திமல்லன் | 10ஆம் நூற் | குறுநில மன்னன் |

| | | | |
|---|---|---|---|
| 46. | மல்லபூர்வாதிராசன் பூமிநாயகன் | 10ஆம் நூற் | குறுநில மன்னன் |
| 47. | முதலாம் புக்கன் | 14ஆம் நூற் | விஜயநகர மன்னர் |
| 48. | கம்பண்ணன் | 14ஆம் நூற் | விஜயநகர மன்னர் |
| 49. | ஜொம்மண்ண உடையார் | 15ஆம் நூற் | விஜயநகர மன்னர் |
| 50. | இரண்டாம் புக்கன் | 14ஆம் நூற் | விஜயநகர மன்னர் |
| 51. | முதலாம் தேவராயன் | 15ஆம் நூற் | விஜயநகர மன்னர் |
| 52. | விஜய பூபதிராயர் | 15ஆம் நூற் | விஜயநகர மன்னர் |
| 53. | இரண்டாம் தேவராயர் | 15ஆம் நூற் | விஜயநகர மன்னர் |
| 54. | மல்லிகார்ச்சுனா | 15ஆம் நூற் | விஜயநகர மன்னர் |
| 55. | இரண்டாம் விருபாட்சன் | 15ஆம் நூற் | விஜயநகர மன்னர் |
| 56. | இம்மடி நரசிம்மன் | 16ஆம் நூற் | விஜயநகர மன்னர் |
| 57. | கிருஷ்ண தேவராயர் | 16ஆம் நூற் | விஜயநகர மன்னர் |
| 58. | அச்சுதராயர் | 16ஆம் நூற் | விஜயநகர மன்னர் |
| 59. | சதாசிவராயர் | 16ஆம் நூற் | விஜயநகர மன்னர் |
| 60. | முக்கண்ண உடையார் | 16ஆம் நூற் | விஜயநகர மன்னர் |
| | ஜெகதேவராயன் | 17ஆம் நூற் | சிற்றரசர்கள் |
| | மைசூர் ஹைதர் அலி | 18ஆம் நூற் | மைசூர் அரசு |
| | மைசூர் திப்புசுல்தான் | 18ஆம் நூற் | மைசூர் அரசு |
| | மராட்டியர் | 18-19ஆம் நூற் | சிவாஜி மரபினர் |
| | ஆங்கிலேயர் | 18ஆம் நூற் முதல் 14.8.1947 வரை | பிரிட்டிஷ் பேரரசு |

# 21. தருமபுரி அகழ்வைப்பக ஓலைச்சுவடிகளின் பட்டியல்

**த**மிழகத்தில் தனிநபர்களிடமும், கோயில் மற்றும் மடங்களிலும் உள்ள ஓலைச்சுவடிகளைக் கண்டறிந்து பாதுகாக்க வேண்டி அரசு தொல்லியல் அலுவலர்கள் எண்மரைப் பணியில் அமர்த்தியது. அவ்வகையில் தருமபுரியில் பணியாற்றிய தொல்லியல் அலுவலர் திரு. சாந்தலிங்கம் மற்றும் திரு. ச. கிருஷ்ணமூர்த்தி இருவரும் 200க்கும் மேற்பட்ட சுவடிகளைச் சேகரித்துள்ளார்கள். அச்சில் வராத சில ஓலைச்சுவடிகளைத் திரு. ச. கிருஷ்ணமூர்த்தி நகல் செய்துள்ளார். இரண்டு நாடகங்களை அவர் அச்சிட்டுள்ளார். இன்னும் அச்சிடப்படாத சுவடிகள் சில உள்ளன. இங்குள்ள சுவடிகள் குறித்த பட்டியலை ஆய்வாளர்களுக்காக இணைத்துள்ளோம்.

| | | |
|---|---|---|
| 1. சித்ராங்கதை சரித்திர நாடகம் | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 2. வன்னியபுராணம் | - | இருபிரதிகள் அச்சிடப்பட்டுள்ளது |
| 3. சுப்பிரமணியர் பேரில் அவினாசி பத்து | - | சில தனிப்பாடல்கள் அச்சிடப்படவில்லை |
| 4. கருவூர் நாயனார்பூசைவிதி | - | அச்சிட்டது |
| 5. ரதிமன்மதன் தர்க்கம் | - | அச்சிட்டது |
| 6. தெய்வயானை மேல் தனிப்பாடல்கள் | - | அச்சிடப்படவில்லை |
| 7. நீதிநூல் - 2 பிரதி | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 8. முருகன்காப்பு | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 9. மகிடாசுர வதம் | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 10. மருத்துவ சுவடிகள் - பல சுவடிகள் | - | அச்சிடப்படவில்லை |
| 11. புலந்திரன் அல்லி அரசாணிக்கதை - பலசுவடி | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 12. பாரதம் - பலசுவடிகள் | - | சில அச்சிடப்பட்டுள்ளன |
| 13. நமசிவாயமாலை | - | அச்சிடப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| 14. சிதம்பர பூசை முறை | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 15. தேரூர்ந்த நாடகம் | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 16. முருகன் காப்பு | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 17. தெலுங்குச் சுவடிகள் - பல சுவடிகள் | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 18. கண்ணன் பாகவதக் கதைகள் | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 19. சிறுத்தொண்டர் சிந்து | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 20. அண்ணமார் கதை | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 21. பள்ளு (சிதலம்) | - | அச்சிடப்படவில்லை |
| 22. மதுரை வீரன் கதை | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 23. அரிச்சந்திரன் கதை - பல பிரதிகள் | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 24. நசிகேது புராணம் | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 25. அருணாசலத்துறை முருகன் பாடல் | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 26. திருவேங்கட சதகம் 2 பிரதி | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 27. சென்னிமலை முருகர் விருத்தம் | - | அச்சிட்ட விவரம் தெரியவில்லை |
| 28. விக்கிரமாதித்தன் கதை பல பிரதிகள் | - | சில அச்சிடப்பட்டுள்ளன |
| 29. இராமாயணம் - பல பிரதிகள் | - | சில அச்சிடப்பட்டுள்ளன |
| 30. குழந்தைவேலன் பேரில் பள்ளு | - | அச்சிட்ட விவரம் தெரியவில்லை |
| 31. வையப்பமலை குமரர் மேல்தாய் மகள் ஏசல் | - | அச்சிட்ட விவரம் தெரியவில்லை |
| 32. நல்லய்யன் பள்ளு | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 33. நயினார் மலை நாதர் பாடல் | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 34. அத்தனூரம்மன் மேல் பாடல் | - | அச்சிட்ட விவரம் தெரியவில்லை |
| 35. கோவிந்த துறை மேல் பாடல் | - | அச்சிட்ட விவரம் தெரியவில்லை |
| 36. அர்த்தநாரீஸ்வரர் மேல் பதம் | - | அச்சிட்ட விவரம் தெரியவில்லை |
| 37. திருச்செங்கோட்டுப்பள்ளு | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 38. கூளப்ப நாய்க்கன் காதல் | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 39. பருவத நாயகி பேரில் விருத்தம் | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 40. மதுராபுரி நாயகி பேரில் விருத்தம் | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 41. பொன்காளியம்மன் மேல் பாடல் | - | அச்சிடப்படவில்லை |
| 42. பழனி வேலர் மேல் பாடல் | - | அச்சிடப்படவில்லை |

43. தண்டலையார் விருத்தம் - அச்சிடப்பட்டுள்ளது
44. தில்லைச் சிதம்பரம் மேல் விருத்தம் - அச்சிடப்பட்டுள்ளது
45. கருணையம்மன் பேரில் கீர்த்தனை - அச்சிடப்படவில்லை
46. அழகேசன் மேல் பாடல் - அச்சிடப்படவில்லை
47. சபாபதி மாலை - அச்சிடப்படவில்லை
48. சமுத்திரராசன் வனவிலங்கு சண்டை - அச்சிடப்படவில்லை
49. தனஞ்செயன் நாடகம் - அச்சிடப்பட்டுள்ளது
50. கபிலைக்கதை - 2 பிரதிகள் - அச்சிடப்பட்டுள்ளது
51. நளன் கதை - அச்சிடப்பட்டுள்ளது
52. ராஜகோபால் மாலை - அச்சிடப்படவில்லை
53. மன்மத தகனம் - அச்சிடப்பட்டுள்ளது
54. ஒயில்கும்மி - அச்சிடப்படவில்லை
55. சிந்தாமணிக் கதை - அச்சிடப்பட்டுள்ளது
56. அபிரஞ்சி மாலை - அச்சிடப்பட்டுள்ளது
57. அருணாசலப் புராணம் - பல பிரதிகள் - அச்சிடப்பட்டுள்ளது
58. திருப்புகழ் - அச்சிடப்பட்டுள்ளது
59. ருக்மாங்கதராசன் கதை - அச்சிடப்பட்டுள்ளது
60. வள்ளித் திருமணம் - அச்சிடப்பட்ட விவரம் தெரியவில்லை
61. சோனகிரி இறைவன் மேல் அந்தாதி - அச்சிடப்பட்ட விவரம் தெரியவில்லை
62. சிவபுராணம் - அச்சிடப்பட்டுள்ளது
63. மார்க்கண்டேய புராணம் - அச்சிடப்பட்டுள்ளது
64. நல்ல தங்காள் கதை - அச்சிடப்பட்டுள்ளது
65. மனுநீதி கதை - அச்சிடப்பட்டுள்ளது
66. திருவிளையாடல் புராணம் - அச்சிடப்பட்டுள்ளது
67. அல்லி அரசாணி மாலை - அச்சிடப்பட்டுள்ளது
68. நள மகாராசன் கதை பல பிரதிகள் - அச்சிடப்பட்டுள்ளது
69. கந்தபுராணம் பல பிரதிகள் - அச்சிடப்பட்டுள்ளது
70. பாச்சலூர் பற்று - அச்சிடப்பட்டுள்ளது
71. நூறு தெய்வங்கள் மேல் பாடல் - அச்சிடப்படவில்லை
72. துரோபதை கதை கும்மிட்டு - அச்சிட்ட விவரம் தெரியவில்லை
73. குமரேச சதகம் - அச்சிடப்பட்டுள்ளது

| | | |
|---|---|---|
| 74. பழனியாண்டவர் காதல் | - | இன்னும் அச்சிடப்படவில்லை சுவடி நகல் செய்யப்பட்டுள்ளது |
| 75. பாரத அம்மானை | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 76. நாராயணர் பேரில் விருத்தம் | - | அச்சிடப்படவில்லை |
| ஆதிமூலர் பேரில் விருத்தம் | - | அச்சிடப்படவில்லை |
| பெருமாள் பேரில் விருத்தம் | - | அச்சிடப்படவில்லை |
| 77. பதிபசுபாச தெரிசனம் | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 78. மதிகெட்டான் நாடகம் | - | அச்சிடப்பட்டுள்ளது பதிப்பாசிரியர் இந்நூலாசிரியர் ச. கிருஷ்ணமூர்த்தி |
| 79. செப்பேட்டின் ஓலைப்பிரதி கலிதீர்த்தவாத்தியாருக்கு மகமை | - | அச்சிடப்பட்டுள்ளது ச. கிருஷ்ணமூர்த்தி |
| 80. ஊஞ்சல் பாட்டு | - | அச்சிடப்படவில்லை |
| 81. மனையடி சாஸ்திரம் | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 82. அர்ச்சுணன் தபசு பல பிரதிகள் | - | சில அச்சிடப்பட்டுள்ளன |
| 83. வள்ளியம்மை நாடகம் நாராயணப்பிள்ளை பாடியது | - | அச்சிடப்படவில்லை |
| 84. பிரகலாதன் சரித்திரம் | - | அச்சிடப்பட்டுள்ளது பதிப்பாசிரியர் ச. கிருஷ்ணமூர்த்தி |
| 85. அவ்வையார் பாடல்கள் | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 86. தீர்த்தமலைப் புராணம் | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 87. பிரமோத்திர காண்டம் | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 88. கோயில் புராணம் (சிதம்பரம் புராணம்) | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 89. கொக்கோகம் | - | அச்சிடப்பட்டுள்ளது |
| 90. இராமாயணம், அஷ்டகானம் | - | தச்சூர் கருணிகர் தாண்டவராயர் பாடியது அச்சிடப்படவில்லை |
| 91. கிருஷ்ணன் நாடகம் | - | அச்சிடப்படவில்லை, விரைவில் அச்சிடப் படவுள்ளது. |

284 சுவடிகள் சேகரிக்கப்பட்டு அவைகள் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலும் தருமபுரி அகழ்வைப்பகத்திலும் உள்ளன. இப்பட்டியல் தவிர மேலும் பல ஓலைச் சுவடிகளைத் தற்போது தருமபுரியில் பணியாற்றிவரும் ச.செல்வராசு சேகரித்துள்ளார். தற்போது அகழ்வைப்பகத்தில் 76 சுவடிகள் உள்ளன.

# 22. தருமபுரி மாவட்ட விடுதலைப் போராட்ட வீரர்களின் பட்டியல்

| பெயர் | ஊர் |
|---|---|
| தியாகி. சுப்பிரமணியசிவா | பாப்பாரப்பட்டி |
| தியாகி. தீர்த்தகிரி முதலியார் | அன்னசாகரம் |
| திரு. சாது சீனிவாச மூர்த்தி | மாரண்டஹள்ளி |
| தேவே. கௌடு | பாராந்தூர் |
| அய்யம் பெருமாள் | பாரதிபுரம் |
| திரு. எம்.எஸ். முத்துக்கருப்பன் | பாப்பாரப்பட்டி |
| திரு. ஐ.எம்.பி. ஆறுமுகம் | பாப்பாரப்பட்டி |
| திரு. எஸ். நாகராஜ மணியக்காரர் | காவேரிபட்டிணம் |
| திரு. புலவர் கந்தசாமி | பாப்பராப்பட்டி |
| திரு. நடேச செட்டியார் | தருமபுரி |
| திரு. முனியப்பச் செட்டியார் | கிருஷ்ணகிரி |
| திரு. டி.ஏ. சுப்ரமணியம் | தருமபுரி |
| திரு. ஈ.எஸ். கந்தசாமி | பாப்பாரப்பட்டி |
| திரு. வெங்கடாசல உடையார் | மாரண்டஹள்ளி |
| திரு. தொட்டப்பா | ஓசூர் |
| திரு. பாஷாசாகிப் | ஓசூர் |
| திரு. டி. தியாகராசன் | தருமபுரி |

## மூதறிஞர் இராஜாஜி

சக்கரவர்த்தி எஸ். இராஜகோபாலாச்சாரி அவர்கள் தர்மபுரி மாவட்டம் ஈன்ற முத்து. இவர் இந்திய நாட்டிற்கே பெருமை சேர்த்தவர். அத்தகைய பெருந்தகையனார் ஓசூரில் இருந்து சூளகிரி செல்லும் சாலையில் வடக்கே அமைந்துள்ள தொரப்பள்ளி எனும் சிறிய கிராமத்தில் பிறந்தவர். இவரை இராஜாஜி என மக்கள் அழைத்தனர். உப்பு சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டு போராட்டம் நடத்தியவர். காந்தியுடன் இணைந்து பல போராட்டங்களில் முன்னின்று நடத்தியவர். சுதந்திரம் அடையுமுன்னும் அடைந்த பின்பும் தமிழகத்தின் முதல் அமைச்சராக இருந்தவர்.

இந்தியாவின் இறுதி வைசிராயிடம் இருந்து நாட்டைப் பெற்று கடைசிக் கவர்னர் ஜெனரலாகப் பணிபுரிந்தவர்.

இந்திய அரசியல் சட்டவடிவம் கொடுத்ததில் இவரது பங்கும் இன்றியமையாத ஒன்று. இவர் பல்வேறு திறமைகளைத் தன்னகத்தே கொண்டவர். காங்கிரஸ் இயக்கத்தில் இருந்து வந்துபின்னர் சுதந்திர இயக்கத்தைத் துவக்கி நடத்தி வந்தார். ஆங்கிலத்திலும் தமிழிலும் பல நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியவர். இவருடைய வியாசர் விருந்து பல மறுபதிப்புகளைக் கொண்ட நூலாகும்.

இவர் பிறந்த தொரப்பள்ளி வீட்டை நினைவு இடமாக அரசு மாற்றியுள்ளது. அவரது எழுத்துப் படைப்புகளையும், அவர் ஆற்றிய தேசிய செயல்களையும், பங்கேற்ற போராட்டங்களையும் பிற தலைவர்களுடன் கலந்துரையாடியவற்றையும் தொகுத்துக் காட்சிக் கூடமாக அமைத்து அரசு பாதுகாத்து வருகிறது. சென்னைக் காந்தி மண்டபம் அருகில் இராஜாஜிக்குரிய நினைவு மண்டபம் உள்ளது.

## தியாகி. சுப்பிரமணிய சிவா

சுதந்திர போராட்ட வீரர் தியாகி சுப்பிரமணிய சிவா தன் இறுதிநாட்களைப் பாப்பாரப்பட்டியில் கழித்தார்.

1884 இல் அக்டோபர் நான்காம் தேதி பிறந்தார். இவர் 1921ஆம் ஆண்டு பாப்பாரப்பட்டியை வந்து அடைந்தார். இவருக்கு ஆதரவாகவும் உடன் ஓர் இயக்கத்தை நடத்தவும் துணை நின்றவர்கள் திரு. கே.பி. கந்தசாமி முதலியார் தி. சின்னமுத்து முதலியார், திரு. சீனிவாசவரதன், திரு. சிதம்பரபாரதி மற்றும் திரு. டி.என்.வி. சோமையாஜுலுவும் அவரது துணைவியார் பாமாலினி அம்மாளும் ஆவர்.

பாப்பாரப்பட்டியில் பாரத மாதாவிற்காக ஓர் ஆசிரமம் ஏற்படுத்தி அதற்கு "பாரதமாதா ஆசிரமம்" என்று பெயரிட்டு வழிநடத்தினார். இதற்காக இப்பகுதி மக்கள் தியாகி சுப்பிரமணிய சிவாவிற்கு ஆறு ஏக்கர் நிலத்தைப் பென்னாகரம் செல்லும் சாலையில் வழங்கினர். இந்த நிலத்தில்தான் 1923இல் சி.ஆர். தாஸ் பாரதமாதா ஆஸிரமத்திற்கு அடிக்கல் நாட்டினர்.

இதற்காக ஆங்கிலேய அரசு பல இன்னல்களை இவருக்கு அளித்தது. பல இடையூறுக்குமிடையே இவர் இந்த இயக்கத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி வந்தார். காலம் இவரை விட்டு வைக்கவில்லை. 1925ஆம் ஆண்டு சூலை 23ம் நாள் இந்த பாரத மாதாவை விட்டு பிரிந்து சென்றார். இவரது சமாதி உள்ள இடம் பாரதிபுரம் என்று இன்றளவும் அழைக்கப்பட்டு வருகிறது. இவர் "ஜனனபானு" இதழின் ஆசிரியராக இருந்தார். "லோகோபகாரி" இதழில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். சுவாமி விவேகானந்தரின் கடிதங்களை மொழி பெயர்த்ததுடன் இராமானுஜ விஜயம், மந்திய விஜயம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

# பிற்சேர்க்கை பாறை மற்றும் குகை ஓவியங்களின் பட்டியல்

## பிரிக்கப்படாத தருமபுரி மாவட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. | மல்லசமுத்திரம் அல்லது மல்லசந்திரம் | - | கல்திட்டைகளில் ஓவியங்கள் |
| 2. | கந்திலிமலை பாறை | - | புலிவேட்டை ஓவியங்கள் |
| 3. | சின்னக்கந்திலி பாறை | - | கோட்டுருவங்கள் |
| 4. | பாண்டவர்பண்டா | - | பல்வேறு கட்டங்கள் |
| 5. | தொட்டியம்மா மலை | - | கோட்டுருவங்கள் |
| 6. | தாளப்பள்ளி | - | நாட்டியக்காட்சிகள் |
| 7. | குருவிக்காரன் கொட்டாய் | - | வெள்ளை வண்ண உருவங்கள் |
| 8. | மல்லப்பாடி | - | வேட்டைக்காட்சி |
| 9. | கங்கலேரி | - | கோட்டுருவங்கள் |
| 10. | பருகூர் | - | பாறை ஓவியங்கள் |
| 11. | கிருஷ்ணகிரி சையத்பாட்சாமலை | - | பாறை ஓவியங்கள் |
| 12. | ஆண்டிமலை | - | ஓவியங்கள் |
| 13. | ஓரணகுண்டா | - | வழிபாட்டு உருவங்கள் |
| 14. | தொகரப்பள்ளி | - | நாட்டிய விளையாட்டுக் காட்சிகள் |
| 15. | ஐகுந்தம் | - | பெரியவடிவில் உருவங்கள் உள்ளன. |
| 16. | கணமூர் | - | பாண்டவர்பண்டா சிந்துவெளி எழுத்து போல் ஓவியம் உள்ளது. |
| 17. | ஐகுந்தம் புதூர் | - | பெரிய வடிவில் ஓவியம் உள்ளது |
| 18. | காவேரிப்பட்டணம்கதிரபுரம் | - | போர்வீரன் ஓவியம் |
| 19. | வேலம்பட்டி | - | சிந்துவெளி எழுத்துபோல் ஓவியம் உள்ளது |
| 20. | பாப்பா நத்தம் | - | இருளபண்டாவில் ஓவியம் |
| 21. | மகாராஜக்கடை | - | பாறையிலும் கல்திட்டைகளிலும் ஓவியங்கள் உள்ளன. |
| 22. | ஓதிக்குப்பம் | - | சிந்துவெளி போன்ற எழுத்துக்கள் |

# பயன்பட்ட நூல்கள்



| | |
|---|---|
| Le Fanu, H; | Salem District Manual Vol - I 1883 |
| Richards F.J. | Salem District Gazetteer Vol - I Part - I (1918) |
| P. Pulney Andy Senji | Tamil Nadu District Gazetteer<br>Dharmapuri District Gazetteer (1995) |
| டாக்டர். சொ.சாந்தலிங்கம் | வரலாற்றில் தகடூர் |
| ச. கிருஷ்ணமூர்த்தி | தருமபுரி வரலாறும் பிரகலாதன்<br>சரித்திரமும் 1988 |
| ச.செல்வராஜ் | தகடூர் நாட்டுக் கோயில்கள் |
| பெரும்பாக்கன் | தருமபுரி மாவட்ட வரலாறு |
| ராமசாமி | Madras District Gazetteers - Salem (1967) |
| டாக்டர்.இரா.நாகசாமி | தருமபுரி மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி–1 |
| ச. செல்வராஜ்<br>தி. சுப்ரமணியன் | தருமபுரி அகழ்வைப்பகம் |
| இரா.நாகசாமி | நடுகல் கருத்தரங்கு Seminar on Hero stones |
| ச.செல்வராஜ் | பிக்கனஹள்ளி – புதிய கற்கருவிகள்<br>புதிய செய்திகள் கட்டுரை 66 கல்வெட்டிதழ்.<br>த.அ.தொ.து.வெளியீடு சென்னை-8. |
| Dr. K. Rajan | 1997 Archaeological Gazetteer of Tamil<br>Nadu Thanjavoor Manoo pathippagam. |
| Dr. K. Rajan | 1991 Archaeological Gazeetteers of<br>Dharmapuri District "Man and Environment" |
| Dr. B. Narasimhaiah | 1980 Neolithic and megalithic cultures<br>in Tamil Nadu New Delhi Sundeep prakashan. |
| ச. கிருஷ்ணமூர்த்தி | நடுகற்கள், மெய்யப்பன்<br>தமிழாய்வகம் சிதம்பரம், 2004. |
| முனைவர்.<br>ர.பூங்குன்றன் | தொல்குடிகள்–வேளிர்<br>செங்கம் நடுகற்கள் ஓர் ஆய்வு |




அனுமன் சிற்பம் - சாணாரப்பட்டி,
கிருஷ்ணகிரி மாவட்டம்



ஜகதேவி கோட்டை (துறையால் பாதுகாக்கப் படும் சின்னம்)
கிருஷ்ணகிரி மாவட்டம்



கண்ணனும் கோபியரும் - தருமபுரி அகழ்வைப்பகம்.




குத்துக்கல் - பாலக்கோடு வட்டத்தில் உள்ள திருமலவாடி.



மல்லசமுத்திரம் கல்திட்டைகள்.



தென்கரைக் கோட்டைக் கோயில்.




தென்கரைக் கோட்டை மாளிகையின் ஒருபகுதி.



தென்கரைக் கோட்டைக் கோயிலில் உள்ள குதிரைவீரன் சிற்பம்.




பெருங்கற் சின்னம் நல்லாம் பட்டி. தருமபுரி மாவட்டம்.



மூன்று கால் ஜாடி கிருஷ்ணகிரி வட்டம், குருவிநாயனப் பள்ளி,
(தற்போது தொல்லியல் துறையிடம் உள்ளது)



அதியமான் தமிழ் பிராமி கல்வெட்டு ஜம்பை.
திருக்கோயிலூர் வட்டம்.




இடிந்த நிலையில் சினன்னக் கொத்தூர் கோயில், கிருஷ்ணகிரி வட்டம்

கிருஷ்ண நாடக ஏடுகள்




ஓவிய ஓலை - தருமபுரி அகழ்வைப்பகம்.






மோதூர் அகழாய்வுக்குழி.



புலிக்குத்திப்பட்டான் கல். பிக்கனஹள்ளி 14ஆம் நூற்றாண்டு.



புலிக்குத்திப்பட்டான் கல். பிக்கனஹள்ளி 14ஆம் நூற்றாண்டு.



கிருஷ்ணகிரி வட்டம் மல்லசமுத்திரம் கல்திட்டையில்
உள்ள தொல்பழங்கால ஓவியம்.



அதியமான் மைல்கல் - தருமபுரி அகழ்வைப்பகம்



கிருஷ்ணகிரி சோமேஸ்வரர் கோயிலில்
உள்ள உதிரிச்சிற்பம் கல்வெட்டுடன் உள்ளது.




நவகண்ட சிற்பம். இறந்த வீரனை மற்றொருவன் தலையில் சுமந்து செல்லும் சிற்பம். தருமபுரி அகழ்வைப்பகம்.




இலளிகம் என்ற ஊரில் உள்ள நடுகல்.
(வீரன் கழுத்தில் இலிங்காயுதம் உள்ளது.)




மோதூர் அகழாய்வு பொருட்களைத் துறைசிறப்பு ஆணையர், தி.ஸ்ரீ. ஸ்ரீதர், மாவட்ட ஆட்சியர் திரு. சுதீப் ஜெய்ன் மற்றும் அதிகாரிகள் பார்வையிடல்



தருமபுரி மாவட்ட ஆட்சியர் ஆஷீஷ் வச்சானி இ.ஆ.ப. தொல்லியல்துறை சிறப்பு ஆணையர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப. தருமபுரி அகழ்வைப்பகத்தைப் பார்வையிடல்




ஐந்துகால் ஜாடி - தருமபுரி அகழ்வைப்பகம்.




கெண்டி - தருமபுரி அகழ்வைப்பகம்



புத்தர் -
தருமபுரி அகழ்வைப்பகம்




நொளம்பர் தூண் -
தருமபுரி அகழ்வைப்பகம்



அதியமான் கோட்டை சென்றாய பெருமாள் கோயில் ஓவியங்கள்



நடுகல் சிற்பத்தைச் சிறப்பு ஆணையர்
தி.ஸ்ரீ. ஸ்ரீதர். பார்வையிடுதல் செம்மானூர் -
பெரும் பாலை. தருமபுரி மாவட்டம்.




தருமபுரி மாவட்ட வரைபடம்.